


மனித உரிமைகள் மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி கல்வியகம்

Institute of Human Rights Advocacy and Research



*Institute of Human Rights Advocacy and Research*
*March 2017*

***Tool Kit on Monitoring the State Mechanisms for Women's Rights***

**Institute of Human Rights Advocacy and Research**
*No.54, LDG Road,*
*Little Mount, Saidapet*
*Chennai - 600015*
*Phone : +91-9841053936, 044 22353503*
*website : hrf.net.in*
*Email :training@hrf.net.in*
*FB : HRFnet*

**பெண்கள் உரிமைக்கான அரசு அமைப்புகளைக்**
**கண்காணிப்பதற்கான கையேடு**

**மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்**
*எண்.54, எல்.டி.ஜி. சாலை*
*சின்னமலை, சைதாப்பேட்டை*
*சென்னை 600 015*
*தொ.பே : +91–9841053936, 044 22353503*
*மின்னஞ்சல்: training@hrf.net.in*
*இணையதளம்: hrf.net.in*
*முகநூல் : HRFnet*

***March 2017***

*Creative commons license 3.0*

# An introduction to this toolkit and the institute

Institute of Human Rights Advocacy and Research (IHR) is an initiative of a group of human rights organisations and defenders, anchored by the Human Rights Advocacy and Research Foundation (HRF) to create a high quality knowledge institution on human rights theory, practice and governance. It is to bridge the distance between the human rights defenders (practice), academe (theory), administrators (duty bearers), and citizens (rights holders).

It addresses the need for systematic transformation of experience and expertise, especially those derived from practitioner (field) experience into transferable knowledge with academic rigour. Use of data and latest management advances will be integral to the offerings since there is a high standard of data, evidence and skills required for advocacy and social justice.

To create a body of empowered active citizens and embed a culture of human rights in society, the institute will:

(a) Collect, organise and develop a theory and pedagogy to communicate human rights practitioner experience and knowledge systematically.
(b) Develop tools for monitoring, communication and knowledge transfer.
(c) Identify lacunae and best practice in implementation of existing law and functioning of state mechanisms.
(d) Identify gaps in policy and law and advocate for rectification (including amendments to existing law) through innovative policy advocacy.
(e) Create a body of literature and knowledge base on the practice of human rights, monitoring and accountability.
(f) Train individuals, organisations and communities so that they understand human rights and the human rights approach to development, and have the tools and expertise in science, technology and management for practical, effective and efficient implementation.

The institute is a polycentric 'open school' in its essence. Each module offered will be in partnership with practitioners (human rights defenders and organisations) and academia. These partnerships will be with local human rights organisations/defenders who have demonstrated niche expertise and reputed local academic institutions. Globally renowned defenders will design the courses and take master classes. Certificates will be awarded on successful completion.

There will be three streams of focus groups: (a) Activists and community leaders (b) Academia: scholars, researchers (graduate and above) (c) Administrators and implementers.

This toolkit is to help practitioners better monitor the state mechanisms tasked with protecting and promoting women's rights – from the village to district, state and national levels. They are developed from the key constitutional provisions and legislations intended to protect and promote child rights. The constitutional framework and the legal architecture are simplified for use by child rights defenders. Some of the best practice – codified from practitioner experience and experience spanning decades – are also included in this tool kit.

It is our hope that putting this knowledge base and toolkit in public domain under creative commons licensing will enable wider use and better innovation in compliance. This, and other toolkits developed by the institute, will be continuously updated to incorporate cutting edge practitioner experience. We look forward to your feedback and input to make this into a living document that will help us in our collective endeavour to make a world fit for children.



***Annie Namala***
*Managing Trustee and Director*
*Human Rights Advocacy and Research Foundation (HRF)*
*9 March 2017*

## மனித உரிமைக் கல்வியகம் மற்றும் இந்தப் பயிற்சிக் கையேடு குறித்த அறிமுகம்

மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி கல்வியகம் (HRI) என்பது மனித உரிமை அமைப்புகளும், பாதுகாவலர்களும் இணைந்து மேற்கொண்டுள்ள ஒரு முயற்சியாகும். மனித உரிமைகள் கோட்பாடு, நடைமுறை மற்றும் மேலாண்மை தொடர்பாக ஒரு உயர்தரமான அறிவகத்தை உருவாக்குவதற்காக இந்தக் கல்வியகத்தை மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு (HRF) தொடங்கியுள்ளது. மனித உரிமை பாதுகாவலர்களுக்கும் (நடைமுறை), அது சார்ந்த கல்வியாளர்களுக்கும் (கோட்பாடு), செயலாக்கத் துறையினருக்கும் (மேலாண்மை), குடிமக்களுக்கும் (உரிமைகளுக்கு உரியோர்) இடையேயான தொலைவுகளை இணைப்பதற்காகவே இந்த முயற்சி.

அனுபவம், நிபுணத்துவம் ஆகியவற்றை, குறிப்பாக செயல்படுவோரின் (கள) அனுபவத்திலிருந்து பெறப்படுபவற்றை, கல்வித்தளத்திற்குரிய கறார்த்தன்மையோடு கூடிய மாற்றத்தக்க அறிவாக திட்டமிட்ட முறையில் பரிமாறிக்கொள்ள வேண்டிய தேவையை இது ஈடுகட்டுகிறது. மனித உரிமை மேம்பாட்டிற்கும் சமூக நீதிக்கும் தரமுயர்ந்த தகவல் பலமும் ஆதாரங்களும் திறன்களும் தேவைப்படுகின்றன. ஆகவே, இக்கல்வியகத்தின் வகுப்புகளுடன் ஒருங்கிணைந்ததாக தகவல் பயன்பாடும் மேலாண்மையில் ஏற்பட்டுள்ள புதிய முன்னேற்றங்களும் இருக்கும்.

ஆளுமையும் செயல்முனைப்பும் உள்ள குடிமக்களின் ஒரு அமைப்பை உருவாக்குவதற்காகவும், சமுதாயத்தில் ஒரு மனித உரிமைப் பண்பாட்டை வளர்ப்பதற்காகவும், இந்தக் கல்வியகம் பின்வரும் செயல்பாடுகளை மேற்கொள்ளும்:

(அ) மனித உரிமைச் செயல்பாட்டாளர்களின் அனுபவத்தையும் அறிவையும் ஒரு முறையான ஏற்பாட்டில் கற்பிப்பதற்காக தகவல்களைச் சேகரித்தல், அமைப்பு சார்ந்து ஒருங்கிணைத்தல், ஒரு கோட்பாட்டையும், பயிற்சிமுறையையும் உருவாக்குதல்;

(ஆ) கண்காணிப்பு, தகவல் தொடர்பு மற்றும் அறிவுப் பரிமாற்றத்திற்கான ஏற்பாடுகளை உருவாக்குதல்;

(இ) தற்போதுள்ள சட்டங்களைச் செயல்படுத்துவதிலும், அரசாங்க அமைப்புகளின் செயல்பாடுகளிலும் உள்ள குறைபாடுகளையும் சிறப்பான பணிகளையும் கண்டறிதல்;

(ஈ) கொள்கைக்கும் சட்டத்திற்குமான இடைவெளிகளைக் கண்டறிதல், அவற்றை சரிப்படுத்துவதற்கான (தற்போதுள்ள சட்டத்துக்கான திருத்தங்கள் உட்பட) ஆலோசனைகளை, புத்தாக்கக் கொள்கை மேம்பாட்டின் மூலம் முன்மொழிதல்;

(எ) மனித உரிமை செயல்பாடுகள், கண்காணிப்பு மற்றும் பதிலளிக்கும் கடமைப் பொறுப்பு ஆகியவை தொடர்பாக எழுத்தாக்கங்களுக்கும் அறிவுத்தளத்திற்குமான ஒரு அமைப்பை ஏற்படுத்துதல்;

(ஏ) தனிமனிதர்களும், அமைப்புகளும், சமூகங்களும் மனித உரிமைகளைப் புரிந்துகொள்ளச் செய்வதற்காகவும், வளர்ச்சிகள் குறித்த மனித உரிமை சார்ந்த அணுகுமுறைகளை வளர்த்துக்கொள்வதற்காகவும் நடைமுறை சார்ந்த, பயன் விளைவிக்கக்கூடிய, திறன் மிக்க செயலாக்கத்திற்காக என அறிவியல், தொழில்நுட்பம், மேலாண்மை ஆகியவற்றுக்கான வழிமுறைகளும் நிபுணத்துவமும் பெற்றிருக்கச் செய்வதற்காகவும் அவர்களுக்குப் பயிற்சியளித்தல்.

இந்தக் கல்வியகம் அடிப்படையில் பன்முகத்தன்மை வாய்ந்த 'திறந்தவெளிப் பள்ளி'யாக இருக்கும். ஒவ்வொரு பாடமுறையும் களச் செயல்பாட்டாளர்களுடனும் (மனித உரிமைப் பாதுகாவலர்கள் மற்றும் அமைப்புகள்) கல்வியாளர்களுடனும் இணைந்து வழங்கப்படும். இந்தக் கூட்டுச் செயல்பாடு தங்களது கூர்மையான திறன்களை வெளிப்படுத்தி வந்திருக்கிற உள்ளூர் அளவிலான மனித உரிமை அமைப்புகள்/பாதுகாவலர்களுடனும் மதிப்பிற்குரிய உள்ளூர் கல்வி நிறுவனங்களுடனும் இணைந்து மேற்கொள்ளப்படும். உலக அளவில் பெயர் பெற்றுள்ள மனித உரிமைப் பாதுகாவலர்கள் பாடத் திட்டங்களை வகுப்பார்கள், உயர்நிலை வகுப்புகளையும் நடத்துவார்கள். வகுப்புகளை வெற்றிகரமாக நிறைவு செய்கிறபோது சான்றிதழ்கள் வழங்கப்படும்.

மூன்று விதமான குழுவினர் வகுப்புகளை நடத்துவார்கள்: (அ) களச் செயல்பாட்டாளர்கள், சமூகத் தலைவர்கள், (ஆ) கல்வியாளர்கள்: அறிஞர்கள், ஆய்வாளர்கள் (பட்டதாரிகள், அதற்கு மேல்நிலையிலுள்ளோர்), (இ) மேலாண்மைப் பொறுப்பாளர்கள், சட்டச் செயல்பாட்டாளர்கள்.

இதில் வழங்கப்படும் பாடத் திட்டங்கள், களச் செயல்பாட்டாளர்களுக்கு, கிராமம் முதல் மாவட்டம் வரையிலும், மாநிலம் முதல் நாடு முழுவதும் குழந்தை உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் வளர்த்தெடுப்பதற்குமான அரசாங்க அமைப்புகளை சிறந்த முறையில் கண்காணிக்க உதவுவதாக இருக்கும். குழந்தை உரிமைகளைப் பாதுகாக்கிற, முன்னெடுத்துச் செல்கிற நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட அரசமைப்பு சாசன ஏற்பாடுகளையும் சட்டங்களையும் அடிப்படையாகக் கொண்டு பாடங்கள் தயாரிக்கப்படும். பெண்ணுரிமைப் பாதுகாப்பாளர்கள் பயன்படுத்தத்தக்க வகையில் அரசமைப்பு சாசன ஏற்பாடுகளும் சட்டங்களும் எளிமைப்படுத்தித் தரப்படும். களச் செயல்பாட்டாளர்களின் பல்லாண்டு கால அனுபவங்களிலிருந்து தொகுக்கப்பட்ட சிறந்த நடைமுறைகளும் பாடத் திட்டத்தில் இணைக்கப்பட்டிருக்கும்.

இந்த அறிவுத்தளமும் பாடத் திட்டங்களும் புத்தாக்கக் கண்ணோட்டத்துடன் பொதுமக்களுக்கான உரிமமாக பொதுத் தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டிருக்கும். அது பரவலான பயன்பாட்டிற்கும் சிறப்பான புதிய அணுகுமுறைகளை வகுப்பதற்கும் இட்டுச் செல்லும் என நாங்கள் நம்புகிறோம். இக்கல்வியகம் உருவாக்கும் பாடத்திட்டம் தொடர்ச்சியாகப் புதுப்பிக்கப்படும். அதில் களச் செயல்பாட்டாளர்களின் புதிய அனுபவங்கள் சேர்க்கப்படும். குழந்தைகளுக்கு ஏற்றதொரு உலகத்தைக் கட்டுவதற்கான நமது கூட்டு முயற்சியில் ஒரு உயிரோட்டமுள்ள ஆவணமாக இதனை உருவாக்குவதற்கு உங்களது கருத்துகளையும் ஆலோசனைகளையும் வரவேற்கிறோம்.



**ஆனி நமலா**
*மேலாண்மை அறங்காவலர் & இயக்குநர்*
*மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு (HRF)*
***9 மார்ச் 2017***

# பொருளடக்கம்


| வ.எண் | பொருள் | ப.எண் |
|---|---|---|
| 1. | இந்திய அரசியல் சாசனம் | 7 |
| 2. | சர்வதேச உடன்படிக்கைகள் | 11 |
| 3. | நீடித்த வளர்ச்சிக்கான குறிக்கோள்கள் | 12 |
| 4. | இந்திய தண்டனைச் சட்டம் – சில முக்கிய பிரிவுகள் | 16 |
| 5. | குற்றவியல் நடைமுறைச் சட்டம் – சில முக்கிய பிரிவுகள் | 18 |
| 6. | குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் 2005 | 20 |
| 7. | ABSTRACT- Social Welfare - Women Welfare - Protection of Women from Domestic Violence Act 2005 - Appointment of Service Providers in each District – Orders – Issued. | 28 |
| 8. | LIST OF PROTECTION OFFICERS, TAMIL NADU | 33 |
| 9. | குடும்ப வன்முறையிலிருந்து தங்களுக்காக பாதுகாப்புச் சட்டம் 2005 | 36 |
| 10. | குற்றவியல் சட்டத் திருத்த சட்டம் 2013 (முக்கிய அம்சங்கள்) | 76 |
| 11. | பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம், 2013 | 82 |
| 12. | பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம் 2013 (முக்கிய அம்சங்கள்) | 100 |
| 13. | பணித்தலம் பெண்ணுக்குப் பாதுகாப்பானதுதானா ? *பணித்தலத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்கள் தடுப்புச் சட்டம் குறித்த ஆய்வும், ஆலோசனைகளும்* | 107 |
| 14. | தமிழ்நாடு பெண்களை தொல்லை செய்தல் தடுப்புச் சட்டம், 1998 (தமிழ்நாடு சட்டம் 44/1998) | 117 |
| 15. | குழந்தை உரிமைகளுக்கான அரசுக் கட்டமைப்புகள் / அமைப்புகள் | 121 |
| 16. | குழந்தை உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டங்கள் | 123 |
| 17. | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்துவதில் முன்னேறிய வழிமுறைகள் | 138 |

# இந்திய அரசியல் சாசனம்

பாரத தேசத்தை, மதச்சார்பற்ற சமதர்மக் குடியரசாக அமைப்பதற்கு இந்திய மக்களாகிய நாங்கள் உறுதி பூண்டு, இந்திய மக்கள் அனைவருக்கும், சமூக, பொருளாதார, அரசியல் நீதி, எண்ண, எழுத, எடுத்துச் சொல்ல, நம்பிக்கை வைக்க, வழிபாடு செய்ய சுதந்தரம், தரத்திலும் தகுதியிலும் வாய்ப்பிலும் சமத்துவம் ஆகியவற்றை அளிப்பதற்கும் எங்களிடையே தனிமனிதரின் கௌரவம் மற்றும் தேசீய ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் உறுதியளிக்கத் தக்க சகோதரத்துவத்தை வளர்க்கவும் உறுதி எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

எங்களது அரசியல் நிர்ணய சபையில் 1949 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 26 ஆம் நாள் இந்த அரசியல் சாசனத்தை உருவாக்கி, ஏற்றுக் கொண்டு, எங்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

## அடிப்படை உரிமைகள்

### சம உரிமை :

விதி 14 : இந்தியாவில் உள்ள எந்த நபருக்கும், சட்டத்தின் முன்பு சம உரிமையும், சட்டத்தின் மூலம் சமமான பாதுகாப்பையும் தர, அரசு மறுக்கக்கூடாது.

விதி 15 : (1) சமயம், சாதி, இனம், பால், பிறப்பிடம் அல்லது வேறு எந்தக் காரணத்துக்காகவும், எந்தக் குடிமகனிடத்திலும், அரசு பாகுபாடு செய்யக்கூடாது.

(2) சமயம், சாதி, இனம், பால், பிறப்பிடம் அல்லது அவற்றில் ஏதேனும் ஒரு காரணத்துக்காக எந்தக் குடிமகனையும்,

(அ) அங்காடி, உணவுச்சாலை, தங்கும் விடுதி, களியாட்டம் நடக்கும் இடங்கள் ஆகியவற்றுக்குள் செல்லக் கூடாது.

(ஆ) முழுவதும் அல்லது ஒரு பகுதி பொதுநிதியில் உருவாக்கப்பட்டுள்ள கிணறுகள், குளங்கள், குளிக்கும் இடங்கள், பாதைகள் மற்றும் பொதுமக்களுக்கான இடங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தக்கூடாது.

என்ற குறைப்பாட்டினை, கடப்பாட்டினை அல்லது நிபந்தனைகளை விதிக்கக்கூடாது.

(3) Nothing in this Article shall prevent the State from making any special provision for women and children.

(4) சமுதாயத்திலும் கல்வியிலும் பின் தங்கிய வகுப்பினராக உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் அல்லது தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் ஆகியோரின் முன்னேற்றத்துக்கான சிறப்பான ஏற்பாடுகளை மேற்கொள்வதனின்றும் அரசைத் தடை செய்வதாக இந்தக் கோட்பாட்டையும் அல்லது 29 ஆவது கோட்பாட்டின் (2) ஆவது கூறில் உள்ளவற்றையும் எடுத்துக் கொள்ளக் கூடாது.

Article 16 : Equality of opportunity in matters of Public Employment –

1) There shall be equality of opportunity for all citizens in matters relating to employment or appointment to any office under the State.

விதி 17 : தீண்டாமை ஒழிக்கப்பட்டுள்ளது; மற்றும் அதனை எந்த வகையில் செயல்படுத்துவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. தீண்டாமையின் விளைவாக எழும் எத்தகைய குறைபாடும் சட்டப்படி தண்டிக்கத் தக்க குற்றமாகும்.

சுதந்தரமாக இருக்கும் உரிமை :

**விதி 19 : (1) இந்தியக் குடிமக்கள் யாவர்க்கும்–**

(அ) சுதந்தமாகச் சிந்திப்பதற்கும், எடுத்துச் சொல்வதற்கும் ;

(ஆ) ஆயுதங்களின்றி அமைதியாகக் கூடுவதற்கும்.

(இ) சங்கங்களையும் அமைப்புகளையும் ஏற்படுத்துவதற்கும்

(உ) இந்திய எல்லைக்குள் எத்தகைய தடையுமின்றி நடமாடுவதற்கும்

(உ) இந்திய எல்லைக்குள் தான் விரும்பிய இடத்தில் வசிப்பதற்கும் தங்கியிருப்பதற்கும்.

(ஊ) (Repealed)

(எ) எந்தத் தொழிலையும் செய்வதற்கும், நடத்துவதற்கும், எந்தப் பணியிலும் ஈடுபடுவதற்கும் எத்தகைய வாணிபத்தையும் செய்வதற்கும் உரிமை இருக்கிறது.

விதி 20 : (1) அமலில் உள்ள ஒரு சட்டத்தின்படி குற்றம் எனக் கருதப்படும் செயலுக்காக, அத்தகைய சட்டத்தை மீறிச் செய்ததற்காக அன்றி, எந்த நபரும் தண்டிக்கப்படக் கூடாது. அத்தகைய குற்றத்துக்காக அமலில் உள்ள சட்டப்படி விதிக்கப்பட வேண்டிய தண்டனையைக் காட்டிலும் அதிகமான தண்டனையை அந்த நபருக்கு விதிக்கக்கூடாது.

(2) ஒரு குற்றத்துக்காக ஒரு நபரை, ஒரு தடவைக்கு மேல் குற்றம் சாட்டித் தண்டிக்கக் கூடாது.

(3) குற்றம் சாட்டப்பட்ட எந்த நபரையும் தமக்கு எதிராகத் தாமே சாட்சியம் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தக் கூடாது.

விதி 21 : சட்டப்படி உருவாக்கப்பட்டுள்ள விசாரணை முறைப்படியன்றி, வேறெந்த விதமாகவும் ஒரு நபரின் தனிப்பட்ட சுதந்திரத்தையும் உயிரையும் பறிக்கக் கூடாது.

விதி 21A: கல்வி உரிமை ஆறு முதல் பதினான்கு வயது வரையிலான அனைத்துக் குழந்தைகளுக்கும் அரசு சட்டப்படி நிர்ணயிக்கக் கூடிய முறையில் இலவச, கட்டாயக் கல்வி வழங்கும்.

விதி 22 : (1) கைது செய்து ஒரு நபரைக் காவலில் வைப்பதற்கு முன், அவர் எதற்காகக் கைது செய்யப்பட்டுள்ளார் என்பதற்கான காரணத்தை அவருக்குத் தெரிவிக்க வேண்டும் மற்றும் தம்மால் தேர்ந்தெடுக்கப்படும் வாதுரைஞரைக் கலந்தாலோசிக்கவும், அவரைத் தமது தற்காப்பிற்குப் பயன்படுத்துவதற்கும் அவருக்குள்ள உரிமை மறுக்கப்படக் கூடாது.

(2) ஒரு நபரைக் கைது செய்து காவலில் வைக்கும் போது, அப்படிக் கைது செய்யப்பட்ட நபரை, கைது செய்யப்பட்ட இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் அருகாமையில் உள்ள ஒரு குற்றவியல் நடுவரிடம் முன்னிலைப்படுத்த வேண்டும். அந்த ஒருபத்து நான்கு மணி காலக்கெடுவில், கைதுசெய்யப்பட்ட இடத்திலிருந்து அந்தக் குற்றவியல் நடுவர் இருக்கும் இடத்துக்கு அழைத்துச் செல்லத் தேவைப்படும் பயண நேரத்தைச் சேர்க்கக் கூடாது.

விதி 23 : (1) மனிதர்களை விற்பதும் வாங்குவதும், வற்புறுத்தி வேலை வாங்குவதும், பிச்சை எடுக்கச் செய்வது ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளன. அப்படி அத்துமீறிச் செயல்படுவோர்க்கு அத்தகைய குற்றத்துக்காகச் சட்டப்படி தண்டனை விதிக்கப்பட வேண்டும்.

விதி 24 : பதினான்கு வயதுக்குக் குறைந்த குழந்தைகளை எந்தத் தொழிற்சாலையிலும், சுரங்கத்திலும் வேறு அபாயகரமான வேலைகளிலும் எவரும் அமர்த்தக் கூடாது.

## வழிபாட்டுச் சுதந்தரம் :

விதி 25: (1) பொது ஒழுங்கு, ஒழுக்கம் மற்றும் நல வாழ்வு ஆகியவற்றுக்கும், இந்தப் பகுதியில் கூறப்பட்டுள்ள மற்றவற்றுக்கு ஆட்பட்டும், எல்லாரும் தம் மனசாட்சிப்படி செயல்படுவதற்குரிய சுதந்தரம் உடையவர்களாவார்கள். தம்தம் மதத்தைத் தழுவ, மேற்கொள்ள மற்றும் பரப்புவதற்கு உரிமை உடையவர்களாவர்.

விதி 32 : (1) இந்தப் பாகத்தில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை வலியுறுத்துவதற்காக, உச்சநீதிமன்றத்தில் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உரிமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

(2) இந்தப் பாகத்தில் வலியுறுத்தப்படக்கூடிய உரிமைகளுக்காக, ஆள் கொணர்விக்கும் (ஹேபியஸ் கார்பஸ்), தடைவிதிக்கும் (புரொஹிபிஷன்), தகுதிமுறைவினவும் (கோ வாரண்டோ), செயலுறுத்தும் (மாண்டமஸ்) மற்றும் நெறிமுறை உறுத்தும் (செர்ஷியாரரி), நீதிப் பேராணைகளையும் (ரிட்ஸ்) வேறு ஆணைகளையும், உத்தரவுகளையும், நெறிமுறைகளையும் பிறப்பிக்கும் அதிகாரம் உச்சநீதிமன்றத்துக்கு இருக்கிறது.

## நெறிமுறைக் கோட்பாடுகள்

விதி 38 : நீதி, சமூகம், பொருளாதாரம் மற்றும் அரசியல் விவகாரங்கள் அனைத்தும் ஒழுங்குப்படுத்தப்பட வேண்டும். அவற்றைப் பாதுகாப்பதற்கும், அவற்றை அனைவரும் பெறுவதற்கும் தேவைப்படக் கூடியவற்றை மக்களின் நலன் கருதி, மேம்பாட்டிற்காக அரசு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். தேசீய வாழ்வில் உள்ள எல்லா அமைப்புக்களிலும் அவற்றைத் தெளிவு படுத்தவேண்டும்.

விதி 39 : அரசு, அதிலும் குறிப்பாக,

(அ) குடிமக்கள் அனைவரும், ஆண் பெண் பேதமின்றிச் சரிசமமாக வாழ்வதற்குத் தேவையான வசதிகளைப் பெறுவதற்கும்,

(ஆ) தேசத்தில் உற்பத்தியாகும் பொருள்கள் அனைத்தும், சமுதாயத்தின் பொது நலன் கருதி அனைவருக்கும் கிடைப்பதற்காக அவற்றின் உரிமை, கட்டுப்பாடு பொதுவாகப் பகிர்ந்தளிக்கப்படுவதற்கும்;

(இ) செல்வமும் உற்பத்தித் திறனும் பொது நலனுக்குக் குந்தகமான வகையில் தேக்கமடைவதைத் தவிர்க்கும் பொருளாதார அமைப்பைச் செயல்படுத்துவதற்கும்;

(ஈ) ஆண், பெண் ஆகிய இருபாலோருக்கும் ஒரே மாதியான ஊதியம் கிடைப்பதற்கும்

(உ) தொழிலாளர் நலத்தையும், வேலைத் திறனையும், ஆண், பெண், குழந்தைகள் ஆகியோரைத் தவறாகப் பயன்படுத்தாமல் இருப்பதற்கும், மற்றும் குடிமக்களைத் தமது வயதுக்கும் சக்திக்கும் தகுதியற்ற ஒரு வேலைக்குப் பொருளாதார நெருக்கடியின் காரணமாகத் தள்ளப்படாமல் தடுப்பதற்கும்;

(ஊ) குழந்தைகள் சுதந்திரமான சூழ்நிலையிலும் கண்ணியத்தோடும், நல்வாழ்வுடன் வளர்வதற்கும், அப்படி வாழ்வதற்கான வாய்ப்புக்களை அளிப்பதற்கும், இளைஞர்களை,சுரண்டப்படுவதனின்றும் பாதுகாப்பதற்கும், ஒழுக்கம் மற்றும் பொருளாதாரம் காரணமாக நிராதரவாக விடப்படாமல் காப்பதற்கும்;

உரிய வகையில், தமது கொள்கைகளை நெறிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

விதி 39 A. சட்ட அமைப்புக்கள் நீதிப்பூர்வமாக இயங்குவதற்கும், அனைவருக்கும் சமவாய்ப்புக் கிடைப்பதற்கும் உரிய சட்டங்கள் அல்லது திட்டங்கள் மூலம் இலவசச் சட்ட உதவி கிடைப்பதற்கும், பொருளாதாரம் அல்லது வேறு குறைபாடுகளின் காரணமாக எந்தக் குடிமகனுக்கும் தன் பிரச்சனைகளில் நீதி வழங்கப்படாதிருப்பதைத் தவிர்ப்பதற்கும் உண்டான வழிவகைகளை வலியுறுத்த வேண்டும்.

விதி 41 : தனது பொருளாதாரச் சக்திக்கும் வளர்ச்சிக்கும் ஏற்ற வகையில், வேலை வாய்ப்புக் கிடைப்பதற்கும், கல்வி பெறுவதற்கும், வேலையில்லாத போதும், வயது முதிர்ந்தோர்க்கும், நோய் வாய்ப்பட்டோர்க்கும், ஊனமுற்றோர்க்கும் மற்றும் தேவையற்ற வறுமையில் வாடுவோர்க்கும் பொது நிதியிலிருந்து உதவி பெறுவதற்கும் உற்ற துணை புரிவதற்கேற்ற வழிவகைகள் காணப்பட வேண்டும்.

விதி 45 : ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு குழந்தைப் பருவக் கவனிப்புக்கும் கல்விக்குமான வழிவகை. அனைத்துக் குழந்தைகளுக்கும் அவர்கள் ஆறு வயது நிறைவு செய்யும் வரை குழந்தைப் பருவக் கவனிப்பும் கல்வியும் வழங்குவதற்கு அரசு பாடுபடும்.

விதி 46 : பிற்பட்ட மக்களிடையே, அதிலும் குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடிமக்களின் பொருளாதாரம் மற்றும் கல்வி வளர்ச்சிக்கான திட்டங்களை மிகுந்த அக்கறையோடு அமல்படுத்த வேண்டும். சமூக அநீதிகளிலிருந்தும், எல்லா வகையான சுரண்டல்களிலிருந்தும் அவர்களுக்குப் பாதுகாப்பளிக்கப்பட வேண்டும்.

விதி 47 : உணவுச் சத்துக்களை மேம்படுத்தவும், அடிப்படை வாழ்க்கை வசதிகளைப் பெருக்கவும், நல்வாழ்வினை உயர்த்தவும் தேவையானவற்றைத் தமது தலையாய கடமைகளாக அரசு கருத வேண்டும். அதிலும் குறிப்பாகப் போதையூட்டும் மதுவகைகளையும் உடலுக்குத் தீங்கு பயக்கும் நச்சுப் பொருள்களையும், மருந்துக்காக அன்றி வேறு விதமாகப் பயன்படுத்துவதைத் தடை செய்வதற்காக மதுவிலக்கை அமல்படுத்த முயற்சி செய்ய வேண்டும்.

விதி 48 A : தேசத்திலுள்ள காடுகளையும் காட்டு விலங்குகளையும் மற்ற உயிரினங்களையும் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் அரசு முயற்சி எடுக்க வேண்டும்.

# சர்வதேச உடன்படிக்கைகள்

**பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான சர்வதேச உடன்படிக்கை (CEDAW):**

(CEDAW) உடன்படிக்கையானது 1979 ஆம் ஆண்டு டிசம்பர் 18-ம் தேதி ஐக்கிய நாடுகளின் பொது சபையால் ஏற்கப்பட்டு 3.09.1981 அன்று நடைமுறைக்கு வந்தது.

இந்திய அரசாங்கம் 1980—ல் கையொப்பம் இட்டு 1981-ல் ஏற்றுக்கொண்டது. இந்த உடன்படிக்கையானது பெண்களுக்கு நடைமுறையில் இருக்கும் உரிமைகள் குறித்த ஒரு விரிவான சாசனமாகும்.

**சிடாவின் சிறப்பம்சம்:**

- ஆண், பெண் சமத்துவத்தை வலியுறுத்தும் இச்சாசனம் பெண்ணுரிமையும் மனித உரிமையே என்பதை மேலும் வலுவாக்குகிறது.
- கலாச்சாரம், பாலியல் மரபுமுறை மற்றும் மக்களின் மனப்பான்மையே பெண்களின் மீதான பாகுபாடுகளை உருவாக்குகிறது என்பதை எடுத்துரைக்கிறது.
- குடும்பம், சமூகம், வர்த்தகம் மற்றும் அரசுத்துறை வரையில் உள்ள அனைத்து தளங்களிலும் பெண்களை முக்கியத்துவப்படுத்துகிறது.
- அனைத்து வகையான பாகுபாடுகளில் இருந்து பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளைப் பாதுகாக்க அரசை வலியுறுத்துவதோடு, பெண்களின் உரிமைக்கு எதிரான வன்முறைகளுக்கு அரசை பொறுப்பேற்க வலியுறுத்துகிறது.
- பெண்களின் உரிமைகளை மறுக்கும் தனிநபரின் செயல்களுக்கு கூட அரசுக்கு பொறுப்பு உண்டு என்று கூறுவதுடன் குடும்பத்தில் நடக்கும் வன்முறைகளையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வலியுறுத்துகிறது.
- பெண்களுக்கான சமூகப் பொருளாதாரா உரிமைகளைப் பற்றியும், மீறல்கள் பற்றியும் எடுத்துரைக்கிறது.
- பெண்களின் உரிமைகளை மறுக்கும் அமைப்பு முறைகளின் மீதும் கருத்தாக்கங்களின் மீதும், நிறுவனத்தின் மீதும் அதிக முக்கியத்துவம் செலுத்த வலியுறுத்துகிறது.
- பாகுபாடு என்பதை இரு வகையில் சிடா காண்கிறது. இதில் கடந்த கால பாகுபாட்டின் விளைவையும், நிகழ்கால பாகுபாட்டின் கூறுகளையும் திட்டமிட்டு ஆராய்ந்து ஒழிக்கத் தேவையான நடை முறை செயல்பாடுகள் இடம் பெற்றுள்ளன.
- பெண்ணுரிமை சட்டங்களின் முக்கியத்துவத்தைக் கண்டுணர்ந்து குடியுரிமை மற்றும் மறைக்கப்பட்ட உரிமைகளை வெளிச்சத்திற்கு கொண்டுவர முனைகிறது.
- அனைத்து நாடுகளிலும் சட்ட ரீதியாக பெண்களின் உரிமைக்கு உத்தரவாதம் உள்ளது. ஆனாலும், அவர்களுக்கு எதிரான பாகுபாடுகள் தொடர்ந்து கொண்டுதான் உள்ளது. பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றம் குறித்த பெண்களின் உரிமைகள் தட்டிக் கழிக்கப்படுவதால் சட்டரீதியான உரிமைகளை தங்களால் பயன்படுத்த இயலாத நிலையை இவ்வுடன்படிக்கை கண்டுணர்ந்துள்ளது.

**சிடா உடன்படிக்கை 30 விதிகளைக் கொண்டது**

விதி: 1 பாகுபாட்டை வரையறுக்கிறது
விதி: 2-4 அரசின் கடமையை விளக்குகிறது
விதி: 5-16 தனித்தன்மை கொண்ட விளக்க கூறுகள் அதாவது உரிமைகளைப் பற்றி விளக்குகிறது.
விதி: 17-30 சிடா குழுவின் நடைமுறை செயலாக்கத்திற்கான விளக்கங்களை பற்றியது

# நீடித்த வளர்ச்சிக்கான குறிக்கோள்கள்

**முனைவர் க.சண்முகவேலாயுதம்**
குழந்தை உரிமைக்கான சட்ட வள ஆதார மையம்

உலகில் மூன்று தலையாய பிரச்சனைகள் உள்ளது. ஒன்று வறுமை, இரண்டாவது சமத்துவமின்மை மூன்றாவது பருவ நிலை மாற்றம். நாட்டின் வளர்ச்சிக் காரணிகளை உரிய முறையில் சீரமைத்து அனைத்துத் துறைகளிலும் உள்ள வேறுபாடுகளை நீக்கி பொருளாதார முன்னேற்றத்திற்கு வழி வகுப்பதே திட்டமிடுதலின் கொள்கைகளும், செயல்பாடுகளும் ஆகும். வறுமையை எதிர்கொள்ள 2000ஆம் ஆண்டு 189 நாடுகள் இணைந்து உடன்படிக்கை செய்துகொண்டது மட்டுமல்லாமல் அதை அடைவதற்காக எட்டு குறிக்கோள்களை 'புத்தாயிரத்திற்கான வளர்ச்சிக் குறிக்கோள்களாக" வகுத்து அவற்றை 2015 ஆம் ஆண்டிற்குள் அடைவதற்கான உறுதிமொழியையும் எடுத்தன. அவை: 1. வறுமை மற்றும் பசி ஒழிப்பு , 2. அனைவருக்கும் தொடக்கக் கல்வி கிடைப்பதை உறுதி செய்தல் 3. பாலின சமத்துவம் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளிப்பதை மேம்படுத்துதல் , 4. குழந்தைகள் இறப்பு விகிதத்தை குறைத்தல் , 5. தாய்மை பேற்றினை மேம்படுத்துதல் , 6. எச்.ஐ.வி, எய்ட்ஸ், காசநோய், மலேரியா மற்றும் பிற நோய்களை ஒழிக்க போராடுதல் , 7. சுற்றுச் சூழலை உறுதி செய்தல் , 8. முன்னேற்றத்திற்கான உலகளாவிய பங்காளர்களின் கூட்டமைப்பை பலப்படுத்துதல் .

புத்தாயிரம் ஆண்டிற்கான குறிக்கோள்கள் தேசிய சராசரிக்கே முக்கியத்துவம் அளித்தது. ஆனால் நாட்டில் உள்ள பல ஒடுக்கப்பட்ட குழுக்கள் முன்னேற்றம் அடையவில்லை புவியியல், பாலினம், மாற்றுதிறன் உடையோர், இனம் ஆகிய காரணங்களால் விளிம்பு நிலையிலுள்ள மக்கள் வளர்ச்சி பாதையிலிருந்து வெளியேற்றப்பட்டனர். குறிப்பாக வானிலை மாற்றம், சுற்றுப்புற சீர்கேட்டில் கவனம் செலுத்தவில்லை.. புத்தாயிரம் ஆண்டிற்கான குறிக்கோள்கள் மூலம் கடந்த பதினைந்து ஆண்டுகளில் உலகளவில் பல மேம்பாட்டு பிரச்சனைகளுக்கு ஓரளவு தீர்வு காணப்பட்டது.

புத்தாயிரத்திற்கான முன்னேற்றக் குறிக்கோள்களை செயலாக்குவதில் உள்ள பின்னடைவுகளை ஐக்கிய நாடுகள் அமைப்பு உணர்ந்து, அதற்கான காரணிகளை கண்டறியும் நோக்கில் பல நிலைகளில் மீளாய்வு செய்தது. இதன் ஒரு கட்டமாக உயர்மட்டக்குழு பிரிட்டனின் பிரதம மந்திரி டேவிட் கேமரூன் அவர்களது தலைமையில் உருவாக்கப்பட்டு, பல நிலைகளில் உள்ள இடைவெளிகளை சரி செய்யவும், குறிப்பாக மக்களின் அனுபவங்களை குரலாக்கவும் கலந்தாய்வுகள் நடந்தன. இதன் அடிப்படையில் பெறப்படவுள்ள கருத்துக்களைக் கொண்டு 2015 ஆம் ஆண்டு நீடித்த வளர்ச்சிக்கான குறிக்கோள்கள் உருவாக்கப்பட்டது. பல கலந்துரையாடல்களில் அரசுகள், கல்வியாளர்கள், தனியார் துறைகள் மற்றும் குடிமை சமுதாயத்தினர் பங்கேற்றனர். நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் உருவாக்குவதற்கு வயது, பாலினம், இடம் மற்றும் மாற்றுதிறன் உடையவர்களின் புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டு, அலசி ஆய்வு செய்து இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டன. புதிய தொழில் நுட்ப வசதிகள் கொண்டு தகவல்கள் சேகரிக்கப்பட்டன. நீடித்த வளர்ச்சிக்கான குறிக்கோள்கள் அனைத்து நாடுகளுக்கும் பொருந்தும். நீடித்த வளர்ச்சிக்கான குறிக்கோள்கள் பிரிக்க முடியாதவை மற்றும் ஒன்றோடு ஒன்று இணைந்தவை. இக்குறிக்கோள்கள் அரசின் திட்டமிடுதலிலும் பன்னாட்டு நிதி நிறுவனங்களின் செயல்பாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும். ஏற்கெனவே நிதி அளிக்கும் நிறுவனங்கள் தங்கள் முன்னுரிமை செயல்பாட்டினை நீடித்த வளர்ச்சிக்கான குறிக்கோள்களை ஒட்டி மாற்றி வருகின்றன. ஐநா தலைமையகத்தில்

"நீடித்த வளர்ச்சிக்கான மாநாடு" செப்டம்பர் 25-27, 2015 ஆகிய நாட்களில் நியூயார்க் நகரில் நடைபெற்றது. இதில் உலக நாடுகளின் தலைவர்கள் கலந்துக்கொண்டு, நீடித்த வளர்ச்சிக்கான குறிக்கோள்களை தீர்மானித்து ஒரு பிரகடனமாக வெளியிட்டனர்.

நீடித்த வளர்ச்சிக்கான குறிக்கோள்கள் எனப்படுபவை, வறுமையை அதன் பல்வேறு பரிணாமங்களில் கட்டுப்படுத்துவதற்கான அளவீடுகளை வழங்கக் கூடிய கால வரையுடன் கூடிய பதினேழு குறிக்கோள்கள், 169 இலக்குகள் உருவாக்கப்பட்டன. இந்த குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள் 2015ம் ஆண்டு தொடங்கி, 2030 ம் ஆண்டிற்குள் எட்டப்பட வேண்டும். இந்த இலக்குகள் உள்ளூர் மற்றும் உலக அளவிலானவை. ஒவ்வொரு நாட்டின் வளர்ச்சித் தேவைக்கும் ஏற்ற வகையில் இவை நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. மனித வாழ்நிலை மேம்பாடு என்பது உலகின் எல்லா இடங்களிலும், எல்லா மனிதர்களுக்கும் ஏற்படுவதை உறுதி செய்யும் வகையில் ஒரு பொதுவான இலக்கை நோக்கி பயணம் செய்வதற்கான செயல் திட்டத்தை இந்த குறிக்கோள்கள் வழங்குகின்றன.

**நீடித்த வளர்ச்சிக்கான குறிக்கோள்கள்-**

1. வறுமையை ஒழித்தல்
2. வேளாண்மையை ஊக்குவித்தல், பசியை போக்குதல், சத்தான உணவு கிடைக்கச் செய்தல்
3. எல்லா வயதினருக்குமான நல வாழ்வை உறுதி செய்தல்
4. அனைவருக்கும் தரமான கல்வி கிடைக்கச் செய்தல்
5. பாலின பாகுபாடின்மையை உருவாக்குதல், பெண்களுக்கு அதிகாரமளித்தல்
6. சுத்தமான குடிநீர், சுகாதாரமான சூழல் - அனைவருக்கும் கிடைக்கச் செய்தல்
7. மலிவான, நம்பகமான, நிலையான, நவீன ஆற்றலை அனைவரும் பெறச் செய்தல்
8. நிலையான பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு கிடைக்கச் செய்தல்
9. வளர்ச்சிக்கான உள்கட்டமைப்பு, உற்பத்தி, கண்டுபிடிப்பு
10. நாடுகளுக்குள்ளேயும், நாடுகளுக்கிடையேயுமான சமத்துவமின்மையை ஒழித்தல்
11. வாழ்விடங்களை மேம்படுத்துதல்
12. தேவைக்கேற்ற உற்பத்தியை உறுதிபடுத்துதல்
13. பருவ நிலை மாற்றத்தால் ஏற்படும் பிரச்சனைகளை எதிர்கொள்ளுதல்
14. நிலையான நீடித்த வளர்ச்சிக்கு கடல் வளங்களை காத்தல்
15. சுற்றுச்சூழலை காத்தல், காடுகளை காத்து பாலைவனமாக்கலை தடுத்தல்
16. அமைதியான சூழலை சமூகத்தில் ஏற்படுத்துதல், எல்லா தரப்பினருக்கும் பாகுபாடற்ற நீதி பெறச் செய்தல்
17. நிலையான வளர்ச்சிக்கு உலகளாவிய ஒருங்கிணைப்பை வலுப்படுத்துதல்

இந்த நீடித்த வளர்ச்சிக்கான குறிக்கோள்கள் ஒவ்வோரு அரசுக்கும், ஐக்கிய நாடுகள் அமைப்புகளுக்கும் மற்றும் தன்னார்வ அமைப்புகளுக்கும் தெளிவான வடிவமைப்பை வழங்குகின்றன. ஐக்கிய நாடுகள் அமைப்பின் அனைத்து உறுப்பு நாடுகளும் இவற்றை தங்களது நாட்டின் கொள்கைகள், சட்டங்கள் மற்றும் திட்டங்களில் ஏற்று, அதனை அடைவதற்கான பங்களிப்பினை அளிக்க கடமைப்பட்டுள்ளன. வறிய நாடுகளுக்கான உதவிகளை செல்வந்த நாடுகள் தொடர்ந்து வழங்க வேண்டுமென அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது நீடித்த வளர்ச்சிக்கான குறிக்கோள்கள் திட்டமிட்டபடி எட்டுவதற்கான முயற்சிகளை பலப்படுத்துவது, வசதிபடைத்தவர் மற்றும் ஏழைகளுக்கு இடையேயான இடைவெளியை குறைத்தல் முக்கிய நோக்கமாகும். வறுமை, பசி, சத்துணவின்மை,

நோய்கள், கல்வியறிவின்மை ஆகியவற்றை ஒழிப்பதே நீடித்த வளர்ச்சிக்கான குறிக்கோள்கள். சமூகநலத் திட்டங்களை செயல்படுத்தும் பணியில் ஈடுபட்டிருக்கும் அமைப்புகள் அனைத்தும், ஒளிவுமறைவற்ற, ஊழலற்ற சூழலில் சிறப்பாக செயலாற்ற வேண்டும். ஒவ்வொரு சமுதாயத்துக்கும் கல்வியும், சுகாதாரமும் கிடைக்க வேண்டும். குறிப்பாக, கிராமப்புறங்களில் சுகாதார சேவைகள் விரிவுபடுத்தப்பட வேண்டியது அவசியத்தை உணர்த்துகிறது. மக்களுக்கு குறைந்த செலவில் தரமுள்ள மருத்துவ வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியத்தை வலியுறுத்துகிறது.

**நீடித்த வளர்ச்சிக்கான குறிக்கோள்களில் உள்ள பயனுள்ள அம்சங்கள்:**

- வறுமை மற்றும் சமூக விலக்கல் ஒதுக்கலை முடிவுக்கு கொண்டு வர அரசை பொறுப்புள்ளதாக்கிறது. சமத்துவமின்மை குறிப்பாக வருவாய் சமத்துவமின்மை தேசிய கொள்கைக்கான தளத்தில் விட்டுவிடாமல் உலகத்தில் உள்ள அனைவருக்குமான பொது குறிக்கோளாக கொண்டுவரப்பட வேண்டிய தேவையை நமக்கு உணர்த்துகிறது.

- சர்வதேச சமூகங்கள் வறுமையை குறைப்பதோடு மட்டுமன்றி, முடிவுக்கு கொண்டு வர திட்டங்களை வகுக்க வேண்டும். மனித உரிமைகளை அனுபவிப்பதிலோ, அடிப்படை சேவைகளைப் பெறுவதிலோ வருமானம், பாலினம், இனக்குழு, மாற்றுத்திறனாளி மற்றும் புவியியல் சார்ந்த தன்மை இருக்கக்கூடாது என்பதை உறுதி செய்கிறது.

- மனிதத்தின் மீதான மரியாதை, தோழமை, நிலைத்த தன்மை, சமவாய்ப்புகள் போன்றவைகளுக்கான உலகளாவிய பங்குதாரர்களை இந்த பிரகடனம் அழைப்பது வரவேற்கத்தக்கது.

- இந்த பிரகடனமானது, வறுமையை ஒழிப்பதற்கான சுற்றுச்சூழல் பாதுகாப்பில் கவனம் செலுத்துகிறது. மிகவும் விளிம்புநிலையில் உள்ள மக்கள் சுற்றுச்சூழல் சீர்கேட்டினால் பாதிப்புக்கு உள்ளாகின்றனர;.

- புதிய குறிக்கோள்களை வகுத்து நிலைத்த அமைதியான சமூகத்தையும், ஆளுகை வழிமுறைகளை மேம்படுத்துவதற்கும் அளிக்கவேண்டிய முக்கியத்துவத்தை புதிய முன்னேற்றத்திற்கான விவாத பொருளில் அளித்துள்ளது.

- தகவல் புரட்சிக்கான அறைகூவலை இந்த பிரகடனம் எழுப்புவதுடன், முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் மற்றும் புள்ளி விபரங்களை பலப்படுத்துகிறது. மேலும் பாலினம், புவிசார், வருமானம் மற்றும் பிற அடிப்படைகளிலான தகவல்களை சேகரித்து அனைத்து விதமான குழுக்களும் பயன்பெறும் வகையில் முன்னேற்றக்கொள்கைகளை வகுக்க ஆவண செய்தல், கொள்கைகளுக்காக நிதி ஒதுக்க அழுத்தம் கொடுத்தல், அரசினை பொறுப்புடையாக்குதல் போன்றவைகளை குறிக்கிறது.

- வளங்களை ஒருங்கிணைப்பதில், சுரண்டலை ஊழலை தடுப்பதற்கான தேவை தெளிவாக உணரப்பட்டுள்ளது. கள்ளப்பண புழக்கம், வரிஏய்ப்பு மற்றும் அதிகமாக அபகரிக்கப்படும் சொத்துக்கள் மீட்பு போன்றவைகளைப் பற்றிய குறிப்புகளும் அதனை சந்திப்பதற்கான தேவை பற்றிய உணர்தலும் உள்ளது.

**அரசு செய்ய வேண்டியவை:**

- வறுமை மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் பங்கேற்புடன் தேசிய நீடித்த வளர்ச்சியில் உத்திகளை உருவாக்குதல்,
- இவ்விலக்குகளை தேசிய திட்டமிடுவதோடு இணைத்து வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த வேண்டும்
- ஒவ்வொரு நாட்டின் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அடைவதுடன் உலகளாவிய குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அடைவதற்கு முக்கிய பங்காற்ற வேண்டும்.
- துறைகளிடையே ஒருங்கிணைப்பிற்கான குழுவை உருவாக்குதல். இக்குழுவில், நிதி, திட்டமிடல், சுற்றுபுறசூழல், வெளிநாட்டுத்துறை, தேசிய புள்ளி விவரங்கள் (செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல்) ஆகிய துறைகளின் பிரதிநிதிகள் இருக்க வேண்டும்.
- பாராளுமன்றத்தில் அனைத்து கட்சி பிரதிநிதிகள் கொண்ட குழு அமைத்து செயல்படுத்துவதற்கு நிர்வாகத்திடம் ஆதரவு மற்றும் வலுபடுத்துதல் செய்ய வேண்டும்
- குடிமை சமுதாய நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் அளவில் செயல்படும் நிறுவனங்கள் முழுமையாக பங்கேற்க வேண்டும்.
- உள்ளாட்சி மற்றும் பரவலாக்கப்பட்ட அதிகாரம் மூலம் குடிமை சமுதாயத்தில் நெருக்கமாக பணி செய்து தேசிய மற்றும் மாநில அளவில் இலக்குகளை அடைவதற்கு உறுதி செய்ய வேண்டும்.
- நீடித்த வளர்ச்சிக்கான குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை செயல்படுத்துவதற்கு தேசிய மற்றும் உள்ளூர் வளங்களை போதிய அளவு ஒதுக்கீடு செய்ய வேண்டும்.
- பொதுமக்கள் பங்கேற்புடன் உள்ளடக்கிய கண்காணிப்பும் அமைக்க வேண்டும். இதன் மூலம் செயல்படுத்துவதற்கான அடைவுகள் குறித்து ஆவணப்படுத்துதல் மற்றும் சீராய்வு செய்வதற்கு உரிய அமைப்பு முறையை உருவாக்க வேண்டும்.
- பன்னாட்டு தொடர் நிகழ்வு மற்றும் சீராய்வு செயல்பாடுகளில் முழுமையாக பங்கேற்க வேண்டும்.
- தொலைக்காட்சி, வானொலி, இணையதளங்கள், திரைப்படம், வகுப்பறைகள் என சாத்தியமுள்ள இடங்களில் எல்லாம் வளர்ச்சிக்கான குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை வலியுறுத்த விழிப்புணர்வு செய்யப்பட வேண்டும்.

மக்களின் வளர்ச்சி என்பது சமமான, நீடித்த, நிலையான வளர்ச்சி. அதற்கு ஐ.நா. சபையின் நீடித்த வளர்ச்சிக்கான குறிக்கோள் உதவும் என்பதில் ஐயமில்லை. இந்திய அரசும் தமிழ்நாடும் அரசும் நீடித்த வளர்ச்சிக்கான குறிக்கோளை அடைவதற்கான செயல் திட்டங்களை உருவாக்க வேண்டும் என்பது சமூக ஆர்வலர்களின் அவா.

# இந்திய தண்டனைச் சட்டம் – சில முக்கிய பிரிவுகள்

| வ.எண் | பிரிவு | விளக்கம் |
|---|---|---|
| 1 | பிரிவு 302 | கொலை குற்றம் புரிந்தவருக்கு மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனையுடன் அபராதமும் விதிக்கப்படும் |
| 2 | 304 b | பெண் ஒருவர் திருமணமான 7 ஆண்டுகளுக்குள் கணவன் அல்லது அவர்களது உறவினர்களால் வரதட்சணை கொடுமைக்கு உட்படுத்தப்பட்டு தீக்காயங்கள் அல்லது உடல் காயங்கள் அல்லது சாதாரண சூழ்நிலையில் அல்லது வேறு காரணங்களினால் இறந்தால் அது வரதட்சணை மரணம் என அழைக்கப்படும். |
| 3 | பிரிவு 375 | வன்முறைப் புணர்ச்சி (கற்பழிப்பு) – ஒரு பெண்ணின் விருப்பத்திற்கு மாறாக, சம்மதமில்லாமல், அவரை அச்சுறுத்தி, கணவர் என்று பொய் சொல்லி, பெண் 16 வயதுக்குட்பட்டவராய் இருப்பின் அவரது சம்மதத்துடன் அல்லது சம்மதமின்றி உடலுறவு கொள்வது |
| 4 | பிரிவு 498 – A | வரதட்சணை கொடுமை |
| 5 | பிரிவு 359 – 362 | பிள்ளை பிடித்தல், இந்தியாவிலிருந்து பிள்ளை பிடித்துச் செல்லுதல், சட்டப் பூர்வமான பாதுகாப்பிலிருந்து பிள்ளை பிடித்துச் செல்லுதல், ஆள்கடத்தல் |
| 6 | பிரிவு 363 | பிள்ளை பிடித்தலுக்கு தண்டனை 7 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் அபராதம் வழங்கலாம் |
| 7 | பிரிவு 306 | தற்கொலைக்கு உடந்தையாக இருத்தல் 10 ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய சிறை தண்டனை, மேலும் அபராதம் வழங்கலாம். |
| 8 | பிரிவு 376 | வன்முறைப் புணர்ச்சி (கற்பழிப்பு) க்கான தண்டனை ஆயுள் தண்டனை அல்லது 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை : அபராதம். |
| 9 | பிரிவு 307 | கொலை செய்ய முயற்சி – 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை, அபராதம் |
| 10 | பிரிவு 141 | சட்ட விரோதமான கும்பல் : 5 அல்லது அதற்கும் மேற்பட்டவர்கள் கூடினால் அது சட்ட விரோதமான கும்பல் என்று அழைக்கப்படும். |
| 11 | பிரிவு 272 | விற்பனை செய்யவுள்ள உணவு அல்லது பானத்தில் கலப்படம் செய்தல் – 6 மாதம் சிறைதண்டனை அல்லது 1000 ரூபாய் அபராதம் அல்லது |

| | | |
|---|---|---|
| | | இரண்டுமே |
| 12 | **பிரிவு 274** | மருந்துகளில் கலப்படம் விளைவித்தல் – 6 மாதம் சிறைதண்டனை அல்லது 1000 ரூபாய் அபராதம் அல்லது இரண்டுமே |
| 13 | **பிரிவு 319** | பிரிவு 319 : ஒருவருக்கு உடல் வலி, நோய் அல்லது வலிமைக் கேடு காயம் விளைவிக்கிற எவரும் காயம் விளைவிக்கிறார் என்று சொல்லப்படுவார் |
| 14 | **பிரிவு 320** | கொடுங்காயம் – ஆண்மை இழக்கச் செய்தல், கண் பார்வை இழக்கச் செய்தல், செவிடாக்குதல், எலும்பு மூட்டுத் திறனை இழக்கச் செய்தல்/சிதைத்தல்/முறித்தல், தலை அல்லது முகத்தின் கோளத்தை குலைத்தல், உயிருக்கு ஆபத்து விளைவித்தல்/ 20 நாளுக்கு இயங்க முடியாமல் செய்தல் |
| 15 | **பிரிவு 353** | பொது ஊழியரை, அவர் கடமையை செய்வதிலிருந்து தடை செய்வதற்காக தாக்குதல் அல்லது குற்றமுறு வன்முறையைப் பயன்படுத்துதல் |
| 16 | **பிரிவு 354** | பெண்ணின் மானத்திற்கு பங்கம் ஏற்படுத்தும் உட்கருத்துடன் தாக்குதல் அல்லது வன்முறையைப் பயன்படுத்துதல் |
| 17 | **பிரிவு 366** | பெண்ணை திருமணம் முதலியவற்றிற்காக பிள்ளை பிடித்துச் செல்லுதல்,<br>கடத்திச் செல்லுதல் அல்லது தூண்டுதல் |
| 18 | **பிரிவு 366A** | வயது வராத பெண்ணை உடலுறவுக்காக கொணர்தல் |
| 19 | **பிரிவு 367** | கொடுங்காயம், அடிமை நிலை முதலியவற்றிற்கு ஒருவரை உட்படுத்தும் பொருட்டு பிள்ளை பிடித்தல் அல்லது கடத்திச் செல்லுதல் |
| 20 | **பிரிவு 372** | பாலியல் தொழிலில் ஈடுபடுத்துவதற்காக 18 வயதுக்கு உட்பட்டவரை விற்பனை செய்தல் |
| 21 | **பிரிவு 441** | வேறு ஒருவருக்கு சொந்தமான சொத்தினுள் அல்லது சொத்தின் மீது குற்றம் புரிய வேண்டும், அவமதிக்க வேண்டும் அல்லது அவருக்கு தொல்லைதர வேண்டும் என்ற நோக்கத்துடன் நுழைவது குற்றமுறு அத்துமீறல் செயவதாக கருதப்படுகிறது. |
| 22 | **பிரிவு 509** | ஒரு பெண்ணின் மானத்திற்கு பங்கம் விளைவிக்கும் நோக்கத்துக்குட்பட்ட சொல், சைகை, செய்கை |

# குற்றவியல் நடைமுறைச் சட்டம் – சில முக்கிய பிரிவுகள்

| வ.எண் | பிரிவு | விளக்கம் |
|---|---|---|
| **1** | **பிரிவு 161** | சாட்சிகளை விசாரித்தல் |
| **2** | **பிரிவு 164** | ஒப்புதல் உரை வாக்குமூலங்கள் பதிவு எந்த பெருநகர் குற்றவியல் நடுவரும் அல்லது நீதித்துறை குற்றவியல் நடுவரும் புலனாய்வின் போது அல்லது விசாரணை துவக்கப்படுவதற்கு முன்பு வாக்குமூலத்தைப் பதிவு செய்யலாம் |
| **3** | **பிரிவு 156** | கைது செய்தற்குரிய குற்றத்தை புலனாய்வு செய்யும் அதிகாரம் |
| **4** | **பிரிவு 174** | தற்கொலை முதலியன பற்றி விசாரித்து அறிக்கை தருவது பற்றிய காவலர் பொறுப்பு |
| **5** | **பிரிவு 176** | குற்றவியல் நடுவர் விசாரணை –ஒரு காவல் துறையினரால் காவலில் வைக்கப்பட்டுள்ள நபர் யாராவது , காவலில் வைக்கப்பட்டிருக்கும் போது மாண்டுவிட்டால், பிரேத விசாரணை நடத்துவதற்கு உரிமை பெற்ற அருகாமையில் உள்ள ஒரு குற்றவியல் நடுவர், அதிகாரம் வழங்கப்பட்டுள்ள ஒரு குற்றவியல் நடுவர் அந்த மரணத்தின் காரணத்திற்கான விசாரணையை செய்யலாம். |
| **6** | **பிரிவு 437** | பிணையில் விடத்தகாத குற்றங்களில் பிணையில் விடுத்தல் |
| **7** | **பிரிவு 160** | சாட்சிகளை அழைப்பதற்கான அதிகாரம் |
| **8** | **பிரிவு 438** | முன் ஜாமின் - கைது செய்வதற்குரிய ஒரு குற்றத்தைப் புரிந்ததாக, தாம் கைது செய்யப்படலாம் என்று நம்புவதற்குரிய காரணம் உள்ள நபர், இந்தப் பிரிவின் கீழ் ஆணை பிறப்பிக்குமாறு நீதி மன்றத்திற்கு மனு கொடுக்கலாம். |
| **9** | **பிரிவு 57** | கைது செய்யப்பட்டவரை 24 மணி நேரத்திற்குமேல் காவலில் |

| | | |
|---|---|---|
| | | வைக்கக்கூடாது |
| 10 | பிரிவு 125 | போதுமான வசதி படைத்திருந்தும் எவரேனும் a) தன்னை காத்துக்கொள்ள முடியாத தனது மனைவி, குழந்தை ஆகியோரைப் புறக்கணித்தால் அத்தகையவருக்கு ஒரு குற்றவியல் நடுவர் மாதந்தோறும் ஒரு தொகையை பராமரிப்பு செலவாக அளிக்க உத்தரவிடலாம். |
| 11 | பிரிவு 144 | அவசர நிலைகளில், நெருக்கடியான நேரங்களில் ஒழுங்கீனம் அபாயமான வழக்குகளில் உத்தரவிடுவதற்கு அதிகாரம் |
| 12 | பிரிவு151 | கைது செய்வதற்குரிய குற்றங்களை தடுப்பதற்காக முன்னெச்சரிக்கையாக கைது செய்வது. |
| 13 | பிரிவு 200 | குற்றவியல் நடுவரிடம் செய்யப்படும் முறையீடுகள் – ஒரு குற்றம் பற்றிய முறையீட்டை விசாரணைக்கு ஏற்கும் ஒரு குற்றவியல் நடுவர், அந்த முறையீட்டை அளித்தவரையும், வருகை தந்துள்ள, சாட்சியங்களையும் சத்தியப்பிரமாணம் செய்வித்து விசாரிக்க வேண்டும். |
| 14 | பிரிவு 207 | குற்றம் சாட்டப்பட்டவருக்கு கொடுக்க வேண்டிய ஆவணங்கள் –குற்றம் சாட்டப்பட்டவருக்கு காவல் அறிக்கை மற்றும் பிற ஆவணங்களை அளிக்க வேண்டும். |
| 15 | பிரிவு 300 | ஒரு தடவை தண்டிக்கப்பட்டவரை அல்லது விடுதலை செய்யப்பட்டவரை மீண்டும் அதே குற்றத்திற்காக விசாரிக்கக் கூடாது. |

# குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் 2005

**சில குறிப்புகள்**

**அறிமுகம்:**

குடும்பங்களில் பெண்களுக்கு எதிராக அவர்களின் சொந்த இரத்த பந்தங்களாலும் திருமணத்தால் ஏற்படும் உறவுகளாலும் நிகழ்த்தப்படும் வன்முறைகளை சமூகப்பிரச்சனையாக அங்கீகரித்து, அதேசமயம் குடும்ப அமைப்பை பாதுகாக்கும் உன்னத நோக்கத்துடன் இயற்றப்பட்ட இச்சட்டம் உரிமையியல் சட்ட வழிவகையாகும். நீதிமன்ற ஆணை மீறப்படும் வழக்குகளில் குற்றவியல் சட்டத்தில் வகுக்கப்பட்டுள்ள நடைமுறைகளை பின்பற்றி ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குள் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நிவாரணம் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மைய அரசின் இச்சட்டம் ஜம்மு காஷ்மீர் மாநிலம் நீங்கலாக அனைத்துப் பகுதிகளுக்கும் பொருந்தும். 26.10.2006 முதல் இச்சட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது. இச்சட்டத்தில் உபயோகப்படுத்தப்பட்டுள்ள வார்த்தைகளின் பொருள் வரையறை.

**பாதிக்கப்பட்ட பெண் மற்றும் குழந்தை**

பாதிக்கப்பட்ட பெண் மற்றும் குழந்தை என்பவர் யாருக்கு எதிராக புகார் கொடுக்கிறாரோ அந்த நபருடன் குடும்ப ரீதியாக இரத்த பந்தத்தினாலோ, திருமண பந்தத்தினாலோ அல்லது பிற வகையான குடும்ப உறவு கொண்டிருப்பவராகவோ இருக்க வேண்டும். குழந்தை எனும்போது 18 வயதுக்கு உட்பட்ட தத்தெடுக்கப்பட்ட, வளர்ப்புக் குழந்தை உட்பட எந்த நபரும் ஆவார்.

**குடும்ப நிகழ்வு அறிக்கை**

பாதிக்கப்பட்ட நபரிடமிருந்து பெறப்பட்ட புகாரின் அடிப்படையில் வகுத்துரைக்கப்பட்ட படிவத்தில் பூர்த்தி செய்யப்பட்டு தயாரிக்கப்படும் அறிக்கை.

**குடும்ப உறவுமுறை**

வழக்கத்தில் உள்ள திருமண முறைகளில் ஏதேனும் ஒன்றின் அடிப்படையில் திருமணம் ஆனவர்கள் அல்லது திருமணம் செய்துகொள்ளாது சேர்ந்து வாழ்ந்த அல்லது வாழ்கின்றவர்கள்.

**எதிர்முறையீட்டாளர்**

பாதிக்கப்பட்டவர், எந்த நபருக்கு எதிராகப் புகார் கொடுத்துள்ளாரோ அவர் எதிர் முறையீட்டாளர் ஆவார். அந்த நபர் 18 வயது பூர்த்தி அடைந்தவராக இருக்க வேண்டும்.

**பகிர்ந்துகொள்ளப்பட்ட குடியிருப்பு**

பாதிக்கப்பட்டவர் எதிர்முறையீட்டாளருடன் குடும்ப உறவின் அடிப்படையில் சேர்ந்து வாழ்ந்த அல்லது வாழ்கின்ற அவ்வீடு தனித்தனியாகவோ அல்லது வீட்டின் மீதான உரிமை, பாகம்,

பங்குகள் பாதிக்கப்பட்டவருக்கோ அல்லது எதிர்முறையீட்டாளருக்கோ உரியதாகவோ அல்லது அவரின் குடும்ப சொத்தாகவோ இருக்கலாம்.

**குடும்ப வன்முறை**

எதிர்முறையீட்டாளரின் எந்த ஒரு செயலோ அல்லது புறக்கணிப்போ அல்லது பாதிக்கப்பட்டவருக்கு உடல் ரீதியாக காயம், உயிருக்கு ஆபத்து மற்றும் மனரீதியாக பாதிப்பை ஏற்படுத்தும் நோக்கில் அவச்சொல்களால் திட்டுவது, பாலியல் ரீதியாக கொச்சைப்படுத்துவது, உரிய முறையில் பராமரிக்க மறுத்து பொருளாதார ரீதியாக வன்முறைக்கு உட்படுத்துவது , பாதிக்கப்பட்டவர்களின் உடமைகளை, நகைகளை, சொத்துக்களை, ஆவணங்களை அபகரித்துக் கொண்டு தரமறுப்பது, குழந்தைகளை பாதிக்கப்பட்டவரின் பராமரிப்பிலிருந்து பிரித்து வேதனைக்குள்ளாக்குவது, பாதிக்கப்பட்டவருக்கு ஆதரவாக உள்ள அவரின் உறவினர்களை மிரட்டுவது, காயப்படுத்துவது, துன்பப்படுத்துவது ஆகிய செயல்கள் குடும்ப வன்முறையாகும்.

மேற்கூறிய வரையறையை விளக்கமாக புரிந்துகொள்ளும் பொருட்டு

**உடல்ரீதியான வன்முறை**

கடித்துக் காயப்படுத்துவது, உடல் உறுப்புகளுக்கு ஊறு விளைவிப்பது, காயம் வெளியே தெரியாத வகையில் வலியை ஏற்படுத்துவது, தற்கொலை செய்துகொள்ளத்தூண்டுவது, பிற நபர்களை தூண்டிவிட்டுத் தாக்கச்செய்வது, உயிருக்கு ஆபத்து விளைவிப்பது ஆகிய செயல்களை உள்ளடக்கியதாகும்.

**பாலியல் ரீதியான வன்முறை**

எதிர்முறையீட்டாளர் பாதிக்கப்பட்டவரை பாலியல் ரீதியாக துன்புறுத்துவது, சிறுமைப்படுத்துவது, உறுப்புகளை கேலி செய்வது, ஆபாசப் படங்களை பார்க்கச்சொல்லியும் அதன்படி நடந்து கொள்ளச்சொல்லியும் துன்புறுத்துவது, பிறருடன் ஒப்பிட்டு பாலியல் ரீதியாக கொச்சைப்படுத்துவது, விருப்பத்திற்கு மாறான, முறையற்ற வகையில் உறவுகொள்ள கட்டாயப்படுத்துவது ஆகிய செயல்கள் உள்ளடங்கியவை பாலியல் வன்முறையாகும்.

**உளவியல் ரீதியான வன்முறை**

கேலி செய்தல், அவமதித்துப் பேசுதல், தரக்குறைவாகத் திட்டுவது, ஆண்வாரிசு பெற்றெடுக்கவில்லை எனக் குறை கூறுவது, மனதை புண்படுத்த வேண்டும் என்ற நோக்கில் சிறுமைப்படுத்திப் பேசுதல், பாதிக்கப்பட்டவரின் உறவினர்களை அவமதித்தல், அவர்களை துன்புறுத்தப்போவதாக அச்சுறுத்துதல், குழந்தைகளை தாயிடமிருந்து பிரித்தல் போன்ற செயல்களை உள்ளடக்கியது ஆகும்.

**பொருளாதார வன்முறை**

வீட்டுத்தேவைகளுக்குப் பணம் தர மறுப்பது அல்லது அத்தேவைகளை பூர்த்தி செய்யாதிருப்பது, வீட்டு வாடகை, மின்சாரக் கட்டணம் ஆகியவற்றை செலுத்த மறுப்பது, பாதிக்கப்பட்டவரின் நகைகள், பணம் ஆகியவற்றைக் கவர்ந்துகொண்டு தரமறுப்பது, நிதி ஆதாரங்களை முடக்குவது அல்லது நாசப்படுத்துவது, சொத்துக்களை மாற்றிக் கொடுக்கும்படி, விற்றுக்கொடுக்கும்படி வற்புறுத்துவது, ஆவணங்களை மறைத்து வைத்துக்கொண்டு தர

மறுப்பது, சொத்துக்களைத் தெரியாமல் விற்றுவிடுவது, சம்பளப்பணத்தை பறித்துக்கொள்வது, உடமைகளைப் பயன்படுத்த விடாமல் தடுப்பது மற்றும் விற்பது, பாதிக்கப்பட்டவருக்குக் கிடைக்க வேண்டிய பயன்கள், வசதிகளைக் கிடைக்கவிடாமல் தடுப்பது, குழந்தைகளின் பள்ளிக்கட்டணம், மருத்துவ செலவுகளை செலுத்தாதிருத்தல் போன்றவை பொருளாதார வன்முறையில் அடங்கும்.

**பாதுகாப்பு அலுவலர்கள்**

இச்சட்டத்தின்படி பாதிக்கப்பட்டவருக்கு நிவாரணம் கிடைக்க உதவவும், நீதிமன்ற நடுவர் இடும் பணிகளைச் செய்யவும், தமிழகத்தில் மாநில அரசானது, சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத்துறையின் கீழ் மாவட்டந்தோறும் பாதுகாப்பு அலுவலர்களை நியமித்துள்ளது. தமிழகத்தில் அனைத்து பாதுகாப்பு அலுவலர்களும் பெண்களே ஆவர். இவர்கள் அந்தந்த மாவட்டங்களில் சமூக நல அலுவலகங்களைப் (ஆட்சியர் அலுவலக வளாகங்கள் / கட்டிடங்களிலேயே) பணியிடமாகக் கொண்டுள்ளனர்.

**சேவை அமைப்பினர்**

சங்கங்கள் பதிவுச் சட்டம் **1860** ன் கீழோ அல்லது **1956** அன்று கம்பெனிகள் பதிவுச்சட்டத்தின் கீழோ அல்லது வேறு சட்டப்பூர்வ பதிவு செய்யப்பட்ட தன்னார்வ அமைப்புகள் , பெண்கள் நலனில் அக்கறையுடைய மருத்துவ, சட்டப்பூர்வ சேவைகளை வழங்குகிற அமைப்புகள் மாநில அரசிடம் இச்சட்டத்தின்படி தங்களை சேவை அமைப்புகளாகப் பதிவு செய்துகொள்ளலாம். அவ்வாறு சில அமைப்புகள் தமிழகத்திலும் தங்களை பதிவு செய்து கொண்டுள்ளன.

**பாதுகாப்பு இல்லங்கள்**

பாதிக்கப்பட்டவர், தங்கும் இடமின்றி தவிக்கும் பட்சத்தில் இவருக்கான தங்குமிட ஏற்பாடுகளை பாதுகாப்பு இல்லப் பொறுப்பாளர்களிடமிருந்து பாதுகாப்பு அலுவலரோ சேவை அமைப்பினரோ ஏற்படுத்தித் தருவர். தமிழக அரசு நடத்தி வரும் சேவை இல்லங்களும் காப்பகங்களும் கூட பாதுகாப்பு இல்ல சேவையைப்புரிந்து வருகின்றன.

**பாதிக்கப்பட்டவர்களுக்கான மருத்துவ வசதி**

பாதிக்கப்பட்டவருக்கு மருத்துவ உதவி தேவைப்படும் எனில் பாதுகாப்பு அதிகாரியோ, சேவை அமைப்போ, காவல்துறையோ அந்த நபருக்கு அருகில் உள்ள அரசு மருத்துவமனையை மருத்துவ உதவியை தருமாறு கோரலாம். அனைத்து அரசு மருத்துவமனைகளுக்கும் மருத்துவ சேவையை அளிக்க பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

**பாதுகாப்பு அலுவலர் , சேவை அமைப்புகள், நீதிமன்ற நடுவர், காவல்துறை ஆகியோரின் கடமைகள்**

பாதிக்கப்பட்ட நபர், வன்முறை குறித்து கொடுக்கும் புகாரைப் பெற்றாலோ அல்லது வன்முறையின் நிகழ்வின்போது தானே நேரடி சாட்சியாக இருக்க நேர்ந்தாலோ பாதிக்கப்பட்ட நபர் சட்டப்படி பெற உரிமையுள்ள பாதுகாப்பு உத்தரவு, பண நிவாரணம் , குழந்தைப் பாதுகாவல் (Custody), குடியிருப்பு உத்தரவு மற்றும் இழப்பீடு உத்தரவுகளை பெற உரிமையுண்டு என்ற தகவல்களை அவருக்குத் தெரிவிக்க வேண்டும்.

அதேபோன்று, பாதிக்கப்பட்டவருக்குத் தேவையெனில் உடனடி தங்குமிட வசதியையும், மருத்துவ வசதியையும் செய்துகொடுக்க வேண்டும். பாதிக்கப்பட்டவருக்கு சட்ட உதவி

ஆணையச்சட்டம் 1981ன் படி இலவச சட்ட உதவி பெறும் உரிமை உள்ளதையும் தெரிவித்தல் வேண்டும்.

பாதிக்கப்பட்டவர் அளித்த புகார் இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 498A –ன் படி ஏற்கக்கூடியதாக இருப்பின் அப்பிரிவின் கீழும் நடவடிக்கை கோர உரிமை உண்டு என்ற தகவலை தெரிவித்தல் இச்சட்டத்தின் வாயிலாகக் கிடைக்கக்கூடிய நிவாரணங்கள் தவிர பாதிக்கப்பட்டவரின் புகாரின் பேரில் தேவையெனில் இந்திய தண்டனைச் சட்டம் அல்லது பிற சட்டப்பிரிவுகளின்கீழ் காவல்துறை உரிய நடவடிக்கை எடுக்கும் கடமையை இச்சட்டம் தடை செய்யாது.

**பாதுகாப்பு அலுவலரின் கடமைகள்**

பாதிக்கப்பட்ட நபர் அளிக்கும் புகாரினைப் பெற்று உரிய படிவத்தில் குடும்ப நிகழ்வு அறிக்கை தயார்செய்து நீதிமன்ற நடுவருக்கு மனு அளிப்பது மற்றும் அவற்றின் நகல்களை சம்பவம் நடந்த எல்லைக்குட்பட்ட காவல்துறை அதிகாரிக்கும் சேவை அமைப்பிற்கும் அனுப்பி வைத்தல். நீதிமன்ற உத்தரவு பெறவும், உத்தரவின்படி பாதிக்கப்பட்ட நபர் நிவாரணம் பெற உதவுதல். இலவச சட்ட உதவி பாதிக்கப்பட்டவருக்கு தேவைப்படும் எனில் அதற்கான ஏற்பாடு செய்தல். பாதிக்கப்பட்ட நபருக்கு காயம் ஏற்பட்டிருப்பின் உரிய மருத்துவ சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தல். தங்குமிடம் தேவைப்படும் எனில் அதற்கான ஏற்பாடு செய்தல்.

நீதிமன்ற ஆணைக்கு இணங்க ஆலோசனை தேவைப்படும் வழக்குகளில் சட்டப் பிரிவு 14ன் கீழ் ஆலோசகரை நியமனம் செய்து உரிய ஆலோசனை வழங்குதல் அந்தந்த மாவட்ட எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள சட்ட உதவி, ஆலோசனை மையங்கள், சேவை அமைப்புகள், பாதுகாப்பு இல்லங்கள் மற்றும் மருத்துவ வசதிகள் ஆகியவை குறித்த விவரங்களை சேகரித்துப் பராமரித்தல். பொதுமக்களுக்கு இச்சட்டம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

**சேவை அமைப்பினரின் பணிகள்**

பாதுகாப்பு அலுவலரைப் போன்றே பாதிக்கப்பட்டவருக்கான அனைத்து உதவிகளையும் செய்தல் மற்றும் பாதுகாப்பு அலுவலர்களின் அனைத்துப் பணிகளிலும் அவருக்குத் துணையாக இருத்தல்.

**மனுவை தாக்கல் செய்வதற்கான நீதிமன்ற அதிகார வரம்பு**

முதல் நிலை நீதிமன்றம் அல்லது மாநகர நீதிமன்றத்தில் கீழ்க்காணும்படி மனுதாக்கல் செய்யலாம்.

- பாதிக்கப்பட்ட நபர் நிரந்தரமாக அல்லது தற்காலிகமாகக் குடியிருக்கும் அல்லது பணிபுரியும் எல்லைக்குட்பட்ட நீதிமன்றம்
- எதிர்முறையீட்டாளர் குடியிருக்கும்அல்லது பணிபுரியும் எல்லைக்குட்பட்ட நீதிமன்றம்
- குடும்ப நிகழ்வு அல்லது சம்பவம் நடந்த எல்லைக்குட்பட்ட நீதிமன்றம்

இச்சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்படும் உத்தரவுகள் இந்தியா முழுவதும் நடைமுறைப்படுத்தத் தக்கவை ஆகும்.

**நீதிமன்றம் அளிக்கத்தக்க ஆணைகள்**

பிரிவு 18ன் கீழ் குடும்ப வன்முறை செயல்களை தடுக்கும் பாதுகாப்பு ஆணைகள், சீதனப்பொருட்கள் மற்றும் சொத்துக்களை விற்பதிலிருந்து மற்றும் உரிமை மாற்றம் செய்வதற்கு தடை ஆணை.

பிரிவு 19ன் கீழ் பகிர்ந்து கொள்ளப்பட்ட வீட்டில் தொடர்ந்து குடியிருக்க உத்தரவு. எதிர் முறையீட்டாளர்களால் பாதிக்கப்பட்ட நபர் மற்றும் குழந்தைகளுக்கு தொடர் ஆபத்து எனும் நிலையில் பாதிக்கப்பட்டவர் கோரினால் பகிர்ந்துகொள்ளப்பட்ட வீட்டில் நுழையக்கூடாது அல்லது அதிலிருந்து வெளியேற வேண்டும் என ஆணை பிறப்பித்தல்.
சூழ்நிலைக்கேற்ப பகிர்ந்துகொள்ளப்பட்ட குடியிருப்புக்கு இணையாக வேறு வசிப்பிடமோ அல்லது அதற்கான வாடகையை பாதிக்கப்பட்டவர் கோரும் பட்சத்தில் அவ்வாறே கிடைக்க வகைசெய்யும் ஆணை.

எதிர்முறையீட்டாளர் பெண்ணாக இருக்கும் பட்சத்தில் அந்நபரை பகிர்ந்துகொள்ளப்பட்ட வீட்டிலிருந்து வெளியேற்ற வழிவகையில்லை.

பிரிவு 20ன் கீழ் மனுதாரருக்கும் அவரின் குழந்தைகளுக்குமான வாழ்க்கைப் பொருளுதவி செலவுகளுக்கான மற்றும் படிப்புகளுக்கான நிவாரணம்.

1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச்சட்டத்தின் பிரிவு 125ன் படியும் இன்னபிற நடைமுறையில் உள்ள சட்டங்களின் படியும் பெறப்பட்ட ஜீவனாம்சம் தவிர பாதிக்கப்பட்ட நபர் மற்றும் அவருடைய குழந்தைகளுக்கான பொருளுதவித் தொகை, இப்பிரிவின் கீழ் பொருளுதவி என்பது பாதிக்கப்பட்ட நபர் வாழ்ந்த வாழ்க்கைத்தரத்திற்கேற்ப இருக்க வேண்டும். இதனை ஒட்டுமொத்த வாழ்வாதாரத் தொகையாகவோ அல்லது மாதாந்திரத் தொகையாகவோ உத்தரவிட நீதிமன்றம் அதிகாரம் பெற்றுள்ளது.

எதிர்முறையீட்டாளர் பாதிக்கப்பட்டவருக்கு வாழ்க்கைப் பொருளுதவி வழங்கத் தவறும் பட்சத்தில் எதிர்முறையீட்டாளரை பணிக்கமர்த்தியவரையே நேரடியாக நீதிமன்றத்தில் பொருளுதவியை செலுத்த உத்தரவிடலாம்.

பிரிவு 21ன் கீழ் பாதிக்கப்பட்டவரின் குழந்தையை அவர் பொறுப்பில் ஒப்படைக்க/ தற்காலிகப் பாதுகாவல் கொடுக்க உத்தரவிடலாம்.

எதிர்முறையீட்டாளரின் சந்திப்பு குழந்தையின் நலனுக்கு எதிராக இருக்கும் எனக் கருதும் நிலையில் குழந்தை சந்திப்பை மறுத்து உத்தரவிடலாம்.

பிரிவு 22ன் கீழ் பாதிக்கப்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயங்களுக்கான இழப்பீடு, மனரீதியான சித்ரவதை மற்றும் இதர உளவியல் ரீதியான வன்முறைகளுக்கு இழப்பீடு ஆணைகளைப் பெறலாம்.
பிரிவு 23ன் கீழ் ஒவ்வொரு வழக்கிலும், இடைக்கால எதிர்த்தரப்பில்லா உத்தரவு வழங்க நீதிமன்றம் அதிகாரம் பெற்றுள்ளது.

**நீதிமன்ற ஆணைகளை இலவசமாகப் பெறுவது**

நீதிமன்ற நடுவர் இச்சட்டத்தின் கீழ் வழங்கும் ஆணைகளை இருதரப்பினருக்கும், குடும்ப வன்நிகழ்வு அறிக்கை தாக்கல் செய்தவருக்கும் உள்ளூர் காவல் நிலையத்திற்கும் கட்டணம் இன்றி இலவசமாக நகல்களை வழங்க வேண்டும்.

**உத்தரவு மாற்றமைவு**

பாதிக்கப்பட்ட நபர் பாதுகாப்பு ஆணையை விடுவிக்கக் கோரும் மனுவைத் தாக்கல் செய்யும் வரை அவ்வாணை நடைமுறையிலிருக்கும், ஏதேனும் ஒரு தரப்பினரிடமிருந்து உத்தரவு மாற்றமைவு மனு பெறப்பட்டால் சூழ்நிலையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தைக் கணக்கில் கொண்டும் உத்தரவை மாற்றியோ, திருத்தியோ , ரத்து செய்யவோ நடுவர் உத்தரவு இடலாம்.
வேறேதேனும் வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தாலும், இச்சட்டத்தின் கீழ் நிவாரணம் பெற மனுதாக்கல் செய்யலாம். இச்சட்டத்தின் பிரிவுகள் 12, 18, 19, 20, 21, 22, 23 மற்றும் 31ன் கீழான மனுக்களின் விசாரணை 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச்சட்டப்படி கையாளப்படுகிறது.

**உத்தரவு மீதான மேல்முறையீடு**

முதல்நிலை நடுவர் நீதிமன்றம் அல்லது மாநகர நடுவர் நீதிமன்ற உத்தரவு, பாதிக்கப்பட்டவருக்கும் அல்லது எதிர்முறையீட்டாளருக்கும் சார்வு கொடுக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் அமர்வு நீதிமன்றத்தில் மேல் முறையீட்டைத் தாக்கல் செய்யலாம்.

**பாதுகாப்பு ஆணை மீறப்பட்டது குறித்துப் புகார்**

பாதுகாப்பு ஆணை மீறப்பட்டது குறித்த புகாரில் பாதிக்கப்பட்டவரின் கையொப்பம் இருக்க வேண்டும். இப்புகாரினை பாதிக்கப்பட்டவர் நேரடியாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம் அல்லது பாதிக்கப்பட்டவரின் புகாரின் பேரில் நீதிமன்ற ஆணையின் நகலையும் இணைத்து பாதுகாப்பு அலுவலர் குற்றவியல் நடுவருக்கு அனுப்பலாம் அல்லது நேரில் கொடுக்கலாம். காவல் துறையினருக்கும் ஆணை மீறப்பட்டது குறித்த புகாரினை அளிக்கலாம்.

நீதிமன்ற உத்தரவை அல்லது பாதுகாப்பு உத்தரவை மீறுவது தண்டணைக்குரிய குற்றமாகும். இக்குற்றத்திற்கு 1 ஆண்டுகால சிறைவாசம், அல்லது அதிகபட்ச தண்டணைத் தொகையாக ரூ.20,000 அல்லது இரண்டுமே சேர்ந்து நீதிமன்றம் வழங்கலாம்.

பாதுகாப்பு ஆணை மீறப்பட்ட மனுமீதான விசாரணயை கூடுமானவரை அவ்வாணையை வழங்கிய நடுவரே விசாரிக்க வேண்டும். வழக்கின் விசாரணையில் அறியப்பட்ட சம்பவங்களைப் பொறுத்து இந்திய தண்டனைச் சட்டம் 498 A பிரிவு அல்லது வரதட்சணை தடைச்சட்டத்தின் கீழும் குற்றம் சாட்டலாம். பாதுகாப்பு ஆணையை மீறும் குற்றம், பிணையில் (Bail) விட முடியாததும், உடனடி நடவடிக்கை எடுக்கத்தக்கதும் ஆகும். பாதிக்கப்பட்டவரின் சாட்சியை மட்டுமே கணக்கில் கொண்டு குற்றவாளி, குற்றம்புரிந்தவர் என தீர்மானிக்கலாம்.

**இச்சட்டத்தின் கீழ் விசாரணை முறை மற்றும் கால அளவு**

குடும்ப வன்நிகழ்வு கோரும் நிவாரணங்கள் குறித்த அறிக்கையை நீதிமன்றத்தில் மனுவாக தாக்கல் செய்யப்பட்டவுடன் மனுவைப்பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து 33 நாட்களுக்கு

மிகாமல் முதல் விசாரணைத் தேதியை குறிக்க வேண்டும். மனுவின் தன்மை, கோரப்படும் நிவாரணத்தின் அவசர, அவசியம் கருதி எதிர் மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராவதற்கு அல்லது அவரது வாக்குமூலம் நிலுவையில் இருந்தாலும் இடைக்கால மற்றும் ஒருதலைப்பட்சமான உத்தரவை நீதிமன்றம் வழங்கலாம்.

நீதிமன்ற உத்தரவின் பேரில் எதிர்முறையீட்டாளருக்கான அறிவிக்கையை 2 தினங்களுக்குள் அல்லது நீதிமன்றம் அனுமதிக்கும் காலஅளவுக்குள் சார்பு செய்ய வேண்டும். மனுமீதான இறுதித்தீர்ப்பினை 60 நாட்களுக்குள் வழங்க நீதிமன்றம் அனைத்து முயற்சிகளையும் செய்ய வேண்டும். நீதிமன்றத் தீர்ப்பு மீதான மேல்முறையீடு அத்தீர்ப்பு பெறப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் தாக்கல் செய்யப்படவேண்டும்.

## சவால்கள்

### சேவை அமைப்புகள்

சேவை அமைப்பு எனப் பதிவு செய்து கொண்ட அமைப்புகள் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அவர்களுக்கான அதிகாரங்களை நிறைவேற்றுவதில் சந்திக்கும் நடைமுறைப் பிரச்சனைகள் ஆவது சட்டப்படியான கடமைகளை நிறைவேற்ற அவர்களுக்கான போதிய பயிற்சியின்மை மற்றும் அப்பணிக்காக பிரத்யோக ஊழியரை நியமிக்காமை. சட்டப்படியான கடமைகளை நிறைவேற்ற போதிய நிதி ஆதாரம் இல்லை

### காவல்துறை :

காவல்துறை அதிகாரிகளுக்கும் இச்சட்டப்படியான அவர்களது கடமைகள், நீதிமன்றங்கள், சேவை அமைப்பினர், பாதுகாப்பு அலுவலர்களுடன் இணைந்து செயல்படவேண்டியதன் முக்கியத்துவம் குறித்து போதுமான விழிப்புணர்வும், பயிற்சியும் இல்லாத காரணத்தால், மகளிர் காவல் நிலையங்கள் பாதிக்கப்பட்ட நபரை பாதுகாப்பு அலுவலர்களிடம் அனுப்பி வைப்பதோடு தங்கள் கடமைகள் முடிந்து விட்டதாக கருதும் நிலையே தொடர்கிறது. மேலும் சட்டம் ஒழுங்கு காவல் அதிகாரிகள் இச்சட்டத்தை அனைத்து மகளிர் நிலையத்திற்கு உட்பட்ட சட்டமாகவே பார்க்கும் நிலையும் உள்ளது.

### பாதுகாப்பு அலுவலர்கள் :

மாவட்டத்திற்கு ஒரு பாதுகாப்பு அலுவலர் மற்றும் உதவியாளர் நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஒவ்வொரு வழக்கிலும், பல்வேறு நிலைகளில் நடுவர் நீதிமன்றத்துடன் இணைந்து செயலாற்ற வேண்டிய கடமையும் வழக்கின் நிலையைத் தொடர்ந்து கண்காணித்து, வேண்டும் போதெல்லாம் பாதிக்கப்பட்டவருக்கு உதவ வேண்டிய பொறுப்பும் கொண்டுள்ளனர். தொடர்ந்து பெருகி வரும் புகார்களால் ஏற்படும் பணிச்சுமையும், ஒரே நேரத்தில் ஒன்று மற்றும் அதற்கு மேற்பட்ட வழக்குகளில் நீதிமன்றம் கொடுக்கும் பணிகளையும், ஆணைகளையும் நிறைவேற்ற முடியாத நிலையில் அவர்கள் உள்ளனர்.

### நீதிமன்றங்கள்:

பாதிக்கப்பட்ட நபர் நேரடியாகவோ அல்லது அவர் சார்பான நபர் / பாதிக்கப்பட்ட நபர் அந்தந்தப் பகுதிகளில் மனுதாக்கல் செய்ய எல்லை வரையறை செய்யப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவருக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையே பிற நீதிமன்றங்களில் வழக்கு நிலுவையில் இருந்தாலும் இச்சட்டத்தின் கீழ் நிவாரணம் வேண்டி மனுதாக்கல் செய்யலாம்

என்றுள்ளபோது, இச்சட்டத்தின் கீழ் பதிவாகும் வழக்குகளை விரைந்து முடிக்க முடியாத நிலைமையே உள்ளது. ஒரே மாவட்டத்தில் குறைந்தது 4 முதல் 15 நீதிமன்றங்களில் அந்தந்த மாவட்ட வழக்குகள் பதிவாகும் நிலையில், நீதிமன்றங்களில் இவ்வழக்குகளுக்கு பிரத்யோக கவனம் செலுத்த முடியாமல் மற்ற சட்டங்களின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளுக்கு ஆகும் அதிகப்படியான காலதாமதமே குடும்ப வன்முறை தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவாகும் வழக்குகளின் நிலையும் ஆகும். எனவே சட்டத்தில் கூறப்பட்டள்ளது போன்று கூடுமானவரை 60 நாட்களில் பெரும்பான்மையான வழக்குகளை முடிக்க முடியாத நிலையே உள்ளது.

**இலவச சட்ட உதவிகள்**

இலவச சட்ட உதவி மையங்களில், குடும்ப வன்முறைச் சட்டத்தின் கீழ் இலவசமாக சட்ட உதவி கோரும் மனுதாரர்களின் வழக்குகளை வாதாட நியமிக்கப்படும் வழக்கறிஞர்கள் இச்சட்டத்தில் நிபுணத்துவம் பெற்றவர்களாக இல்லாத காரணத்தாலும், பாதிக்கப்பட்ட நபருக்கு நிவாரண ஆணைகளை பெற வேண்டிய துரித நடவடிக்கைகளை எடுக்காததாலும் இம்மையங்களால் கையாளப்படும் வழக்குகள் நிலுவையிலேயே இருக்கும் நிலை உள்ளது.

**பரிந்துரைகள்:**

சேவை அமைப்பினருக்கு வேண்டிய பயிற்சிகளை அளித்து, அவர்கள் வழக்கின் ஆரம்ப கட்டம் முதல் நீதிமன்ற ஆணை பின்பற்றப்படுவது, கண்காணிப்பது வரை பாதுகாப்பு அலுவலர்க்கு, சேவை அமைப்பினருக்கு வேண்டிய பயணப்படி உட்பட அனைத்து உதவிகளுக்கும் உரிய ஏற்பாடுகளை அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

காவல்துறையினரின் பொறுப்புகள் சட்டத்தில் விளக்கமாக குறிப்பிடப்படவில்லை. எனவே அவர்களுக்கான கடமைகள் தெளிவாக விளக்கப்படவேண்டும். இச்சட்டப்படியான அவர்களுக்கான பொறுப்புகள் குறித்து போதிய விழிப்புணர்வு அளிக்கப்பட வேண்டும்.
அந்தந்த மாவட்டங்களில் பணியமர்த்தப்பட்டுள்ள பாதுகாப்பு அலுவலர்கள் , அவர்களின் உதவியாளர்கள் இச்சட்டத்தின் கீழான பணிகளை புரிவதற்கு வேண்டிய அனைத்து வசதிகளும் அவர்களுக்கு செய்துகொடுக்கப்பட வேண்டும். இவர்கள் வேறுபிற பணிகளில் ஈடுபடுத்தப்படக்கூடாது. பாதுகாப்பு அலுவலர்களுக்கு உதவியாக அனைத்து மாவட்டங்களிலும் தட்டச்சர் மற்றும் உதவியாளர்கள் நியமிக்கப்படவேண்டும்.

குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் 2005ன் கீழான வழக்குகளை விசாரிக்க இந்த நீதிமன்ற வளாகங்களில் தனி நீதிமன்றங்கள் உருவாக்கப்பட வேண்டும். இச்சட்டத்தின் கீழ் வரும் வழக்குகளை கையாள வேண்டிய நிபுணத்துவம் பெற்ற நடுவர்களால் வழக்குகள் விசாரிக்கப்பட்டு சட்டத்தில் கூறப்பட்டுள்ளது போன்று 60 நாட்களில் ஆணை வழங்கப்பட வேண்டும். நீதிமன்ற ஆணை மாற்றமைவு செய்ய வேண்டிய வழக்குகளில் காலதாமதம் இன்றி உடனடியாக செய்யப்பட வேண்டும். நீதிமன்ற ஆணைப்படி பாதிக்கப்பட்டவருக்கு கொடுக்கப்பட வேண்டிய நிவாரணத்தை வழங்காமல் காலதாமதம் செய்யும் எதிர்மனுதாரர்கள் மீது உரிய நடவடிக்கையை நீதிமன்றம் உடனடியாக எடுக்க வேண்டும்.

**இலவச சட்ட உதவி மையம்**

குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டத்தில் நிபுணத்துவம் பெற்ற வழக்கறிஞர்களையே, பாதிக்கப்பட்ட நபருக்காக வாதாட நியமித்துக் கொடுக்க வேண்டும். இம்மையத்தை நாடி வரும் பாதிக்கப்பட்ட பெண்களிடம் கட்டணமாக எதிர்பார்க்கும் நிலை தவிர்க்கப்பட வேண்டும்.

– **பெண் உரிமை ஆர்வலர், *மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு.***

## ABSTRACT

Social Welfare - Women Welfare - Protection of Women from Domestic Violence Act 2005 - Appointment of Service Providers in each District – Orders – Issued.

---

**Social Welfare & Nutritious Meal Programme (SW 3) Department**

G.O (2D) No.23,
Dated: 16-02-2007
Read:
(1) G.O.(2D) No.55, SW & NMP Department, dated 19-12-06
Read also:

1. (2) From Director of Social Welfare, Chennai-5, Letter Roc.No.53300/WW-1(5)/2006, dated 11.12.06

------

ORDER:

The Government of India in its notification dated 14.09.2005 have published "The Protection of Women from Domestic Violence Act, 2005". In another notification dated 17.10.2006, the Government of India have laid down the rules framed under The Protection of Women from Domestic Violence Act, 2005 for carrying out the provisions of the Act. Both the Act and the Rules came into force with effect from 26th October 2006. The Act is basically meant to provide protection to the wife or female live in partner from violence at the hands of the husband or male live in partner or his relatives. Domestic Violence under the Act includes actual abuse or the threat of abuse, whether physical, sexual, verbal, emotional or economic. Harassment by way of unlawful dowry demands to the Women Victim or her relatives would also be covered under the definition of domestic violence.

2. In this connection, the Government of India have requested this Government to take immediate steps to

(i) appoint protection Officers in each Districts as per section 8 of the Act and provide them with necessary infrastructure to enable them to start functioning;

1. (ii) invite applications from Service Providers as per Rule 11 and register them after due verification as regards their suitability;
2. (iii) publish the names and address with telephone number of the Protection Officers and the Service Providers prominently in News papers and put on the website of the State Government and
   (iv) give wide publicity to the provisions of the Act so that Women can avail of its benefits.

3. In the Government order first read above, the Government have issued orders appointing the District Social Welfare Officers of the Districts as Protection Officers in their respective jurisdiction as a stop-gap arrangement for the implementation of the above Act in each District to exercise their powers under the Act.

4. In the letter second read above, the Director of Social Welfare has sent proposal for appointment of Protection Officers, Service Providers and Counsellors in the Districts and has requested the Government to select representatives from among the list of Non-Governmental Organizations for appointment to the post of Service Providers in each District under Domestic Violence Act, 2005.

5. The Government after careful consideration of the proposal of Director of Social Welfare and after scrutinizing the profile in detail and interaction with the Non Governmental Organizations who have applied for appointment of Service Providers, Government selected

and appoint two Service Providers in the District of Chennai and one Service Provider in each District as indicated in the Annexure to this order. The tenure period of the Service Providers are fixed for three years in the first instance. The Non Governmental Organizations selected as Service Providers are having their own qualified Counsellors.

6. The Service Providers appointed under Domestic Violence Act, 2005 shall follow the Act / Rules of the Protection of Women from Domestic Violence Act, 2005. They are requested to arrange to provide the following facilities to the aggrieved persons / victims during their needy hour as per section 3 of Rule 11 of Domestic Violence Rules, 2006:-

(i) to provide shelter to the aggrieved persons / victims.
(ii) to provide medical facilities to the aggrieved persons / victims.
(iii) to provide Psychiatric / counseling facilities to the aggrieved persons / victims.
(iv) to provide Legal Aid facilities to the aggrieved persons / victims.
(v) to provide adequate security arrangements to the aggrieved persons/victims during their stay in the shelter home.
(vi) to provide functional telephone connection and other communication media for use of the aggrieved persons/victims.

7. Service Provider shall have the power to:-

(a) record the domestic incident report in the prescribed form if the aggrieved person to desires and forward a copy thereof to the Magistrate and the Protection Officer having jurisdiction in the area where the domestic violence took place;

(b) get the aggrieved person medically examined and forward a copy of the medical report to the Protection Officer and the police station within the local limits of which the domestic violence took place;

(c ) ensure that the aggrieved person is provided shelter in a shelter home, if she so requires and forward a report of the lodging of the aggrieved person in the shelter home to the police station within the local limits of which the domestic violence took place.

No, suit prosecution or other legal proceeding shall lie against any service provider or any member of the Service Provider who is, deemed to be, acting or purporting to act under this Act, for anything which is in good faith done or intended to be done in the exercise of powers or discharge of function under this Act towards the prevention of the Commission of domestic violence.

8. The Service Providers appointed under the Domestic Violence Act, 2005 shall not be provided any remuneration. But as and when they provide shelter to the victims, the charges for food and maintenance etc spent on the aggrieved persons / victims shall be reimbursed to them.

9. The Service Providers are directed to send monthly report detailing about the total number of beneficiaries benefited; whether Legal aid / counselling facilities, etc., are provided to the aggrieved persons / victims are to be sent directly to the Director of Social Welfare, Chennai.

10. The Protection Officer of each District is requested to publish the list of Service Providers in the local newspapers or on its website. She should maintain proper records by way of maintenance of Registers duly indexed, containing the details of Service Providers.

11. The Director of Social Welfare, Chennai is directed to collect the monthly report received from the Protection Officers of each District, scrutinize and watch whether the Service Provider follow the Rules / Act effectively under the Domestic Violence Act, 2005. He is

also requested to send an action taken report to Government periodically every quarter. The appointment of Protection Officers exclusively for this Act will be issued in due course.

(By Order of the Governor)

N.S. Palaniappan,
Secretary to Government

To

The Director of Social Welfare, Chennai-5
All the District Social Welfare Officers through Director of Social Welfare, Chennai-5
All District Collectors,
The Registrar, High Court, Chennai-104
The Secretary, Ministry of Women & Child Development,
Government of India, Shastri Bhavan,New Delhi – 110 001.

**Copy to:**

The Director General of Police, Chennai-4
All Commissioner of Police, through DGP, Chennai-4
Home Department, Chennai-9
Social Reforms Department, Chennai-9
Secretary to Governor, Raj Bhavan, Chennai-32.
The CM's Office, Chennai-9.
The Senior Personal Assistant to Minister, (SW), Chennai-9
The Private Secretary.
Social Welfare & Nutritious Meal Programme Department, Chennai-9
All Departments in Secretariat, Chennai-9
SF/SC.

//Forwarded//by Order/

SECTION OFFICER

**Annexure**

(G.O(2D) 23 /SW &NMP Department dated 16-2-07)

| | |
|---|---|
| **Kancheepuram**<br>Christ Faith Home for Children<br>3/91 Mettu colony , Manapakkam<br>Chennai 600106.<br>Ph. No 044 – 55494647, 225220588.. | **Thiruvallur**<br>Kalaiselvi Karunalaya Social Welfare Society,<br>PP1, 3 rd Block Mogappair West,<br>Chennai 600039.<br>Ph. No26257779. |
| **Vellore**<br>Organisation for Rural Development,<br>Murukkeri Ariyur, Vellore,<br>Ph. No 0416 – 2271477 | **Villupuram**<br>Bullockcart Worker Development Association<br>858 , East Pondy Road,<br>Villupuram – 605 602.<br>Ph.No.04146 – 325332. |

| | |
|---|---|
| **Cuddalore**<br><br>Sakthi Foundation,<br>(Represented by T. Saraswathi Devi),1,<br>Radha Nagar, Canarapalayam , Cuddulore -1<br>Ph No.04142 294530. | **Thiruvanamalai**<br><br>Mass Welfare Association (MAWA),<br>290A, Second Street, Anna Nagar,<br>Cheiyar – 604 407.<br>Ph No. 914182224637 |
| **Salem**<br><br>Young Women's Christian Association,<br>76-'A, Cherry Road, Hasthampatti,<br>Salem- 7,<br>Ph. No:9427 - 2312468. | **Namakkal**<br><br>Alai Youth Association ,<br>1/38 A, Melatheru, Muttanchetty Post,<br>Namakkal – 637 013.<br>Ph No. 04286 – 200504. |
| **Dharmapuri**<br><br>Voluntary Action For Rural Development,<br>Irrumathur PO, Via Barur ,<br>Dharmapuri District,<br>Ph.No.04341 – 254844. | **Krishnagiri**<br><br>Bharathi Women Development Seva Sangam,<br>30/120, Nehru Nagar,<br>Kalamangalam, Krishnagiri 635113<br>Ph No 04347 – 232794. |
| **Erode**<br><br>Centre for Action And Rural Education ,<br>(Care)<br>6 , Kambar Street, Teacher's Colony ,<br>Erode 638 011.<br>Ph No 0424 – 2274667 | **Coimbatore**<br><br>Mariyalaya,<br>8/1E, 122, Kasthuri Bai Street,<br>Thaneer Pandhal, Annuparpalayam (PO),<br>Thirupur , Coimbatore,<br>Pin. 641 652<br>Ph.No 0421 -2487957 |
| **Nilgiris**<br><br>Saras Trust (Represented by<br>Tmt. Vasanthakumari, Secretary)<br>203- B, Main Bazaar, Ooty,<br>Ph. No 2450794 | **Trichy**<br><br>Jaya Balwadi Educational society,<br>Aravakkurichi Patti Village,<br>Assor Post, Trichy,<br>Pin. 620 015.<br>Ph. 0431 – 2500223 |
| **Pudukkottai**<br><br>OAZOANE Voluntary Institution,<br>94/1, Agraharam, Aranthangi ,<br>Pudukkottai - 614 616.<br>Ph No 04371 – 270361. | **Karur**<br><br>Karur Anbukarangal ,<br>Murugan Kovil Vadappuram,<br>Vennaimalai , Karur – 639 006.<br>Ph.No. 04324 – 222052 |
| **Perambular**<br><br>St. John Sangam Trust , Roever Campus,<br>18, Anna Salai,<br>Perambalur – 621 212.<br>Ph No 04328 – 277132. | **Thanjavur**<br><br>Thanjavur Multipurpose Social Service Society,<br>Maries Cornor 12th Stree, Arulanandhambal Nagar,<br>Thanjavur Cell No.0442401177. |

| | |
|---|---|
| **Nagapattinam**<br><br>Avvai Village Welfare Society,<br>260, Public Office Road , Vlipalayam,<br>Nagapattinam. 611 001<br>Ph.No.04365 – 248998. | **Thiruvarur**<br><br>Bharathi Women Development Centre,<br>Kattur, Manakal, AyamPettai (Via)<br>Thiruvarur,<br>Pin 610104.<br>Ph No 04366 – 244377. |
| **Madurai**<br><br>Vidiyal,<br>6, AA Road, Rathinapuram,<br>Near Government Polytechnic,<br>Madurai - 625 011.<br>Ph. No 2675632. | **Theni**<br><br>Society Organized for Promotion of Rural,<br>Tribal and Downtrodden (SOPORT),<br>Thenkarai,<br>Periyakulam – 626 501.<br>Ph No 04546 – 231013. |
| **Dindigul**<br><br>Dindigul Multipurpose Social Service Society,<br>Johnpaul Complex, Nehruji Nagar,<br>Dindigul – 624 001.<br>Ph. No 0451 – 2432235. | **Sivagangai**<br><br>Singampatty Grama Munnetra Sangam,<br>8/27, Pattinathar Street,<br>Nattarasam Kottai,<br>Sivagangai 630 556.<br>Ph. No 94423 81038. |
| **Ramanathapuram**<br><br>S.M.S.S.S. Voluntary Organization,<br>3/574, Bagawathsingh Road,<br>Paramakudi – 623 707.<br>Ph No. 98630 02210. | **Virudhunagar**<br><br>Vasugi Mahalir Mandram,<br>1/183Higher Secondary School Street,<br>Thalavaipuram, Rajapalayam Taluk,<br>Ph.No. 98650 02210. |
| **Tirunelveli**<br><br>Social Service Society,<br>Tirunelveli Samuga Seva Sangam,<br>Tirunelveli District,<br>Ph. No 0462 - 2578282 | **Thuthukudi**<br><br>A.P.C. Veerabahu Ninaivu Arakkattalai,<br>No. 37, Franch Chapel Road,<br>Thuthukudi – 628 001.<br>Ph.No.0461 – 2320507, 5531617. |
| **Kanniyakumari**<br><br>Mangayar Mangalam,<br>Eraniel Road, Gandhi Nagar, Thakkalai,<br>Kanniyakumari District. Pin 629 175,<br>Ph.No.044 33 75586. | **Chennai**<br><br>Vishranthi,<br>1, Sapthagiri Apartment,<br>88, T.T.K. Road,<br>Alwarpet, Chennai – 600 018.<br>Ph.No.24490972.<br><br>Mahalir Satta Udhavi Mandram,<br>Affiliated to All India Domestic Women's Association,<br>No 13, Mosque Street,<br>Chennai – 6000 005.<br>Ph No 28511231. |

N.S.Palaniappan,
Secretary to Government

//Forwarded by order//

Section Office

# LIST OF PROTECTION OFFICERS, TAMIL NADU

| Name of the Protection Officers and Address | Name of the Protection Officers and Address |
|---|---|
| **Chennai**<br>Ms.M.Santhi Saraswathy &<br>MS.S.Pandiammal<br>Protection Officers,<br>District Social Welfare Office<br>Singaravelar Maligal, 8th Floor.<br>Collectorate Complex,<br>Rajaji Salai, Chennal – 600 001.<br>044-25264568<br>9940801968,9976789017 | **Coimbatore**<br>Ms..K.Aruna<br>Protection Officer,<br>District Social Welfare Office,<br>Collectorate Building.<br>Coimbatore – 641 018.<br>0422-2305126<br>9750763260 |
| **Cuddalore**<br>Ms.S.Andal<br>Protection Officer,<br>District Social Welfare Office,<br>Government Service Home Compound, Semmandalam,<br>Cuddalore District – 607 001.<br>04142-221235<br>9486793372 | **Dharmapuri**<br>Ms.V.Parvathi<br>Protection Officer,<br>District Social Welfare Office,<br>Collectorate Campus,<br>Dharmapuri – 636 705.<br>04342-233088<br>9750891449 |
| **Dindigul**<br>Ms. D.Sudha<br>Protection Officer,<br>District Social Welfare Office,<br>District Collector's Office Building, Room No. 88, Dindigul District-624 004.<br>0451-2460092<br>9942511127 | **Erode**<br>Ms. N. Ramayee<br>Protection Officer,<br>District Social Welfare Office,<br>Collectorate Building,<br>Erode – 638 011.<br>0424-2261405<br>9865826081 |
| **Kancheepuram**<br>Ms. A. Shaheenbanu<br>Protection Officer,<br>District Social Welfare Office,<br>43, 2nd Street, Gandhi Nagar,<br>Near IOB,<br>Kancheepuram – 631 502.<br>27239334<br>9500190590 | **Kanyakumari**<br>Ms.P.Selvasuganthi<br>Protection Officer,<br>District Social Welfare Office,<br>No.30 B, Allen Street,<br>Egil Gate, Nagercoll,<br>Kanyakumari District – 629 702.<br>04652-278404<br>9942981592 |

| | |
|---|---|
| **Karur**<br>Ms. M. Radhamani<br>Protection Officer,<br>District Social Welfare Office,<br>Collectorate Compound,<br>Thanthonimalal, Karur,<br>Karur District – 639 007.<br>04324-257959<br>9345172770 | **Krishnagiri**<br>Ms. T. Anbukarasi<br>Protection Officer,<br>District Social Welfare Office,<br>Collectorate Building,<br>Bangalore Main Road,<br>Room No.20-21,<br>Krishnagiri – 635 001.<br>04343-235717, 9047694887 |
| **Madurai**<br>Ms. S.Vasuki<br>Protection Officer,<br>District Social Welfare Office,<br>Plot No.35, East 2nd Cross Street,<br>K.K.Nagar,<br>Madurai – 625 020.<br>0452-2530258, 9942656138 | **Nagappattinam**<br>Ms. B. Ramamaheswari<br>Protection Officer,<br>District Social Welfare Office,<br>Collectorate Campus,<br>Palpannai Chery,<br>Nagapattinam District – 611 001.<br>04365-253045, 965998987 |
| **Namakkal**<br>Ms. S. Nagammal<br>Protection Officer,<br>District Social Welfare Office,<br>Collectorate Complex 2nd Floor,<br>Tiruchengodu Road, Namakkal,<br>Namakkal District – 637 003. | **Nilgiri**<br>MS. P. Maragathavalli<br>Protection Officer,<br>Distict Social Welfare Office,<br>54/1. E 14, Annadhani Building,<br>State Bank Line, Ooty.<br>Nilgiri – 643 001 |
| **Thiruvannamalai**<br>Ms. M. Gomathi<br>Protection Officer,<br>District Social Welfare Office,<br>Collectorate Building 2nd Floor,<br>Vengikal, Thiruvannamalai,<br>Thiruvannamalai – 606 604. | **Thiruvallur**<br>Ms. J. Laitha<br>Protection Officer,<br>District Social Welfare Office,<br>Collectorate Building,<br>Thiruvallur District – 602 001. |
| **Thiruvarur**<br>Ms. J. Viamala Priyadarshini<br>Protection Officer,<br>District Social Welfare Office,<br>Collectorate Building,<br>Thiruvarur District – 610 001. | **Trichirappalli**<br>Ms. J. Flora Margaret<br>Protection Officer,<br>District Social Welfare Office,<br>No.11 Arabic College Street,<br>(Old No.2) Kaja Nagar,<br>Trichirappalli District – 620 020. |
| **Tuticorin**<br>Ms. J. Velammal<br>Protection Officer,<br>District Social Welfare Office,<br>T.V.Puram 10th Street,<br>Sankaranarayanapillai park<br>backside,Tuticorin,<br>Tuticorin District – 628 002. | **Vellore**<br>Ms.R.Nirmala<br>Protection Officer,<br>District Social Welfare Office,<br>District Collectorate Building, 'B' Block<br>4th Floor, Sathuvacheri,<br>Vellore District – 632 009 |

| | |
|---|---|
| **Villuppuram**<br>M.Muthamizh Sheela<br>Protection Officer,<br>District Social Welfare Office,<br>District Collectorate Building,<br>Masteplan complex, Trichy Road, Villupuram,<br>Villupuram District – 605 602. | **Virudhunagar**<br>Ms.C.Indra Jayaseela<br>Protection Officer,<br>District Social Welfare Office,<br>District Collector's Office Complex,<br>Virudhunagar District – 626 002. |
| **Perambalur**<br>Ms.T.Muthu Selvi<br>Protection Officer,<br>District Social Welfare Office,<br>District Collectorate Building,<br>Preambalur District – 621 212 | **Pudhukkottai**<br>Ms. R. Subbulakshi<br>Protection Officer,<br>District Social Welfare Office,<br>Collectorate Building, Pudukottai,<br>Pudukottai District – 622 005. |
| **Ramanathapuram**<br>Tmt. R. Mala<br>Protection Officer,<br>District Social Welfare Office,<br>District Collector's Complex,<br>Ramanathapuram District – 623501. | **Salem**<br>Ms. M. Akilandeeswari<br>Protection Officer,<br>District Social Welfare Office,<br>109, Raghuram Colony,<br>Chitirasampath Hospital (Opposite),<br>Asthampatty, Gandhi Road,<br>Salem – 636 007 |
| **Sivagangai**<br>Ms.K.Sudha<br>Protection Officer,<br>District Social Welfare Office,<br>Collectorate Complex,<br>Sivagangai District – 630 562. | **Thanjavur**<br>Ms.P.Ida Rajam<br>Protection Officer,<br>District Social Welfare Office,<br>136, Nanchikottai Road,<br>Near Ulavar Santhai,<br>Thanjavur District – 613 006 |
| **Theni**<br>Ms.A. Rajeswari<br>Protection Officer,<br>District Social Welfare Office,<br>Collectorate Campus,<br>Theni – 625 531. | **Tirunelveli**<br>Ms.R.Vasanthi<br>Protection Officer,<br>District Social Welfare Office,<br>District Collector's Campus,<br>Tirunelveli – 627 009. |
| **Tiruppur**<br>Ms. Sherin Philip<br>District Social Welfare Officer,<br>(Full Additional Charge)<br>Room No.58, Near Cotton Market, Palladam Road,<br>Tirupur – 641 104. | **Ariyalur**<br>MS. Gandhimathi,<br>District Social Welfare Officer,<br>G.K.S. Complex,<br>Kallakkurichi Road,<br>Ariyalur District. |

http://nipccd.nic.in/reports/posp.htm

# குடும்ப வன்முறையிலிருந்து தங்களுக்காக பாதுகாப்புச் சட்டம் 2005

## குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவரா நீங்கள் ? மௌனமாய் வேதனைப்பட வேண்டாம்... உதவியை நாடுங்கள்

- ஒவ்வொரு கோட்டம்/வட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அலுவலர்கள் உங்களுக்கு உதவ முடியும்.
- ஒரு பாதுகாப்பு அலுவலர், மருத்துவர் அல்லது பதிவு பெற்ற ஒரு என்ஜிஓ ஒரு குடும்ப நிகழ்வு அறிக்கை (டிஐஆர்)* பதிவு செய்ய முடியும்.
- டிஐஆர் பதிவு செய்த, குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டோர் மருத்துவ, உறைவிட மற்றும் சட்ட உதவி சேவைகளை முன்னுரிமை அடிப்படையில் பெறத் தகுதியுள்ளவராவர்.
- நீதிமன்றத்தை அணுக நீங்கள் முடிவு செய்வீர்களானால் வன்முறையிலிருந்து பாதுகாப்பு, பராமரிப்பு, குடியிருப்பு உரிமை, உங்கள் குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் இழப்பீடு போன்ற நிவாரணங்களை நீங்கள் கோர முடியும்.
- உதவிகளுக்கும், உங்களுடைய உரிமைகள் பற்றி மேலும் தெரிந்துகொள்வதற்கும் உங்கள் பகுதி பாதுகாப்பு அலுவலரது முகவரியைத் தெரிந்துகொள்வதற்கும் எங்களது சம்பந்தப்பட்ட அலுவலரைச் சந்தியுங்கள்.

**தொடர்பு விவரங்கள்:**

* டிஐஆர் (Domestic Incident Report) என்பது குடும்ப வன்முறை குறித்த புகார் பெறப்படுகிற போது தயாரிக்கப் படுவதாகும். வன்முறை பற்றிய ஒரு பதிவை டிஐஆர் ஏற்படுத்துகிறது. ஒரு பெண் நீதிமன்றத்திற்குச் செல்ல விரும்பவில்லையென்றாலும் கூட டிஐஆர் படிவம் நிரப்பப்படுகிறது.

## பாதுகாப்பு அலுவலர்கள்

### பொதுக் குறிப்புகள்

- பாதுகாப்பு அலுவலர்கள் நியமனம்
- பாதுகாப்பு அலுவலர்களின் தகுதிகளும் அனுபவமும்
- பாதிக்கப்பட்ட பெண்ணிடமிருந்து தகவல் பெறுதல்
- அவசர நிலைமைகளின்போது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை
- பாதிக்கப்பட்ட பெண்ணுக்குப் பாதுகாப்பு
- தகவல் மற்றும் பரிந்துரைக் குறிப்பு வழங்குதல்
- ஒரு பாதுகாப்பான உறைவிடம் கிடைக்கச் செய்தல்
- பாதிக்கப்பட்ட நபருக்கு மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளச் செய்தல்
- குடும்ப நிகழ்வு அறிக்கைத் தயாரித்தல்
- குடும்ப நிகழ்வு அறிக்கை தயாரிக்கப்பட்ட/பெறப்பட்ட பிறகு மேற்கொள்ள வேண்டிய நடைமுறை
- கலந்தாய்வு/பேச்சுவார்த்தை நடத்தாதிருத்தல்
- நடுவருக்கு மனு
- மறுதரப்பில்லா அவசர தற்காலிக இடைக்கால நிவாரணம்
- சட்ட உதவிக்கான ஒரு வழக்குரைஞரை நியமிக்க உதவுதல்
- அறிவிப்பு (நோட்டீஸ்) வழங்குதல்
- அறிவிப்பு வழங்கப்பட்டதை அறிவித்தல்
- நீதிமன்ற ஆணைகளைச் செயல்படுத்தச் செய்தல்
- பாதுகாப்பு ஆணைகள் மீறப்படுவதில் தலையிடுதல்
- நீதித்துறை நடுவருக்கு உதவுதல்
- கோட்டம்/வட்டத்தில் கிடைக்கும் சேவைகளைத் தொகுத்தல்
- ஆலோசகர்கள் நியமனம்
- பாதுகாப்பு அலுவலர்கள் அரசு ஊழியர்களாக இருத்தல்
- நல்ல நோக்கத்துடன் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கான பாதிப்புகளிலிருந்து பாதுகாப்பு அலுவலர்களுக்குப் பாதுகாப்பு
- பாதுகாப்பு அலுவலர்கள் தங்களது கடமையைச் செய்யத் தவறும்போது தண்டனை நடவடிக்கைகள்
- பயிற்சி
- சட்டம் குறித்த விழிப்புணர்வு
- கோட்ட/வட்ட அளவில் குழுக் கூட்டங்கள்

பாதுகாப்பு அலுவலர்கள் என்போர் சட்டத்தின் கீழ் பெண்களுக்கு உதவுவதற்காக (S.2(n)) மாநில அரசால் S.8(1)ன் கீழ் நியமிக்கப்படுகிற/பொறுப்பளிக்கப்படுகிற அலுவலர்கள் ஆவர்.

**பாதுகாப்பு அலுவலர்கள் நியமனம்**
மாநில அரசு அறிவிக்கை வெளியிடுவதன் மூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும், தேவைப்படுவதாக அரசு கருதும் நிலையில், பாதுகாப்பு அலுவலர்களை நியமிக்க வேண்டும். பாதுகாப்பு அலுவலர் இந்தச் சட்டத்தின் படி அல்லது இந்தச் சட்டத்தின் கீழ் அதிகாரங்களைச்

செயல்படுத்துகிற அல்லது கடமைகளை நிறைவேற்றுகிற பகுதி குறித்து அரசு அறிவிக்கை வெளியிட வேண்டும் (S.8(1)).

**பாதுகாப்பு அலுவலரின் தகுதிகளும் அனுபவமும்**

சமூகத் துறையில் குறைந்தபட்சம் மூன்றாண்டுகள் அனுபவம் உள்ள அரசாங்கத்தினர் அல்லது அரசு சாரா அமைப்பினரிடையே இருந்து, கூடியவரையில் பெண்கள், பாதுகாப்பு அலுவலர்களாக நியமிக்கப்படலாம். பாதுகாப்பு அலுவலரின் பதவிக்காலம் மூன்றாண்ளுகளுக்குக் குறையாமல் இருக்கும். பாதுகாப்பு அலுவலர் இந்தச் சட்டத்தின் கீழ் தனது பணிகளை சிறப்பாக நிறைவேற்றத்தக்க வகையில் அவருக்குத் தேவையான அலுவலக உதவிகளை மாநில அரசு வழங்க வேண்டும் (S.8 (2), (3) மற்றும் விதிகள்3).

**பாதிக்கப்பட்ட பெண்ணிடமிருந்து தகவல் பெறுதல்**

ஒரு குடும்ப வன்முறைச் செயல் நடந்துள்ளதாக அல்லது நடந்துகொண்டிருப்பதாக அல்லது நடக்கக்கூடும் என்பதாகத் தகவல் பெற்றிருக்கக்கூடிய எவரொருவரும் பாதுகாப்பு அலுவலருக்கு வாய்மொழியில் அல்லது எழுத்துப்பூர்வமாக தகவல் அளிக்கலாம் (S.4, விதி 4(1)).

பாதுகாப்பு அலுவலருக்கு வாய்மொழியாகத் தகவல் தெரிவிக்கப்படுமானால், அவர் அதனை எழுத்துப்பூர்வமானதாக மாற்ற வேண்டும், அத்தகைய தகவலைத் தெரிவிக்கும் நபர் கையெழுத்திட்டிருப்பதை உறுதிப்படுத்த வேண்டும் (விதி 4 (2)).

பாதிக்கப்பட்ட பெண் விரும்புவாரானால், அவர் புகார் செய்வதற்கு பாதுகாப்பு அலுவலர் உதவ வேண்டும் (விதி 8 (l)).

தகவல் அளிப்பவர் எழுத்துப்பூர்வமாகத் தகவல் அளிக்க முடியாத நிலையில் இருப்பாரானால், அத்தகைய தகவலை அளிக்கும் நபரின் அடையாளம் குறித்த பதிவை பாதுகாப்பு அலுவலர் பராமரிக்க வேண்டும் (விதி 4 (3)).

பதிவு செய்யப்பட்ட தகவலின் நகலை, தகவல் அளிப்பவருக்கு கட்டணமின்றி உடனடியாக பாதுகாப்பு அலுவலர் வழங்க வேண்டும் (விதி 4 (4)).

**அவசர நிலைமைகளின்போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை**

பாதுகாப்பு அலுவலருக்கு மின்னஞ்சல் மூலமாக அல்லது தொலைபேசி வழியாக அல்லது அதுபோன்ற இதர வழிகளில், பாதிக்கப்பட்ட பெண்ணிடமிருந்து அல்லது வேறு எந்த ஒரு நபரிடமிருந்தும், ஒரு குடும்ப வன்முறைச் செயல் நடந்துகொண்டிருக்கிறது என்றோ அல்லது நடக்கக்கூடும் என்றோ, நம்பகமான தகவல் கிடைக்குமானால், அத்தகைய அவசர நிலையில் பாதுகாப்பு அலுவலர் நிகழ்வு நடைபெறும் இடத்திற்கு உடனடியாகச் செல்லுமாறு காவல்துறை உதவியைக் கோர வேண்டும்; குடும்ப நிகழ்வு அறிக்கையைப் பதிவு செய்ய வேண்டும்; அதனை இந்தச் சட்டத்தின் கீழ் உரிய ஆணைகள் பெறுவதற்காக நீதித்துறை நடுவரிடம் தாக்கல் செய்ய வேண்டும் (விதி 9).

***சிறந்த நடைமுறை:*** பாதுகாப்பு அலுவலர் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ஒரு பாதுகாப்பான உறைவிடம் கிடைப்பதற்கும், தேவைப்பட்டால் மருத்துவ சோதனைக்கும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

**பாதிக்கப்பட்ட பெண்ணுக்குப் பாதுகாப்பு**

பாதுகாப்பு அலுவலர்கள் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்:

குடும்ப வன்முறை குறித்து தகவல் அளித்ததன் விளைவாக பழிவாங்கப்படாமல் இருப்பததை உறுதிப்படுத்துவதற்காக, பாதிக்கப்பட்ட பெண்ணுக்கும், அவரது குழந்தைகளுக்கும் சாத்தியமான அனைத்து உதவிகளையும் வழங்குதல் (விதி 8(xii)).

பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு குடும்ப வன்முறையிலிருந்து பாதுகாப்பு அளித்தல் (விதி 8 (2a)

பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு குடும்ப வன்முறை மீண்டும் நிகழாமல் தடுப்பதற்கு நியாயமான அனைத்து நடவடிக்கையும் மேற்கொள்ளுதல் (விதி 8 (2b)).

பாதிக்கப்பட்ட நபர், காவல்துறை மற்றும் சேவை வழங்குவோர் ஆகியோருக்கிடையே தொடர்பு ஏற்படுத்துதல் (விதி 8 (Xiii)).

**தகவல் மற்றும் பரிந்துரைக் குறிப்பு வழங்குதல்**

பாதுகாப்பு அலுவலர் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு பின்வருவன குறித்து தகவல் அளிக்க வேண்டும்:

சட்டத்தின் கீழ் அந்தப் பெண்ணுக்கு உள்ள உரிமைகள் மற்றும் நிவாரணங்கள். பாதுகாப்பு அலுவலர்கள், சேவை வழங்குவோர் மற்றும் இலவச சட்ட உதவி சேவைகள் போன்ற சேவைகள் கிடைப்பது குறித்த தகவல்கள். பொருத்தமான நிலையில், இ.த.ச.S.498 Aயின் கீழ், புகார் பதிவு செய்வதற்கு அந்தப் பெண்ணுக்குள்ள உரிமை (S.5).

***சிறந்த நடைமுறை***: மேற்கொண்டு நடவடிக்கைகளுக்காக பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு படிவம் IV நகல் வழங்கப்படுதல்.

**ஒரு பாதுகாப்பான உறைவிடம் கிடைக்கச் செய்தல்**

பாதுகாப்பு அலுவலர், பாதிக்கப்பட்ட பெண் கோருவாரானால் அவருக்கு ஒரு பாதுகாப்பான உறைவிட இல்லம் கிடைக்கச் செய்ய வேண்டும். (S.9 (f)).

விதி S.6ன் கீழ் விண்ணப்பம் அளிக்கப்படுகிறது என்பதை எழுத்துப்பூர்வமாக தெளிவாகத் தெரிவித்து, உறைவிட இல்லத்தின் பொறுப்பாளரிடம் பாதுகாப்பு அலுவலர் வேண்டுகோள் விடுக்கலாம் (விதி 16 (1)).

பாதுகாப்பு அலுவலர் இத்தகைய வேண்டுகோளை விடுக்கிறபோது குடும்ப நிகழ்வு அறிக்கையின் ஒரு நகல் இணைக்கப்பட வேண்டும். (விதி 16 (2))

பாதிக்கப்பட்ட பெண்ணுக்கும் குழந்தைகள் இருப்பின் அவர்களுக்கும் உறைவிடம் செல்வதற்கான போக்குவரத்து வசதி கிடைப்பதற்கு பாதுகாப்பு அலுவலர் உதவ வேண்டும் (விதி 8 (vii))

**பாதிக்கப்பட்ட நபருக்கு மருத்துவ சோதனை கிடைக்கச் செய்தல்**

பாதிக்கப்பட்ட பெண் உடல்ரீதியான காயங்கள் அடைந்திருப்பாரானால், அவருக்கு மருத்துவ சோதனை மேற்கொள்ளப்படுவதற்கு பாதுகாப்பு அலுவலர் ஏற்பாடு செய்ய வேண்டும். (S9 (g)).

மருத்துவ சோதனைக்குப் பொறுப்பானவரிடம் பாதுகாப்பு அலுவலர் எழுத்துப்பூர்வமாக, S.7ன் கீழ் விண்ணப்பம் அளிக்கப்படுகிறது என தெளிவாகக் குறிப்பிட்டு வேண்டுகோள் அளிக்க வேண்டும். (விதி 17 (1))

பாதுகாப்பு அலுவலர் இத்தகைய வேண்டுகோளை விடுக்கிறபோது குடும்ப நிகழ்வு அறிக்கையின் ஒரு நகல் இணைக்கப்பட வேண்டும். (விதி 17 (2))

பாதிக்கப்பட்ட பெண்ணுக்கும், குழந்தைகள் இருப்பின் அவர்களுக்கும் மருத்துவமனை செல்வதற்கான போக்குவரத்து வசதி வழங்குவது உட்பட ஒரு மருத்துவமனையில் மருத்துவ உதவி கிடைப்பதற்கு பாதுகாப்பு அலுவலர் உதவ வேண்டும் (விதி 8 (vi))

**குடும்ப நிகழ்வு அறிக்கை (DIR) தயாரித்தல்**

குடும்ப வன்முறை குறித்த ஒரு புகார் கிடைக்கப்பெற்ற நிலையில் பாதுகாப்பு அலுவலர் ஒரு குடும்ப நிகழ்வு அறிக்கை தயாரிக்க வேண்டும் (S.9 (b)). டிஐஆர் இணைப்புப் படிவம் I காண்க (விதி 5 (1)).

மருத்துவ உதவி மற்றும் சேவை வழங்குவோரால் நிரப்பப்பட்ட படிவம் I படிவத்தை பாதுகாப்பு அலுவலர் பெறவேண்டும். (விதி 17 (3), விதி 5 (2)).

**டிஐஆர் தயாரிக்கப்பட்ட/பெறப்பட்ட பிறகு பின்பற்ற வேண்டிய நடைமுறை – படிவம் I**

பாதுகாப்பு அலுவலர் டிஐஆர் நகலை நீதித்துறை நடுவர், காவல்துறை அதிகாரி மற்றும் சேவை வழங்குவோருக்கு 3 வேலை நாட்களுக்குள் அளிக்க வேண்டும். (S9(b))

***சிறந்த நடைமுறை:*** டிஐஆர் நிரப்பப்பட்ட நிலையில் அதன் ஒரு நகல் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு வழங்கப்பட வேண்டும், ஒரு நகல் பாதுகாப்பு அலுவலரிடம் இருக்க வேண்டும்.
குடும்ப நிகழ்வு அறிக்கையின் தகவல்களை பதிவு செய்வதற்காக பாதுகாப்பு அலுவலரின் அலுவலகத்தில், உரிய விவரங்களை பதிவு செய்துள்ள ஒரு **டிஐஆர் பதிவேடு** பராமரிக்கப்பட வேண்டும்.

டிஐஆர் பதிவேட்டுச் சுருக்கத்தின் சான்றளிக்கப்பட்ட நகலை பாதுகாப்பு அலுவலர், மாதாந்திர அடிப்படையில், தனது அதிகார வரம்புக்குட்பட்ட, பின்வருவோரிடம் தாக்கல் செய்ய வேண்டும், அது பெறப்பட்டதற்கான ஒப்புகைச் சான்று பெற வேண்டும்:

- நீதித்துறை நடுவர் மன்ற பதிவாளர்
- சம்பந்தப்பட்ட காவல்நிலைய ஆய்வாளர்
- சேவை வழங்குமிட பொறுப்பாளர்

**கலந்தாய்வு/பேச்சுவார்த்தை நடத்தாதிருத்தல்**

மனுதாரர் அல்லது பாதிக்கப்பட்ட பெண், தனியாகவோ அல்லது கூட்டாகவோ கலந்தாய்வு பெறுவதற்கு ஒரு நீதித்துறை நடுவர்தான் தனது உத்தரவின் மூலம் ஆணையிட வேண்டும் (S 14). சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வேறு எந்த அமைப்பும் கலந்தாய்வு அல்லது பேச்சுவார்த்தை நடைமுறைகளை மேற்கொள்ளக்கூடாது, அத்தகைய ஏற்பாடுகளில் எட்டப்படும் ஒப்பந்தங்கள் சட்டப்பூர்வமாகக் கட்டுப்படுத்தாது.

**நீதித்துறை நடுவருக்கு விண்ணப்பித்தல்**

இந்தச் சட்டத்தின் கீழ் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிவாரணங்கள் கோரி விண்ணப்பம் தயாரிப்பதில், பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு பாதுகாப்பு அலுவலர் உதவ வேண்டும், பாதிக்கப்பட்ட பெண் விரும்புவாரானால் அதனை சம்பந்தப்பட்ட நீதித்துறை நடுவருக்கு அனுப்ப வேண்டும் (S9 (c) , 12 (1) மற்றும் விதி 6 (2), விதி 8 (iii))

விண்ணப்பமானது விதிகளின் படிவம் IIல் கூறப்பட்டுள்ளபடி கூடியவரையில் விவரங்களைக் கொண்டிருக்க வேண்டும் (S 12 (3), விதி 6 (1))

விண்ணப்பப் படிவம் கட்டணமின்றி வழங்க வேண்டும் (S9 (d))

பாதிக்கப்பட்ட பெண் எழுத்தறிவற்றவர் என்றால், அவருக்கு பாதுகாப்பு அலுவலர் விண்ணப்பத்தைப் படித்துக் காட்டி, அதிலுள்ள அம்சங்களை விளக்க வேண்டும். விதி 6 (3)

S 23 (2)ன் கீழ் மறுதரப்பில்லா ஆணை பெறுவதற்கான வேண்டுகோள் படிவம் IIIல் நிரப்பப்பட வேண்டும் (விதி 7).

பாதிக்கப்பட்டவருடன் கலந்தாலோசித்து, நிலைமையின் அபாயங்களை மதிப்பிட்ட பிறகு, மேற்கொண்டு குடும்ப வன்முறை நிகழாமல் தடுப்பதற்கான நடைமுறைகள் உள்ளிட்ட, ஒரு பாதுகாப்புத் திட்டத்தை பாதுகாப்பு அலுவலர் தயாரிக்க வேண்டும்; அதனை விண்ணப்பத்துடன் இணைத்து தாக்கல் செய்ய வேண்டும் (விதி 8 (iv)).

நீதிமன்றத்தில் விண்ணப்பத்தை தாக்கல் செய்யும் அமைப்பால், ஒரு '**விண்ணப்பப் பதிவேடு**' பராமரிக்கப்பட வேண்டும்.

**மறுதரப்பில்லா அவசர உடனடி இடைக்கால நிவாரணம்**

***சிறந்த நடைமுறை:*** பாதிக்கப்பட்ட பெண் ஒரு அவசர அச்சுறுத்தல் சூழலை எதிர்கொண்டிருப்பாரானால் பாதுகாப்பு அலுவலர் அதுகுறித்து நீதித்துறை கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும், அவசர மறுதரப்பில்லா (இடைக்கால) நிவாரணங்கள் கோர வேண்டும்.

**ஒரு சட்ட உதவி வழக்குரைஞரை அணுக உதவுதல்**

பாதிக்கப்பட்ட பெண் விரும்புவாரானால், மாநில சட்ட உதவிகள் அதிகார அமைப்புகள் சட்டம்– 1987ன் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள ஒரு பொறுப்பளிக்கப்பட்ட வழக்குரைஞரை அணுகுவதற்கு, அந்தப் பெண்ணிற்கு பாதுகாப்பு அலுவலர் உதவ வேண்டும் (S 9 (d), விதி 8 (v)).

**அறிவிப்பு வழங்குதல்**

விதி 12ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகளின்படி எதிர் மனுதாரருக்கு/எதிர் மனுதாரர்களுக்கு, அடுத்த விசாரணைத் தேதி பற்றித் தெரிவித்து, அறிவிப்பு வழங்குவதற்கு பாதுகாப்பு அலுவலருக்கு நீதித்துறை நடுவர் ஆணையிடலாம் (S13 (1)).

இவ்வாறு அறிவிப்பு வழங்குவதற்கு உள்ளூர் காவல்துறை உதவியை பாதுகாப்பு அலுவலர் பெறலாம்.

அறிவிப்பு கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து 2 நாட்களுக்குள் அல்லது நடுவரால் அனுமதிக்கப்படும் நியாயமான காலத்திற்குள், நடுவர் ஆணையிட்டபடி அறிவிப்பை பாதுகாப்பு பாதுகாப்பு அலுவலர் வழங்க வேண்டும் (S 13 (1))

**அறிவிப்பு வழங்கும் வழிமுறைகள் – விதி 12**

(1) அறிவிப்பில் எதிர் மனுதாரர்களின் பெயர்கள், குடும்ப வன்முறையின் தன்மை மற்றும் சம்பந்தப்பட்ட நபரை அடையாளம் காண்பதற்கு உதவக் கூடிய விவரங்கள் இருக்க வேண்டும்.

(2) பின்வரும் முறைகளில் அறிவிப்பு வழங்கப்பட வேண்டும்:

- எதிர் மனுதாரர் இந்தியாவில் பொதுவாக குடியிருக்கும் முகவரியில் அல்லது எதிர் மனுதாரர் வருவாய் கிடைக்கத்தக்க அளவில் வேலையில் உள்ள இடத்தில் வழங்கப்பட வேண்டும்
- அந்த இடத்தில் அந்த நேரத்தில் பொறுப்பாக உள்ள யாரேனும் ஒரு நபரிடம் அறிவிப்பு வழங்கப்பட வேண்டும், அவ்வாறு வழங்குவது சாத்தியமாகாத நிலையில் அந்த வளாகத்தில் கண்ணுக்குத் தெரிகிற இடத்தில் அது ஒட்டப்பட வேண்டும்

**அறிவிப்பு வழங்கப்பட்டது குறித்து அறிவித்தல்**

பாதுகாப்பு அலுவலரால், அறிவிப்பு வழங்கப்பட்டது குறித்து அறிவிக்கப்படுவது அவ்வாறு எதிர் மனுதாரர் மற்றும் நீதித்துறை நடுவரால் ஆணையிடப்பட்ட எந்தவொரு நபரிடமும் வழங்கப்பட்டதற்கான நிரூபணமாக, அதற்கு மாறாக நிரூபிக்கப்பட்டாலன்றி, இருக்கும். (S,13 (2))

***சிறந்த நடைமுறை:*** நீதித்துறை நடுவர் முகவரியிட்டு, அறிவிப்பு வழங்கப்பட்டது குறித்து அறிவிக்கும் ஒரு கடிதத்தின் மூலமாக அறிவித்தல்.

**நீதிமன்ற ஆணைகளைச் செயல்படுத்துதல்**

நீதித்துறை நடுவரால் எழுத்துப்பூர்வமாக ஆணையிடப்படும் நிலையில் பாதுகாப்பு அலுவலர் பின்வருமாறு செயல்பட வேண்டும்:

(சம்பந்தப்பட்டவர்கள்) சேர்ந்து வாழும் இடத்திற்கு நேரடியாகச் செல்லுதல் (விதி 10 (a)) நீதிமன்றத்தின் ஆணைப்படி **ஊதியம் குறித்த அறிக்கை**, அல்லது உடைமைகள் அல்லது வங்கிக் கணக்குகள் அல்லது வேறு எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்தல் (விதி 10 (b)) பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு வந்த அன்பளிப்புகள், நகைகள் உள்ளிட்ட சொந்த உடைமைகளை **மீட்டுத் தருதல்** பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு, அவர் சேர்ந்து வாழும் **வீட்டை மீட்டுத் தருதல்** (விதி 10 (c)) பாதிக்கப்பட்ட நபர் குழந்தைகளை மீட்டுக்கொள்வதற்கு உதவுதல் மற்றும் நீதிமன்றத்தின் ஆணைப்படி குழந்தைகளைப் பார்த்து வருவதற்கான **உரிமைகளை மீட்டுத் தருதல்** (விதி 10 (d)) நீதித்துறை நடுவரால் ஆணையிடப்படும் விதத்தில் S.12, 18, 19, 20, 21 மற்றும் S. 23யின் கீழ் நீதிமன்ற ஆணைகளைச் செயல்படுத்த **நீதிமன்றத்துக்கு உதவுதல்** (விதி 10 (e)) குடும்ப வன்முறையில் ஆயுதம் ஏதேனும் சம்பந்தப்பட்டிருக்குமானால் அதனைக் கைப்பற்ற, தேவைப்படுமானால், **காவல்துறை உதவியைப் பெறுதல்** (விதி 10 (f)) S.20ன் கீழ் பண நிவாரணத்திற்கான ஆணை, குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 (1974/2)ன் கீழ் முன்மொழியப்பட்டுள்ள நடைமுறையின்படி, ஏற்கப்பட்டுச் செயல்படுத்தப்படுவதை பாதுகாப்பு அலுவலர் உறுதிப்படுத்த வேண்டும். (S.9(h))

***சிறந்த நடைமுறை:*** நீதிமன்றத்தின் இடைக்கால அல்லது இறுதி ஆணைகளைச் செயல்படுத்துகையில் உள்ளூர் காவல்துறை உதவியை பாதுகாப்பு அலுவலர் பெற வேண்டும்.
நீதிமன்றத்தின் ஆணைகளைச் செயல்படுத்தும் அமைப்பால் ஒரு '**நீதிமன்ற ஆணை செயலாக்கப் பதிவேடு**' பராமரிக்கப்பட வேண்டும்.

**பாதுகாப்பு ஆணைகள் மீறப்படுதல்**

ஒரு பாதுகாப்பு ஆணை அல்லது ஒரு இடைக்கால பாதுகாப்பு ஆணை மீறப்படுவது குறித்து பாதிக்கப்பட்ட நபர் பாதுகாப்பு அலுவலரிடம் புகார் செய்யலாம். (விதி 15 (1))

புகாரானது தகவல் அளிப்பவரால் எழுத்துப்பூர்வமாக, அவரால் முறைப்படி கையெழுத்திடப்பட்டதாக இருக்க வேண்டும (விதி 15 (2))

பாதுகாப்பு அலுவலர் இந்தப் புகாரின் நகலை, மீறல் நடந்ததாகச் சொல்லப்படும் பாதுகாப்பு ஆணையின் நகலோடு சேர்த்து சம்பந்தப்பட்ட நீதித்துறை நடுவருக்கு உரிய ஆணைகளுக்காக அனுப்ப வேண்டும் (விதி 15 (3))

பாதுகாப்பு ஆணை மீறப்பட்டது தொடர்பாக, பாதுகாப்பு அலுவலரின் உதவியை பாதிக்கப்பட்ட பெண் கோரலாம். பாதிக்கப்பட்ட பெண்ணை பாதுகாப்பு அலுவலர் உள்ளூர்க் காவல்துறையினர் உதவியோடு உடனடியாக மீட்க வேண்டும், உள்ளூர்க் காவல்துறையிடம் ஒரு புகார் பதிவு செய்வதற்கு அந்தப் பெண்ணுக்கு உதவி செய்ய வேண்டும். (விதி 15 (5))

**நீதித்துறை நடுவருக்கு உதவுதல்**

சட்டத்தின் கீழ் நீதித்துறை நடுவர் தனது கடமைகளைச் செயல்படுத்த பாதுகாப்பு அலுவலர் அவருக்கு உதவ வேண்டும் (S 9 (1)(a))

சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் இந்த விதிகளுக்கும் விளைவை ஏற்படுத்துவதில் நீதித்துறை நடுவரால் பணிக்கப்பட்ட கடமைகளைப் பாதுகாப்பு அலுவலர் மேற்கொள்ள வேண்டும் (விதி 10 (2))

நீதித்துறை நடுவர், எந்தவொரு வழக்கிலும் பயனுள்ள நிவாரணத்திற்கான ஆணைகளுடன் சேர்த்து, வழக்குகளை சிறப்பாகக் கையாள்வதற்கான பொதுவான நடைமுறை சார்ந்த ஆணைகளையும் பிறப்பிக்க வேண்டும்; பாதுகாப்பு அலுவலர்கள் அந்த ஆணைகளைச் செயல்படுத்தக் கடமைப்பட்டவர்களாவர் (விதி 10 (3)).

**கோட்டம்/வட்டத்தில் கிடைக்கக்கூடிய சேவைகளைத் தொகுத்தல்**

பாதுகாப்பு அலுவலர் முறையான பதிவுகளை, பதிவேடுகள் உரிய முறையில் பொருளடக்கம் தரப்பட்டு பராமரிக்கப்படுவதன் மூலம், சேவை வழங்குவோர் பற்றிய விவரங்களுடன், பராமரிக்க வேண்டும். (விதி 11 (4))அனைத்து அரசு மருத்துவமனைகள், நீதித்துறை நடுவரின் அதிகார எல்லைக்குள், உறைவிட இல்லங்கள் மற்றும் சட்ட உதவிகளும் ஆலோசனைகளும் உறைவிட இல்லங்களும் மருத்துவ வசதிகளும் வழங்கக்கூடிய அனைத்து சேவை வழங்குவோர் பற்றிய பட்டியலைப் பராமரிக்க வேண்டும் (S9 (e), விதி 8 (xiv))

***சிறந்த நடைமுறை***: பாதுகாப்பு அலுவலர்கள், காவல் நிலையங்கள், பொது மருத்துவமனைகள், பெண்களுக்கும் குழந்தைகளுக்குமான அரசாங்க உறைவிட இல்லங்கள், சேவை வழங்குவோர், அரசு சட்ட உதவி ஆணைய வழக்குரைஞர்கள், நீதித்துறை நடுவர் நீதிமன்றம் மற்றும் பெண்களுக்கும் குழந்தைகளுக்குமான அரசாங்கத்தின் சிறப்புத் திட்டங்கள் ஆகியவை உள்ளிட்ட கிடைக்கக்கூடிய உதவி ஆதாரங்கள் குறித்த ஒரு பட்டியலை பாதுகாப்பு அலுவலர் தயாரித்து வைத்திருக்க வேண்டும்.

**ஆலோசகர்கள் நியமனம்**

பாதுகாப்பு அலுவலர் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்:

S 14 (1)ன் கீழ் ஆலோசகர்களாக அல்லது S 15ன் கீழ் நல வல்லுநர்களாக நியமிக்கப்படுவதற்காக, சேவை வழங்குவோரிடமிருந்து அவர்களது உறுப்பினர்கள் தொடர்பாக விவரங்களைக் கோரி விண்ணப்பங்களை அனுப்பக் கோருதல் (விதி 8 (viii) ஆலோசகர்களாக நியமிக்கப்படுவதற்கான விண்ணப்பங்களை பரிசீலித்து, கிடைக்கக்கூடிய ஆலோசகர்களின்

ஒரு பட்டியலை நீதித்துறை நடுவருக்கு அனுப்புதல் (விதி 8 (ix)) மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை ஆலோசகர்கள் பட்டியலை, புதிய விண்ணப்பங்கள் கோருவதன் மூலம் திருத்தியமைத்தல் மற்றும் அதன்படி திருத்தப்பட்ட ஆலோசகர்கள் பட்டியலின் நகலை சம்பந்தப்பட்ட நீதித்துறை நடுவருக்கு அனுப்புதல் (விதி 8 (x))

**பாதுகாப்பு அலுவலர்கள் அரசு ஊழியர்களாவர்**

இந்தச் சட்டத்தின் எந்தவொரு ஏற்பாட்டின்படியும், அல்லது இதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள் அல்லது ஆணைகளின்படியும் செயல்படுகிற அல்லது செயல்பட முற்படுகிற பாதுகாப்பு அலுவலர்கள், இந்திய தண்டனைச் சட்டத்தின் (1860/45) S.21ன் பொருளுக்குள் உட்பட்டு, அரசு ஊஷீயர்களாகக் கருதப்படுவர் (S 30)

**நல்ல நோக்கத்துடன் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்காக பாதுகாப்பு அலுவலர்களுக்குப் பாதுகாப்பு**

நல்ல நோக்கத்துடன் செய்யப்படும் எந்தவொரு செயலாலும் ஏற்படும் அல்லது ஏற்படக்கூடிய எந்தவொரு சேதத்திற்காகவும், பாதுகாப்பு அலுவலருக்கு எதிராக வழக்கு, அரசுத் தரப்பு குற்ற வழக்கீடு அல்லது சட்ட நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட மாட்டாது (S 35)

**கடமையைச் செய்யத் தவறும் பாதுகாப்பு அலுவலருக்குத் தண்டனை**

பாதுகாப்பைச் செயல்படுத்துவதில் நீதித்துறை நடுவரால் ஆணையிடப்பட்ட கடமைகளை, போதுமான காரணம் எதுவுமின்றி நிறைவேற்றத் தவறுகிற அல்லது நிறைவேற்ற மறுக்கிற பாதுகாப்பு அலுவலர் ஓராண்டு வரை நீட்டிக்கத்தக்க சிறைத் தண்டனை அல்லது 20,000 ரூபாய் வரை விதிக்கத்தக்க அபராதம் அல்லது இரண்டு வகையிலும் தண்டிக்கப்படுவார். (S 33)இது தொடர்பாக, அரசாங்கத்தின் அல்லது அரசாங்கத்தால் அதிகாரமளிக்கப்படும் ஒரு அதிகாரியின் முன் அனுமதி பெற்ற பிறகே புகார் பதிவு செய்ய முடியும் (S 34)

**பயிற்சி**

அனைத்துப் பாதுகாப்பு அலுவலர்களுக்கும் அவர்களது உதவிப் பணியாளர்களுக்கும், அவர்கள் இந்தச் சட்டத்தின்கீழ் தங்களுடைய கடமைகளை திறனுடன் மேற்கொள்ளச் செய்யும் வகையில், பயிற்சியளிக்கப்படும். பயிற்சி நடைமுறைகள் புனேயில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தை மேம்பாட்டு ஆணையருடன் கலந்தாலோசித்து வகுக்கப்பட வேண்டும். நிறுவனம் தனது பணியாளர்கள் எடுத்துக்கொண்ட பயிற்சி தொடர்பாக பதிவு செய்த 'பயிற்சிப் பதிவேடு' ஒன்றை பராமரிக்கும்.

**சட்டம் பற்றிய விழிப்புணர்வு**

பாதுகாப்பு அலுவலர்கள் அனைவரும் சமூகத்தில் சட்டம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். விழிப்புணர்வு நடைமுறைகளும் வழிமுறைகளும் புனேயில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தை மேம்பாட்டு ஆணையருடன் கலந்தாலோசித்து வகுக்கப்பட வேண்டும். விழிப்புணர்வுத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுவது குறித்த 'விழிப்புணர்வுப் பதிவேடு' ஒன்றை நிறுவனம் பராமரிக்கும்.

**குழுக் கூட்டங்கள் கண்காணிப்பு**

குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் பயனுள்ள முறையில் செயல்படுத்தப்படுவதைக் கண்காணிப்பதற்காக சம்பந்தப்பட்ட ஒவ்வொரு பிரிவினரும் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வகையில் மூன்றடுக்கு கண்காணிப்பு ஏற்பாடு ஒன்றை அரசு கொண்டுவந்துள்ளது.

- கோட்டக் குழு/ வட்டக் குழு: கோட்டாட்சியர் தலைமையில்
- மாவட்டக் குழு: மாவட்ட ஆட்சியர் தலைமையில்
- மாநிலக் குழு: கூடுதல் தலைமைச் செயலர் (உள்துறை) தலைமையில்

**கோட்டம்/வட்டம் அளவில்:** கோட்டம்/வட்டம் அளவிலான குழுக் கூட்டங்களை மாதம்தோறும் கூட்டுவதற்கு பாதுகாப்பு அலுவலர் பொறுப்பாவார். சுட்டத்தைச் செயல்படுத்துவதில் உள்ள நிறைகுறைகள் குறித்து இந்தக் கூட்டங்களில் விவாதிக்கப்படும். அந்த வட்டாரத்தின் தனித்தன்மை வாய்ந்த மிகுந்த அபாய நிலை சார்ந்த பிரச்சனைகளைக் கையாளும்.
ஹிந்தக் கூட்டங்களில் பாதுகாப்பு அலுவலர் ஒவ்வொரு நிறுவனத்திடமிருந்தும் சட்டம் செயலாக்கப்படுவது தொடர்பான அறிக்கைகளைப் பெற வேண்டும்.

**பாதுகாப்பு அலுவலர் அறிக்கை பின்வரும் முறையில் அமைந்திருக்கும்:**

பாதுகாப்பு அலுவலர் பெயர் (நிரந்தரப் பணி/பொறுப்புப் பணி): கோட்டம்/வட்டம்: மாவட்டம்:
தொலைபேசி எண்: அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி:

| மாதம் | படிவம் IV வழங்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை | நிரப்பப்பட்டு, நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட குடும்ப நிகழ்வு அறிக்கையின் (DIR) எண்ணிக்கை | பிரிவு 12ன் கீழ் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் | கிடைக்கப் பெற்ற அவசர மற்றும் இடைக்கால நிவாரணம் | பிரிவு 31ன் கீழ் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் | சட்ட உதவிக்காக பரிந்துரைக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

| கண்காணிப்பு நிறுவனக் கூட்டங்களின் எண்ணிக்கை | பணியாளர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பயிற்சித் திட்டங்களின் எண்ணிக்கை | மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வுத் திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| | | |

பாதுகாப்பு அலுவலர்களுக்கு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள்

| | | | |
|---|---|---|---|
| அறிவிப்பு வழங்குவதற்கான ஆணைகளின் எண்ணிக்கை<br><br>DIR நிரப்புவதற்கான ஆணைகளின் எண்ணிக்கை<br><br>நேரடியாக வீட்டிற்குச் சென்று விசாரிப்பதற்கான ஆணைகளின் எண்ணிக்கை<br><br>பொருளாதார அறிக்கை ஆணைகளின் எண்ணிக்கை<br><br>செயலாக்க ஆணைகளின் எண்ணிக்கை | | அறிவிப்பு வழங்கப்பட்டதற்காக தாக்கல் செய்யப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை<br>நிரப்பப்பட்டு, தாக்கல் செய்யப்பட்ட DIR எண்ணிக்கை<br>வீட்டிற்கு நேரடியாகச் சென்று வந்து அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதன் எண்ணிக்கை<br>தயாரிக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட பொருளாதார அறிக்கைகளின் எண்ணிக்கை<br>செயல்படுத்தப்பட்டு அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட செயலாக்க ஆணைகளின் எண்ணிக்கை | |

## காவல்துறை அதிகாரிகள்

பொதுக் குறிப்புகள்

- குடும்ப வன்முறை கண்காணிப்பு
- தகவல் மற்றும் பரிந்துரைக் குறிப்பு வழங்கல்
- பாதுகாப்பு அலுவலரிடமிருந்து குடும்ப நிகழ்வு அறிக்கை நகல் பெறுதல்
- பிரிவு 498A அல்லது இந்திய தண்டனைச் சட்டத்தின் பொருத்தமான வேறு எந்தவொரு பிரிவின் கீழும் குற்றவியல் புகார் பதிவு செய்தல்
- பாதிக்கப்பட்ட பெண் மற்றும் பாதுகாப்பு அலுவலருக்கு காவல்துறை அதிகாரி வழங்க வேண்டும்
- பாதுகாப்பு ஆணைகள் மீறப்படுதல்
- கலந்தாய்வு/பேச்சுவார்த்தை நடத்தாதிருத்தல்
- பயிற்சி
- சட்டம் குறித்த விழிப்புணர்வு
- கோட்டம்/வட்டம் அளவிலான குழுக் கூட்டங்கள்

அனைத்து காவல்துறை அதிகாரிகளும் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாப்பதற்கான சட்டம்–2005ன் கீழ், சம்பந்தப்பட்டவர்களாவர் மற்றும் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டோருக்கு பாதுகாப்பு அளிக்கவும், உதவி செய்யவும் பொறுப்பளிக்கப்பட்டவர்களாவர்.

**குடும்ப வன்முறைக்கான கண்காணிப்பு**
குடும்ப வன்முறைக்காக பெண்களைக் கண்காணிப்பது அவர்களை அடையாளம் காணவும் சட்டத்தின் கீழ் நிவாரணம் பெறுவதற்கு முறையாக அவர்களுக்கு வழிகாட்டவும் உதவும். ஆனைத்து காவல்துறை அதிகாரிகளும் குடும்ப வன்முறை தொடர்பாக பெண்களைக் கண்காணிக்க வேண்டும்.

***சிறந்த நடைமுறை:*** பின்வரும் நிலையிலுள்ளோர் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களாக அடையாளம் காணப்படுவர் – இந்திய தண்டனைச் சட்டத்தின் S323 – 326, 307, 498A ஆகிய பிரிவுகளின் கீழும், வரதட்சணை தடுப்புச் சட்டத்தின் கீழும் ஒரு பெண் புகார் செய்வாரானால், பாலியல் துன்புறுத்தல் வழக்குகளில் குற்றம் சாட்டப்படுபவர் குடும்பத்தைச் சேர்ந்த ஆண் உறுப்பினராக இருந்து, அதே வீட்டில் குடியிருப்பவராக இருப்பாரானால், அதே வீட்டிற்குள் அத்துமீறல் அல்லது கொடுமை தொடர்பான பிடி ஆணை வேண்டும் புகார்களானால்.

**தகவல் மற்றும் பரிந்துரைக் குறிப்பு வழங்கல்**
ஒரு பெண் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவராக அடையாளம் காணப்பட்டவுடன், காவல்துறை அதிகாரி, பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு பின்வருவன குறித்து தகவல்கள் அளிக்க வேண்டும்:
சட்டத்தின் கீழ் அந்தப் பெண்ணுக்கு உள்ள உரிமைகள் மற்றும் நிவாரணங்கள்.
பாதுகாப்பு அலுவலர்கள், சேவை வழங்குவோர் மற்றும் இலவச சட்ட உதவி சேவைகள் போன்ற சேவைகள் கிடைப்பது பற்றிய தகவல்கள்

பொருத்தமான நிலையில், இந்திய தண்டனைச் சட்டத்தின் S498Aயின் கீழ் ஒரு புகார் பதிவு செய்ய அவருக்குள்ள உரிமை (S.5)
காண்க: பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு தகவல் வழங்குவது எப்படி என்பது தொடர்பான இணைப்புப் படிவம் IV (விதி8(ii))

***சிறந்த நடைமுறை:*** பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு மேற்கொண்டு நடவடிக்கைகளுக்காக படிவம் IV நகல் வழங்கப்பட வேண்டும்.

காவல்துறை அதிகாரிகள் குடும்ப வன்முறை வழக்குகளை தற்போதுள்ள பிடி ஆணை வேண்டிய பிரிவுகள் மற்றும் குற்றப் பதிவேட்டில், சில சிறிய சேர்க்கைகளுடன் காணலாம்.
**காவல்துறையின் பிடி ஆணை வேண்டும் பதிவேடு:** ஒரு குடும்பச் சூழலில் (அல்லது பகிரப்பட்டுள்ள ஒரே வீட்டிற்குள்) அனைத்து அத்துமீறல்கள் அல்லது கொடுமைகளும் குடும்ப வன்முறையாக அடையாளம் காணப்படும். புகார் சுருக்கம் என்ற பத்தியில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு புகார்தாரருடன் உள்ள உறவு, வன்முறை நிகழ்வின் நேரம், இடம் குறிப்பிடப்பட்டு குடும்ப வன்முறை வழக்காக அடையாளம் காணப்படும்.

**குற்றப் பதிவேடு**
இந்திய தண்டனைச் சட்டத்தின் S323 –326, 307, 498A ஆகிய பிரிவுகளின் கீழும், வரதட்சணை தடுப்புச் சட்டத்தின் கீழும் ஒரு பெண் புகார் செய்வாரானால், பாலியல் துன்புறுத்தல் வழக்குகளில் குற்றம் சாட்டப்படுபவர் குடும்பத்தைச் சேர்ந்த ஆண் உறுப்பினராக இருந்து, அதே வீட்டில் குடியிருப்பவராக இருப்பாரானால், குடும்ப வன்முறை வழக்குகளாக அடையாளம் காணப்படும்.

'புகாரளிப்பவர் பெயர், முகவரி மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர் பெயர்' என்ற பத்தியில் குடும்ப வன்முறை வழக்கு என குறிப்பிடப்பட வேண்டும். 'குற்றம் நடந்த இடம் மற்றும் பின்பற்றப்பட்ட நடைமுறைகள்' என்ற பத்தியில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு புகார் அளித்தவருடன் உள்ள உறவு குறிப்பிடப்பட வேண்டும்.

**பாதுகாப்பு அலுவலரிடமிருந்து குடும்ப நிகழ்வு அறிக்கை நகல் பெறுதல்**
பாதுகாப்பு அலுவலர் DIR நகல் ஒன்றை காவல்நிலையத்திற்கு அனுப்ப வேண்டும். DIR நகலைப் பெற்றுக்கொள்வதும், தேவைப்படுமானால் உரிய நடவடிக்கை எடுப்பதும் காவல்நிலைய பொறுப்பு அதிகாரியின் கடமையாகும். (S.9(b))

***சிறந்த நடைமுறை:*** காவல்நிலையத்திற்குப் பொறுப்பாக உள்ள அதிகாரி, மாதாந்திர அடிப்படையில், DIR பதிவேட்டின் (பெறப்பட்ட குடும்ப நிகழ்வு அறிக்கைகள் தொடர்பான உரிய விவரங்கள் பதிவு செய்யப்பட்ட ஒரு பதிவேடு) அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட, சுருக்கமான நகலை, அவரது அதிகார வரம்புக்குள் உள்ள பாதுகாப்பு அலுவலரிடமிருந்து பெற வேண்டும், அதற்கு சான்றளிக்க வேண்டும்.

S.498A அல்லது இந்திய தண்டனைச் சட்டத்தின் வேறு எந்த ஒரு உரிய பிரிவின் கீழும் குற்றவியல் புகார் பதிவு செய்தல். இந்தச் சட்டத்தில் உள்ள விதிகளுடன் சேர்த்து, பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணுக்கு இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு S.498Aயின் கீழ் புகார் பதிவு செய்ய உரிமையுண்டு. (S5(e)) சம்பந்தப்பட்ட பெண் விரும்புவாரானால், இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு S.498Aயின் கீழ் ஒரு குற்றவியல் புகார் பதிவு செய்வது காவல்துறை அதிகாரியின் கடமையாகும்.

பிடி ஆணை வேண்டா குற்றச் செயல் பற்றிய தகவல் கிடைக்கப்பெற்ற நிலையில் காவல்துறை அதிகாரி சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். சட்டத்தின் எந்த ஒரு அம்சமும் காவல்துறை அதிகாரி அவரது கடமையைச் செய்வதிலிருந்து விலக்கு அளிக்கவில்லை (S.5)

**பாதிக்கப்பட்ட பெண்ணுக்கும் பாதுகாப்பு அலுவலருக்கும் காவல்துறை அதிகாரி உதவுதல்**

- **அவசர நிலையின்போது:** காவல்துறை அதிகாரி குடும்ப வன்முறை நிகழ்ந்த இடத்திற்கு பாதுகாப்பு அலுவலர் மற்றும்/ அல்லது சேவை வழங்குநருடன் செல்ல வேண்டும், குடும்ப நிகழ்வு அறிக்கை பதிவு செய்ய வேண்டும் (விதி 9)
- **அறிவிப்பு வழங்கல்:** தேவைப்படுமானால், எதிர் மனுதாரருக்கு அறிவிப்பு வழங்க பாதுகாப்பு அலுவலருக்கு காவல்துறை அதிகாரி உதவ வேண்டும் (***சிறந்த நடைமுறை***).
- **பாதுகாப்பு ஆணை மீறப்படுதல்:** பாதுகாப்பு ஆணை மீறப்படும் நிலையில் பாதிக்கப்பட்ட பெண்ணை மீட்பதற்கு பாதுகாப்பு அலுவலருடன் காவல்துறை அதிகாரி செல்ல வேண்டும். உள்ளூர்க் காவல்நிலையத்தில் அது குறித்து புகார் பதிவு செய்ய காவல்துறை உதவ வேண்டும் (விதி 15 (5))
- **ஆயுதங்களைக் கைப்பற்றுதல்:** குற்றம் சாட்டப்பட்ட குடும்ப வன்முறையில் சம்பந்தப்பட்ட எந்தவொரு ஆயுதமும் கைப்பற்றப்பட வேண்டும், தேவைப்படுமானால், அதற்கு பாதுகாப்பு அலுவலருக்கு காவல்துறை அதிகாரி உதவ வேண்டும் (விதி 10 (f))
- **நீதிமன்ற ஆணையைச் செயல்படுத்துதல்:** பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு பாதுகாப்பு அளிக்க அல்லது ஆணையைச் செயல்படுத்துவதில் அந்தப் பெண்ணுக்கு உதவ உள்ளூர்க் காவல்நிலைய பொறுப்பு அதிகாரிக்கு நீதித்துறை நடுவர் ஆணையிடலாம் (S19(5)). பாதுகாப்பு ஆணையைச் செயல்படுத்துவதில் உதவுமாறு காவல்நிலைய பொறுப்பு அதிகாரிக்கு நீதித்துறை நடுவர் ஆணையிடலாம் (S19(7)). பண நிவாரணத்திற்கான ஆணையின் ஒரு நகலை காவல்நிலைய பொறுப்பு அதிகாரிக்கு நீதித்துறை நடுவர் அனுப்ப வேண்டும் (S20(4)).

***சிறந்த நடைமுறை:*** உள்ளூர்க் காவல்நிலைய பொறுப்பு அதிகாரிக்கு S18 (பாதுகாப்பு), 19 (குடியிருப்பு), 20 (நிதி), 21 (காவல்) மற்றும் 22 (இழப்பீடு) ஆகிய விதிகளின் கீழ் நீதித்துறை நடுவரால் ஆணையிடப்படுமானால், அனைத்து ஆணைகளையும் செயல்படுத்துவதில் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கும், பாதுகாப்பு அலுவலருக்கும் காவல்துறை அதிகாரி பாதுகாப்பும் உதவியும் அளிக்க வேண்டும்.

**பாதுகாப்பு ஆணைகள் மீறப்படுதல்:** பாதுகாப்பு ஆணை அல்லது இடைக்கால பாதுகாப்பு ஆணை எதிர் மனுதாரரால் மீறப்படுவது தண்டனைக்குரிய குற்றமாகும்; ஓராண்டு கால சிறை அல்லது 20,000 ரூபாய் அபராதம் அல்லது இரண்டும் விதிக்கத்தக்கதாகும் (S 31).

இக்குற்றம் பிடி ஆணை வேண்டாததாகும், பிணை அனுமதி மறுக்கப்படத்தக்கதாகும் (S 32).

பாதிக்கப்பட்ட பெண் விரும்புவாரானால், பாதுகாப்பு ஆணை அல்லது இடைக்கால பாதுகாப்பு ஆணை மீறப்பட்டது தொடர்பாக ஒரு புகாரை நேரடியாக காவல்துறையிடம் அளிக்கலாம் (விதி 15(4)).

பிடி ஆணை வேண்டா குற்றச்செயல் ஒன்று செய்யப்பட்டிருப்பது பற்றிய தகவல் கிடைக்கப்பெற்றதும் காவல்துறை அதிகாரி சட்டத்தின் பிரிவு S **31**ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டும்.

**கலந்தாய்வு/பேச்சுவார்த்தைக் கூட்டங்கள் நடத்தாதிருத்தல்:**
மனுதாரர் அல்லது பாதிக்கப்பட்ட பெண், தனியாகவோ அல்லது கூட்டாகவோ கலந்தாய்வு பெறுவதற்கு ஒரு நீதித்துறை நடுவர்தான் தனது உத்தரவின் மூலம் ஆணையிட வேண்டும் (S **14**). சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வேறு எந்த அமைப்பும் கலந்தாய்வு அல்லது பேச்சுவார்த்தை நடைமுறைகளை மேற்கொள்ளக்கூடாது, அத்தகைய ஏற்பாடுகளில் எட்டப்படும் ஒப்பந்தங்கள் சட்டப்பூர்வமாகக் கட்டுப்படுத்தாது.

***சிறந்த நடைமுறை:*** காவல்நிலைய பொறுப்பு அதிகாரி தங்கள் விருப்பப்படி பேச்சுவார்த்தை/உடன்பாட்டுக் கூட்டங்கள் நடத்தக்கூடாது. ஆனால், நீதிமன்ற ஆணைப்படி பேச்சுவார்த்தை/உடன்பாடு செய்துகொள்வதற்கான வாய்ப்பு உள்ளிட்ட, சட்டத்தின் பிரிவு S**5**ன் கீழ், பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு உள்ள உரிமைகள் குறித்து தகவல் தெரிவிக்க வேண்டும். பேச்சுவார்த்தை/கலந்தாய்வு தேவைப்படுகிற பாதிக்கப்பட்ட அனைத்து பெண்கள் குறித்தும் பாதுகாப்பு அலுவலருக்கு தெரியப்படுத்த வேண்டும்.

**பயிற்சி:** அனைத்து காவல்துறை அதிகாரிகளுக்கும் அவர்களது உதவிப் பணியாளர்களுக்கும், அவர்கள் இந்தச் சட்டத்தின்கீழ் தங்களுடைய கடமைகளை திறனுடன் மேற்கொள்ளச் செய்யும் வகையில், பயிற்சியளிக்கப்படும். பயிற்சி நடைமுறைகள் புனேயில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தை மேம்பாட்டு ஆணையருடன் கலந்தாலோசித்து வகுக்கப்பட வேண்டும். நிறுவனம் தனது பணியாளர்கள் எடுத்துக்கொண்ட பயிற்சி தொடர்பாக பதிவு செய்த 'பயிற்சிப் பதிவேடு' ஒன்றை பராமரிக்கும்.

**சட்டம் குறித்த விழிப்புணர்வு:** காவல்துறை அதிகாரிகள் அனைவரும் சமூகத்தில் சட்டம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். விழிப்புணர்வு நடைமுறைகளும் வழிமுறைகளும் புனேயில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தை மேம்பாட்டு ஆணையருடன் கலந்தாலோசித்து வகுக்கப்பட வேண்டும். விழிப்புணர்வுத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுவது குறித்த 'விழிப்புணர்வுப் பதிவேடு' ஒன்றை நிறுவனம் பராமரிக்கும்.

**குழுக் கூட்டங்கள் கண்காணிப்பு:** குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் பயனுள்ள முறையில் செயல்படுத்தப்படுவதைக் கண்காணிப்பதற்காக சம்பந்தப்பட்ட ஒவ்வொரு பிரிவினரும் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வகையில் மூன்றடுக்கு கண்காணிப்பு ஏற்பாடு ஒன்றை அரசு கொண்டுவந்துள்ளது.

- கோட்டக் குழு/ வட்டக் குழு: கோட்டாட்சியர் தலைமையில்
- மாவட்டக் குழு: மாவட்ட ஆட்சியர் தலைமையில்
- மாநிலக் குழு: கூடுதல் தலைமைச் செயலர் (உள்துறை) தலைமையில்

**கோட்டம்/வட்டம் அளவில்:** கோட்டாட்சியர் தலைமையில் அனைத்து அமைப்புகளின் கோட்டம்/வட்டம் அளவிலான மாதாந்திர குழுக் கூட்டங்களில் ஒவ்வொரு காவல்நிலையத்தின் ஒரு அதிகாரி கலந்துகொள்ள வேண்டும். சட்டத்தைச் செயல்படுத்துவதில் உள்ள நிறைகுறைகள் குறித்து இந்தக் கூட்டங்களில் விவாதிக்கப்படும். அந்த வட்டாரத்தின் தனித்தன்மை வாய்ந்த மிகுந்த அபாய நிலை சார்ந்த பிரச்சனைகளைக்கையாளும்.

இந்தக் கூட்டங்களில் பாதுகாப்பு அலுவலர் ஒவ்வொரு நிறுவனத்திடமிருந்தும் சட்டம் செயலாக்கப்படுவது தொடர்பான அறிக்கைகளைப் பெற வேண்டும்.

**காவல்துறை அதிகாரி அறிக்கை பின்வரும் முறையில் அமைந்திருக்கும்:**

காவல்நிலையத்தின் பெயர் (நிரந்தரப் பணி/பொறுப்புப் பணி): கோட்டம்/வட்டம்: மாவட்டம்:

தொலைபேசி எண்: அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி:

| மாதம் | பெண்களால் தாக்கல் செய்யப்பட்ட பிடி ஆணை வேண்டிய குற்றங்களின் எண்ணிக்கை | குடும்ப வன்முறை வழக்கு என அடையாளம் காணப்பட்ட பெண்களால் தாக்கல் செய்யப்பட்ட பிடி ஆணை வேண்டிய குற்றங்களின் எண்ணிக்கை | பெண்களால் தாக்கல் செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கைகளின் மொத்த எண்ணிக்கை | குடும்ப வன்முறை வழக்கு என அடையாளம் காணப்பட்ட பெண்களால் தாக்கல் செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கைகளின் மொத்த எண்ணிக்கை | படிவம் IV வழங்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை | பணியாளர்களுக்கு நடத்தப்பட்ட பயிற்சிகளின் எண்ணிக்கை | மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வுத் திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

## மருத்துவ அலுவலர்கள்

பொதுக்குறிப்புகள்

- குடும்ப வன்முறை கண்காணிப்பு
- தகவல் மற்றும் பரிந்துரைக் குறிப்பு வழங்கல்
- குடும்ப நிகழ்வு அறிக்கை தயாரித்தல்
- DIR–படிவம் 1 தயாரிக்கப்பட்ட பின் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்
- பாதுகாப்பு அலுவலர்கள் சேவை வழங்குநரின் பரிந்துரைக் குறிப்புகள்
- மருத்துவ உதவி வழங்கல்
- பேச்சுவார்த்தை/உடன்பாட்டுக் கூட்டங்கள் நடத்தாதிருத்தல்
- பயிற்சி
- சட்டம் குறித்த விழிப்புணர்வு
- கோட்டம்/வட்டம் அளவிலான குழுக் கூட்டங்கள்

குடும்ப வன்முறைகளிலிருந்து பெண்களைப் பாதுகாப்பதற்கான சட்டம் 2005ல், மருத்துவ வசதிகள் ஒரு முக்கியமான அம்சமாக குறிப்பிடப்பட்டுள்ளது. சட்டத்தைச் செயல்படுத்துவதில் மருத்துவ அலுவலர்களின் கடமைகள் மற்றும் பொறுப்பை வரையறுத்துள்ளது.

**குடும்ப வன்முறைக்கான கண்காணிப்பு:** குடும்ப வன்முறைக்காக பெண்களைக் கண்காணிப்பது அவர்களை அடையாளம் காணவும் சட்டத்தின் கீழ் நிவாரணம் பெறுவதற்கு முறையாக அவர்களுக்கு வழிகாட்டவும் உதவும். அனைத்து மருத்துவ அதிகாரிகளும் குடும்ப வன்முறை தொடர்பாக பெண்களைக் கண்காணிக்க வேண்டும்.

***சிறந்த நடைமுறை:*** அனைத்து மருத்துவ அதிகாரிகளும் பெண்களை குடும்ப வன்முறை தொடர்பாக பரிசோதிக்க வேண்டும். சம்பவ இடம் 'வீடு' அல்லது 'குடியிருப்பு' இருக்குமானால், அது குடும்ப வன்முறையாகக் கருதப்படும். குடும்ப வன்முறை தொடர்பாக பெண்களைப் பரிசோதித்தல், சட்டத்தின் கீழ் அவர்களுக்கு உரிய நிவாரணங்கள் கிடைக்க உதவும். அறிவார்ந்த முறையில் விசாரித்தால் பெண்கள் தங்களுக்கு எதிரான அத்துமீறல்கள் குறித்து மிகுதியாக வெளிப்படுத்தக்கூடும். வன்முறை என்பது சட்டவிரோதமானது, இது பெண்ணின் 'தவறு' அல்ல என்பது பெண்ணுக்கு விளக்கப்பட வேண்டும். புகார் பதிவு செய்வதன் முக்கியத்துவம் குறித்து பெண்ணுக்கு சொல்லப்பட வேண்டும், தகவல்கள் ரகசியமாக வைக்கப்படும், ஆதரவு அளிக்கப்படும் என பெண்ணுக்கு உறுதியளிக்கப்பட வேண்டும்.

**தகவல் மற்றும் பரிந்துரைக் குறிப்பு வழங்கல்**

ஒரு பெண் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவராக அடையாளம் காணப்பட்டவுடன், மருத்துவ அதிகாரி, பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு பின்வருவன குறித்து தகவல்கள் அளிக்க வேண்டும்:

- சட்டத்தின் கீழ் அந்தப் பெண்ணுக்கு உள்ள உரிமைகள் மற்றும் நிவாரணங்கள்.
- பாதுகாப்பு அலுவலர்கள், சேவை வழங்குவோர் மற்றும் இலவச சட்ட உதவி சேவைகள் போன்ற சேவைகள் கிடைப்பது பற்றிய தகவல்கள்.
- பொருத்தமான நிலையில், இந்திய தண்டனைச் சட்டத்தின் S498Aயின் கீழ் ஒரு புகார் பதிவு செய்ய அவருக்குள்ள உரிமை (S.5)

மருத்துவ அதிகாரிகள் குடும்ப வன்முறை வழக்குகளை தற்போதுள்ள மருத்துவ சட்ட வழக்கு (MLC) பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும். 'காயங்கள் இருக்குமானால் காயங்களின் காரணங்கள்' என்ற பத்தி, குற்றம் சாட்டப்பட்டவருக்கு புகார் அளித்தவருடன் உள்ள உறவு, வன்முறை நடந்த நேரம், இடம், ஆயுதம் ஏதேனும் பயன்படுத்தப்பட்டிருக்குமானால் அந்தத் தகவல் ஆகியவையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். மருத்துவ அதிகாரியின் கருத்து பற்றிய பத்தியில் மருத்துவ அதிகாரி குடும்ப அதிகாரி DV என்று குறிப்பிட வேண்டும், அந்தப் பெண்ணை தன்னிடம் பரிசோதனைக்கு அனுப்பியவர் யார் என்று குறிப்பிட வேண்டும்.

**அடித்தள அளவில் MLC பதிவேடு இல்லாத நிலையில்**

சுகாதாரப் பணியாளர்கள்/ஆஷா/உஷா செவிலியர்கள் அறிக்கைகளில் அவர்களது வேலையின்போது கண்டறிந்த குடும்ப வன்முறை நிகழ்வுகள் பிரதிபலிக்கக் கூடும். ஆரம்ப சுகாதார மையங்களின் மாதாந்திர செய்தி ஏடுகளில் கிராம அளவில் தொடக்க நிலை சுகாதாரப் பணியாளர்களால் கண்டறியப்பட்ட குடும்ப வன்முறை வழக்குகளின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் இருக்க வேண்டும்.

**குடும்ப நிகழ்வு அறிக்கை தயாரித்தல்:**
குடும்ப நிகழ்வ அறிக்கை தயாரிக்கப்படாத நிலையில் மருத்துவ அதிகாரி ஒரு குடும்ப நிகழ்வு அறிக்கை தயாரிக்க வேண்டும் (விதி 17(3))

**DIR- படிவம் 1 தயாரிக்கப்பட்ட பின் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்:** DIR நகல் ஒன்று பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு கட்டணமின்றி வழங்கப்பட வேண்டும் (விதி14 (4)).

ஒரு நகல் பாதுகாப்பு அலுவலருக்கு 3 வேலை நாட்களுக்குள் அனுப்பப்பட வேண்டும் (S17(3), சான்றளிக்கப்பட்ட ஒரு நகல் எதிர்கால பார்வைக்காக மருத்துவ அதிகாரியிடம் இருக்க வேண்டும்.

**பாதுகாப்பு அலுவலர் மற்றும் சேவை வழங்குநர் பரிந்துரைக் குறிப்புகள்:** பாதிக்கப்பட்ட பெண் அல்லது அவர் சார்பில் ஒரு பாதுகாப்பு அலுவலர் அல்லது ஒரு சேவை வழங்குநர் வேண்டுகோள் விடுப்பதன் அடிப்படையில் மருத்துவமனைக்குப் பொறுப்பான அதிகாரி பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு மருத்துவ உதவி வழங்க வேண்டும். (S7) பாதுகாப்பு அலுவலர் அல்லது சேவை வழங்குநர் வேண்டுகோள் விடுக்கிறபோது அது எழுத்துப்பூர்வமாக இருக்க வேண்டும், பிரிவு S7ன் கீழ் அந்த மனு அளிக்கப்படுகிறது எனத் தெளிவாகக் குறிப்பிடப்படுகிறது (விதி 17(1))

பாதுகாப்பு அலுவலர் இத்தகைய வேண்டுகோள் விடுக்கிறபோது அத்துடன் குடும்ப நிகழ்வு அறிக்கை நகல் இணைக்கப்பட வேண்டும் (விதி 17(2))

பாதிக்கப்பட்ட பெண் மருத்துவ உதவி கோரி அல்லது மருத்துவ சோதனை கோரி மருத்துவமனைக்கு கோரிக்கை விடுப்பதற்கு முன்பாக குடும்ப நிகழ்வு அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்பதற்காக அவருக்கு இந்தச் சட்டத்தின் கீழ் மருத்துவ உதவி அளிக்க மருத்துவ அதிகாரி மறுக்கக்கூடாது (விதி 17(2)).

**மருத்துவ உதவி வழங்கல்**
மருத்துவ அதிகாரி பின்வரும் முறையில் மருத்துவ உதவிகளை வழங்க வேண்டும்:
**முழு பதிவு:** பாதிக்கப்பட்ட பெண்ணின் பாதிப்பு குறித்த முழு விவரத்தையும் மருத்துவ அதிகாரி பதிவு செய்ய வேண்டும். தற்போதைய மற்றும் கடந்த கால வன்முறை நிகழ்வுகள் குறித்து மதிப்பிட வேண்டும்.

**காயங்கள் அனைத்திற்கும் சிகிச்சை:**
**இலவச மருத்துவ சேவை:** அந்தப் பெண்ணிற்கு அனைத்து மருத்துவ சோதனைகளும் சிகிச்சைகளும் கட்டணமின்றி, முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட வேண்டும்.

**நலப் பராமரிப்பு:** அந்தப் பெண்ணிற்கு மருத்துவ சிகிச்சை மற்றும் உளவியல் ஆதரவு என்ற இரண்டின் அடிப்படையிலும் தொடர்ந்த நலப் பராமரிப்பு வழங்கப்பட வேண்டும்.

**கலந்தாய்வு/பேச்சுவார்த்தைக் கூட்டம் நடத்தாதிருத்தல்:**
மனுதாரர் அல்லது பாதிக்கப்பட்ட பெண், தனியாகவோ அல்லது கூட்டாகவோ கலந்தாய்வு பெறுவதற்கு ஒரு நீதித்துறை நடுவர்தான் தனது உத்தரவின் மூலம் ஆணையிட வேண்டும் (S 14). சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வேறு எந்த அமைப்பும் கலந்தாய்வு அல்லது பேச்சுவார்த்தை நடைமுறைகளை மேற்கொள்ளக்கூடாது, அத்தகைய ஏற்பாடுகளில் எட்டப்படும் ஒப்பந்தங்கள் சட்டப்பூர்வமாகக் கட்டுப்படுத்தாது.

**பயிற்சி:** அனைத்து மருத்துவ அதிகாரிகளுக்கும் அவர்களது உதவிப் பணியாளர்களுக்கும், அவர்கள் இந்தச் சட்டத்தின்கீழ் தங்களுடைய கடமைகளை திறனுடன் மேற்கொள்ளச் செய்யும் வகையில், பயிற்சியளிக்கப்படும். பயிற்சி நடைமுறைகள் புனேயில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தை மேம்பாட்டு ஆணையருடன் கலந்தாலோசித்து வகுக்கப்பட வேண்டும். நிறுவனம் தனது பணியாளர்கள் எடுத்துக்கொண்ட பயிற்சி தொடர்பாக பதிவு செய்த 'பயிற்சிப் பதிவேடு' ஒன்றை பராமரிக்கும்.

**சட்டம் குறித்த விழிப்புணர்வு:** மருத்துவ அதிகாரிகள் அனைவரும் சமூகத்தில் சட்டம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். விழிப்புணர்வு நடைமுறைகளும் வழிமுறைகளும் புனேயில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தை மேம்பாட்டு ஆணையருடன் கலந்தாலோசித்து வகுக்கப்பட வேண்டும். விழிப்புணர்வுத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுவது குறித்த 'விழிப்புணர்வுப் பதிவேடு' ஒன்றை நிறுவனம் பராமரிக்கும்.

**குழுக் கூட்டங்கள் கண்காணிப்பு:** குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் பயனுள்ள முறையில் செயல்படுத்தப்படுவதைக் கண்காணிப்பதற்காக சம்பந்தப்பட்ட ஒவ்வொரு பிரிவினரும் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வகையில் மூன்றடுக்கு கண்காணிப்பு ஏற்பாடு ஒன்றை அரசு கொண்டுவந்துள்ளது.

- கோட்டக் குழு/ வட்டக் குழு: கோட்டாட்சியர் தலைமையில்
- மாவட்டக் குழு: மாவட்ட ஆட்சியர் தலைமையில்
- மாநிலக் குழு: கூடுதல் தலைமைச் செயலர் (உள்துறை) தலைமையில்

**கோட்டம்/வட்டம் அளவில்:** கோட்டாட்சியர் தலைமையில் அனைத்து அமைப்புகளின் கோட்டம்/வட்டம் அளவிலான மாதாந்திர குழுக் கூட்டங்களில் ஒவ்வொரு மருத்துவமனையின் ஒரு மருத்துவ அதிகாரி கலந்துகொள்ள வேண்டும். சட்டத்தைச் செயல்படுத்துவதில் உள்ள நிறைகுறைகள் குறித்து இந்தக் கூட்டங்களில் விவாதிக்கப்படும். அந்த வட்டாரத்தின் தனித்தன்மை வாய்ந்த மிகுந்த அபாய நிலை சார்ந்த பிரச்சனைகளைக் கையாளும்.

இந்தக் கூட்டங்களில் பாதுகாப்பு அலுவலர் ஒவ்வொரு நிறுவனத்திடமிருந்தும் சட்டம் செயலாக்கப்படுவது தொடர்பான அறிக்கைகளைப் பெற வேண்டும்.

**காவல்துறை அதிகாரி அறிக்கை பின்வரும் முறையில் அமைந்திருக்கும்:**

மருத்துவமனையின் பெயர்: கோட்டம்/வட்டம்: மாவட்டம்:
தொலைபேசி எண்: அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி:

| மாதம் | பெண்களுக்கான MLC பதிவுகளின் எண்ணிக்கை | குடும்ப வன்முறை என அடையாளம் காணப்பட்ட பெண்களுக்கான MLC பதிவுகளின் எண்ணிக்கை | படிவம் IV வழங்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை | பணியாளர்களுக்கு நடத்தப்பட்ட பயிற்சிகளின் எண்ணிக்கை | மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வுத் திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | | | | |

## உறைவிட இல்லம்

பொதுக் குறிப்புகள்

- குடும்ப வன்முறை கண்காணிப்பு
- தகவல் மற்றும் பரிந்துரைக் குறிப்பு வழங்கல்
- பாதுகாப்பான உறைவிடம் வழங்கல்
- உடனடி அனுமதி
- இல்லத்தில் காலியிடம் இல்லையென்றால் மாற்று உறைவிடத்திற்கு ஏற்பாடு செய்தல்
- இலவசர உறைவிடம் மற்றும் இதர சேவைகள்
- பாதிக்கப்பட்டவருக்கு மருத்துவ சோதனை
- பெண் விரும்பவில்லை என்றால் அவரது அடையாளத்தை வெளிப்படுத்தாதிருத்தல்
- பெண்ணின் மதிப்புமிக்க பொருட்களை பாதுகாப்பாக எடுத்துக்கொண்டு அவர் வெளியேறும்போது ஒப்படைத்தல்
- பாதிக்கப்பட்ட பெண்ணின் குழந்தைகள்
- கால அளவுகள்
- இதரவை – வயது, பாகுபாடு, உடைகள் விதி, கைப்பேசி பயன்பாடு
- தகுதியுள்ள, அனுபவம் வாய்ந்த பணியாளர்கள்
- கலந்தாய்வு/உடன்பாட்டுக் கூட்டங்கள் நடத்தாதிருத்தல்
- பயிற்சி
- சட்டம் குறித்த விழிப்புணர்வு
- கோட்டம்/வட்டம் அளவிலான குழுக் கூட்டங்கள்

உறைவிட இல்லம் என்பது இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக உறைவிடம் வழங்கிட மாநில அரசால் அறிவிக்கப்படும் உறைவிடமாகும் (S.2(t)).

**குடும்ப வன்முறைக்கான கண்காணிப்பு**

குடும்ப வன்முறைக்காக பெண்களைக் கண்காணிப்பது அவர்களை அடையாளம் காணவும் சட்டத்தின் கீழ் நிவாரணம் பெறுவதற்கு முறையாக அவர்களுக்கு வழிகாட்டவும் உதவும். அனைத்து உறைவிட இல்லப் பொறுப்பாளர்களும் குடும்ப வன்முறை தொடர்பாக பெண்களைக் கண்காணிக்க வேண்டும்.

***சிறந்த நடைமுறை:*** பின்வரும் நிலையிலுள்ளோர் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களாக அடையாளம் காணப்படுவர் – கணவன்மார்கள், சகோதரர்கள், தந்தைமார்கள் உள்ளிட்டோரால் கைவிடப்படும் பெண்கள் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களாவர்.

**தகவல் மற்றும் பரிந்துரைக் குறிப்பு வழங்கல்**

ஒரு பெண் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவராக அடையாளம் காணப்பட்டவுடன், உறைவிட இல்லப் பொறுப்பாளர், பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு பின்வருவன குறித்து தகவல்கள் அளிக்க வேண்டும்:

- சட்டத்தின் கீழ் அந்தப் பெண்ணுக்கு உள்ள உரிமைகள் மற்றும் நிவாரணங்கள்.
- பாதுகாப்பு அலுவலர்கள், சேவை வழங்குவோர் மற்றும் இலவச சட்ட உதவி சேவைகள் போன்ற சேவைகள் கிடைப்பது பற்றிய தகவல்கள்
- பொருத்தமான நிலையில், இந்திய தண்டனைச் சட்டத்தின் S498Aயின் கீழ் ஒரு புகார் பதிவு செய்ய அவருக்குள்ள உரிமை (S.5)

**பாதுகாப்பான உறைவிடம் வழங்கல்:** பாதிக்கப்பட்ட பெண் அல்லது அவர் சார்பில் பாதுகாப்பு அலுவலர் அல்லது சேவை வழங்குநர் விடுக்கும் வேண்டுகோள் அடிப்படையில் உறைவிடப் பொறுப்பாளர் அந்தப் பெண்ணுக்கு உறைவிடம் வழங்க வேண்டும் (S6 விதி 16).

குடும்ப வன்முறையை எதிர்கொள்ளும் ஒரு பெண் ஒரு பாதுகாப்பு அலுவலர் அல்லது சேவை வழங்குநர் அல்லது மருத்துவ அதிகாரி அல்லது எந்தவொரு முகமை அமைப்பின் பரிந்துரை குறிப்பின் மூலமாக ஒரு உறைவிட இல்லத்தில் உறைவிடம் கோரலாம். ஒரு பெண் நேரடியாகவும் உறைவிடத்தில் அனுமதிக்கப்படக் கோரலாம்.

பாதுகாப்பு அலுவலர் அல்லது சேவை வழங்குநர் உறைவிடப் பொறுப்பாளருக்கு எழுத்துப்பூர்வமாக, S 6ன் கீழ் மனு அளிக்கப்படுகிறது என்று தெளிவாகக் குறிப்பிட்டு வேண்டுகோள் பெறலாம் (விதி 16 (1)). பாதுகாப்பு அலுவலர் இத்தகைய வேண்டுகோளை விடுக்கிறபோது அத்துடன் குடும்ப நிகழ்வு அறிக்கை நகல் இணைக்கப்பட வேண்டும் (விதி16(2)).

பாதிக்கப்பட்ட பெண் உறைவிடம் கோரி உறைவிட இல்லத்துக்கு கோரிக்கை விடுப்பதற்கு முன்பாக குடும்ப நிகழ்வு அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்பதற்காக அவருக்கு இந்தச் சட்டத்தின் கீழ் உறைவிடம் அளிக்க உறைவிட இல்லப் பொறுப்பாளர் மறுக்கக்கூடாது (விதி 16 (2)).

**உடனடி அனுமதி:** உறைவிட இல்லப் பொறுப்பாளர் அனைத்துப் பெண்களுக்கும் உறைவிடம் வழங்க வேண்டும். பெண்ணுக்கு உடனடியாக அனுமதி அளிக்க வேண்டும். உயரதிகாரிகள் அல்லது அறக்கட்டளை உறுப்பினர்கள் அனுமதி பெறுவதற்காக சேர்க்கை அனுமதி தாமதிக்கப்படக் கூடாது. விண்ணப்பிக்கும் பெண்ணிடம் எந்தவொரு அடையாளம் அல்லது பரிந்துரைக் குறிப்பு இல்லையென்றாலும் அவருக்கு சேர்க்கை அனுமதி அளிக்கப்பட வேண்டும். அனைத்து சேர்க்கை அனுமதிகளும் உள்ளூர் காவல்துறை அதிகாரி மற்றும் பாதுகாப்பு அலுவலருக்கு கூடிய விரைவில் தெரிவிக்கப்பட வேண்டும்.

**இல்லத்தில் காலியிடம் இல்லையென்றால் மாற்று உறைவிடத்திற்கு ஏற்பாடு செய்தல்:** உறைவிட இல்லத்தில் காலியிடம் இல்லையென்றால் இல்லப் பொறுப்பாளர் பாதுகாப்பு அலுவலருக்கு தகவல் தெரிவித்து, ஒரு மாற்று உறைவிட இல்லத்திற்கு அந்தப் பெண்ணிற்கு பரிந்துரைக் குறிப்பு வழங்க அல்லது துணையாகச் செல்ல ஏற்பாடு செய்ய வேண்டும்.

**இலவச உறைவிடம் மற்றும் இதர சேவைகள்:** பெண்ணுக்கு கட்டணமின்றி உறைவிடம் வழங்குவது உறைவிட இல்லத்தின் கடமைப் பொறுப்பாகும். பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை வகுத்துரைத்துள்ளபடி உறைவிட இல்லத்தில் பெண்களுக்குக் கிடைக்கும் இதர அனைத்து வசதிகளும் வழங்கப்பட வேண்டும்.

**பாதிக்கப்பட்டவருக்கு மருத்துவ சோதனை:**பாதிக்கப்பட்ட பெண் உறைவிட இல்லத்தில் சேர்க்கப்படுவதற்கு முன்பாக மருத்துவ சோதனை செய்துகொள்ளவில்லை என்றால், அவர் சேர்க்கப்பட்ட பிறகு அவருக்கு மருத்துவ ரீதியாக சோதனை மேற்கொள்ளப்படுவதற்கு இல்லப் பொறுப்பாளர் ஏற்பாடு செய்ய வேண்டும். மருத்துவ அறிக்கைகளை அந்தப் பெண்ணின் இதர ஆவணங்களோடு பராமரித்து வர வேண்டும். பெண்ணிடம் ஒரு மருத்துவ அறிக்கை இல்லையென்ற அடிப்படையில் அவருக்கு சேர்க்கை அனுமதி மறுக்கப்படக் கூடாது.

**பெண் விரும்பவில்லை என்றால் அவரது அடையாளத்தை வெளிப்படுத்தாதிருத்தல்:** தனது அடையாளம் வெளிப்படுத்தப்படக் கூடாது என பாதிக்கப்பட்ட பெண் விரும்புவாரானால், அவரது அடையாளத்தை உறைவிட இல்லம் வெளிப்படுத்தக் கூடாது, அவர் பற்றிய தகவலை (சட்டத்தில் வகுத்துரைக்கப்பட்டுள்ள அதிகாரிகள் தவிர்த்து) யாருக்கும் தெரியப்படுத்தக் கூடாது.

**பெண்ணின் மதிப்புமிக்க பொருட்களை பாதுகாப்பாக எடுத்துக்கொண்டு அவர் வெளியேறும்போது ஒப்படைத்தல்:** உறைவிட இல்லத்தில் பெண் சேர்க்கப்பட்டவுடன் பணியிலுள்ள அதிகாரி அந்தப் பெண்ணின் நகைகள், பணம், முக்கிய ஆவணங்கள் போன்ற மதிப்பு மிக்க பொருட்களை தன் பொறுப்பில் எடுத்துக்கொண்டு, அந்தப் பெண்ணின் கையொப்பத்துடன் பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும். அந்தப் பெண் கோருகிறபோது அல்லது இல்லத்தில் இருந்து வெளியேறுகிறபோது அவரிடம் அந்தப் பொருட்கள் ஒப்படைக்கப்பட வேண்டும்.

**பாதிக்கப்பட்ட பெண்ணின் குழந்தைகள்:** பாதிக்கப்பட்ட பெண்ணின் இளம் குழந்தைகளுக்கு, பையன்களானால் 6 வயது வரையிலும், பெண்களானால் 10 வயது வரையிலும் அந்த இல்லத்திலேயே உறைவிடம் வழங்கப்பட வேண்டும். பெண்ணின் சிசுக்கள் தாயுடன் படுப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டும்.

6 வயதுக்கு மேற்பட்ட பையன்களும், 10 வயதுக்கு மேற்பட்ட பெண்களும் உறைவிட இல்லத்திற்கு அருகாமையில் உள்ள, பொறுப்பளிக்கப்பட்ட குழந்தைகள் இல்லங்களுக்கு அனுப்பப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட பெண்ணின் குழந்தைகள் இவ்வாறு குழந்தைகள் இல்லங்களில் சேர்க்கப்படும்போது அந்தப் பெண்ணும் அவரது குழந்தைகளும் அடிக்கடி சந்திக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

**குழந்தைகளுடன் பள்ளிக்குச் செல்லுதல்**: உறைவிட இல்லத்தில் தாயுடன் தங்கியிருக்கும் குழந்தைகள் பள்ளிக்குச் செல்வார்களானால் குழந்தைகளுடன் பள்ளிக்குச் சென்றுவர தாய் அனுமதிக்கப்பட வேண்டும். பள்ளி செல்வதற்கான வழி அந்தத் தாய்க்கு தெரியாது என்ற நிலையில், அது அவருக்குப் பழக்கமாகும் வரையில், அவருடன் உறைவிட இல்லத்திலிருந்து ஒருவர் சென்று வர வேண்டும்.

**கால அளவுகள்:** பாதிக்கப்பட்ட பெண்கள் தங்களது வழக்கமான பணிகள் மற்றும் இதர நடைமுறைகளுக்காக உறைவிட இல்லத்திற்குள் வருவதற்கும் வெளியே செல்வதற்கும் அனுமதிக்கப்பட வேண்டும். இல்லத்திற்கு திரும்பி வருவதற்கான நேரம் இரவு 9 மணி. எனினும், நிலைமையைப் பொறுத்து, தேவைப்படுமானால் சிறப்பு அனுமதி வழங்கப்படலாம்.

**இதரவை:**

**வயது:** உறைவிடம் கோருகிற, பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சேர்க்கை அனுமதிக்கான வயது வரம்பு எதுவுமில்லை

**பாகுபாடு அல்லது சிறப்பு கவனிப்பு கூடாது:** சாதி, வர்க்கம் அல்லது மதம் என்ற அடிப்படையில் எவ்விதப் பாகுபாடும் இருக்கக் கூடாது. இல்லத்தில் தங்கியிருப்போர் அனைவரும் சமமாக நடத்தப்பட வேண்டும். ஆனால், உடல்நலப் பிரச்சனைகள், இயலாமைகள் போன்ற தனிப்பட்ட தேவைகள் இருக்கும்நிலையில் சிறப்பு கவனிப்பு வழங்கப்படலாம்.

**உடைகள் விதி:** பாதிக்கப்பட்ட பெண்ணின் மீது எந்த ஆடைக் கட்டுப்பாடும் விதிக்கப்பட மாட்டாது.

**கைப்பேசி பயன்பாடு:** பாதிக்கப்பட்ட பெண் உறைவிட இல்லத்திற்குள் கைப்பேசி பயன்படுத்த கட்டுப்பாடு எதுவும் இருக்கக்கூடாது.

ஒவ்வொரு உறைவிட இல்லத்திலும் ஒரு 'உறைவிட இல்லப் பதிவேடு' பராமரிக்கப்பட வேண்டும்.

**தகுதியுள்ள, அனுபவம் வாய்ந்த பணியாளர்கள்:**உறைவிட இல்லப் பணிகள் தகுதியுள்ள, அனுபவமுள்ள பணியாளர்களால் மேற்கொள்ளப்படுவதை நிர்வாகம் உறுதிப்படுத்த வேண்டும்.

குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவர் பணியாளர்களால் தங்களுக்கு சாதகமான பயன்படுத்தப்படாமல் இருப்பதை ஒவ்வொரு உறைவிட இல்லமும் உறுதிப்படுத்த வேண்டும். பணியாளர்கள் தங்களுக்குத் தரப்பட்டுள்ள அதிகாரங்களை தவறாகப் பயன்படுத்தாமல் இருப்பதும் உறுதிப்படுத்த வேண்டும்.

**கலந்தாய்வு/உடன்பாட்டுக் கூட்டங்கள் நடத்தாதிருத்தல்:** மனுதாரர் அல்லது பாதிக்கப்பட்ட பெண், தனியாகவோ அல்லது கூட்டாகவோ கலந்தாய்வு பெறுவதற்கு ஒரு நீதித்துறை நடுவர்தான் தனது உத்தரவின் மூலம் ஆணையிட வேண்டும் (S 14). நீதிமன்ற ஆணை இல்லாமல் எந்த ஒரு முகமை அமைப்பும் பேச்சுவார்த்தை/உடன்பாட்டு நடைமுறைகளை மேற்கொள்ளக்கூடாது.

**பயிற்சி:**அனைத்து உறைவிட இல்லப் பொறுப்பாளர்களுக்கும் அவர்களது உதவிப் பணியாளர்களுக்கும், அவர்கள் இந்தச் சட்டத்தின்கீழ் தங்களுடைய கடமைகளை திறனுடன் மேற்கொள்ளச் செய்யும் வகையில், பயிற்சியளிக்கப்படும். பயிற்சி நடைமுறைகள் புனேயில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தை மேம்பாட்டு ஆணையருடன் கலந்தாலோசித்து வகுக்கப்பட வேண்டும். நிறுவனம் தனது பணியாளர்கள் எடுத்துக்கொண்ட பயிற்சி தொடர்பாக பதிவு செய்த 'பயிற்சிப் பதிவேடு' ஒன்றை பராமரிக்கும்.

**சட்டம் குறித்த விழிப்புணர்வு:** உறைவிட இல்லப் பொறுப்பாளர்கள் அனைவரும் சமூகத்தில் சட்டம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். விழிப்புணர்வு நடைமுறைகளும் வழிமுறைகளும் புனேயில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தை மேம்பாட்டு ஆணையருடன் கலந்தாலோசித்து வகுக்கப்பட வேண்டும். விழிப்புணர்வுத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுவது குறித்த 'விழிப்புணர்வுப் பதிவேடு' ஒன்றை நிறுவனம் பராமரிக்கும்.

**கோட்டம்/வட்டம் அளவிலான குழுக் கூட்டங்கள்:** குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் பயனுள்ள முறையில் செயல்படுத்தப்படுவதைக் கண்காணிப்பதற்காக சம்பந்தப்பட்ட ஒவ்வொரு பிரிவினரும் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வகையில் மூன்றடுக்கு கண்காணிப்பு ஏற்பாடு ஒன்றை அரசு கொண்டுவந்துள்ளது.

- கோட்டக் குழு/ வட்டக் குழு: கோட்டாட்சியர் தலைமையில்
- மாவட்டக் குழு: மாவட்ட ஆட்சியர் தலைமையில்
- மாநிலக் குழு: கூடுதல் தலைமைச் செயலர் (உள்துறை) தலைமையில்

**கோட்டம்/வட்டம் அளவில்:** கோட்டாட்சியர் தலைமையில் அனைத்து அமைப்புகளின் கோட்டம்/வட்டம் அளவிலான மாதாந்திர குழுக் கூட்டங்களில் ஒவ்வொரு உறைவிட இல்லப் பொறுப்பாளர் கலந்துகொள்ள வேண்டும். சட்டத்தைச் செயல்படுத்துவதில் உள்ள நிறைகுறைகள் குறித்து இந்தக் கூட்டங்களில் விவாதிக்கப்படும். அந்த வட்டாரத்தின் தனித்தன்மை வாய்ந்த மிகுந்த அபாய நிலை சார்ந்த பிரச்சனைகளைக் கையாளும்.

இந்தக் கூட்டங்களில் உறைவிட இல்லப் பொறுப்பாளர் ஒவ்வொரு நிறுவனத்திடமிருந்தும் சட்டம் செயலாக்கப்படுவது தொடர்பான அறிக்கைகளைப் பெற வேண்டும்.

**உறைவிட இல்லப் பொறுப்பாளர் அறிக்கை பின்வரும் முறையில் அமைந்திருக்கும்:**

உறைவிட இல்லத்தின் பெயர்: கோட்டம்/வட்டம்: மாவட்டம்:
தொலைபேசி எண்: அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி:

| மாதம் | புதிதாக சேர்க்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை | குடும்ப வன்முறை வழக்கு என அடையாளம் காணப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | படிவம் IV வழங்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை | விடுவிக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை | மீதியுள்ள பெண்களின் எண்ணிக்கை | பணியாளர்களுக்கு நடத்தப்பட்ட பயிற்சிகளின் எண்ணிக்கை | மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வுத் திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

## சேவை வழங்குநர்

பொதுக் குறிப்புகள்

- சேவை வழங்குநர்கள் பதிவு
- குடும்ப வன்முறை கண்காணிப்பு
- தகவல் மற்றும் பரிந்துரைக் குறிப்பு வழங்குதல்
- பாதுகாப்பான உறைவிடம் கிடைக்கச் செய்தல்
- பாதிக்கப்பட்ட நபருக்கு மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளச் செய்தல்
- குடும்ப நிகழ்வு அறிக்கைத் தயாரித்தல்

- குடும்ப நிகழ்வு அறிக்கை தயாரிக்கப்பட்ட/பெறப்பட்ட பிறகு மேற்கொள்ள வேண்டிய நடைமுறை
- தகுதி வரையறை
- பேச்சுவார்த்தை/உடன்பாட்டுக் கூட்டம் நடத்தாதிருத்தல்
- தகுதியும் அனுபவமும் உள்ள பணியாளர்கள்
- அவசர நிலைகளில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை
- சேவை வழங்குநர்கள் அரசு ஊழியர்களாக இருத்தல்
- நல்ல நோக்கத்துடன் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கான பாதிப்புகளிலிருந்து சேவை வழங்குநர்களுக்குப் பாதுகாப்பு
- பயிற்சி
- சட்டம் குறித்த விழிப்புணர்வு
- கோட்ட/வட்ட அளவில் குழுக் கூட்டங்கள்

சட்ட உதவி, மருத்துவ உதவி, நிதியுதவி அல்லது இதர உதவிகள் வழங்குதல் உட்பட பெண்களின் உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் பதிவு செய்துள்ள தன்னார்வ அமைப்புகள் மாநில அரசால், குடும்ப வன்முறையில் பாதிக்கப்பட்டவருக்கு சேவை வழங்குவதற்காக நியமிக்கப்பட வேண்டும்/பொறுப்பளிக்கப்பட வேண்டும் (S2(R)S10(1), விதி 11(1)).

**சேவை வழங்குநர்கள் பதிவு**

மாநில அரசு, தேவையானது என தன்னால் கருதப்படும் விசாரணையை மேற்கொண்ட பிறகு, விண்ணப்பதாரரின் தகுதி குறித்து திருப்தியடையும் நிலையில், சம்பந்தப்பட்ட அரசு சாரா நிறுவனத்தை ஒரு சேவை வழங்குநராக பதிவு செய்ய வேண்டும், அவ்வாறு பதிவு செய்ததற்கான சான்றிதழ் வழங்க வேண்டும் (S10(2)).

இத்தகையதான நிலையில் விண்ணப்பதாரரின் தரப்பு கேட்கப்படுவதற்கு வாய்ப்பளிக்கப்படாமல் எந்தவொரு விண்ணப்பமும் தள்ளுபடி செய்யப்பட மாட்டாது (S10(2)).
சேவை வழங்குநர்கள் பின்வரும் சேவைகளை வழங்கலாம்:

உறைவிடம், மருத்துவ உதவி, வேலைப் பயிற்சி, விழிப்புணர்வுத் திட்டங்கள் இன்னபிற. கலந்தாய்வாளர்கள்: S14(1)ன் கீழ் கலந்தாய்வாளர்களாக அல்லது S15ன் கீழ் நல வல்லுநர்களாக நியமிக்கப்படுவதற்கு, சேவை வழங்கு அமைப்புகளின் உறுப்பினர்கள் குறித்த விவரங்களுடன் கூடிய விண்ணப்பங்களை சேவை வழங்குநரிடமிருந்து பாதுகாப்பு அலுவலர் வரவேற்க வேண்டும் (விதி8(viii)). கலந்தாய்வாளர்களாக நியமிப்பதற்கான விண்ணப்பங்களை பாதுகாப்பு அலுவலர் பரிசீரிலிக்க வேண்டும், கிடைக்கக் கூடிய கலந்தாய்வாளர்களின் ஒரு பட்டியலை நீதித்துறை நடுவருக்கு அனுப்ப வேண்டும் (விதி 8(ix)).

**குடும்ப வன்முறைக்கான கண்காணிப்பு**

குடும்ப வன்முறைக்காக பெண்களைக் கண்காணிப்பது அவர்களை அடையாளம் காணவும் சட்டத்தின் கீழ் நிவாரணம் பெறுவதற்கு முறையாக அவர்களுக்கு வழிகாட்டவும் உதவும். அனைத்து சேவை வழங்குநர்களும் குடும்ப வன்முறை தொடர்பாக பெண்களைக் கண்காணிக்க வேண்டும்.

***சிறந்த நடைமுறை:*** பின்வரும் நிலையிலுள்ளோர் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களாக அடையாளம் காணப்படுவர் – கணவன்மார்கள், சகோதரர்கள்,

தந்தைமார்கள் உள்ளிட்டோரால் கைவிடப்படும் பெண்கள் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களாவர்.

**தகவல் மற்றும் பரிந்துரைக் குறிப்பு வழங்குதல்:** ஒரு பெண் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவராக அடையாளம் காணப்பட்டவுடன், சேவை வழங்குநர், பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு பின்வருவன குறித்து தகவல்கள் அளிக்க வேண்டும் (S.5).

- சட்டத்தின் கீழ் அந்தப் பெண்ணுக்கு உள்ள உரிமைகள் மற்றும் நிவாரணங்கள்.
- பாதுகாப்பு அலுவலர்கள், சேவை வழங்குநர் மற்றும் இலவச சட்ட உதவி சேவைகள் போன்ற சேவைகள் கிடைப்பது பற்றிய தகவல்கள்
- பொருத்தமான நிலையில், இந்திய தண்டனைச் சட்டத்தின் S498Aயின் கீழ் ஒரு புகார் பதிவு செய்ய அவருக்குள்ள உரிமை (S.5)

***சிறந்த நடைமுறை:*** பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்காக படிவம் IV நகல் வழங்கப்பட வேண்டும்.

**பாதுகாப்பான உறைவிடம் கிடைக்கச் செய்தல்**

பாதிக்கப்பட்ட பெண் விரும்புவாரானால் ஒரு பாதுகாப்பான உறைவிட இல்லம் கிடைப்பதற்கு சேவை வழங்குநர் ஏற்பாடு செய்ய வேண்டும் (S10(2)c).

சேவை வழங்குநர் உறைவிட இல்லப் பொறுப்பாளருக்கு எழுத்துப்பூர்வமாக, S6ன் கீழ் விண்ணப்பம் அளிக்கப்படுகிறது என்று தெளிவாகக் குறிப்பிட்டு, வேண்டுகோள் விடுக்கலாம் (விதி16(1)).

**பாதிக்கப்பட்ட நபருக்கு மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளச் செய்தல்**

பாதிக்கப்பட்டபெண் உடல்ரீதியான காயங்கள் அடைந்திருப்பாரானால் அவருக்கு மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்படுவதற்கு சேவை வழங்குநர் ஏற்பாடு செய்ய வேண்டும் (S10(2)(b))

சேவை வழங்குநர் மருத்துவ அதிகாரிக்கு எழுத்துப்பூர்வமாக, S7ன் கீழ் விண்ணப்பம் அளிக்கப்படுகிறது என்று தெளிவாகக் குறிப்பிட்டு, வேண்டுகோள் விடுக்கலாம் (விதி17(1)).

**குடும்ப நிகழ்வு அறிக்கைத் தயாரித்தல்:** பாதிக்கப்பட்ட பெண் விரும்புவாரானால், சேவை வழங்குநர் ஒரு குடும்ப நிகழ்வு அறிக்கை தயாரிக்க வேண்டும் (S10(2)).

**குடும்ப நிகழ்வு அறிக்கை தயாரிக்கப்பட்ட/பெறப்பட்ட பிறகு மேற்கொள்ள வேண்டிய நடைமுறை:** சேவை வழங்குநர் குடும்ப நிகழ்வு அறிக்கையின் ஒரு நகலை பாதுகாப்பு அலுவலருக்கு 3 வேலை நாட்களுக்குள் அனுப்ப வேண்டும் (S10(2)).

***சிறந்த நடைமுறை:*** குடும்ப நிகழ்வு அறிக்கையின் ஒரு நகல் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு கட்டணமின்றி வழங்கப்பட வேண்டும். ஒரு நகல் பாதுகாப்பு அலுவலருக்கு அனுப்பப்பட்டு எதிர்கால பார்வையிடலுக்காக ஒரு சான்று நகல் பராமரிக்கப்பட வேண்டும்.
குடும்ப நிகழ்வு அறிக்கையின் தகவலைப் பதிவு செய்வதற்காக சேவை வழங்குநரின் அலுவலகத்தில், உரிய விவரங்களைப் பதிவு செய்ய ஒரு DIR பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும்.

**தகுதி வரையறை**

பதிவு செய்யக் கோருகிற ஒவ்வொரு சேவை வழங்குநரும் பின்வரும் தகுதி வரையறைகளைப் பெற்றிருக்க வேண்டும் (விதி11(3)):

- சேவை வழங்குநர் அமைப்பாக பதிவு செய்ய விண்ணப்பிக்கும் அமைப்பு இந்தச் சட்டத்தின் கீழ் வழங்க முன்வருகிற சேவைகளை, விண்ணப்பிக்கும் தேதிக்கு முன்பாக குறைந்தது 3 ஆண்டுகள் வழங்கியிருக்க வேண்டும்
- ஒரு மருத்துவமனை, அல்லது ஒரு மனநல ஆலோசனை மையம் அல்லது ஒரு வேலை பயிற்சி நிறுவனம் நடத்தி வருகிற ஒரு விண்ணப்பதாரர், சம்பந்தப்பட்ட தொழில்கள் அல்லது நிறுவனங்களை முறைப்படுத்துகிற ஒழுங்குமுறை அதிகாரிகள் போடுகிற அம்சங்களை நிறைவேற்ற வேண்டும்
- ஒரு உறைவிட இல்லத்தை நடத்துகிற விண்ணப்பதாரர் பின்வரும் அம்சங்களை உறுதிப்படுத்த வேண்டும்:
  1. உறைவிடம் கோரக்கூடிய நபர்களை அதிகபட்சமாக சேர்க்கக்கூடிய வசதி குறித்த தகவல்
  2. பெண்களுக்கு ஒரு உறைவிட இல்லம் நடத்துவதற்கு பாதுகாப்பான இடம்; கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகளை வழங்க முடியும்
  3. தங்கியிருப்போர் பயன்படுத்துவதற்காக செயல்படும் தொலைபேசி இணைப்பு அல்லது வேறு தொலைதொடர்பு வசதி பராமரிக்கப்பட்டு வருவது குறித்த பதிவு

**பேச்சுவார்த்தை/உடன்பாட்டுக் கூட்டம் நடத்தாதிருத்தல்:** மனுதாரர் அல்லது பாதிக்கப்பட்ட பெண், தனியாகவோ அல்லது கூட்டாகவோ கலந்தாய்வு பெறுவதற்கு ஒரு நீதித்துறை நடுவர்தான் தனது உத்தரவின் மூலம் ஆணையிட வேண்டும் (S 14).சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வேறு எந்த அமைப்பும் கலந்தாய்வு அல்லது பேச்சுவார்த்தை நடைமுறைகளை மேற்கொள்ளக்கூடாது.

**தகுதியும் அனுபவமும் உள்ள பணியாளர்கள்**

சேவை வழங்குநர் அமைப்பின் பணிகள் தகுதியுள்ள, அனுபவமுள்ள பணியாளர்களால் மேற்கொள்ளப்படுவதை நிர்வாகம் உறுதிப்படுத்த வேண்டும்.

குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவர் பணியாளர்களால் தங்களுக்கு சாதகமான பயன்படுத்தப்படாமல் இருப்பதை ஒவ்வொரு சேவை வழங்குநர் அமைப்பும் உறுதிப்படுத்த வேண்டும்.

பணியாளர்கள் தங்களுக்குத் தரப்பட்டுள்ள அதிகாரங்களை தவறாகப் பயன்படுத்தாமல் இருப்பதும் உறுதிப்படுத்த வேண்டும்.

**அவசர நிலைகளில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை:** சேவை வழங்குநருக்கு மின்னஞ்சல் மூலமாக அல்லது தொலைபேசி வழியாக அல்லது அதுபோன்ற இதர வழிகளில், பாதிக்கப்பட்ட பெண்ணிடமிருந்து அல்லது வேறு எந்த ஒரு நபரிடமிருந்தும், ஒரு குடும்ப வன்முறைச் செயல் நடந்துகொண்டிருக்கிறது என்றோ அல்லது நடக்கக்கூடும் என்றோ, நம்பகமான தகவல் கிடைக்குமானால், அத்தகைய அவசர நிலையில் பாதுகாப்பு அலுவலர் நிகழ்வு நடைபெறும் இடத்திற்கு உடனடியாகச் செல்லுமாறு காவல்துறை உதவியைக் கோர வேண்டும்; குடும்ப நிகழ்வு அறிக்கையைப் பதிவு செய்ய வேண்டும்; அதனை இந்தச் சட்டத்தின் கீழ் உரிய ஆணைகள் பெறுவதற்காக நீதித்துறை நடுவரிடம் தாக்கல் செய்ய வேண்டும் (விதி 9).

***சிறந்த நடைமுறை:*** சேவை வழங்குநர் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ஒரு பாதுகாப்பான உறைவிடம் கிடைப்பதற்கும், தேவைப்பட்டால் மருத்துவ சோதனைக்கும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

**சேவை வழங்குநர்கள் அரசு ஊழியர்களாக இருத்தல்**
இந்த சட்டத்தின் எந்தவொரு ஏற்பாட்டின் கீழும் அல்லது எந்தவொரு விதியின் கீழும் செயல்படுகிற அல்லது செயல்படுவதாக அறிவிக்கப்படுகிற சேவை வழங்குநர்கள் இந்திய தண்டனைச் சட்டத்தின் S21ன் அர்த்தத்திற்கு உட்பட்டு அரசு ஊழியர்களாக கருதப்படுவர் (45/1860).(S30).

**நல்ல நோக்கத்துடன் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கான பாதிப்புகளிலிருந்து சேவை வழங்குநர்களுக்குப் பாதுகாப்பு:** இந்தச் சட்டத்தின் கீழ் செயல்படுகிற அல்லது செயல்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிற சேவை வழங்குநர் அமைப்பு அல்லது அதன் எந்த ஒரு உறுப்பினராலும், நல்ல நோக்கத்துடன் செய்யப்படுகிற எந்த ஒரு செயலுக்காகவும் அல்லது குடும்ப வன்முறை நிகழ்த்தப்படுவதைத் தடுப்பதற்காக இந்தச் சட்டத்தின் கீழ் பணிகளைச் செய்வதற்காகவும் அல்லது செய்ய முற்பட்டதற்காகவும் எந்தவொரு வழக்கு அல்லது அரசுத் துறை குற்ற வழக்கீடு அல்லது எந்தவொரு சட்டப்பூர்வ நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட மாட்டாது S10(3).

**பயிற்சி:** அனைத்துப் சேவை வழங்குநர்களுக்கும் அவர்களது உதவிப் பணியாளர்களுக்கும், அவர்கள் இந்தச் சட்டத்தின்கீழ் தங்களுடைய கடமைகளை திறனுடன் மேற்கொள்ளச் செய்யும் வகையில், பயிற்சியளிக்கப்படும். பயிற்சி நடைமுறைகள் புனேயில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தை மேம்பாட்டு ஆணையருடன் கலந்தாலோசித்து வகுக்கப்பட வேண்டும். நிறுவனம் தனது பணியாளர்கள் எடுத்துக்கொண்ட பயிற்சி தொடர்பாக பதிவு செய்த 'பயிற்சிப் பதிவேடு' ஒன்றை பராமரிக்கும்.

**சட்டம் பற்றிய விழிப்புணர்வு:** சேவை வழங்குநர்கள் அனைவரும் சமூகத்தில் சட்டம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். விழிப்புணர்வு நடைமுறைகளும் வழிமுறைகளும் புனேயில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தை மேம்பாட்டு ஆணையருடன் கலந்தாலோசித்து வகுக்கப்பட வேண்டும். விழிப்புணர்வுத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுவது குறித்த 'விழிப்புணர்வுப் பதிவேடு' ஒன்றை நிறுவனம் பராமரிக்கும்.

**குழுக் கூட்டங்கள் கண்காணிப்பு:**குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் பயனுள்ள முறையில் செயல்படுத்தப்படுவதைக் கண்காணிப்பதற்காக சம்பந்தப்பட்ட ஒவ்வொரு பிரிவினரும் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வகையில் மூன்றடுக்கு கண்காணிப்பு ஏற்பாடு ஒன்றை அரசு கொண்டுவந்துள்ளது.

- கோட்டக் குழு/ வட்டக் குழு: கோட்டாட்சியர் தலைமையில்
- மாவட்டக் குழு: மாவட்ட ஆட்சியர் தலைமையில்
- மாநிலக் குழு: கூடுதல் தலைமைச் செயலர் (உள்துறை) தலைமையில்

**கோட்டம்/வட்டம் அளவில்:** கோட்டம்/வட்டம் அளவிலான குழுக் கூட்டங்களில் மாதம்தோறும் சேவை வழங்குநர் பங்கேற்க வேண்டும். சட்டத்தைச் செயல்படுத்துவதில் உள்ள நிறைகுறைகள் குறித்து இந்தக் கூட்டங்களில் விவாதிக்கப்படும். அந்த வட்டாரத்தின் தனித்தன்மை வாய்ந்த மிகுந்த அபாய நிலை சார்ந்த பிரச்சனைகளைக் கையாளும்.

இந்தக் கூட்டங்களில் சேவை வழங்குநர் ஒவ்வொரு நிறுவனத்திடமிருந்தும் சட்டம் செயலாக்கப்படுவது தொடர்பான அறிக்கைகளைப் பெற வேண்டும்.

**சேவை வழங்குநர் அறிக்கை பின்வரும் முறையில் அமைந்திருக்கும்:**

சேவை வழங்குநரின் பெயர்: கோட்டம்/வட்டம்: மாவட்டம்:

தொலைபேசி எண்: அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி:

| மாதம் | புதிதாக சேர்க்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை | குடும்ப வன்முறை வழக்கு என அடையாளம் காணப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | படிவம் IV வழங்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை | விடுவிக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை | மீதியுள்ள பெண்களின் எண்ணிக்கை | பணியாளர்களுக்கு நடத்தப்பட்ட பயிற்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

## சட்ட உதவி வழக்குரைஞர்கள்

பொதுக் குறிப்புகள்

- ஒவ்வொரு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திலும் சட்ட உதவி வழக்குரைஞர்கள் பொறுப்பளிக்கப்படுதல்
- தகுதியுள்ள, பயிற்சி பெற்ற வழக்குரைஞர்கள்
- பொறுப்பளிக்கப்பட்ட சட்ட உதவி வழக்குரைஞரிடம் வழக்கை ஒப்படைப்பதற்கான நடைமுறை
- பணிக்குழு
- பயிற்சி
- சட்டம் குறித்த விழிப்புணர்வு
- கோட்டம்/வட்டம் அளவிலான குழுக் கூட்டங்கள்

**ஒவ்வொரு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திலும் சட்ட உதவி வழக்குரைஞர்கள் பொறுப்பளிக்கப்படுதல்**

***சிறந்த நடைமுறை:*** இந்தச் சட்டத்தின் கீழ் பெண்களைப் பிரதிநிதித்துவப்படுத்த ஒவ்வொரு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திலும் இரண்டு பொறுப்பளிக்கப்பட்ட வழக்குரைஞர்களை கோட்ட சட்ட சேவைகள் குழு நியமிக்க வேண்டும்.
குடும்ப வன்முறை சட்ட வழக்குகளுக்கான குழுவில் இடம் பெறுவதற்கு வழக்குரைஞர்கள் ஐந்தாண்டுகள் தொழில் அனுபவம் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனை விலக்கப்படலாம்.
இந்த வழக்குரைஞர்கள் கூடியவரையில் பெண்களாக இருப்பது விரும்பத்தக்கது.

இந்த சட்ட உதவி வழக்குரைஞர்கள், நீதித்துறை நடுவர் நீதிமன்ற அதிகார வரம்புக்குள் செயல்படும் பாதுகாப்பு அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

இந்த வழக்குரைஞர்களின் பதவிக்காலம் 2 ஆண்டுகள் இருக்க வேண்டும். பதவிக்காலம் முடிகிறபோது மீண்டும் நியமிக்கப்படுவதற்காக அவர்கள் விண்ணப்பிக்கலாம்.

இந்த வழக்குரைஞர்களின் பெயர்கள், மாவட்ட சட்ட சேவைகள் அதிகார அமைப்பால் புனேயில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு ஆணைகளுக்கு அனுப்பப்பட வேண்டும். ஒவ்வொரு சட்ட உதவி வழக்குரைஞராலும் ஒரு 'சட்ட உதவி வழக்குரைஞர் பதிவேடு' பராமரிக்கப்பட வேண்டும்.

**தகுதியுள்ள, பயிற்சி பெற்ற வழக்குரைஞர்கள்:** சட்ட சேவைப் பணிகள் தகுதியுள்ள, அனுபவமுள்ள வழக்குரைஞர்களால் மேற்கொள்ளப்படுவதை கோட்ட சட்ட சேவைகள் குழு உறுதிப்படுத்த வேண்டும்.

குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவர் இந்த வழக்குரைஞர்களால் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தப்படாமல் இருப்பதை ஒவ்வொரு கோட்ட சட்ட சேவைகள் குழு உறுதிப்படுத்த வேண்டும். வழக்குரைஞர்கள் தங்களுக்குத் தரப்பட்டுள்ள அதிகாரங்களை தவறாகப் பயன்படுத்தாமல் இருப்பதும் உறுதிப்படுத்த வேண்டும்.

**பொறுப்பளிக்கப்பட்ட சட்ட உதவி வழக்குரைஞரிடம் வழக்கை ஒப்படைப்பதற்கான நடைமுறை:** பாதிக்கப்பட்ட பெண் விரும்புவாரானால், சம்பந்தப்பட்ட நடுவர் நீதிமன்றத்தில் அவரை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு பொறுப்பளிக்கப்பட்ட இரண்டு வழக்குரைஞர்களில் ஒருவரை பாதுகாப்பு அலுவலர் தொடர்பு கொள்ள வேண்டும்.

**பணிக்குழு:** கோட்ட சட்ட சேவைகள் குழு தனது பட்டியலில் உள்ள வழக்குரைஞர்களை பணிக்குழுவாக அமைத்து, உறைவிட இல்லங்களுக்கு ஒரு தொடர்ச்சியான அடிப்படையில், அங்கு தங்கியிருப்போருக்கு இச்சட்டத்தின்கீழ் அறிவுரைகள் வழங்குவதற்காக அனுப்ப வேண்டும்.

**பயிற்சி:** அனைத்து சட்ட உதவி வழக்குரைஞர்களுக்கும் அவர்களது உதவிப் பணியாளர்களுக்கும், அவர்கள் இந்தச் சட்டத்தின்கீழ் தங்களுடைய கடமைகளை திறனுடன் மேற்கொள்ளச் செய்யும் வகையில், பயிற்சியளிக்கப்படும். பயிற்சி நடைமுறைகள் புனேயில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தை மேம்பாட்டு ஆணையருடன் கலந்தாலோசித்து வகுக்கப்பட வேண்டும். நிறுவனம் தனது பணியாளர்கள் எடுத்துக்கொண்ட பயிற்சி தொடர்பாக பதிவு செய்த 'பயிற்சிப் பதிவேடு' ஒன்றை பராமரிக்கும்.

**சட்டம் பற்றிய விழிப்புணர்வு:** கோட்ட சட்ட சேவைகள் குழு சமூகத்தில் சட்டம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். விழிப்புணர்வு நடைமுறைகளும் வழிமுறைகளும் புனேயில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தை மேம்பாட்டு ஆணையருடன் கலந்தாலோசித்து வகுக்கப்பட வேண்டும். விழிப்புணர்வுத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுவது குறித்த 'விழிப்புணர்வுப் பதிவேடு' ஒன்றை நிறுவனம் பராமரிக்கும்.

**குழுக் கூட்டங்கள் கண்காணிப்பு:** குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் பயனுள்ள முறையில் செயல்படுத்தப்படுவதைக் கண்காணிப்பதற்காக சம்பந்தப்பட்ட ஒவ்வொரு பிரிவினரும் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வகையில் மூன்றடுக்கு கண்காணிப்பு ஏற்பாடு ஒன்றை அரசு கொண்டுவந்துள்ளது.

- கோட்டக் குழு/ வட்டக் குழு: கோட்டாட்சியர் தலைமையில்
- மாவட்டக் குழு: மாவட்ட ஆட்சியர் தலைமையில்
- மாநிலக் குழு: கூடுதல் தலைமைச் செயலர் (உள்துறை) தலைமையில்

**கோட்டம்/வட்டம் அளவில்:** கோட்டம்/வட்டம் அளவிலான குழுக் கூட்டங்களில் மாதம்தோறும் சட்ட உதவி வழக்குரைஞர்கள் பங்கேற்க வேண்டும். சட்டத்தைச் செயல்படுத்துவதில் உள்ள நிறைகுறைகள் குறித்து இந்தக் கூட்டங்களில் விவாதிக்கப்படும். அந்த வட்டாரத்தின் தனித்தன்மை வாய்ந்த மிகுந்த அபாய நிலை சார்ந்த பிரச்சனைகளைக் கையாளும்.

இந்தக் கூட்டங்களில் சட்ட சேவை வழக்குரைஞர்கள் ஒவ்வொரு நிறுவனத்திடமிருந்தும் சட்டம் செயலாக்கப்படுவது தொடர்பான அறிக்கைகளைப் பெற வேண்டும்.

**சட்ட சேவை வழக்குரைஞர்கள் அறிக்கை பின்வரும் முறையில் அமைந்திருக்கும்:**
சட்ட சேவை கோட்டம்/வட்டம்: மாவட்டம்:
வழக்குரைஞரின் பெயர்:

தொலைபேசி எண்: அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி:

| மாதம் | பாதுகாப்பு அலுவலரால்/நேரடியாக பதிவு செய்யப்பட்ட புதிய வழக்குகளின் எண்ணிக்கை | இறுதி ஆணை பெறப்பட்ட / முடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை | பணியாளர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பயிற்சிகளின் எண்ணிக்கை | மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வுத் திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | | | | |

## நீதித்துறை அலுவலர்கள்
### பொதுக் குறிப்புகள்

- தகவல் மற்றும் பரிந்துரைக் குறிப்பு வழங்கல்
- வேறு வகையிலான சட்டப்பூர்வ நடைமுறையில் நிவாரணம் கோருதல்
- பாதுகாப்பு அலுவலரிடமிருந்து குடும்ப நிகழ்வு பதிவேட்டின் சாராம்சத்தைப் பெறுதல்
- பாதிக்கப்பட்ட பெண் விரும்புவாரானால் அவர் சார்பாக பாதுகாப்பு அலுவலர் மனுத் தாக்கல் செய்தல்
- பாதிக்கப்பட்ட பெண் தானாகவே மனுத் தாக்கல் செய்தல்
- DIR பதிவு நீதித்துறை நடுவர் வலியுறுத்தக்கூடாது
- மூன்று நாட்களுக்குள் விசாரணையின் முதல் தேதி
- நீதிமன்ற வில்லை ஒட்டத்தேவையில்லை
- மறுதரப்பில்லா இடைக்கால ஆணைகள்
- அறிவிப்பு வழங்கல்
- இடைக்கால ஆணைகள்
- மறுதரப்பில்லா ஆணைகள்
- இச்சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்படும் ஆணைகள் இந்தியா முழுவதும் செயல்படத்தக்கவை
- வழக்கு விசாரணைக்கு காலையில் அழைத்தல்
- அறைக்குள் விசாரணைகள் நடத்தப்படுதல்

- தள்ளிவைக்கப்படுதல்
- கலந்தாய்வு
- பேச்சுவார்த்தை
- நல வல்லுநர்
- நீதிமன்றத்துக்கு உதவுமாறு பாதுகாப்பு அலுவலரை நீதிபதி கேட்டுக்கொள்ளலாம்
- வேறு நடைமுறைகளின் கீழ் குடும்ப வன்முறை நிவாரணங்கள் கோரி பெண்கள் மனு அளிக்கலாம்
- 60 நாட்களுக்குள் மனு மீது இறுதி முடிவு
- ஆணைகள் பிறப்பிக்கப்படும்போது மனதில் கொள்ள வேண்டியவை
- இதர ஆணைகள்
- ஆணை நகல்கள் கட்டணமின்றி வழங்கப்பட வேண்டும்
- ஆணைகள் செயலாக்கப்படுதல்
- ஆணைகளைச் செயல்படுத்துமாறு பாதுகாப்பு அலுவலருக்கு நீதித்துறை நடுவர் ஆணையிடலாம்
- பாதுகாப்பு ஆணைகள் மீறப்படுதல்
- சிறப்பு நீதிமன்றங்கள்
- பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள்
- மேல்முறையீடு/சீராய்வு/ஆணை கோரும் மனு
- சட்ட உதவி
- கோட்டம்/வட்டம் அளவிலான குழுக் கூட்டங்கள்

**வேறு வகையிலான சட்டப்பூர்வ நடைமுறையில் நிவாரணம் கோருதல்:** பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு இந்தச் சட்டத்தின் கீழ் கிடைக்கக்கூடிய எந்தவொரு நிவாரணமும் உரிமையியல் நீதிமன்றங்கள், குடும்ப நீதிமன்றங்கள் அல்லது குற்றவியல் நீதிமன்றங்களில் எந்தவொரு சட்டப்பூர்வ நடவடிக்கைகள் மூலமாகவும் கோரப்படலாம். இந்த நிவாரணங்கள், பாதிக்கப்பட்ட பெண் கோருகிற நிவாரணத்துடன் கூடுதலானதாக மற்றும் அத்துடன் இணைந்ததாக (ஒரே நேரத்தில்) இருக்கலாம். (S26)

**தகவல் மற்றும் பரிந்துரைக் குறிப்பு வழங்கல்**

நீதித்துறை நடுவர் பாதிக்கப்பட்டவருக்கு வட்டார மொழியில் பின்வருவன குறித்துத் தெரிவிக்க வேண்டும் S5:

- சட்டத்தின் கீழ் அந்தப் பெண்ணுக்குள்ள உரிமைகள் மற்றும் நிவாரணங்கள்
- பாதுகாப்பு அலுவலர்கள், மருத்துவ வசதி, உறைவிட இல்லம், சேவை வழங்குநர்கள் மற்றும் சட்ட உதவி போன்ற சேவைகள் பற்றிய தகவல்கள்
- இந்திய தண்டனைச் சட்டம் S498Aயின் கீழ், பொருத்தமான எந்த இடத்திலும், புகார் பதிவு செய்ய உள்ள உரிமை

***சிறந்த நடைமுறை:*** குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் குறித்த தகவல்களும், சேவைகள் வழங்குகிற அமைப்புகளின் தொலைபேசி எண்களும் கொண்ட சுவரொட்டிகளுக்கும், துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்படுவதற்கும் அனைத்து நீதித்துறை நடுவர் நீதிமன்றங்களும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

**பாதுகாப்பு அலுவலரிடமிருந்து குடும்ப நிகழ்வு பதிவேட்டின் சாராம்சத்தைப் பெறுதல்:** குடும்ப வன்முறை தொடர்பான புகார் கிடைக்கப் பெற்றதும் பாதுகாப்பு அலுவலர் ஒரு குடும்ப நிகழ்வு அறிக்கை தயார் செய்ய வேண்டும், அதனை மூன்று நாட்களுக்குள் நீதித்துறை நடுவருக்கு அனுப்ப வேண்டும் (S9((b))

***சிறந்த நடைமுறை:*** நீதித்துறை நடுவர் மன்றப் பதிவாளர் மாதாந்திர அடிப்படையில் 'னுஐசு பதிவேடு' சாராம்சத்தின் சான்றளிக்கப்பட்ட நகலை, நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்கு உட்பட்ட, பாதுகாப்பு அலுவலரிடமிருந்து பெற வேண்டும், அதனைப் பெற்றுக்கொண்டதற்கான சான்றளிக்க வேண்டும்.

**பாதிக்கப்பட்ட பெண் விரும்புவாரானால் அவர் சார்பாக பாதுகாப்பு அலுவலர் மனுத் தாக்கல் செய்தல்:** பாதிக்கப்பட்ட பெண் விரும்புவாரானால், இந்தச் சட்டத்தின் கீழ் நிவாரணம் கோரி, அவர் சார்பாக பாதுகாப்பு அலுவலர் மனு தாக்கல் செய்யலாம். பாதுகாப்பு அலுவலர்களிடமிருந்து இத்தகைய மனுக்களை நீதித்துறை நடுவரின் கடமையாகும் (S 12(1), S 9(c))

**பாதிக்கப்பட்ட பெண் தானாகவே மனுத் தாக்கல் செய்தல்:**இந்தச் சட்டத்தின் கீழ் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிவாரணங்கள் கோரி பாதிக்கப்பட்ட பெண் அல்லது அவர் சார்பாக வேறு எந்த ஒரு நபரும் மனுத் தாக்கல் செய்யலாம் (S 12(1)). மனுவில் படிவம் II, படிவம் III, தேவைப்படுமானால் மனுவின் சுருக்கம் இணைக்கப்பட வேண்டும்.

**DIR பதிவு நீதித்துறை நடுவர் வலியுறுத்தக்கூடாது:** ஒரு பெண் தானாக முன்வந்து மனுத் தாக்கல் செய்கிறபோது, நீதித்துறை நடுவர் ஆணை பிறப்பிப்பதற்கு முன்பாக DIR தாக்கல் செய்யப்பட வேண்டுமென்று வலியுறுத்தக் கூடாது. பாதுகாப்பு அலுவலர் அல்லது சேவை வழங்குநரிடமிருந்து நீதித்துறை நடுவருக்கு DIR வந்திருக்கிறது என்றால் மட்டுமே அவர் தனது ஆணையைப் பிறப்பிப்பதற்கு முன் அதனைப் பரிசீலிக்க வேண்டும் (S12(1)).

**மூன்று நாட்களுக்குள் விசாரணையின் முதல் தேதி:** சாதாரணமாக, நீதிமன்றத்தால் மனு பெறப்பட்ட தேதியிலிருந்து மூன்று நாட்களுக்கு மிகாமல், விசாரணைக்கான தேதியை நீதித்துறை நடுவர் முடிவு செய்ய வேண்டும் (S 12(4)).

**நீதிமன்ற வில்லை ஒட்டத்தேவையில்லை:** இந்தச் சட்டத்தின் கீழ் எந்தவொரு மனுவுடனும் எந்தவொரு நீதிமன்ற வில்லையும் ஒட்டப்படத் தேவையில்லை.

**மறுதரப்பில்லா இடைக்கால ஆணைகள்:** குடும்ப வன்முறை நிகழ்ந்திருக்கிறது என்பதற்கான பூர்வாங்க அடிப்படை மனுவில் இருப்பதாக நீதித்துறை நடுவர் கருதுவாரானால், அவர் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு வழங்குவதற்கு முன்பாக, ஒரு மறுதரப்பில்லா இடைக்கால ஆணை பிறப்பிக்கலாம் (S 23(2), படிவம் III)

***சிறந்த நடைமுறை:*** மிகுந்த அவசரம் அல்லது ஆழ்ந்த அபாயம் உள்ள நிலையில் பெண் இடைக்கால நிவாரணத்திற்கு வழி வகுக்கலாம். இந்த இடைக்கால நிவாரணங்களை நீதிமன்றம், எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு வழங்கப்படுவதற்கு முன்பாகவே அல்லது அவர் நீதிமன்றத்தில் ஆஜராவதற்கு முன்பாகவே அல்லது அறிவிப்பு வழங்கப்பட்டவுடன் அவர் தனது பதிலைத் தாக்கல் செய்வதற்கு முன்பாகவே நீதிமன்றம் அளிக்கலாம் (S23(2)).

***சிறந்த நடைமுறை:*** ஒரு இடைக்கால ஆணை/ஆணைகள் பிறப்பிக்கப்பட்ட பிறகு மட்டுமே, குறிப்பாக பாதுகாப்பு, பராமரிப்பு, குடியிருப்பு கோரப்பட்டிருந்து அதற்கான ஆணைகள்

பிறப்பிக்கப்பட்ட பிறகு மட்டுமே சம்பந்தப்பட்ட தரப்பினருக்கான கலந்தாய்வை நீதித்துறை நடுவர் உறுதிப்படுத்த வேண்டும்.

**அறிவிப்பு வழங்கல்:** நீதித்துறை நடுவரால் அறிவிக்கப்படும் அடுத்த விசாரணைக்கான தேதி குறித்த அறிவிப்பு எதிர்மனுதாரருக்கு இரண்டு நாட்களுக்குள் அல்லது நடுவர் அனுமதிக்கும் நியாயமான காலத்திற்குள் வழங்கப்பட வேண்டும் (S 13).

அனைத்து நடைமுறைகளும் குற்றவியல் நடைமுறைச் சட்டம் –1973ன் (2/1974) ஏற்பாடுகளுக்கு உட்பட்டதாகும் (S 28).

அறிவிப்பானது குடும்ப வன்முறைச் சட்டத்தின் குற்றவியல் நடைமுறை விதிகள் (CPC) மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டம் (CrPC) ஆகியவற்றின் கொள்கைகளைக் கொண்டிருக்க வேண்டும் (விதி 12).

***சிறந்த நடைமுறை:*** பாதிக்கப்பட்ட பெண்ணின் வசதிக்கு ஏற்ப, எதிர்மனுதாரருக்கு, பின்வரும் ஏதேனும் ஒரு வழியில், அறிவிப்பு விரைவான முறையில் வழங்கப்பட நீதித்துறை நடுவர் ஆணையிட வேண்டும்:

1. பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட சேவை மூலமாக பதிவுத் தபால் மூலம்
2. பாதுகாப்பு அலுவலர்கள் மூலம்
3. காவல்துறை உதவியுடன் பாதுகாப்பு அலுவலர் மூலம்
4. காவல்துறை மூலம்
5. CPC மற்றும் CrPC நடைமுறைகளின் மூலம்
6. மின்னஞ்சல்/தொலைநகலின் மூலம் வழங்கப்படும் அறிவிப்பு போதுமானதாகும்; அதன் அச்சுப் படிவம்/சான்று அறிவிப்பு வழங்கப்பட்டதற்கான போதுமான சான்றாகும்

***முக்கியம்:*** பாதிக்கப்பட்ட பெண் அறிவிப்பை பாதுகாப்பு அலுவலர் அல்லது காவல்துறை அதிகாரியிடம் ஒப்படைக்க வேண்டுமென்று நீதித்துறை நடுவர் ஆணையிடக் கூடாது. நிலைமையைப் பொறுத்து பாதுகாப்பு அலுவலர் அல்லது காவல்துறைக்கு நீதிமன்றத்தால் நேரடியாகவே அறிவிப்பு அனுப்பப்பட வேண்டும்.

***சிறந்த நடைமுறை:*** அறிவிப்பு வழங்கப்பட்டு எதிர்மனுதாரர் ஆஜரானதும், அறிவிப்பு முழுமையடைந்ததாகக் கருதப்படும். தற்போது ஆஜராவதற்கு மேற்கொண்டு அறிவிப்பு எதையும் நீதித்துறை நடுவர் வெளியிடக் கூடாது.

**இடைக்கால ஆணைகள்:** சட்டத்தின் நோக்கம் நடைமுறைகளை எளிமைப்படுத்துவதும், உடனடி நிவாரணம் தேவைப்படும் பெண்களுக்கு குறுகிய காலத்தில் அது கிடைப்பதை உறுதிப்படுத்துவதுமாகும். ஒரு மனுவில் குடும்ப வன்முறைக்கான பூர்வாங்க ஆதாரம் இருப்பதாக நீதித்துறை நடுவர் கருதுவாரானால் அவர் ஒரு இடைக்கால ஆணை பிறப்பிக்கலாம் (S23(2).

***சிறந்த நடைமுறை:*** இடைக்கால ஆணைகள் விரைவாக, அறிவிப்பு வழங்கல் முழுமையடைந்த 30 நாட்களுக்கு மிகாமல் பிறப்பிக்கப்பட வேண்டும் (விதி 12(3)).

**மறுதரப்பில்லா ஆணைகள்:** ஒரு மனுவில் குடும்ப வன்முறைக்கான பூர்வாங்க ஆதாரம் இருப்பதாக நீதித்துறை நடுவர் கருதுவாரானால், பிரமாணப் பத்திரத்தின் அடிப்படையில் அவர் ஒரு மறுதரப்பில்லா ஆணை பிறப்பிக்கலாம் (S23(2).

***சிறந்த நடைமுறை:*** அறிவிப்பு முறையாக வழங்கப்பட்டு, எதிர்மனுதாரர் ஆஜராகத் தவறுவாரானால் அல்லது தனது எழுத்துப்பூர்வ வாக்குமூலத்தை தாக்கல் செய்யத் தவறுவாரானால், நீதித்துறை நடுவர் பிரமாணப் பத்திரத்தின் ஒரு மறுதரப்பில்லா ஆணையைப் பிறப்பிக்கலாம்.

***சிறந்த நடைமுறை:*** உறுத்துக் கட்டளை (injunction) ஆணைகள் அனைத்தும் அடிப்படையில் பாதுகாப்பு ஆணைகளாகும்.

**இச்சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்படும் ஆணைகள் இந்தியா முழுவதும் செயல்படத்தக்கவை**
இச்சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்படும் எந்த ஒரு ஆணையும் இந்தியா முழுவதும் செயல்படத்தக்கவையாகும் (S27(2)).

**வழக்கு விசாரணைக்கு காலையில் அழைத்தல்**

***சிறந்த நடைமுறை:*** பாதிக்கப்பட்ட பெண் நாள் முழுக்கக் காத்திருக்கும் சிரமத்திற்கு உள்ளாவதைத் தவிர்க்க விசாரணை காலையில் நடைபெற வேண்டும். பிற்பகலில் விசாரணை வைத்துக்கொள்ள அந்தப் பெண் வேண்டுகோள் விடுக்கிறார் என்ற நிலையில் மட்டுமே விசாரணை பிற்பகலுக்குப் பட்டியலிட வேண்டும்.

**அறைக்குள் விசாரணைகள் நடத்தப்படுதல்**

வழக்கின் தன்மைகளுக்கு ஏற்ப தேவைப்படுவதாக நீதித்துறை நடுவர் கருதுவாரானால், விசாரணையில் சம்பந்தப்பட்ட ஏதேனும் ஒரு தரப்பினர் விரும்புவார்களானால், இந்தச் சட்டத்தின் கீழ் அறைக்குள் விசாரணை நடைமுறைகளை நடுவர் மேற்கொள்ள வேண்டும் (S16).

**தள்ளிவைக்கப்படுதல்**

***சிறந்த நடைமுறை:*** வழக்கு முடிக்கப்படுவதை தாமதப்படுத்தக்கூடிய வகையில் எதிர்மனுதாரருக்கு தேவையற்ற முறையில் தள்ளிவைப்பு (வாய்தா) ஆணைகள் வழங்குவதை நீதித்துறை நடுவர் தவிர்க்க வேண்டும்.

**கலந்தாய்வு**
இந்தச் சட்டத்தின் கீழ் விசாரணையின் எந்தவொரு கட்டத்திலும், எதிர்மனுதாரர் அல்லது பாதிக்கப்பட்டவர் தனித்தனியாக அல்லது கூட்டாக, வகுத்துரைக்கப்பட்டுள்ளபடி கலந்தாய்வுக்கான தகுதிகளும் அனுபவமும் உள்ள சேவை வழங்குநர்கள் பட்டியலில் உள்ள யாரேனும் ஒருவரிடம் கலந்தாய்வு மேற்கொள்ளுமாறு ஆணையிடலாம் (S14).

பாதுகாப்பு அலுவலர் தாக்கல் செய்யும் கலந்தாய்வாளர்கள் பட்டியலிலிருந்து ஒருவரை நடுவர் தேர்ந்தெடுக்க வேண்டும் (விதி 13(1)).

மனுத்தாக்கல் செய்வதற்கு முன்பாக, சம்பந்தப்பட்ட எந்தவொரு தரப்பினரும் நாடியிருக்கக்கூடிய எந்தவொரு நபரையும் கலந்தாய்வாளராக நீதிபதி நியமிக்கக்கூடாது. சம்பந்தப்பட்ட தரப்பினர் எவர் ஒருவரையும் பிரதிநிதித்துவப்படுத்தியிருக்கக்கூடிய எந்தவொரு வழக்குரைஞரையும் கலந்தாய்வாளராக நீதிபதி நியமிக்ககூடாது (விதி 13(2)).

கலந்தாய்வாளர்கள் கூடியவரையில் பெண்களாக இருக்க வேண்டும் (விதி 13 (3)).

நீதித்துறை நடுவர் விசாரணைக்கான அடுத்த தேதியை இரண்டு மாதங்களுக்கு மிகாத காலத்திற்குள் முடிவு செய்ய வேண்டும் (S14(2)).

***சிறந்த நடைமுறை:*** பாதிக்கப்பட்டவரின் ஒப்புதலுடன், சம்பந்தப்பட்ட தரப்பினருக்கான கலந்தாய்வுக்கு நீதிபதி ஆணையிட வேண்டும்.

ஒரு இடைக்கால ஆணை/ஆணைகள் பிறப்பிக்கப்பட்ட பிறகு மட்டுமே, குறிப்பாக பாதுகாப்பு, பராமரிப்பு, குடியிருப்பு கோரப்பட்டிருந்து அதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்ட பிறகு மட்டுமே சம்பந்தப்பட்ட தரப்பினருக்கான கலந்தாய்வை நீதித்துறை நடுவர் உறுதிப்படுத்த வேண்டும்.

கலந்தாய்வாளரின் அறிக்கை வருவதற்கு முன்பாக, கலந்தாய்வு நடந்துகொண்டிருக்கும்போது, நீதித்துறை நடுவர் விசாரணையைத் தொடரக் கூடாது.

கலந்தாய்வின்போது உடன்பாடு எட்டப்பட்டிருக்குமானால், அதில் ஒப்புக்கொள்ளப்பட்டவை கட்டுப்படுத்துவதாகவும், செயல்படுத்தத்தக்கதாகவும் இருப்பதை உறுதிப்படுத்த, நீதித்துறை நடுவர் ஒரு ஆணை பிறப்பிக்க வேண்டும்.

ஒப்புக்கொள்ளப்பட்ட நிபந்தனைகள் ஏற்கப்பட்டு செயல்படுத்தப்பட்ட பிறகுதான், வழக்கை விலக்கிக்கொள்ள நீதிபதி அனுமதிக்க வேண்டும்.

**பேச்சுவார்த்தை:** பாதிக்கப்பட்டவர் விரும்புவாரானால், உடன்பாட்டிற்கான பேச்சுவார்த்தையை மேற்கொள்ள நீதிபதி அனுமதிக்கலாம் (CPC–S89, மும்பை உயர்நீதிமன்ற தாவா மாற்றுத் தீர்வு மற்றும் பேச்சுவார்த்தை விதிகள்).

**நல வல்லுநர்:** நீதித்துறை நடுவர் தனது கடமையை நிறைவேற்றுவதில் தனக்கு உதவுவதற்காக, பாதிக்கப்பட்டவருடன் தொடர்புள்ளவரானாலும், இல்லையென்றாலும், குடும்ப நலத்தை மேம்படுத்துவதில் சம்பந்தப்பட்டிருப்பவர் உட்பட, தகுதியுள்ளவர் என அவர் கருதக்கூடிய, நல வல்லுநரின் உதவியைக் கோர நீதித்துறை நடுவருக்கு அதிகாரம் உள்ளது.

**நீதிமன்றத்துக்கு உதவுமாறு பாதுகாப்பு அலுவலரை நீதிபதி கேட்டுக்கொள்ளலாம்:** நீதித்துறை நடுவர் இந்தச் சட்டத்தின் கீழ் தனது கடமையை நிறைவேற்ற உதவுமாறு பாதுகாப்பு அலுவலரைக் கேட்டுக்கொள்ளலாம் (S9(1)).

பாதுகாப்பு அலுவலர் நீதித்துறை நடுவரின் கட்டுப்பாட்டிலும் கண்காணிப்பிலும் இருக்க வேண்டும், நடுவரால் தனக்கு அளிக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்ற வேண்டும் (S9(2)).

பாதுகாப்பு அலுவலர் பின்வரும் பணிகளைச் செய்யுமாறு நீதித்துறை நடுவர் ஆணையிடலாம் (விதி10): மறுதரப்பில்லா இடைக்கால நிவாரணத்திற்கு ஆணையிடுவதற்கு முன்பாக, சம்பந்தப்பட்ட தரப்பினர் சேர்ந்திருக்கக்கூடிய வீட்டிற்குச் சென்று பார்வையிடுதல்.

வருமானம், சொத்துகள், வங்கிக் கணக்குகள் அல்லது வேறு ஆவணங்கள் தொடர்பான ஒரு பொருளாதார நிலை அறிக்கை தாக்கல் செய்தல்.

**வேறு நடைமுறைகளின் கீழ் குடும்ப வன்முறை நிவாரணங்கள் கோரி பெண்கள் மனு அளிக்கலாம்**

பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு இந்தச் சட்டத்தின் கீழ் கிடைக்கக்கூடிய எந்தவொரு நிவாரணமும் உரிமையியல் நீதிமன்றங்கள், குடும்ப நீதிமன்றங்கள் அல்லது குற்றவியல் நீதிமன்றங்களில் எந்தவொரு சட்டப்பூர்வ நடவடிக்கைகள் மூலமாகவும் கோரப்படலாம். இந்த நிவாரணங்கள், பாதிக்கப்பட்ட பெண் கோருகிற நிவாரணத்துடன் கூடுதலானதாக மற்றும் அத்துடன் இணைந்ததாக (ஒரே நேரத்தில்) இருக்கலாம். (S26)

**60 நாட்களுக்குள் மனு மீது இறுதி முடிவு :** ஒவ்வொரு மனுவையும், அதன் முதல் விசாரணைத் தேதியில் இருந்து 60 நாட்களுக்குள் முடிப்பதற்கு நீதித்துறை நடுவர் முயல வேண்டும் (S12(5).

**ஆணைகள் பிறப்பிக்கப்படும்போது மனதில் கொள்ள வேண்டியவை:**

***சிறந்த நடைமுறை:*** CrPC பிரிவு 262–264ன் கீழ் வகுத்துரைக்கப்பட்டுள்ளபடி சுருக்கமான விசாரணையை நீதிமன்றம் மேற்கொள்ள வேண்டும். ஆதாரங்களின் அடிப்படைகளை மட்டும் பதிவு செய்ய வேண்டும்.

சுருக்கமான காரண விளக்கம் தீர்ப்பில் இருக்க வேண்டும்.

மீறப்படும் ஒவ்வொரு ஆணையும் சட்டத்தின் பிரிவு 31ன் கீழ் ஒரு குற்றம் என நீதிபதி ஆணை பிறப்பிக்கப்படும்போது குறிப்பிட வேண்டும்.

பாதிக்கப்பட்டவருக்கும் அவரைச் சார்ந்திருப்போருக்கும் பாதுகாப்பு அளிக்குமாறு சம்பந்தப்பட்ட காவல்நிலையத்திற்கு நீதித்துறை நடுவர் ஆணையிடலாம்.

குடும்ப வன்முறைச் செயலைத் தவிர்ப்பதற்காக, எதிர்மனுதாரர் பிணையதாரரின் கையெழுத்துடனோ, அது இல்லாமலோ, ஒரு பத்திரம் அளிக்க வேண்டும் என நீதிபதி ஆணையிடலாம் (S19(3)).

பாதுகாப்பு ஆணை மீறப்படுவது குறித்து நீதிபதி உடனடி விசாரணை மேற்கொள்ளலாம் (விதி15/(6),(7)).

**இதர ஆணைகள்:** வன்முறை நிறுத்தப்படுவதை உறுதிப்படுத்த வேறுவகையான ஆணை தேவைப்படுவதாக நீதிமன்றம் கருதுமானால், பாதிக்கப்பட்டவர் கோருகிற ஆணைகளுடன் சேர்த்து இதற்கான ஆணையையும் நீதிமன்றம் பிறப்பிக்கலாம் (S25(2)).

**ஆணை நகல்கள் கட்டணமின்றி வழங்கப்பட வேண்டும்:** சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு ஆணை நகல்கள் கட்டணமின்றி வழங்கப்பட வேண்டும் (S24).

**ஆணைகள் செயலாக்கப்படுதல்:** ஆணைகளின் நகல்களை உள்ளூர்க் காவல்நிலையத்திற்கு அனுப்ப நீதிபதி ஆணையிடலாம் (S19(5)).

**ஆணைகளைச் செயல்படுத்துமாறு பாதுகாப்பு அலுவலருக்கு நீதித்துறை நடுவர் ஆணையிடலாம்**

அனைத்து ஆணைகளையும் செயல்படுத்துமாறு பாதுகாப்பு அலுவலருக்கு நீதித்துறை நடுவர் ஆணையிடலாம் (விதி10(1)).

***சிறந்த நடைமுறை:*** ஆணைகளைச் செயல்படுத்துவதில் பாதுகாப்பு அலுவலருக்கு உதவுமாறு எப்போது தேவைப்பட்டாலும் நீதித்துறை நடுவர் ஆணையிடலாம்

**பாதுகாப்பு ஆணைகள் மீறப்படுதல்**

எதிர்மனுதாரர் அல்லது அவர் சார்பில் செயல்படும் யாரானாலும் ஆணைகளைச் செயல்படுத்தத் தவறுவார்களானால், பாதுகாப்பு ஆணை அல்லது இடைக்கால ஆணை மீறப்பட்டதாகக் கருதப்படும் (S15(7)). இது தண்டனைக்குரிய குற்றமாகும். ஓராண்டுகாலம் வரை சிறை அல்லது 20,000 ரூபாய் அபராதம் அல்லது இரண்டும் விதிக்கத்தக்கதாகும் (S31).

ஆணை மீறப்படுவது பற்றிய வழக்கை கூடியவரையில், ஆணையைப் பிறப்பித்த நீதிபதியே விசாரிக்க வேண்டும். இது பிரதான மனுவின் விசாரணையை பாதிக்காத அளவில் இருக்க வேண்டும்.

இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 498Aயின் கீழ் ஒரு புகார் பதிவு செய்யப்பட்டு வழக்கு தொடரப்படும்போது, பாதிக்கப்பட்டவர் குடும்ப வன்முறைச் சட்டத்தின் கீழ் எந்தவொரு ஆணையும் பிறப்பிக்குமாறு கோரி நீதித்துறை நடுவரிடம் மனுத்தாக்கல் செய்யலாம். இச்சட்டத்தின் கீழ் நீதிபதி எந்தவொரு ஆணையும் பிறப்பிக்கலாம்.

S31ன் கீழ் எந்தவொரு குற்றச் செயலும் பிடி ஆணை வேண்டாத, பிணையில் விடத்தகாத குற்றமாகும். விசாரணை உடனடியாக CrPC அத்தியாயம் XXIன் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும் (விதி15(6)) .

பெண்ணின் வாக்குமூலத்தின் அடிப்படையிலேயே எதிர்மனுதாரரால் S31ன் கீழ் வரும் குற்றச் செயல் ஒன்று செய்யப்பட்டுள்ளது என்ற முடிவுக்கு நீதித்துறை நடுவர் வரலாம்.

**சிறப்பு நீதிமன்றங்கள்**

***சிறந்த நடைமுறை:*** இச்சட்டத்தின் கீழ் வரும் வழக்குகளை விசாரிக்க சிறப்பு நீதிமன்றங்கள் இல்லாத நிலையில், ஒவ்வொரு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திலும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நடுவர்களை சிறப்பு நீதிமன்ற நடுவர்களாக உயர்நீதிமன்றம் பொறுப்பளிக்கலாம். இவ்வாறு நியமிக்கப்படும் நடுவர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டு, சட்டத்தின் சிறப்பு நடைமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளனவா என்று கண்காணிக்கப்பட வேண்டும்.

**பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள்**

**மனு:** மனுக்களைக் கையாள்வதில் CrPC விதிகள் (குறிப்பாக பிரிவு 125) பின்பற்றப்பட வேண்டும். இத்தகைய மனுக்களைக் கையாள்வதில் நீதிமன்றம் தனது சொந்த நடைமுறைகளையும் வழங்கலாம்.

(*அறிவிப்பு வழங்கல், கலந்தாய்வு, ஆணைகள் செயலாக்கப்படுதல், ஆணைகள் மீறப்படும்போது கையாளப்பட வேண்டிய நடைமுறைகள் ஆகியவை தொடர்பான விதிகள் ஏற்கனவே அந்தந்த தலைப்பின் கீழ் தரப்பட்டுள்ளன*).

**மேல்முறையீடு/சீராய்வு/ஆணை கோரும் மனு**

பெண் கோருகிற வரையில், பிறப்பிக்கப்பட்ட ஆணை நடைமுறையிலிருக்கும். ஆணையை விலக்கிக்கொள்ளுமாறு பெண் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்து கோரலாம். சூழ்நிலைகள் மாறும் நிலையில் சம்பந்தப்பட்ட தரப்பினர் இருவருமே ஆணையில் சீராய்வு அல்லது திருத்தம் கோரி நீதிமன்றத்தை அணுகலாம். இத்தகைய மனு கட்டாயத்தின் பேரிலோ, மோசடியாகவோ, நிர்ப்பந்தத்தின் அடிப்படையிலோ தாக்கல் செய்யப்படவில்லை என்பதை உறுதிப்படுத்திய பிறகே நீதிமன்றம் இதற்கான ஆணையைப் பிறப்பிக்க வேண்டும் (S25(1)(2), (விதி 14(17)).

நீதித்துறை நடுவரால் பிறப்பிக்கப்பட்ட ஆணையில் எந்தவொரு தரப்புக்கும் ஏற்பு இல்லையெனில் ஆணை பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் மேல்நிலை நீதிமன்றம் ஒன்றை நாடலாம் (S29).

**சட்ட உதவி:**பாதிக்கப்பட்ட எவரொருவரும் வழிகாட்டல் கோரி சட்ட உதவி சேவைகள் குழுவை நாடலாம்.

**கோட்டம்/வட்டம் அளவிலான குழுக் கூட்டங்கள்**

கோட்டம்/வட்டம் அளவிலான குழுக் கூட்டங்களில் மாதம்தோறும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தின் பதிவாளர் பங்கேற்க வேண்டும். சட்டத்தைச் செயல்படுத்துவதில் உள்ள நிறைகுறைகள் குறித்து இந்தக் கூட்டங்களில் விவாதிக்கப்படும். அந்த வட்டாரத்தின் தனித்தன்மை வாய்ந்த மிகுந்த அபாய நிலை சார்ந்த பிரச்சனைகளைக் கையாளும்.

**நீதித்துறை நடுவர் நீதிமன்ற அறிக்கை பின்வரும் முறையில் அமைந்திருக்கும்:**

நீதித்துறை நடுவர் கோட்டம்/வட்டம்: மாவட்டம்:
நீதிமன்றத்தின் பெயர்:
தொலைபேசி எண்: அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி:

| மாதம் | புதிய மனுக்களின் எண்ணிக்கை | இடைக்கால ஆணைகளின் எண்ணிக்கை. தாக்கல் செய்யப்பட்டதிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட நாட்களின் எண்ணிக்கை | பிறப்பிக்கப்பட்ட இறுதி ஆணைகளின் எண்ணிக்கை. தாக்கல் செய்யப்பட்டதிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட நாட்களின் எண்ணிக்கை | மேல்முறையீடு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | மேல்முறையீட்டு முடிவுகள் பெறப்பட்ட எண்ணிக்கை | நிலுவையில் உள்ள மேல்முறையீடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

## கலந்தாய்வாளர்கள்

### பொதுக்குறிப்புகள்

- பாதுகாப்பு அலுவலர் பரிசீலனை, நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்குப் பட்டியல் அனுப்புதல்
- கலந்தாய்வாளர்கள் நியமனம்
- கலந்தாய்வாளர்களாக நியமிக்கப்பட தகுதியற்றவர்கள்
- நீதிமன்றத்தின் கண்காணிப்பில் கலந்தாய்வாளர்கள் செயல்படுதல்
- கலந்தாய்வாளர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்
- கலந்தாய்வாளர்கள் பட்டியல் சீரமைப்பு
- பயிற்சி
- சட்டம் குறித்த விழிப்புணர்வு
- கண்காணிப்புக் குழுக் கூட்டங்கள்

**பாதுகாப்பு அலுவலர் பரிசீலனை, நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்குப் பட்டியல் அனுப்புதல்**

சட்டத்தின் பிரிவு 14(1)ன் கீழ் கலந்தாய்வாளர்களாக, அல்லது பிரிவு 15ன் கீழ் நல வல்லுநர்களாக நியமிக்கப்படுவதற்கு சேவை வழங்குநர் அமைப்புகளிடமிருந்து அவற்றின் உறுப்பினர்கள் குறித்த விவரங்களுடன் கூடிய விண்ணப்பங்களை பாதுகாப்பு அலுவலர் வரவேற்கலாம் (விதி 8 (viii)). இந்த மனுக்களை பாதுகாப்பு அலுவலர் பரிசீலனை செய்து, கிடைக்கக்கூடிய கலந்தாய்வாளர்களின் பட்டியலை நீதித்துறை நடுவருக்கு அனுப்ப வேண்டும் (விதி 8 (ix)).

**கலந்தாய்வாளர்கள் நியமனம்:** பாதுகாப்பு அலுவலர் அனுப்பிய பட்டியலிலிருந்து ஒருவர் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு தகவல் அனுப்பியதன் அடிப்படையில், கலந்தாய்வாளராக நியமிக்கப்பட வேண்டும் (விதி 13(1)). கலந்தாய்வாளர்கள் கூடியவரையில் பெண்களாக இருக்க வேண்டும் (விதி 13(3)).

**கலந்தாய்வாளர்களாக நியமிக்கப்பட தகுதியற்றவர்கள்:** குறிப்பிட்ட பிரச்சனையில் அக்கறையுள்ள அல்லது தொடர்புள்ள அல்லது எந்தவொரு தரப்புக்கும் உறவாக உள்ள அல்லது அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிற எவரோடும் உறவாக உள்ள நபர்கள், சம்பந்தப்பட்ட தரப்பினர் அனைவரும் எழுத்துப்பூர்வமாக தங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்று தெரிவித்தாலன்றி, கலந்தாய்வாளர்களாக நியமிக்கப்பட தகுதியற்றவர்கள் (விதி 13 (2)). எதிர்மனுதாரருக்காக அந்த வழக்கில் அல்லது வேறு வழக்கில் அல்லது அத்துடன் தொடர்புள்ள வேறு நடைமுறைகளில் ஆஜராகியிருக்கக்கூடிய எந்தவொரு வழக்குரைஞரும் கலந்தாய்வாளராக நியமிக்கப்படத் தகுதியற்றவராவார்.

**நீதிமன்றத்தின் கண்காணிப்பில் கலந்தாய்வாளர்கள் செயல்படுதல்:** கலந்தாய்வாளர் நீதிமன்றத்தின் அல்லது பாதுகாப்பு அலுவலரின் அல்லது இருதரப்பின் பொதுவான கண்காணிப்பின் கீழ் செயல்பட வேண்டும் (விதி 14(1)). நீதிமன்ற ஆணைகளில் செயல்படுத்தும் அமைப்பு 'நீதிமன்ற ஆணை செயலாக்கப் பதிவேடு' ஒன்றைப் பராமரித்து வர வேண்டும்.

**கலந்தாய்வாளர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்:** பாதிக்கப்பட்டவருக்கு அல்லது இருதரப்பாருக்கும் வசதியான இடத்தில் கலந்தாய்வாளர் ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்ய வேண்டும்.

எதிர்மனுதாரர் குடும்ப வன்முறையில் ஈடுபடுவதில்லை என உறுதியளித்ததன் பேரில், கடிதம் மூலமாகவோ தொலைபேசி மூலமாகவோ மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது வேறு எந்த ஒரு வழியிலோ சந்திக்க அல்லது தகவல் தொடர்பு கொள்ள முயல்வதில்லை என உறுதியளித்ததன் பேரில் இந்தச் சந்திப்பிற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். கலந்தாய்வுக் கூட்டத்தில் எதிர்மனுதாரர் வன்முறைச் செயலை நியாயப்படுத்த அனுமதிக்கக்கூடாது. பாதிக்கப்பட்டவர் விரும்புவாரானால் அப்பிரச்சனையில் ஒரு உடன்பாட்டிற்கு வர கலந்தாய்வாளர் முயற்சி மேற்கொள்ளலாம். கலந்தாய்வில் பங்கேற்கும் தரப்பினரின் கருத்துகளை பரிசீலித்து, பாதிக்கப்பட்டவரின் குறைகள் குறித்த புரிதலுக்கு பல கலந்தாய்வாளர் முயல வேண்டும். கலந்தாய்வாளர் இந்திய ஆதாரச் சட்டம் 1872 அல்லது உரிமையியல் நடைமுறைச் சட்டம் 1908 அல்லது குற்றவியல் நடைமுறை விதிகள் 1973 ஆகியவற்றின் நடைமுறைகளுக்கு உட்பட்டவரல்ல. கலந்தாய்வாளர் தனது அறிக்கையை உரிய நடவடிக்கைக்காக கூடிய விரைவில் நீதித்துறை நடுவரிடம் தாக்கல் செய்ய வேண்டும். கலந்தாய்வாளர் ஒரு உடன்பாட்டிற்கு வந்திருப்பாரானால் அதுபற்றிய விவரங்களை பதிவு செய்து, சம்பந்தப்பட்ட தரப்பினரின் ஒப்புதலைப் பெற வேண்டும். நீதிமன்றம் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் விசாரணை நடத்திய பின் வன்முறைச் செயல்கள் தொடராது என உறுதிப்படுத்திக்கொண்ட நிலையில் நிபந்தனைகளுடனோ அல்லது நிபந்தனைகள் இல்லாமலோ உடன்பாட்டு அம்சங்களை ஏற்றுக்கொள்ளலாம். அதனடிப்படையில் நீதிமன்றம் சம்பந்தப்பட்ட தரப்பினரின் ஒப்புதலோடு ஆணை பிறப்பிக்கலாம். கலந்தாய்வாளரால் உடன்பாட்டிற்கு வர இயலாத நிலையில் அதுகுறித்து நீதிமன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டும். நீதிமன்றம், இந்தச் சட்டத்தின்படி வழக்கைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.

**கலந்தாய்வாளர்கள் பட்டியல் சீரமைப்பு:** பாதுகாப்பு அலுவலர் கலந்தாய்வாளர்களின் பட்டியலை மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை சீராய்வு செய்யலாம். அதற்காக புதிய விண்ணப்பங்களைப் பெற்று, புதுப்பிக்கப்பட்ட பட்டியலை நீதித்துறை நடுவருக்கு அனுப்ப வேண்டும் (விதி 8(x)).

**பயிற்சி:** அனைத்து கலந்தாய்வாளர்களுக்கும், அவர்களது உதவிப் பணியாளர்களுக்கும், அவர்கள் இந்தச் சட்டத்தின்கீழ் தங்களுடைய கடமைகளை திறனுடன் மேற்கொள்ளச் செய்யும் வகையில், பயிற்சியளிக்கப்படும். பயிற்சி நடைமுறைகள் புனேயில் உள்ள பெண்கள் மற்றும்

குழந்தை மேம்பாட்டு ஆணையருடன் கலந்தாலோசித்து வகுக்கப்பட வேண்டும். நிறுவனம் தனது பணியாளர்கள் எடுத்துக்கொண்ட பயிற்சி தொடர்பாக பதிவு செய்த 'பயிற்சிப் பதிவேடு' ஒன்றை பராமரிக்கும்.

**சட்டம் பற்றிய விழிப்புணர்வு:** கலந்தாய்வாளர்கள் அனைவரும் சமூகத்தில் சட்டம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். விழிப்புணர்வு நடைமுறைகளும் வழிமுறைகளும் புனேயில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தை மேம்பாட்டு ஆணையருடன் கலந்தாலோசித்து வகுக்கப்பட வேண்டும். விழிப்புணர்வுத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுவது குறித்த 'விழிப்புணர்வுப் பதிவேடு' ஒன்றை நிறுவனம் பராமரிக்கும்.

**குழுக் கூட்டங்கள் கண்காணிப்பு:** குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் பயனுள்ள முறையில் செயல்படுத்தப்படுவதைக் கண்காணிப்பதற்காக சம்பந்தப்பட்ட ஒவ்வொரு பிரிவினரும் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வகையில் மூன்றடுக்கு கண்காணிப்பு ஏற்பாடு ஒன்றை அரசு கொண்டுவந்துள்ளது.

- கோட்டக் குழு/ வட்டக் குழு: கோட்டாட்சியர் தலைமையில்
- மாவட்டக் குழு: மாவட்ட ஆட்சியர் தலைமையில்
- மாநிலக் குழு: கூடுதல் தலைமைச் செயலர் (உள்துறை) தலைமையில்

**கோட்டம்/வட்டம் அளவில்:** கோட்டம்/வட்டம் அளவிலான குழுக் கூட்டங்களில் மாதம்தோறும் கலந்தாய்வாளர்கள் பங்கேற்க வேண்டும். சட்டத்தைச் செயல்படுத்துவதில் உள்ள நிறைகுறைகள் குறித்து இந்தக் கூட்டங்களில் விவாதிக்கப்படும். அந்த வட்டாரத்தின் தனித்தன்மை வாய்ந்த மிகுந்த அபாய நிலை சார்ந்த பிரச்சனைகளைக் கையாளும்.

**கலந்தாய்வாளர்கள் அறிக்கை பின்வரும் முறையில் அமைந்திருக்கும்:**

கலந்தாய்வாளர்கள் பெயர்: கோட்டம்/வட்டம்: மாவட்டம்:
தொலைபேசி எண்: அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி:

| மாதம் | மாதத்தின் தொடக்கத்தில் நிலுவையில் உள்ள அறிக்கைகளின் எண்ணிக்கை | நீதிமன்றத்தால் பரிந்துரைக்கப்பட்ட புதிய வழக்குகளின் எண்ணிக்கை | நீதிமன்றத்திற்கு திருப்பி அனுப்பப்பட்ட இறுதி அறிக்கைகளின் எண்ணிக்கை | நிலுவையில் உள்ள அறிக்கைகளின் எண்ணிக்கை | பங்கேற்ற பயிற்சிகளின் எண்ணிக்கை | மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வுத் திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

# குற்றவியல் சட்டத் திருத்த சட்டம் 2013
# (முக்கிய அம்சங்கள்)
## 2013ம் வருடம் ஏப்ரல் மாதம் 2ம் தேதி கொண்டுவரப்பட்ட சட்டத்திருத்தம் பல சரத்துகளை உள்ளடக்கியது.

**அவை:**

1. இந்தியச் தண்டனை சட்டம்
2. குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1973
3. இந்திய சாட்சியச் சட்டம் 1872
4. பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம் 2012

### அமிலவீச்சு:

- முதல் முறையாக அமிலவீச்சு என்பது இந்திய தண்டனைச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது.
- உச்சநீதிமன்றத்தின் ஆணைப்படி விஷம் வைத்திருப்பது மற்றும் விற்பனை செய்வது விதிகள் 2013ன்படி தண்டணைக்குறிய குற்றமாகும்.
- இந்த விஷப் பொருட்களின் பட்டியலில் அமிலமும் இணைக்கப்பட்டுள்ளது. இதற்கான உரிமம் வைத்திருப்பவர்கள் மட்டுமே விற்க முடியும்.
- இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 100ல், ஏழாவது உட்பிரிவாக அமிலவீச்சு என்பது சேர்க்கப்பட்டுள்ளது. அமிலத்தை வீசுவது அல்லது வழங்குவது அல்லது வீசுவதற்கு முயற்சிப்பது அதன்மூலம் கடுமையான காயமோ அல்லது அப்படி நேரிடும் அபாயம் உள்ளதாக கருதப்படும் செயல் ஆகும்.
- பிரிவு 326A வேண்டுமென்றே கடுமையான காயம் ஏற்படுத்துதல் (உடம்பிலுள்ள அங்கங்களில் முழுமையாக அல்லது பகுதி அளவு சேதம், அல்லது உருக்குலைப்பு அல்லது வெந்தப்புண் அல்லது செயலின்மை அல்லது தோற்றச் சிதைவு அல்லது இயலாமை) போன்ற பாதிப்புகள் ஏற்படுத்தப்படுமேயானால் அவருக்கு 10 ஆண்டுகள் ஆயுள் தண்டனையும் மற்றும் அபராதமும் விதிக்கப்படும்.

– அபராதத் தொகை என்பது பாதிக்கப்பட்டவரின் சிகிச்சைக்கு ஆகும் செலவு

– பிரிவு 326A மற்றும் இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக ''அமிலம்'' என்பது மேற்கூறிய ஊனத்தை ஏற்படுத்தும் தன்மை கொண்ட எந்த ஒரு பொருளையும் உள்ளடக்கியதாகும்.

– பிரிவு 326A மற்றும் இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக, நிரந்தர அல்லது தற்காலிக சேதம் அல்லது உருக்குலைவு என்பது மாற்ற முடியாததாக இருக்க வேண்டும் என்று கோரப்படமாட்டாது.

- 326B வேண்டுமென்றே வீசுகிற அல்லது வீச முயற்சிப்பது 5 முதல் 7 வருட தண்டனை மற்றும் அபராதம் கொண்டது.

- பிரிவு **326**A மற்றும் **326**B பிடி அணை இல்லாமல் காவலா் தானே நடவடிக்கை எடுக்கக்கூடிய மற்றும் பிணையில் விட தகாத குற்றம். இது புதிய குற்றங்களான அமிலம் விசுவது, பொதுவிடங்களில் பெண்கணின் அடைகளை களைதல் மற்றும் சீண்டுதல் போன்றவையும் அடங்கும்

## பாலியல் தொந்தரவு, பெண்களின் ஆடைகளை களைதல், சீண்டுதல் மற்றும் பின்தொடர்வது

*முதன் முறையாக பெண்களின் ஆடைகளை களைவது மற்றும் சீண்டுவது போன்றவை குற்றங்களாக வரையறுக்கப்பட்டுள்ளது.*

- பிரிவு 354A இந்திய தண்டனைச் சட்டத்தில் பாலியல் தொந்தரவு என்பது வரையறுக்கப்பட்டுள்ளது.

  (i) உடல் ரீதியான தொடர்பு மற்றும் வெளிப்படையான பாலியல் அத்துமீறல்கள் போன்ற முயற்சிகளில் ஈடுபடுதல்,

  (ii) பாலியல் தேவைக்கு என வற்புறுத்தல் அல்லது வேண்டுதல்

  (iii) பெண்ணின் விருப்பத்துக்கு மாறாக ஆபாச படங்களை காட்டுதல் தண்டனை **3** வருட கடுங்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் வழங்கப்படும்

  (iv) பிரிவு **354**A பிணையில் விடக்கூடிய குற்றம்

- பாலியல் சார்ந்த விமர்சனத்திற்கு, ஒரு வருட தண்டனை அல்லது அபராதம் வழங்கப்படும் அல்லது இரண்டும் சேர்ந்து

- பிரிவு **354**B பெண்ணின் ஆடைகளை களைவது அல்லது அதற்கு தூண்டுவதற்கு **3–7** ஆண்டுகள் தண்டனை மேலும் மற்றும் அபராதம் விதிக்கப்படும் பிடியாணை இல்லாமல் கைது செய்யக்கூடிறய மற்றும் பிணை மறுக்கப்படும் குற்றம்.

### சீண்டுவது மற்றும் பின்தொடர்தல்

1. பிரிவு **354** C சீண்டுவதற்கு ஓராண்டு முதல் மூன்றாண்டு வரை தண்டனை, இரண்டாவது தொடர்ந்து இதே தவறை செய்தால் **3** முதல் **7** வருட தண்டனை மற்றும் அபராதம் (ஒருவரது தனிப்பட்ட உரிமையை மீறுவது குற்றம்)

2. இரண்டாவது முறையாக அல்லது தொடர்ந்து குற்றம் செய்யும்போது பிரிவு **354** ன் கீழ் பிணை மறுக்கப்படும்

3. பிரிவு **354**D பின் தொடர்தலுக்கு **3** வருடம் சிறை மற்றும் அபராதமும், இரண்டாவது முறைக்கு **3–5** வருடம் சிறை மற்றும் அபராதம் விதிக்கப்படும். இரண்டாவது முறையாக அல்லது குற்றம் தொடர்ந்தால் பிரிவு **354** D ன்படி பிணை மறுக்கப்படும்.

4. பெண்கள் மீதான இவ்விரண்டு வன்முறையால் பல பெண்கள் கல்வி தொடரப்படாமல் இடை நிற்றலாகி விடுகிறது.

5. இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலம் சட்டத்திலிருந்த இடைவெளி நிரப்பப்பட்டிருக்கிறது.

## கடத்தப்படுதல்

*கடத்தப்படுவதற்கு விரியான வரையறை கொடுக்கப் பட்டிருக்கிறது. விபச்சாரத்திற்கு என்பதையும் விட மேலாக. இரண்டும் இந்த புதிய சட்டத்திருத்தம் இணைந்தே பார்க்கப்படுகிறது – குழந்தைகள் கடத்துவதற்கு அதிக தண்டணை.*

- பிரிவு 370 (1) கடத்தப்படுதல் குற்றத்தை வரையறுக்கிறது:– எந்த நபரையும் சுரண்டப்படுவது என்ற நோக்கத்திற்காக போக்குவரத்து பணி, துறைமுக பணி மற்றும் மிரட்டி அழைத்து செல்வது, தூண்டுவது, அதிகார துஷ்பிரயோகம் போன்ற அனைத்தும் இதனில் வருகிறது.
- பிரிவு 370 (1) சுரண்டல் என்பது பாலியல் ரீதியான அடிமைத்தனம், உறுப்புகளை அகற்றுவது அதில் பாதிக்கப்பட்டவரின் உடன்பாடு கணக்கில் கொள்ளப்படுவதில்லை
- தண்டனை 7–10 வருடம் சிறை மற்றும் அபராதம் விதிக்கப்படும்
- குழந்தை கடத்தப்படின் 10 வருடம் முதல் ஆயுள் தண்டனை வரை, மற்றும் அபராதம், ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தை எனில் 14 வருட கடுங்காவல் அல்லது ஆயுள் தண்டனை மற்றும் அபராதத்துடன் விதிக்கப்படும்
- இரண்டாவது முறையாக அதே தவறு நடந்தால் ஆயுள் தண்டணையுடன் கூடிய அபராதம் விதிக்கப்படும்
- காவல் துறையினரோ அல்லது அரசு பணியில் இருப்பவர் கடத்தலில் சம்பந்தப்பட்டிருந்தால் ஆயுள் தண்டணை விதிக்கப்படும்
- பரிவு 370A(1) கடத்தப்பட்ட குழந்தையை பாலியல் சுரண்டலில் ஈடுபடுத்தினல் 5–7 வருட சிறை தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும் விதிக்கப்படும்
- பிரிவு 370 (A)2 கடத்தப்பட்ட நபரை பாலியல் சுரண்டலில் ஈடுப்படுத்தினால் 3–5 வருட தண்டணை மற்றும் அபராதம்
- பிரிவு 370 மற்றும் 370 A பிடியாணை இல்லாமல் கைது செய்யக்கூடிய மற்றும் பிணை மறுக்கப்படும் குற்றம்.

## வன்புணர்ச்சி

- வண்புணர்ச்சி என்பது முன்பே போலவே தொடர்ந்து ஒரு ஆண் ஒரு பெண் மீது நிகழ்த்தும் குற்றமாக இருந்தபோதிலும் பலவிதமான பாலியல் குற்றங்களையும் குற்ற விவரங்களை உள்ளடக்கி உள்ளது.
- ஆணின் தண்டுறுப்பு பெண்குறி தொடர்பு என்றில்லாமல் உடலின் எந்த உறுப்பு ஆயினும் பொருள் மற்றும் வாய்வழி உறவையும் வன்புணர்ச்சி என்றே சொல்கிறது.

- பிரிவு 375 மேலும் தெளிவாக சம்மதம் என்றால் வேறெந்த தொடர்புகளின் காரணமின்றி தானாகவே முன்வந்து குறிப்பிட்ட ஒரு பாலியல் வன்புணர்ச்சி செய்வதற்கு உடன்படுதல். எனவே சம்மதம் இன்மை முக்கியமான அம்சமாகும்

- சம்மதம் சொல்வதற்கான வயது தற்போது 18 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. பெண் 18 வயதுக்கு கீழ் இருந்தாலும், அவள் சம்மதம் இருந்தலும் இல்லை என்றாலும் அது வன்புணர்ச்சியாகவே கருதப்படும்.

*ஏனெனில் 18 வயதுக்கு கீழ் உள்ள எவரும் சட்டபூர்வமாக சம்மதம் தர இயலாது. எனவே சம்மதம் தர 18 வயது ஆகி இருக்க வேண்டும்.*

## வன்புணர்ச்சி மற்றும் முந்தைய பாலியல் உறவு பற்றிய வரலாறு

- பிரிவு 375 சம்மதமின்மை எனில் உடற்காயங்கள் இருக்க வேண்டுமெனும் அவசியமில்லை.
- இந்திய சாட்சியச் சட்டத்திருத்தம் பிரிவு 53Aன்படி சம்மதம் என்பதில் முந்தைய பாலுறவு பற்றிய வரலாறு அல்லது பாதிக்கப்பட்ட பெண்ணின் நடத்தை என்பது பற்றி பேசப்படுவது கூடாது.

- இந்திய சாட்சியச் சட்டத்தில் பிரிவு 714 A அரசுத் தரப்பு வாதத்தின் போது வன்புணர்ச்சி வழக்கில் சம்மந்தமின்மை இருந்ததாக வழக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

- இதே சட்டத்தில் பிரிவு 146ன்படி குறுக்கு விசாரணையின் போது பெண்ணின் முந்தைய உடலுறவு பற்றியோ குறுக்கு விசாரணையில் வாதாடக்கூடாது.

## வன்புணர்ச்சிக்கான தண்டனை என்பது

- பிரிவு 376(2)ல் ஆயுதபடையினர், மருத்துவமனை நிர்வாகத்தினர் அல்லது பணியாளர் வகுப்பு வாத வன்முறையின் போது, 16 வயதுக்கு கீழ் உள்ள பெண்களிடம், மாற்று திறனாளி பெண்களிடம், கர்ப்பிணி பெண்களிடம் வண்புணர்ச்சி ஈடுபடுவர்களானால் 7 முதல் 14 வருடம் ஆயுள் தண்டனை விதிக்கப்படும்

- பிரிவு 376 B பிரிந்திருக்கும் போது மனைவியுடன் கணவன் பாலியல் உடலுறவு கொண்டால் அவருக்கு 2 முதல் 7 வருடம் வரை சிறைதண்டணை மற்றும் அபராதம் விதிக்கப்படும்.

- பிரிவு 376 C சிறைச்சாலை, மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காவல் இல்லத்தில் வண்புணர்ச்சி ஈடுப்படுபவர்களுக்கு 5–10 வருட சிறை தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும்.

- 376D கும்பல் வன்புணர்ச்சி எனில் 20 வருடம் முதல் ஆயுள் தண்டனை மற்றும் அபராதம்

- 376 E மீண்டும் மீண்டும் அதே குற்றத்தைச் செய்பவர்களுக்கு ஆயுள் தண்டனை அல்லது மரணம் வரை சிறை தண்டனை விதிக்கப்படும்

## மாற்று திறனாளிகள்

- இந்திய சாட்சியச் சட்டம் 119 பிரிவின் படி சாட்சி வாய்மொழியாக சொல்ல முடியாத பட்சத்தில் அவர்கள் மொழி பெயர்ப்பாளர் அல்லது சிறப்பு பயிற்சியாளர் உதவியோடு அந்த நபர் அளிக்கும் வாக்குமூலத்தை வீடியோ மூலமாக பதிவு செய்து கொடுக்கலாம்.
- குற்றவியல் சட்டம் பிரிவு 154ன் மாற்று திறனாளிகளின் அறிக்கையை அவர்களது இருப்பிடத்திலே அல்லது அவர்கள் தேர்ந்தெடுத்த ஓர் இடத்தில் சிறப்பு பயிற்சியாளர் அல்லது மொழிபெயர்பாளர் மூலமாக வீடியோவில் பதிவு செய்து கொடுக்கலாம்.
- பிரிவு 160ன் படி 65 வயதுக்கு மேற்பட்டோர் அல்லது மாற்று திறனாளியாக (ஆண்/பெண்) இருந்தால் தன் வீட்டிலிருந்தே சாட்சியளிக்கலாம்

## அரசு பொது பணியாளரின் பொறுப்புகள்

- 166A அரசு / பொது பணியாளர் சட்டத்தின் வழிமுறைகளை பின்பற்றாவிட்டால்
- விசாரணை நடைபெறும் இடத்தில் வேண்டு மென்றே சட்டத்தை பின்பற்றாவிட்டால்
- விசாரணை நடைபெறும் இடத்தில் சட்டத்தை மீறி நடந்தால்
- எந்த செய்தியையாவது பதிவு செய்யத் தவறினால் பிரிவு 154 (1) குற்றவியல் நடைமுறை சட்டம், அமிலவீச்சு, பாலியல் தொந்தரவு, பாலியல் தாக்குதலுக்கு 6 மாதம் முதல் இரண்டு வருடம் சிறை வரை தண்டணை மற்றும் அபராதம் விதிக்கப்படும்.
- பிரிவு 166B–பாதிக்கப்பட்ட நபருக்கு மருத்துவ சிகிச்சை கட்டணமின்றி சிகிச்சை தரப்படாவிட்டால் 1 வருடம் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும்.
- குற்றவியல் நடைமுறைச் சட்டம் 197ன் *(விளக்கத்தில்)* – பிரிவு 197 அரசு சட்ட வல்லுநர் மற்றும் அரசு பணியாளர்கள் குற்றம் இழைத்திருந்தால் பிரிவுகள் 166A, 166B, 354, 354A–D, 370, 375, 376A,C,D மற்றும் 509ன் படி அவர்கள் மீது வழக்கு தொடர அனுமதி எதுவும் தேவை இல்லை. இந்திய தண்டனை சட்டம் 354ன் படி 1 முதல் 5 வருடம் சிறை தண்டனை மற்றும் அபராதம் என்பதோடு இக்குற்றத்திற்கு பிணை கிடையாது.
- பிரிவு 509 – 3 வருட சிறை தண்டனை மற்றும் அபராதம்

## குற்றவியல் நடைமுறைச் சட்டம்

- பிரிவு 154ன் கீழ் குற்ற செயல் நடந்ததாக அந்த பெண் தகவல் கொடுத்தால் அந்த தகலானது வேறு எந்த பெண் அலுவலராலும் அல்லது பெண்காவல் அலுவலகரால் பதிவு செய்யப்படும்.
- பிரிவு 161 குற்ற செயல் நிகழ்ந்திருக்கும் போது அந்த பெண்ணின் வாக்குமூலம் வேறு எந்த பெண் அலுவலாரலும் அல்லது ஒரு பெண் காவல் அலுவரால் பதிவு செய்யப்படும்

- பிரிவு 273 சாட்சியங்கள் குற்றமிழைத்தவர் முன்னிலையில் விசாரிக்க வேண்டும் என்பதோடு பாதிக்கப்பட்டவர் 18 வயதிற்கு கீழ் எனில் குற்றமிழைத்தவருடன் எதிர்வாதமிடக் கூடாது.

- பிரிவு 309–1ன் படி பாலியல் குற்ற வகையாகவோ இருக்கின்ற பட்சத்தில் விசாரணை நடந்துமுடிய கெடு என்பது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்த தேதியிலிருந்து 2 மாதங்களுக்குள் முடிக்கப்படவேண்டும்.

## குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் பாதிக்கப்பட்ட நபருக்கான நஷ்ட ஈடு மற்றும் இலவச மருத்துவ உதவி

- பிரிவு 357 B மாநில அரசு நஷ்ட ஈடு வழங்குதல் என்பது அபராதத் தொகையோடு பிரிவு 326 A, 376D, பாதிக்கப்பட்ட நபருக்கான மருத்துவச் செலவை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

பிரிவு 357C அனைத்து மருத்துவமனைகளும் (பொது/அரசு தனியார்) முதலுதவியும் இலவச சிகிச்சையும் பாலியல் தாக்குதலால் பாதிக்கப்பட்டவருக்கு அளிக்க வேண்டும் என்பதோடு காவல்துறைக்கும் தகவல் தெரிவிக்க வேண்டும்.

# சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சகம்

## (சட்டமாக்கல் துறை)

புதுதில்லி, 23 ஏப்ரல் 2013

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்வரும் சட்டம் 2013 ஏப்ரல் 22 அன்று குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றது. பொது மக்களுக்காக வெளியிடப்படுகிறது

# பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம், 2013

(எண்.14/2013)

22 ஏப்ரல், 2013

பணியிடத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தலில் இருந்து பாதுகாப்பதற்கான, தடுப்பதற்கான, பாலியல் துன்புறுத்தல் புகார்கள் மீது தீர்வுகாண்பதற்கான மற்றும் அத்துடன் தொடர்புடைய விஷயங்கள் அல்லது நிகழ்வுகள் தொடர்பான ஒரு சட்டம்.

பாலியல் துன்புறுத்தலானது, இந்திய அரசமைப்பு சாசனத்தின் 14, 15 ஆகிய சட்ட உரைகளின் கீழ் ஒரு பெண்ணுக்கு வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள், சட்ட உரை 21ன் கீழ் பெண்ணுக்கு உள்ள வாழ்க்கை உரிமை மற்றும் மரியாதையோடு வாழும் உரிமை, எந்த ஒரு பணியிலும் ஈடுபடும் உரிமை அல்லது எந்த ஒரு வேலை அல்லது தொழில் அல்லது வர்த்தகத்தையும் மேற்கொள்ளும் உரிமை, பாலியல் துன்புறுத்தல் இல்லாத பாதுகாப்பான சூழல் உரிமை உள்பட, மீறப்படுவதில் முடியும் நிலையில்;

பாலியல் துன்புறுத்தலிலிருந்து பாதுகாப்பும், மரியாதையோடு வேலை செய்வதற்கான உரிமையும் சர்வதேச மாநாடுகளாலும் பெண்களுக்கு எதிரான அனைத்து வகை பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான மாநாட்டுத் தீர்மானம் உள்ளிட்ட உடன்பாடுகளாலும் உலகம் முழுவதும் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகளாகும். இதே இந்திய அரசால் 1993 ஜுன் 25 அன்று ஏற்கப்பட்டது;

பணியிடத்தில் பாலியல் துன்புறுத்தலிலிருந்து பெண்களை பாதுகாப்பதற்கான மேற்படி மாநாட்டுத் தீர்மானத்திற்கு செயல் வடிவம் கொடுப்பதற்காக உரிய விதிகளை உருவாக்குவது பொருத்தமானதாகும்.

இந்திய குடியரசின் 64ம் ஆண்டில் இது நாடாளுமன்றத்தால் பின்வருமாறு நிறைவேற்றப்படுகிறது:

### அத்தியாயம் I

பூர்வாங்கம்

சுருக்கமான தலைப்பு, விரிவு மற்றும் தொடக்கம்

**1.** *(1)* இந்தச் சட்டம் பணியிடத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம், 2013 என்று குறிப்பிடப்படும்.

(2) இது இந்தியா முழுவதும் நீள்கிறது.

(3) அதிகாரப்பூர்வ அரசிதழில் மத்திய அரசு அறிவிக்கை முடிவு செய்யும் தேதியிலிருந்து இது நடைமுறைக்கு வருகிறது.

விளக்கங்கள்

**2.** இந்தச் சட்டத்தில், உள்ளடக்கத்தில் வேறு வகையாக தேவைப்படாத நிலையில்,

(a) ''துன்புற்ற பெண்'' என்பதன் அர்த்தம்

*(i)* ஒரு பணியிடத்தைப் பொறுத்தவரையில் எந்த

வயதானாலும், வேலைக்கு நியமிக்கப்பட்டிருந்தாலும் அல்லது இல்லை என்றாலும் எதிர்மனுதாரரால் எந்த ஒரு பாலியல் துன்புறுத்தல் செயலுக்கும் உள்ளாக்கப்பட்டதாக புகார் அளிக்கும் ஒரு பெண் என்பதாகும் என பொருள்படும்.

*(ii)* ஒரு வசிக்குமிடம் அல்லது வீட்டைப் பொறுத்தவரையில், அத்தகைய ஒரு வசிக்குமிடம் அல்லது வீட்டில் வேலைக்கு நியமிக்கப்படும் எந்த வயதிலும் உள்ள ஒரு பெண் என்பதாகும்;

(b) ''உரிய அரசாங்கம் என்பதன் அர்த்தம் –

*(i)* பின்வரும் அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட முழுமையாக உரிமையாக்கப்பட்ட கட்டுப்படுத்தப்பட்ட அல்லது நேரடியாக அல்லது மறைமுகமாக வழங்கப்பட்ட கணிசமான நிதியுடன் செயல்படுகிற ஒரு பணியிடத்தைப் பொறுத்தவரையில்

(A) மத்திய அரசு அல்லது யூனியன் பிரதேச நிர்வாகமானால் மத்திய அரசாங்கம் என்பதாகும்;

(B) மாநில அரசானால், மாநில அரசாங்கம் என்பதாகும்;

*(ii)* துணைப் பிரிவு *(i)*ன் கீழ் வராத எந்த ஒரு பணியிடத்தையும் பொறுத்தவரையில் மற்றும் தனது எல்லைக்குள் வரும் இடத்தைப் பொறுத்தவரையில், மாநில அரசாங்கம் என்பதாகும்;

(c) ''தலைவர்'' என்பதன் அர்த்தம் பிரிவு 7 துணைப் பிரிவு (l)ன் கீழ் நியமிக்கப்பட்ட வட்டார புகார்கள் குழு தலைவர் என்பதாகும்;

(d) ''மாவட்ட அதிகாரி'' என்பதன் அர்த்தம் பிரிவு **5**ன் கீழ் அறிவிக்கப்பட்ட அதிகாரி என்பதாகும்.

(e)''வீட்டுப் பணியாளர்'' என்பதன் அர்த்தம் எந்த ஒரு வீட்டிலும் வேலை செய்வதற்காக என்று ரொக்கம் அல்லது வேறு வகையிலான சன்மானத்திற்காக, நேரடியாக அல்லது ஏதேனும் முகமையின் மூலமாக, ஒரு தற்காலிக அல்லது நிரந்தர, பகுதி நேர அல்லது முழு நேர அடிப்படையில் நியமிக்கப்படுகிற ஆனால், வேலை தருபவரின் குடும்பத்தில் உறுப்பினர் அல்லாத ஒரு பெண் என்பதாகும்.

(f) "ஊழியர்'' என்பதன் அர்த்தம் ஒரு பணித்தலத்தில் எந்த ஒரு வேலைக்காகவும், தொடர்ச்சியாக, தற்காலிகமாக, இடைக்காலமாக அல்லது தினசரிக் கூலி அடிப்படையில், நேரடியாக அல்லது ஒரு ஒப்பந்ததாரர் உள்ளிட்ட ஒரு முகவர் மூலம், பிரதானமாக வேலையளிப்போருக்குத் தெரிந்து அல்லது தெரியாமல், ஊதியத்திற்காக அல்லது அதற்காக இல்லாமல், தன் விருப்ப அடிப்படையில் அல்லது வேறு வகையில் வேலை முறைகள் வெளிப்படையானதாக அல்லது பொதிந்திருப்பதாக, நியமிக்கப்பட்டுள்ள ஒரு நபர் என்று பொருள்படும்; மற்றும் ஒரு சக தொழிலாளி, ஒரு ஒப்பந்தத் தொழிலாளி, தேர்வு நிலைத் தொழிலாளி, பயிற்சித் தொழிலாளி, பயில்நிலைத் தொழிலாளி அல்லது இதுபோன்ற வேறு பெயரில் வழங்கப்படும் தொழிலாளியும் இதில் உள்ளடங்கும்.

(g). ''வேலையளிப்பவர்'' என்பதன் அர்த்தம் –

(i) எந்த ஒரு துறை, அமைப்பு, தொழிலகம், நிறுவனம், வணிக நிறுவனம், தொழில் நிறுவனம், அலுவலகம், உரிய அரசு அல்லது உள்ளாட்சி நிர்வாக கிளை அல்லது அலகு ஆகியவற்றைப்

பொறுத்தவரையில் துறை, அமைப்பு, தொழிலகம், நிறுவனம், வணிக நிறுவனம், தொழில் நிறுவனம், அலுவலகம், உரிய அரசு அல்லது உள்ளாட்சி நிர்வாக கிளை அல்லது அலகின் தலைவர்; அல்லது உரிய அரசு அல்லது உள்ளாட்சி நிர்வாகத்தால், நிலைமையைப் பொறுத்து, இதுதொடர்பாக ஒரு ஆணையின் மூலம் குறிப்பிடப்படும் வேறு எந்த ஒரு அலுவலரும்;

*(ii)*துணைப்பிரிவு (i)ன் கீழ் வராத எந்த ஒரு பணித்தலத்தைப் பொறுத்தவரையில், அந்த பணித்தலத்தின் நிர்வாகம், கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டிற்குப் பொறுப்பான எந்த ஒரு நபரும்;

*விளக்கம்:* – இந்த துணைப்பிரிவின் நோக்கத்திற்காக ''நிர்வாகம்'' என்பதில் அத்தகைய அமைப்பின் கொள்கைகளை உருவாக்குவதற்கும் நிர்வகிப்பதற்கும் பொறுப்பான நபர் அல்லது நிர்வாகக் குழு (போர்டு) அல்லது குழு உள்ளடங்கும்.

*(iii)* துணைப்பிரிவுகள் (i), (ii) ஆகியவற்றின் கீழ் வரும் பணித்தலத்தைப் பொறுத்தவரையில் தனது ஊழியர்கள் தொடர்பான ஒப்பந்த விதிகளை நிறைவேற்றும் நபர்;

*(iv)* ஒரு குடியிருப்பிடம் அல்லது வீட்டைப் பொறுத்தவரையில், எத்தனை பேர் என்றாலும், எவ்வளவு காலத்திற்கு என்றாலும் அல்லது நியமிக்கப்படும் அத்தகைய தொழிலாளியின் வகை எதுவானாலும் வீட்டுப் பணியாளரை நியமிக்கிற ஒரு நபர் அல்லது ஒரு குடும்பம்;

*(h)* ''உள்ளகக் குழு'' (இன்டர்னல் கமிட்டி) என்பதன் அர்த்தம் பிரிவு **4**ன் கீழ் அமைக்கப்படும் உள்ளக புகார்கள் குழு என்பதாகும்;

*(i)* ''வட்டாரக் குழு'' (லோக்கல் கமிட்டி) என்பதன் அர்த்தம் பிரிவு **6**ன் கீழ் அமைக்கப்படும் வட்டார புகார்கள் குழு என்பதாகும்;

*(j)* ''உறுப்பினர்'' என்பதன் அர்த்தம் நிலைமையைப் பொறுத்து உள்ளகக் குழு அல்லது வட்டாரக் குழுவின் ஒரு உறுப்பினர் என்பதாகும்;

*(k)* ''வகுத்துரைக்கப்பட்ட'' என்பதன் அர்த்தம் இந்தச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின்படி வகுத்தரைக்கப்பட்டது என்பதாகும்;

*(l)* ''தலைமை அலுவலர்'' என்பதன் அர்த்தம் பிரிவு **4**ன் துணைப் பிரிவு **(2)**ன் கீழ் நியமிக்கப்படும் உள்ளக புகார்கள் குழுவின் தலைமை அலுவலர் என்பதாகும்;

*(m)* ''எதிர்மனுதாரர்'' என்பதன் அர்த்தம் பிரிவு **9**ன் கீழ், பாதிக்கப்பட்ட பெண் யார் மீது புகார் செய்கிறாரோ அந்த நபர் என்பதாகும்;

*(n)* ''பாலியல் துன்புறுத்தல்'' என்பதில் (நேரடியாக அல்லது உட்பொருளாக) பின்வரும் விரும்பத்தகாத செயல்கள் அல்லது நடத்தைகளில் ஏதேனும் ஒன்று அல்லது பல உள்ளடங்கும்:–

*(i)* உடல் ரீதியான தொடர்பு மற்றும் முயற்சிகள்; அல்லது

*(ii)* பாலியல் சலுகைக்கான ஒரு கோரிக்கை அல்லது வேண்டுகோள்; அல்லது

*(iii)* பாலியல் அர்த்தமுள்ள கருத்துகளைக் கூறுவது; அல்லது

*(iv)* ஆபாசப் படம் காட்டுவது; அல்லது

*(v)* பாலியல் தன்மை உள்ள விரும்பத்தகாத வேறு எந்த உடல்

ரீதியான, வாய்மொழியான அல்லது வாய்மொழி அல்லாத செயலும்;

*(o)* ''பணியிடம்'' என்பதில்

*(i)* உரிய அரசாங்கம் அல்லது உள்ளாட்சி நிர்வாகம் அல்லது ஒரு அரசுக் குழுமம் அல்லது ஒரு அரசுக்கழகம் ஒரு கூட்டுறவு சங்கத்தால் நேரடியாக அல்லது மறைமுகமாக வழங்கப்படும் நிதியால் முழுமையாக அல்லது கணிசமான நிதியுதவியுடன் நிறுவப்பட்டுள்ள, உரிமையாக்கப்பட்டுள்ள, கட்டுப்படுத்தப்படுகிற எந்த ஒரு துறை, அமைப்பு, தொழிலகம், தொழில் நிறுவனம், வணிக நிறுவனம், அலுவலகம், உரிய அரசு அல்லது உள்ளாட்சி நிர்வாக கிளை அல்லது அலகு உள்ளடங்கும்;

*(ii)* தயாரிப்பு, வழங்கல், விற்பனை, விநியோகம் அல்லது சேவை உள்ளிட்ட வணிக ரீதியான, தொழில் முறை சார்ந்த, தொழில் பயிற்சி சார்ந்த, கல்வி சார்ந்த, பொழுதுபோக்கு சார்ந்த, தொழில் துறை சார்ந்த, சுகாதார சேவைகள் சார்ந்த அல்லது நிதி சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எந்த ஒரு தனியார் துறை அமைப்பு அல்லது ஒரு தனியார் தொழில், தனியார் தொழிலகம், வணிக நிறுவனம், தொழில் நிறுவனம், நிறுவனம், சொசைட்டி அமைப்பு, அறக்கட்டளை, அரசுசாரா அமைப்பு, அலகு, சேவை வழங்குனர் ஆகியவை உள்ளடங்கும்;

*(iii)* மருத்துவமனைகள் அல்லது சிகிச்சை இல்லங்கள் (நர்சிங் ஹோம்);

*(iv)*விளையாட்டுப் பயிற்சி, விளையாட்டு அல்லது அதனுடன் தொடர்புள்ள இதர செயல்களுக்குப் பயன்படுத்தப்படும் எந்த ஒரு விளையாட்டு நிறுவனம், விளையாட்டு அரங்கம், விளையாட்டு வளாகம் அல்லது போட்டி அல்லது விளையாட்டு போட்டி வளாகம்;

*(v)* வேலையின் காரணமாக அல்லது வேலையின்போது ஊழியர் செல்கிற எந்த இடமும் – அவ்வாறு செல்வதற்காக வேலையளிப்பவரால் வழங்கப்படும் போக்குவரத்து உள்பட;

*(vi)* ஒரு குடியிருப்பிடம் அல்லது வீடு;

*(p)* ''முறைசாரா துறை'' என்பதன் அர்த்தம் ஒரு பணியிடத்தைப் பொறுத்தவரையில், தனி நபர்கள் அல்லது சுயதொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு சொந்தமான, பொருள்கள் தயாரிப்பு அல்லது விற்பனையில் ஈடுபடுகிற, அல்லது எவ்வகையான சேவையையும் வழங்குகிற ஒரு தொழிலகம் என்பதாகும்; அந்த தொழிலகம் தொழிலாளர்களை நியமித்திருக்கும் நிலையில், அந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை பத்துக்குக் குறைவாக இருக்குமானால்;

பாலியல் துன்புறுத்தல் தடுப்பு

**3. (1)** எந்த பணித்தலத்திலும் எந்தப் பெண்ணும் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்படக் கூடாது.

**(2)** இதர சூழல்களோடு, பாலியல் துன்புறுத்தல் தொடர்பான ஒரு செயல் அல்லது நடத்தை நிகழ்ந்திருப்பதாக தோன்றுமானால் அல்லது இருக்குமானால் பின்வரும் சூழல்கள் பாலியல் துன்புறுத்தலாக இருக்கக்கூடும்:

(i) அந்தப் பெண்ணின் வேலையில் சலுகையோடு

நடத்தப்படுவார் என்று உட்பொருளாக அல்லது வெளிப்படையாக வாக்குறுதியளித்தல்; அல்லது

(ii) அந்தப் பெண்ணின் வேலையில் பாதகமாக நடத்தப்படுவார் என்று உட்பொருளாக அல்லது வெளிப்படையாக அச்சுறுத்துதல்; அல்லது

(iii) அந்தப் பெண்ணின் தற்போதைய அல்லது எதிர்கால வேலை நிலை பற்றி உட்பொருளாக அல்லது வெளிப்படையாக அச்சுறுத்துதல்;

(iv) அந்தப் பெண்ணின் வேலையில் குறுக்கிடுதல் அல்லது அவருக்கு ஒரு அச்சுறுத்தலான அல்லது சங்கடமான அல்லது பாதகமான வேலைச் சூழலை ஏற்படுத்துதல்; அல்லது

(v) அந்தப் பெண்ணின் உடல் நலம் அல்லது பாதுகாப்பை பாதிக்கக்கூடியதாக அவமதிக்கும் வகையில் நடத்துதல்.

## அத்தியாயம் II

### உள்ளக புகார்கள் குழு அமைத்தல்

உள்ளக புகார்கள் குழு அமைத்தல்

**4.(1)** ஒரு பணித்தலத்தின் வேலையளிப்போர் ஒவ்வொருவரும், எழுத்துப்பூர்வமான ஒரு ஆணையின் மூலம், ''உள்ளக புகார்கள் குழு'' என்ற ஒரு குழுவை அமைக்க வேண்டும்;

அத்தகையதான நிலையில், பணித்தலத்தின் அலுவலகங்கள் அல்லது நிர்வாக அலகுகள் வெவ்வேறு இடங்களில் அல்லது மண்டல அளவில் அல்லது துணை மண்டல அளவில் இருக்குமானால், அனைத்து நிர்வாக அலகுகள் அல்லது அலுவலங்களிலும் உள்ளகக் குழு அமைக்கப்பட வேண்டும்.

**(2)** உள்ளகக் குழுவானது வேலை அளிப்பவரால் நியமிக்கப்படும் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்:

(a) ஒரு தலைமை அலுவலர்; அவர் பணித்தலத்தில் ஊழியர்களிடையே இருந்து ஒரு மூத்த நிலையில் உள்ள பெண்ணாக இருக்க வேண்டும்;

அத்தகையதான நிலையில், ஒரு மூத்த நிலையிலான பெண் ஊழியர் இல்லாதபோது துணைப் பிரிவு **(1)**ல் குறிப்பிடப்பட்டுள்ள பணித்தலத்தின் இதர அலுவலகங்கள் அல்லது நிர்வாக அலகுகளிலிருந்து அந்த தலைமை அலுவலர் நியமிக்கப்பட வேண்டும்;

மேலும் அத்தகையதான நிலையில், பணித்தலத்தின் இதர அலுவலகங்கள் அல்லது நிர்வாக அலகுகளில் ஒரு மூத்த நிலையிலான பெண் ஊழியர் இல்லாதபோது அதே வேலையளிப்பவரின் வேறு பணித்தலத்திலிருந்து அல்லது வேறு துறையிலிருந்து அல்லது அமைப்பிலிருந்து தலைமை அலுவலர் நியமிக்கப்பட வேண்டும்;

(b) ஊழியர்களிடையே இருந்து இரண்டு பேருக்குக் குறையாத உறுப்பினர்கள், கூடிய வரையில் பெண்களின் நலனுக்காக உறுதிப்பாடு கொண்டவர்கள் அல்லது சமூகப் பணியில் அனுபவம் உள்ளவர்கள் அல்லது சட்டப்பூர்வ அறிவு உள்ளவர்கள்,

நியமிக்கப்பட வேண்டும்;

(c) அரசுசாரா அமைப்புகள் அல்லது சங்கங்களிலிருந்து, பெண்களின் நலனுக்காக உறுதிப்பாடு கொண்ட அல்லது பாலியல் துன்புறுத்தல் பிரச்சனைகளை நன்கு அறிந்த ஒருவர் உறுப்பினராக நியமிக்கப்பட வேண்டும்;

அத்தகையதான நிலையில், நியமிக்கப்படும் மொத்த உறுப்பினர்களில் குறைந்தது பாதிப் பேர் பெண்களாக இருக்க வேண்டும்.

**(3)** உள்ளகக் குழுவின் தலைமை அலுவலரும் ஒவ்வொரு உறுப்பினரும், மூன்று ஆண்டுகளுக்கு மிகாமல், நியமன தேதியிலிருந்து, வேலையளிப்பவரால் குறிப்பிடப்படும் காலத்திற்கு பதவியிலிருக்க வேண்டும்.

**(4)** அரசுசாரா அமைப்புகளிலிருந்து அல்லது சங்கங்களிலிருந்து நியமிக்கப்படும் உறுப்பினருக்கு உள்ளகக் குழுவின் நடைமுறைகளை மேற்கொள்வதற்காக வேலையளிப்பவரால், வகுத்துரைக்கப்படும் ஒரு தொகை கட்டணம் அல்லது படித் தொகையாக வழங்கப்பட வேண்டும்.

**(5)** உள்ளகக் குழுவின் தலைமை அலுவலர் அல்லது எந்த ஒரு உறுப்பினரும் –

(a) பிரிவு **16**ன் விதிகளில் முரண்படுவாரானால்; அல்லது

(b) எந்த ஒரு குற்றச் செயலுக்காகவாவது குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டிருந்தால் அல்லது குற்றச் செயல் தொடர்பாக அந்த காலகட்டத்தில் அவருக்கு எதிராக ஏதேனும் ஒரு விசாரணை நிலுவையில் இருக்குமானால்; அல்லது

(c) ஏதேனும் ஒரு ஒழுங்கு நடவடிக்கையில் குற்றம் செய்திருப்பதாக கண்டறியப்பட்டிருக்குமானால் அல்லது அவருக்கு எதிராக ஒரு ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருக்குமானால்; அல்லது

(d) அவர் பதவியில் நீடிப்பது பொது நலனுக்கு பாதகமாக அமையும் என்கிற அளவிற்கு அவர் தனது நிலையை தவறாகப் பயன்படுத்தியிருப்பாரானால்,

அத்தகைய தலைமை அலுவலர் அல்லது உறுப்பினர் நிலைமையைப் பொறுத்து, குழுவிலிருந்து நீக்கப்படுவார் மற்றும் அதனால் ஏற்படுகிற அல்லது சாதாரணமாக ஏற்படுகிற காலி இடம் இந்த பிரிவில் உள்ள விதிகளுக்கு உட்பட்டு புதிதாக நியமிக்கப்படுவதன் மூலம் நிரப்பப்பட வேண்டும்.

## அத்தியாயம் III

### உள்ளூர் புகார்கள் குழு அமைத்தல்

மாவட்ட அதிகாரி அறிவிக்கப்படுதல்

**5.** இந்தச் சட்டத்தின் கீழ் அதிகாரங்களைச் செயல்படுத்த அல்லது பணிகளை நிறைவேற்ற ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட அதிகாரியாக ஒரு மாவட்ட மாஜிஸ்ட்ரேட் அல்லது கூடுதல் மாவட்ட மாஜிஸ்ட்ரேட் அல்லது ஆட்சியர் அல்லது துணை ஆட்சியரை உரிய அரசாங்கம் நியமிக்க வேண்டும்.

உள்ளூர் புகார்கள் குழு அமைத்தலும்

**6. (1)** ஒவ்வொரு மாவட்ட அதிகாரியும் சம்பந்தப்பட்ட மாவட்டத்தில், **10** தொழிலாளர்களுக்குக் குறையாது இருப்பதால் உள்ளக புகார்கள் குழு

அதன் அதிகார வரம்பும்

அமைக்கப்படாத அல்லது வேலையளிப்பவர் மீதே புகார் செய்யப்பட்டிருக்கும் நிலையில், நிறுவனங்களிடமிருந்து பாலியல் துன்புறுத்தல் புகார்களைப் பெறுவதற்காக ''உள்ளூர் புகார்கள் குழு'' எனப்படும் ஒரு குழுவை அமைக்க வேண்டும்.

**(2)** ஒவ்வொரு வட்டம், கோட்டம் மற்றும் ஊரகப் பகுதி அல்லது பழங்குடியினர் பகுதியின் மண்டலம் மற்றும் நகரப் பகுதியில் வார்டு அல்லது நகராட்சியில் புகார்களைப் பெறுவதற்காகவும் அதனை சம்பந்தப்பட்ட உள்ளக புகார்கள் குழுவிற்கு 7 நாட்களுக்குள் அனுப்புவதற்காகவும் ஒரு உயர்நிலை அலுவலருக்கு மாவட்ட அதிகாரி பொறுப்பளிக்க வேண்டும்.

**(3)** உள்ளூர் புகார்கள் குழுவின் அதிகார வரம்பு அது அமைக்கப்பட்ட மாவட்டத்தின் பகுதிகளுக்கு விரிவடையும்.

உள்ளூர் புகார்கள் குழுவின் சேர்மானம், பதவிக்காலம் மற்றும் இதர நிலைகள் மற்றும் நிபந்தனைகள்

**7. (1)** உள்ளூர் புகார்கள் குழுவில் மாவட்ட அதிகாரியால் நியமிக்கப்படும் பின்வரும் உறுப்பினர்கள் இருப்பார்கள்:

(a) சமூகப் பணியில் ஈடுபட்டுள்ள, பெண்களின் நலனில் உறுதிப்பாடு கொண்டுள்ள முன்னணிப் பெண்களிடையே இருந்து ஒரு தலைவர்;

(b) மாவட்டத்தில் வட்டம், கோட்டம் அல்லது மண்டலம் அல்லது வார்டு அல்லது நகராட்சியில் பணிபுரியும் பெண்களிடையே இருந்து ஒரு உறுப்பினர்;

(c) இரண்டு உறுப்பினர்கள்; அவர்களில் குறைந்தது ஒருவர் பெண்களின் நலனில் உறுதிப்பாடுகொண்டுள்ள அரசுசாரா அமைப்புகள் அல்லது சங்கங்களிலிருந்து நியமிக்கப்படுபவராக, அல்லது பாலியல் துன்புறுத்தல் பிரச்சனைகளை நன்கு தெரிந்து வைத்திருக்கிற ஒருவராக இருக்க வேண்டும்; அது வகுத்துரைக்கப்படலாம்;

அத்தகையதான நிலையில், நியமிக்கப்படுபவரில் குறைந்தது ஒருவர், சட்டப் பின்னணி உள்ளவராக அல்லது சட்ட அறிவு உள்ளவராக இருப்பது விரும்பத்தக்கது;

மேலும் அத்தகையதான நிலையில், நியமிக்கப்படுவோரில் குறைந்தது ஒருவர் மத்திய அரசால் அவ்வப்போது அறிவிக்கப்படும் பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடிகள் அல்லது இதர பிற்பட்ட வகுப்புகள் அல்லது சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணாக இருக்க வேண்டும்;

(d) மாவட்டத்தில் சமூக நலன் அல்லது பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு ஆகியவற்றை கையாளும் சம்பந்தப்பட்ட அலுவலர் குழுவின் பதவி சார் உறுப்பினராக இருப்பார்.

**(2)** வட்டாரக் குழுவின் தலைவரும் ஒவ்வொரு உறுப்பினரும் நியமிக்கப்படும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு மிகாத காலத்திற்கு, மாவட்ட அதிகாரியால் குறிப்பிடப்படும் காலத்திற்கு பதவியில் இருப்பார்கள்.

**(3)** வட்டாரக் குழுவின் தலைவர் அல்லது எந்த ஒரு உறுப்பினரும் –

(a) பிரிவு **16**ன் விதிகளில் முரண்படுவாரானால்; அல்லது

(b) எந்த ஒரு குற்றச் செயலுக்காகவாவது குற்றவாளி என

தீர்ப்பளிக்கப்பட்டிருந்தால் அல்லது குற்றச் செயல் தொடர்பாக அந்த காலகட்டத்தில் அவருக்கு எதிராக ஏதேனும் ஒரு விசாரணை நிலுவையில் இருக்குமானால்; அல்லது

(c) ஏதேனும் ஒரு ஒழுங்கு நடவடிக்கையில் குற்றம் செய்திருப்பதாக கண்டறியப்பட்டிருக்குமானால் அல்லது அவருக்கு எதிராக ஒரு ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருக்குமானால்; அல்லது

(d) அவர் பதவியில் நீடிப்பது பொது நலனுக்கு பாதகமாக அமையும் என்கிற அளவிற்கு அவர் தனது நிலையை தவறாகப் பயன்படுத்தியிருப்பாரானால்,

அத்தகைய தலைவர் அல்லது உறுப்பினர் நிலைமையைப் பொறுத்து, குழுவிலிருந்து நீக்கப்படுவார் மற்றும் அதனால் ஏற்படுகிற அல்லது

சாதாரணமாக ஏற்படுகிற காலி இடம் இந்தப் பிரிவில் உள்ள விதிகளுக்கு உட்பட்டு புதிதாக நியமிக்கப்படுவதன் மூலம் நிரப்பப்பட வேண்டும்.

**(4)** துணைப்பிரிவு **(1)**ன் (b), (d) ஆகிய விதிகளின் கீழ் நியமிக்கப்படும் உறுப்பினர்கள் அல்லாத, வட்டாரக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் வட்டாரக் குழுவின் நடைமுறைகளை மேற்கொள்வதற்காக, வகுத்துறைக்கப்படும் வகையில், கட்டணம் மற்றும் படித் தொகைகள் பெறுவதற்கு உரிமை உள்ளவர்கள் ஆவர்.

நிதி ஒதுக்கீடுகள் மற்றும் தணிக்கை

**8.(1)** பிரிவு 7 துணைப்பிரிவு **(4)**ல் குறிப்பிடப்படும் கட்டணங்கள் மற்றும் படித்தொகைகளை வழங்குவத்றகுப் பயன்படுத்துவதற்காக, மத்திய அரசு பொறுத்தமானது எனக் கருதுகிற பணத்தொகையை மாநில அரசின் நிதிகளுக்கு, இது தொடர்பான சட்டத்தின்படி நாடாளுமன்றத்தில் முறைப்படி அங்கீகரிக்கப்பட்ட பிறகு மத்திய அரசு ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

**(2)** மாநில அரசு ஒரு முகமை அமைப்பை ஏற்படுத்திக்கொண்டு துணைப்பிரிவு **(1)**ன் கீழ் ஒதுக்கப்படும் நிதியை அந்த முகமைக்கு மாற்றித் தர வேண்டும்.

**(3)** பிரிவு 7 துணைப்பிரிவு **(4)**ல் குறிப்பிடப்படும் கட்டணங்கள் மற்றும் படித்தொகைகளை வழங்குவதற்குத் தேவைப்படும் நிதியை மாவட்ட அதிகாரிக்கு அந்த முகமை வழங்கும்.

**(4)** துணைப்பிரிவு **(2)**ல் குறிப்பிடப்படும் முகமையின் கணக்குகள் மாநிலத்தின் தலைமைக் கணக்காளருடன் கலந்தாலோசிக்கப்பட்டு வகுத்துரைக்கப்படும் முறையில் பராமரிக்கப்பட வேண்டும், தணிக்கைக்கு உட்படுத்தப்பட வேண்டும்; முகமையின் கணக்குகளைப் பராமரிப்பதற்குப் பொறுப்பான நபர் வகுத்துரைக்கப்படும் தேதிக்கு முன்னர் மாநில அரசுக்கு, முகமையின் தணிக்கை செய்யப்பட்ட கணக்கு நகலை தணிக்கையாளரின் அறிக்கையுடன் இணைத்து தாக்கல் செய்ய வேண்டும்.

## அத்தியாயம் IV
## புகார்

பாலியல் துன்புறுத்தல் புகார்

**9. (1)** பாதிக்கப்படுகிற எந்த ஒரு பெண்ணும் பணித்தலத்தில் பாலியல் துன்புறுத்தல் தொடர்பான ஒரு புகாரை, உள்ளகக் குழு அமைக்கப்பட்டிருக்குமானால் அதனிடம் அல்லது அது அமைக்கப்படவில்லை என்றால் வட்டாரக் குழுவிடம், சம்பவம் நடந்த தேதியிலிருந்து மூன்று மாத காலத்திற்குள், தொடர்ச்சியான நிகழ்ச்சியாக இருக்கும் நிலையில் கடைசிச் சம்பவம் நடந்த தேதியிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் எழுத்துப்பூர்வமாக ஒரு புகாரை அளிக்கலாம்.

அத்தகையதான நிலையில், அவ்வாறு எழுத்துப்பூர்வமாக புகார் தர இயலாத நிலையில், உள்ளகக் குழுவின் தலைமை அலுவலர் அல்லது எந்த ஒரு உறுப்பினரும் அல்லது வட்டாரக் குழுவின் தலைவர் அல்லது எந்த ஒரு உறுப்பினரும், நிலைமையைப் பொறுத்து எழுத்துப்பூர்வமாக புகார் செய்வதற்கு அந்தப் பெண்ணிற்கு நியாயமான அனைத்து உதவிகளையும் வழங்க வேண்டும்.

மேலும் அத்தகையதான நிலையில், உள்ளகக் குழு அல்லது நிலைமையைப் பொறுத்து வட்டாரக் குழு, குறிப்பிட்ட காலத்திற்குள் சம்பந்தப்பட்ட பெண் புகார் செய்ய இயலாமல் தடுப்பதாக சூழல்கள் இருந்தன என்று ஏற்குமானால் எழுத்துப்பூர்வமாக பதிவு செய்யப்படும் காரணங்களுக்காக மூன்று மாதங்களுக்கு மிகாமல் காலவரம்பை நீட்டிக்கலாம்.

**(2)** பாதிக்கப்பட்ட பெண் தனது உடல்நிலை அல்லது மனநிலை அல்லது மரணம் அல்லது வேறு காரணங்களால் புகார் செய்ய இயலவில்லை என்றால், அவரது சட்டப்பூர்வ வாரிசு அல்லது வகுத்துரைக்கப்படும் வேறு நபர் இந்தப் பிரிவின்கீழ் புகார் செய்யலாம்.

சமரசம்

**10. (1)** உள்ளகக் குழு அல்லது நிலைமையைப் பொறுத்து வட்டாரக் குழு, பிரிவு **11**ன் கீழ் ஒரு விசாரணையைத் தொடங்குவதற்கு முன்பாக, மற்றும் பாதிக்கப்பட்ட பெண்ணின் வேண்டுகோளுக்கு இணங்க, அவருக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையே சமரச ஏற்பாட்டின் மூலம் பிரச்சனையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கலாம். அத்தகையதான நிலையில், சமரசத்திற்கான அடிப்படையாக பணம் சார்ந்த உடன்பாடு எதுவும் செய்யப்படக்கூடாது.

**(2)** துணைப்பிரிவு **1**ன் கீழ் ஒரு உடன்பாடு ஏற்படுமானால், உள்ளகக் குழு அல்லது நிலைமையைப் பொறுத்து உள்ளூர், அவ்வாறு ஏற்பட்ட உடன்பாட்டை பதிவு செய்ய வேண்டும்; அதனை வேலையளிப்பவர் அல்லது மாவட்ட அதிகாரிக்கு பரிந்துரையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி நடவடிக்கை எடுப்பதற்காக அனுப்பி வைக்க வேண்டும்.

**(3)** துணைப்பிரிவு **(2)**ன் கீழ் ஏற்படும் உடன்பாட்டின் நகல்களை உள்ளகக் குழு அல்லது நிலைமையைப் பொறுத்து வட்டாரக் குழு பாதிக்கப்பட்ட பெண்ணுக்கும் எதிர்மனுதாரருக்கும் வழங்க வேண்டும்.

புகார்மீதான விசாரணை

**11. (1)** எதிர்மனுதாரர் ஒரு ஊழியராக இருப்பாரானால், பிரிவு **10**ன் விதிகளுக்கு உட்பட்டு, உள்ளகக் குழு அல்லது நிலைமையைப் பொறுத்து வட்டாரக் குழு எதிர்மனுதாரருக்குப் பொருந்தக் கூடிய பணி

விதிகளுக்கு உட்பட்ட வகையில் அத்தகைய விதிகள் இல்லை என்றால் வகுத்துரைக்கப்படக்கூடிய முறையில் அல்லது வீட்டுப் பணியாளர் என்றால், வட்டாரக் குழுவானது வழக்குக்கு பூர்வாங்க அடிப்படை
45/1860 இருக்குமானால், புகாரை காவல்துறைக்கு, இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு **509**ன் கீழ் மற்றும் அந்த சட்டத்தின் வேறு எந்த பொருத்தமான விதியின் கீழ் வழக்குப் பதிவு செய்ய அனுப்ப வேண்டும்.

அத்தகையதான நிலையில், பிரிவு **10** துணைப்பிரிவு **(2)**ன் கீழ் ஏற்பட்ட உடன்பாட்டின் வரம்புகள் அல்லது நிபந்தனைகளின்படி எதிர்மனுதாரர் செயல்படவில்லை என்று பாதிக்கப்பட்ட பெண் உள்ளகக் குழு அல்லது நிலைமையைப் பொறுத்து வட்டாரக் குழுவிடம் தெரிவிப்பாரானால், உள்ளகக் குழு அல்லது வட்டாரக் குழு புகார் குறித்து ஒரு விசாரணையை மேற்கொள்ளும் அல்லது நிலைமையைப் பொறுத்து புகாரை காவல்துறைக்கு அனுப்பும்.

மேலும் அத்தகையதான நிலையில், சம்பந்தப்பட்ட இரு தரப்பினருமே ஊழியர்களாக இருப்பார்களானால், விசாரணையின்போது இரு தரப்பினருக்கும் அவர்களது தரப்பைக் கேட்பதற்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். கண்டறியப்பட்டவைகளின் நகல் இருதரப்பினருக்கும் கிடைக்கச் செய்யப்பட வேண்டும். அதன் மூலம் அவர்கள், கண்டறியப்பட்டவைகள் மீது குழுவின் முன் எடுத்துரைப்பதற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.

45/1860 **(2)** இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு **509**ல் எவ்வாறு கூறப்பட்டிருந்தாலும், எதிர்மனுதாரர் குற்றச் செயலுக்காக குற்றவாளி என தீர்ப்பளிக்கப்படுகிறபோது, பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு எதிர்மனுதாரர், பிரிவு **15**ன் விதிகளுக்கு உட்பட்ட வகையில், நீதிமன்றம் பொருத்தமானது என்று கருதும் தொகையை வழங்குவதற்கு
5/1908 ஆணையிடலாம்.

**(3)** ஒரு புகார்மீது பின்வரும் விஷயங்கள் தொடர்பாக விசாரணை நடத்திடும்போது, துணைப்பிரிவு **(1)**ன் கீழ் ஒரு விசாரணையை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக உள்ளகக் குழு அல்லது நிலைமையைப் பொறுத்து வட்டாரக் குழு, உரிமையியல் நடைமுறைச் சட்டம், **1908**ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதே அதிகாரங்களைப் பெற்றிருக்கும்:

(a) எந்த ஒரு நபருக்கும் அழைப்பாணை அனுப்புதல் அந்த நபர் நேரில் வருவதற்குக் கட்டாயப்படுத்துதல்; உறுதிமொழி ஏற்பின் அடிப்படையில் அந்த நபரிடம் விசாரணை நடத்துதல்;

(b) ஆவணங்களை கண்டறியவும் தாக்கல் செய்யவும் கோருதல்; மற்றும்

(c) வகுத்துரைக்கப்படும் வேறு எந்த விஷயமும்.

**(4)** துணைப்பிரிவு **1**ன் கீழ் விசாரணை **90** நாட்களுக்குள் முடிக்கப்பட வேண்டும்.

## அத்தியாயம் V

புகார் மீதான விசாரணை

விசாரணை நிலுவையில் உள்ளபோது நடவடிக்கை

**12. (1)** ஒரு விசாரணை நிலுவையில் உள்ளபோது, பாதிக்கப்பட்ட பெண் எழுத்துப்பூர்வமாக கோரிக்கை விடுவதன் அடிப்படையில், வேலை அளிப்பவர் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளகக் குழு அல்லது நிலைமையைப் பொறுத்து வட்டாரக் குழு பரிந்துரை செய்யலாம்:

(a) பாதிக்கப்பட்ட பெண் அல்லது எதிர்மனுதாரரை வேறு பணித்தலத்திற்கு இடமாறுதல் செய்தல்; அல்லது

(b) பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு மூன்று மாதகாலம் வரை விடுப்பு அளித்தல்; அல்லது

(c) பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு வகுத்துரைக்கப்படக் கூடிய வேறு நிவாரணங்களை அளித்தல்.

**(2)** இந்தப் பிரிவின் கீழ் வழங்கப்படும் விடுப்பானது அவருக்கு பொதுவாக உரிமையுள்ள மற்ற விடுப்புகளுடன் கூடுதலானதாகும்.

**(3)** உள்ளகக் குழு அல்லது நிலைமையைப் பொறுத்து வட்டாரக் குழுவின் பரிந்துரை அடிப்படையில், துணைப்பிரிவு **(1)**ன் கீழ், வேலையளிப்பவர் துணைப்பிரிவு **1**ன் கீழ் அளிக்கப்படும் பரிந்துரைகளை செயல்படுத்த வேண்டும்; அவ்வாறு செயல்படுத்தப்படுவது குறித்த அறிக்கையை உள்ளகக் குழு அல்லது நிலைமையைப் பொறுத்து வட்டாரக் குழுவுக்கு அனுப்ப வேண்டும்.

விசாரணை அறிக்கை

**13.(1)** இந்த சட்டத்தின் கீழ் ஒரு விசாரணை முடிவடையும்போது உள்ளகக் குழு நிலைமையைப் பொறுத்து வட்டாரக் குழு, தனது விசாரணை அறிக்கையை, வேலையளிப்பவருக்கு அல்லது நிலைமையைப் பொறுத்து மாவட்ட அதிகாரிக்கு விசாரணை முடிந்த தேதியிலிருந்து **10** நாட்களுக்குள் வழங்க வேண்டும்; அத்தகைய அறிக்கை சம்பந்தப்பட்ட தரப்புகளுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும்.

**(2)** எதிர்மனுதாரர் மீதான புகார் நிரூபிக்கப்படவில்லை என்ற முடிவுக்கு உள்ளகக் குழு அல்லது வட்டாரக் குழு வருமானால், இந்த விஷயத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கத் தேவையில்லை என்று அது வேலையளிப்பவருக்கும் மாவட்ட அதிகாரிக்கும் பரிந்துரைக்கலாம்.

**(3)** எதிர்மனுதாரர் மீதான புகார் நிரூபிக்கப்பட்டிருக்கிறது என்ற முடிவுக்கு உள்ளகக் குழு அல்லது நிலைமையைப் பொறுத்து வட்டாரக் குழு வருமானால், வேலையளிப்பவர் அல்லது நிலைமையைப் பொறுத்து மாவட்ட அதிகாரிக்கு பின்வருமாறு அது பரிந்துரை செய்யலாம்:

*(i)* பாலியல் துன்புறுத்தல் ஒரு தவறான நடத்தை என்ற முறையில் எதிர்மனுதாரருக்கு பொருந்துகிற பணி விதிகளின் கீழ் அல்லது அத்தகைய பணி விதிகள் இல்லாத நிலையில் வகுத்துரைக்கப்படக்கூடிய முறையில் நடவடிக்கை எடுத்தல்;

*(ii)* எதிர்மனுதாரரின் பணி விதிகளில் எப்படி இருந்தாலும் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு அல்லது அவரது சட்டப்பூர்வ வாரிசுகளுக்கு வழங்கப் பொருத்தமானது என்று, பிரிவு **15**ன் விதிகளுக்கு உட்பட்டு அது தீர்மானிக்கும் வகையிலான தொகையை எதிர்மனுதாரரின் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்தல்;

அத்தகையதான நிலையில், எதிர்மனுதாரர் வேலைக்கு வராத

நிலையில் அல்லது வேலையிலிருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்ட நிலையில், அவரது ஊதியத்திலிருந்து வேலை அளிப்பவரால் பிடித்தம் செய்ய இயலாதபோது, எதிர்மனுதாரர் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு அந்தத் தொகையை வழங்க அது ஆணையிடலாம்.

மேலும் அத்தகையதான நிலையில், விதி *(ii)*ல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை எதிர்மனுதாரர் வழங்கத் தவறுவாரானால், உள்ளகக் குழு அல்லது நிலைமையைப் பொறுத்து வட்டாரக் குழு அந்தத் தொகையை நில வருவாய் நிலுவைத் தொகையாக வசூலிப்பதற்கான ஆணையை சம்பந்தப்பட்ட மாவட்ட அதிகாரிக்கு அனுப்பலாம்.

**(4)** வேலையளிப்பவர் அல்லது மாவட்ட அதிகாரி பரிந்துரைகள் கிடைத்த **60** நாட்களுக்குள் செயல்பட வேண்டும்.

தவறான அல்லது தீய நோக்கமுள்ள புகாருக்கு மற்றும் தவறான ஆதாரத்திற்கு தண்டனை

**14. (1)** எதிர்மனுதாரர் மீதான புகார் தீய நோக்கத்துடன் செய்யப்பட்டுள்ளது என்றோ அல்லது பாதிக்கப்பட்ட பெண்ணோ புகார் செய்யும் வேறு நபரோ அந்தப் புகார் தவறானது என்று தெரிந்தே புகார் செய்திருக்கிறார்கள் என்றோ அல்லது பாதிக்கப்பட்ட பெண்ணோ புகார் செய்யும் வேறு நபரோ ஏதேனும் மோசடியாக அல்லது தவறான ஆவணத்தை தாக்கல் செய்திருப்பதாகவோ உள்ளகக் குழு அல்லது நிலைமையைப் பொறுத்து வட்டாரக் குழு முடிவுக்கு வருமானால், வேலை அளிப்பவர் அல்லது நிலைமையைப் பொறுத்து மாவட்ட அதிகாரிக்கு, பாதிக்கப்பட்ட பெண் மீது அல்லது புகார் செய்த நபர் மீது பிரிவு **9** துணைப் பிரிவு **(1)** அல்லது நிலைமையைப் பொறுத்து துணைப்பிரிவு **(2)**ன் கீழ், அந்தப் பெண் அல்லது அந்த நபருக்குப் பொருந்துகிற பணி விதிகளின்படி அல்லது அத்தகைய பணி விதிகள் இல்லாத நிலையில், வகுத்துரைக்கப்படக் கூடிய முறையில் பரிந்துரைக்கலாம்;

அத்தகையதான நிலையில், புகாரை உறுதிப்படுத்தும் ஆதாரம் தர இயலவில்லை என்பதற்காகவே, அல்லது போதுமான அளவுக்கு நிரூபிக்க இயலவில்லை என்பதற்காகவே இந்தப் பிரிவின் கீழ் புகார்தாரர் மீது நடவடிக்கை எடுக்கப்படத் தேவையில்லை.

மேலும் அத்தகையதான நிலையில், வகுத்துரைக்கப்பட்டுள்ள நடைமுறையின்படி ஒரு விசாரணை முடிவடைந்த பிறகு, புகார்தாரருக்கு தீய நோக்கம் இருந்தது என்பது, எந்த ஒரு நடவடிக்கையும் பரிந்துரைக்கப்படுவதற்கு முன்பாக, நிரூபிக்கப்பட வேண்டும்.

**(2)** விசாரணையின்போது எந்த ஒரு சாட்சியாவது தவறான ஆதாரம் அளித்திருப்பதாக அல்லது ஏதேனும் மோசடியான அல்லது தவறாக இட்டுச் செல்லக் கூடிய ஆவணத்தை தாக்கல் செய்ததாக உள்ளகக் குழு அல்லது நிலைமையைப் பொறுத்து வட்டாரக் குழு முடிவுக்கு வருமானால், சாட்சிக்கு வேலை அளித்தவர் அல்லது நிலைமையைப் பொறுத்து மாவட்ட அதிகாரிக்கு, மேற்படி சாட்சியின் பணி விதிகளுக்கு உட்பட்ட வகையில் அல்லது அத்தகைய பணி விதிகள் இல்லாத நிலையில் வகுத்துரைக்கப்படக் கூடிய வகையில் நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரை செய்யலாம்.

இழப்பீடு தீர்மானித்தல்

**15.** பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு பிரிவு **13** விதி துணைப்பிரிவு **(3)** விதி (ii)ன் கீழ் வழங்கப்பட வேண்டிய தொகையைத் தீர்மானிப்பதற்காக உள்ளகக் குழு அல்லது வட்டாரக் குழு பின்வரும் அம்சங்களை

கருத்தில் கொள்ளும்:

(a) பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ஏற்பட்ட மன உளைச்சல், வலி, துயரம் மற்றும் உணர்வு சார்ந்த துன்பம்;

(b) பாலியல் துன்புறுத்தல் சம்பவத்தின் காரணமாக ஏற்பட்ட வேலை இழப்பு;

(c)உடல் சார்ந்த அல்லது உளவியல் சிகிச்சைக்காக பாதிக்கப்பட்டவருக்கு ஏற்பட்ட மருத்துவ செலவு;

(d) வருமானம் மற்றும் நிதி நிலை;

(e) அத்தகையத் தொகையை மொத்தமாக செலுத்த முடியுமா அல்லது தவணையில் வழங்க முடியுமா என்பது.

புகாரின் விஷயங்கள் மற்றும் விசாரணை நடைமுறைகளை வெளியிடுவதற்கு அல்லது தெரியச் செய்வதற்கு தடை

22/2005

**16.** தகவல் உரிமைச் சட்டம், **2005**ல் எப்படி கூறப்பட்டிருந்தாலும், பிரிவு **9**ன் கீழ் செய்யப்பட்ட புகாரில் உள்ள விஷயங்கள், பாதிக்கப்பட்ட பெண், எதிர்மனுதாரர் மற்றும் சாட்சியின் அடையாளம் மற்றும் முகவரிகள், சமரசம் மற்றும் விசாரணை நடைமுறைகள் தொடர்பான எந்த ஒரு தகவல், உள்ளகக் குழு அல்லது நிலைமையைப் பொறுத்து வட்டாரக் குழுவின் பரிந்துரைகள், வேலையளிப்பவர் அல்லது மாவட்ட அதிகாரியால் இந்தச் சட்ட விதிகளின் கீழ் எடுக்கப்படும் நடவடிக்கை ஆகியவை பொது மக்களுக்கு, பத்திரிகைகளுக்கு மற்றும் ஊடகங்களுக்கு எவ்விதத்திலும் வெளியிடப்படவோ, தெரிவிக்கப்படவோ அல்லது தெரியச் செய்யப்படவோ கூடாது.

அத்தகையதான நிலையில், பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளான எந்த பெண்ணுக்கும் இந்த சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நீதி தொடர்பான செய்தி அவரது பெயர், முகவரி, அடையாளம் அல்லது பாதிக்கப்பட்ட பெண் மற்றும் சாட்சியின் அடையாளம் காண இட்டுச் செல்லக் கூடிய வேறு தகவல்கள் இல்லாமல் தெரிவிக்கப்படலாம்.

புகாரின் விவரங்கள் மற்றும் விசாரணை நடைமுறைகளை வெளியிடுதல் அல்லது தெரியச் செய்வதற்கான தண்டனை

**17.** புகார், விசாரணை அல்லது எந்த ஒரு பரிந்துரை அல்லது இந்தச் சட்ட விதிகளின் கீழ் எடுக்கப்படும் நடவடிக்கையை கையாள்வதற்கு அல்லது மேற்கொள்வதற்கு கடமைப் பொறுப்பு அளிக்கப்பட்ட எந்த ஒரு நபரும் பிரிவு **16** விதிகளுக்கு மாறாக செயல்படுவாரானால், மேற்படி நபரின் பணி விதிகளுக்கு உட்பட்ட வகையில், அல்லது அத்தகைய பணி விதிகள் இல்லை என்றால் வகுத்துரைக்கப்படக் கூடிய முறையில் அவர் தண்டனைக்கு உரியவராவார்.

மேல்முறையீடு

**18. (1)** பிரிவு **13** துணைப்பிரிவு **(2)** அல்லது பிரிவு **13** துணைப்பிரிவு **(3)** விதி *(i)* அல்லது விதி *(ii)*ன் கீழ் அல்லது பிரிவு **14** துணைப்பிரிவு **(1)** அல்லது துணைப்பிரிவு **(2)** அல்லது பிரிவு **17**ன் கீழ் செய்யப்படும் பரிந்துரைகளால் அல்லது அந்தப் பரிந்துரைகள் அமலாக்கப்படாததால் பாதிக்கப்படுகிற எந்த ஒரு நபரும், மேற்படி நபரின் பணி விதிகளுக்கு உட்பட்ட வகையில் அல்லது அத்தகைய விதிகள் இல்லாத நிலையில் அந்தக் காலகட்டத்தில் நடைமுறையில் உள்ள வேறு எந்த சட்டத்தின் விதிகளுடனும் முரண்படாத வகையில், பாதிக்கப்பட்ட நபர் வகுத்துரைக்கப்படும் முறையில் மேல்முறையீடு செய்யலாம்.

**(2)** துணைப்பிரிவு **(1)**ன் கீழ் மேல்முறையீடு பரிந்துரை செய்யப்பட்ட **90** நாட்களுக்குள் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

## அத்தியாயம் VI

வேலை அளிப்பவரின் கடமைகள்

வேலையளிப்பவரின் கடமைகள்

**19.** ஒவ்வொரு வேலை அளிப்பவர் ஒவ்வொருவரும் பின்வரும் கடமைகளை நிறைவேற்ற வேண்டும்:

(a) பணித்தலத்துடன் தொடர்பு கொள்ளும் நபர்களிடமிருந்து பாதுகாப்பு அளிப்பதையும் உள்ளடக்கியதாக, பணித்தலத்தில் ஒரு பாதுகாப்பான பணிச் சூழலை ஏற்படுத்துதல்;

(b) பணித்தலத்தில் ஒரு பொதுவான வெளிப்படையான இடத்தில், பாலியல் துன்புறுத்தலின் தண்டனை விளைவுகள், பிரிவு **4** துணைப்பிரிவு **(1)**ன் கீழ் உள்ளகக் குழு அமைக்கப்பட்டிருப்பது பற்றிய ஆணை ஆகியவற்றை காட்சிக்கு வைத்தல்;

(c) ஊழியர்களுக்கு சட்ட விதிகள் குறித்து புரிதல் ஏற்படுத்துவதற்காக தொடர்ச்சியான இடைவெளிகளில் பயிலரங்குகளையும் விழிப்புணர்வு திட்டங்களையும் ஏற்பாடு செய்தல்; உள்ளகக் குழு உறுப்பினர்களுக்கு வகுத்துரைக்கப்படும் வகையில் புரிதல் திட்டங்களை ஏற்பாடு செய்தல்;

(d) புகார்களைக் கையாள்வதற்கும் விசாரணை நடத்துவதற்கும் உள்ளகக் குழு அல்லது நிலைமையைப் பொறுத்து வட்டாரக் குழுவிற்கு தேவையான வசதிகளை வழங்குதல்;

(e) உள்ளகக் குழு அல்லது நிலைமையைப் பொறுத்து வட்டாரக் குழுவின் முன் எதிர்மனுதாரர் மற்றும் சாட்சிகள் ஆஜராவதை உறுதிப்படுத்த உதவுதல்;

(f) பிரிவு **9** துணைப்பிரிவு **(1)**ன் கீழ் செய்யப்படும் புகார் தொடர்பாக தேவைப்படக் கூடிய தகவல்களை உள்ளகக் குழு அல்லது நிலைமையைப் பொறுத்து வட்டாரக் குழுவிற்கு கிடைக்கச் செய்தல்;

45/1860

(g) இந்திய தண்டனைச் சட்டம் அல்லது அந்தக் காலகட்டத்தில் நடைமுறையில் உள்ள எந்த ஒரு சட்டத்தின் கீழும் குற்றச் செயல் தொடர்பாக புகார் பதிவு செய்ய முன்வரக்கூடிய பெண்ணுக்கு உதவி வழங்குதல்;

45/1860

(h) இந்திய தண்டனைச் சட்டம் அல்லது அந்தக் காலகட்டத்தில் நடைமுறையில் உள்ள எந்த ஒரு சட்டத்தின் கீழ், அல்லது பாதிக்கப்பட்ட பெண் விரும்புவாரானால், குற்றவாளி ஒரு ஊழியர் அல்ல என்கிறபோது, பாலியல் துன்புறுத்தல் சம்பவம் நிகழ்ந்த பணித்தலத்தில் நடவடிக்கைக்கான முன்முயற்சி மேற்கொள்ளுதல்;

(i) பாலியல் துன்புறுத்தலை பணி விதிகளின் கீழ் ஒரு தவறான செயலாக நடத்துதல் மற்றும் அத்தகைய தவறான செயலுக்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்;

(j) உள்ளகக் குழு காலமுறைப்படி அறிக்கைகள் தாக்கல் செய்வதை கண்காணித்தல்.

## அத்தியாயம் VII

மாவட்ட அதிகாரியின் கடமைகளும் அதிகாரங்களும்

மாவட்ட அதிகாரியின்

**20.** மாவட்ட அதிகாரி பின்வரும் கடமைகளையும் அதிகாரங்களையும் கொண்டிருப்பார்:

கடமைகளும் அதிகாரங்களும்

(a) வட்டாரக் குழு காலமுறைப்படி அறிக்கைகள் தாக்கல் செய்வதை கண்காணித்தல்;

(b) பாலியல் துன்புறுத்தல் குறித்தும் பெண்களின் உரிமைகள் குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அரசுசாரா அமைப்புகளை ஈடுபடுத்துவதற்குத் தேவைப்படக் கூடிய நடவடிக்கைகளை எடுத்தல்.

## அத்தியாயம் VIII

இதரவை

குழுக்கள் வருடாந்திர அறிக்கை அளித்தல்

**21. (1)** உள்ளகக் குழு அல்லது நிலைமையைப் பொறுத்து வட்டாரக் குழு ஒவ்வொரு காலண்டர் ஆண்டிலும் ஒரு வருடாந்திர அறிக்கையை வகுத்துரைக்கப்படும் வடிவத்திலும் கால அளவிலும் தயாரித்து, அதனை வேலை அளிப்பவர் மற்றும் மாவட்ட அதிகாரியிடம் தாக்கல் செய்ய வேண்டும்.

**(2)** துணைப்பிரிவு **(1)**ன் கீழ் பெறப்பட்ட வருடாந்திர அறிக்கைகள் குறித்த ஒரு சுருக்கமான அறிக்கையை மாவட்ட அதிகாரி மாநில அரசுக்கு அனுப்ப வேண்டும்.

வேலையளிப்பவர் வருடாந்திர அறிக்கையில் தகவல் சேர்த்தல்

**22.** வேலையளிப்பவர் தனது அமைப்பின் வருடாந்திர அறிக்கையில், தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையை, அத்தகைய வழக்குகள் ஏதேனும் இருக்குமானால், மற்றும் இந்தச் சட்டத்தின் கீழ் அவை முடிக்கப்பட்ட விவரத்தை சேர்க்க வேண்டும்; அல்லது அத்தகைய அறிக்கையை தயார் செய்யத் தேவையில்லாத நிலையில் அத்தகைய வழக்குகளின் எண்ணிக்கையை, அத்தகைய வழக்குகள் ஏதேனும் இருக்குமானால், மாவட்ட அதிகாரிக்கு தெரிவிக்க வேண்டும்.

உரிய அரசு அமலாக்கத்தைக் கண்காணித்தல் மற்றும் விவரங்களைப் பராமரித்தல்

**23.** உரிய அரசு இந்தச் சட்டம் அமலாக்கப்படுவதை கண்காணிக்க வேண்டும்; பணித்தலத்தில் பாலியல் துன்புறுத்தல் பற்றிய அனைத்து வழக்குகள் தொடர்பாக, தாக்கல் செய்யப்பட்ட மற்றும் முடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை விவரங்களை பராமரிக்க வேண்டும்.

உரிய அரசு சட்டத்தை விளம்பரப்படுத்த நடவடிக்கை எடுத்தல்

**24.** உரிய அரசு நிதி மற்றும் இதர நிதி ஆதாரங்கள் கிடைப்பதைப் பொறுத்து –

(a) பணித்தலத்தில் பாலியல் துன்புறுத்தலில் இருந்து பெண்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கான இந்தச் சட்டத்தின் விதிகள் குறித்து பொது மக்களின் புரிதலை மேம்படுத்துவதற்காக, பொருத்தமான தகவல், கல்வி, தகவல் தொடர்பு மற்றும் பயிற்சிப் பொருள்களை உருவாக்க வேண்டும்; விழிப்புணர்வுத் திட்டங்களுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்;

(b) வட்டார புகார்கள் குழு உறுப்பினர்களுக்கு புரிதல் மற்றும் பயிற்சித் திட்டங்களை ஏற்பாடு செய்ய வேண்டும்.

தகவல்களைக் கோருவதற்கும்

**25. (1)** பொது நலனுக்கு ஏற்றது அல்லது ஒரு பணித்தலத்தில் உள்ள பெண் ஊழியர்களின் நலனுக்கு ஏற்றது என்று உரிய அரசு

பதிவேடுகளை ஆய்வு செய்வதற்கும் உள்ள அதிகாரம்

கருதுமானால், எழுத்துப்பூர்வ ஆணையின் மூலமாக பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்:

(a) தனக்குத் தேவைப்படுகிற பாலியல் துன்புறுத்தல் தொடர்பான தகவல்களை எழுத்துப்பூர்வமாக தாக்கல் செய்யுமாறு எந்த ஒரு வேலையளிப்பவர் அல்லது மாவட்ட அதிகாரியையும் பணித்தல்;

(b) பாலியல் துன்புறுத்தல் தொடர்பான பதிவேடுகள் மற்றும் பணித்தலத்தை ஆய்வு செய்ய எந்த ஒரு அதிகாரிக்கும் அதிகாரம் அளித்தல்; அந்த அதிகாரி ஆணையில் குறிப்பிடப்படும் காலகட்டத்திற்குள் அத்தகைய ஆய்வு அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும்.

**(2)** வேலையளிப்பவர் ஒவ்வொரு, மாவட்ட அதிகாரியும், கோரப்படும் நிலையில், ஆய்வு செய்யும் அதிகாரியின் முன்னிலையில், அத்தகைய ஆய்வுப் பொருளுடன் சம்பந்தமுள்ளதாக, தனது பொறுப்பில் இருக்கக் கூடிய அனைத்து தகவல்கள், பதிவேடுகள் மற்றும் இதர ஆவணங்களை தாக்கல் செய்ய வேண்டும்.

சட்ட விதிகளை செயல்படுத்தத் தவறுவதற்கான தண்டனை

**26. (1)** வேலையளிப்பவர் –

(a) பிரிவு **4** துணைப்பிரிவு **(1)**ன் கீழ் ஒரு உள்ளகக் குழுவை அமைக்கத் தவறுவாரானால்,

(b) பிரிவுகள் **13**, **14**, **22**ன் கீழ் நடவடிக்கை எடுக்கத் தவறுவாரானால், மற்றும்

(c) இந்தச் சட்டத்தின் இதர விதிகளை அல்லது அதன்கீழ் பிறப்பிக்கப்படும் எந்த விதியையும் மீறுவாரானால் அல்லது மீற முயல்வாரானால் அல்லது மீறுவதற்குத் தூண்டுவாரானால்,

அவருக்கு **50,000** ரூபாய் வரை நீட்டிக்கத்தக்க அபராதம் விதிக்கப்படும்.

**(2)** எந்த ஒரு வேலையளிப்பவரும், இந்தச் சட்டத்தின்கீழ் தண்டனைக்குரிய ஒரு குற்றத்திற்காக ஏற்கெனவே தண்டனை அளிக்கப்பட்டு மீண்டும் அதே குற்றத்தைச் செய்ததாக தீர்ப்பளிக்கப்படுவாரானால், அவர் –

*(i)* முதல் தீர்ப்பின்போது விதிக்கப்பட்டது போன்ற இரட்டிப்புத் தண்டனைக்கு உரியவராவார்; அந்த தண்டனை குற்றத்திற்கு அளிக்கப்படும் அதிகபட்ச தண்டனைக்கு உட்பட்டதாகும்;

அத்தகையதான நிலையில், குற்றம்சாட்டப்பட்டவர் மீது வழக்குத் தொடரப்படுவதற்கான குற்றச் செயலுக்காக, அந்த காலகட்டத்தில் நடைமுறையில் இருக்கக்கூடிய எந்த ஒரு சட்டத்தின் கீழும் வகுத்துரைக்கப்படும் ஒரு உயர்ந்தபட்ச தண்டனை வகுத்துரைக்கப்படும் நிலையில், நீதிமன்றம் தண்டனையை அறிவிக்கிறபோது, அதுகுறித்து உரிய முறையில் கவனத்தில் கொள்ள வேண்டும்.

*(ii)* அரசு அல்லது உள்ளாட்சி நிர்வாகத்தால், அவரது தொழில் அல்லது செயல்பாட்டை அவர் மேற்கொள்வதற்குத் தேவையான அவரது உரிமம் ரத்துச் செய்யப்படும்; அல்லது நிலைமையைப் பொறுத்து, பதிவு விலக்கிக்கொள்ளப்படும் அல்லது

புதுப்பிக்கப்படமாட்டாது அல்லது ஒப்புதல் நீட்டிக்கப்படமாட்டாது அல்லது பதிவு ரத்துச் செய்யப்படும்.

குற்றத்தை நீதிமன்றங்கள் பரிசீலித்தல்

**27.** **(1)** பாதிக்கப்பட்ட பெண்ணால் அல்லது உள்ளகக் குழு அல்லது வட்டாரக் குழுகுவால் இது தொடர்பாக அதிகாரமளிக்கப்படும் எந்த நபராலும் செய்யப்படும் புகாரின் அடிப்படையிலன்றி, எந்தவொரு நீதிமன்றமும் இந்தச் சட்டத்தின் கீழ் தண்டனையளிக்கத்தக்க எந்த குற்றச் செயலையும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளக்கூடாது.

**(2)** பெருநகர நீதிபதி அல்லது ஒரு முதல்நிலை நீதித்துறை நடுவர் நிலைக்கு குறைவான எந்த ஒரு நீதிமன்றமும் இந்தச் சட்டத்தின் கீழ் தண்டனை அளிக்கத்தக்க எந்தக் குற்றச் செயலையும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளக்கூடாது.

**(3)** இந்தச் சட்டத்தின் கீழ் வரும் ஒவ்வொரு குற்றச் செயலும் நீதிமன்ற ஆட்சி எல்லைக்கு உட்பட்டதாகாது.

வேறு சட்டத்தை கீழிறக்குகிற சட்டமல்ல

**28.** இந்தச் சட்டத்தின் விதிகள் அந்த காலகட்டத்தில் நடைமுறையில் உள்ள வேறு எந்த சட்ட விதிகளுடனும் கூடுதலாக உள்ளவைதானேயன்றி, அவற்றை கீழிறக்குவதாகாது.

உரிய அரசு விதிகளை உருவாக்குவதற்கான அதிகாரம்

**29.** **(1)** மத்திய அரசு இந்தச் சட்டத்தின் விதிகளை நிறைவேற்றுவதற்காக அரசிதழில் அறிவிக்கை வெளியிடுவதன் மூலம், விதிகளை உருவாக்கலாம்.

**(2)** குறிப்பாகவும் ஏற்கெனவே உள்ள அதிகாரத்தின் பொதுத் தன்மைக்கு காரணமில்லாமலும், அனைத்து அம்சங்களிலும் அல்லது பின்வரும் அம்சங்களில் அத்தகைய விதிகள் கொண்டுவரப்படலாம்:

(a) பிரிவு **4** துணைப்பிரிவு **(1)**, விதி (c)யின் கீழ் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கட்டணங்கள் அல்லது படித் தொகைகள்;

(b) பிரிவு 7 துணைப்பிரிவு **1** விதி (c)யின் கீழ் உறுப்பினர்கள் நியமனம்

(c) பிரிவு 7 துணைப்பிரிவு **(4)**ன் கீழ் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு கட்டணங்கள் அல்லது படித்தொகைகள்

(d) பிரிவு **9** துணைப்பிரிவு **(2)**ன் கீழ் புகார் செய்யக் கூடிய நபர்;

(e) பிரிவு **11** துணைப்பிரிவு **(1)**ன் கீழ் விசாரணை நடத்தப்படும் விதம்;

(f) பிரிவு **11** துணைப் பிரிவு **(2)** விதி (c)யின் கீழ் ஒரு விசாரணை நடத்துவதற்கான அதிகாரம்;

(g) பிரிவு **12** துணைப்பிரிவு **(1)** விதி (c)யின் கீழ் பரிந்துரைக்கப்பட வேண்டிய நிவாரணம்;

(h) பிரிவு **13** துணைப்பிரிவு **(3)** விதி (i)யின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய விதம்;

(i) பிரிவு **14** துணைப்பிரிவு **(1)** மற்றும் **(2)**ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய விதம்;

(j) பிரிவு **17**ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய விதம்;

(k) பிரிவு **18** துணைப்பிரிவு **(1)**ன் கீழ் மேல்முறையீடு செய்யும் விதம்;

(l) பிரிவு **19** விதி (c)யின் கீழ் ஊழியர்களுக்கு புரிதல்

ஏற்படுத்துவதற்கான பயிலரங்குகள், விழிப்புணர்வு திட்டங்கள், உள்ளகக் குழுவின் உறுப்பினர்களுக்கு புரிதல் திட்டங்கள் மேற்கொள்ளும் விதம்; மற்றும்

(m) பிரிவு **21** துணைப்பிரிவு **(1)**ன் கீழ் உள்ளகக் குழு மற்றும் வட்டாரக் குழுவின் வருடாந்திர அறிக்கை தயாரிப்புக்கான வடிவம் மற்றும் கால அளவு.

**(3)** மத்திய அரசு இந்தச் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கும் ஒவ்வொரு விதியும், பிறப்பிக்கப்பட்ட பின் கூடிய விரைவில் உடனடியாக நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும், அது கூடியிருக்கும்போது, ஒரு தொடரில் அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அடுத்தடுத்த தொடர்களில் மொத்த **30** நாட்கள், தாக்கல் செய்யப்பட வேண்டும்; அப்போதைய கூட்டத்தொடர் முடிவதற்குள் அல்லது மேற்படி அடுத்தடுத்த கூட்டத்தொடர்களில், இரண்டு அவைகளும் விதியில் ஏதேனும் திருத்தம் கொண்டுவர சம்மதிக்குமானால் அல்லது அந்த விதி பிறப்பிக்கப்படக்கூடாது என்று இரு அவைகளும் ஒப்புக்கொள்ளுமானால் அந்த விதியானது திருத்தப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்லுபடியாகும் அல்லது நிலைமையைப் பொறுத்து செல்லுபடியாகாது; இருப்பினும், அத்தகைய திருத்தம் அல்லது விலக்கல் நடவடிக்கையானது அந்த விதியின்கீழ் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் செல்லுபடித் தன்மைக்கு பாதகமாக இருக்காது.

**(4)** பிரிவு **8** துணைப்பிரிவு **(4)**ன் கீழ் பிறப்பிக்கப்படும் எந்த விதியும், மாநில அரசால், அது பிறப்பிக்கப்பட்டபின் கூடிய விரையில் உடனடியாக மாநில சட்டமன்றத்திற்கு இரண்டு அவைகள் இருக்குமானால் அந்த இரு அவைகளிலும் அல்லது ஒரு அவை மட்டுமே இருக்குமானால் அந்த அவையிலும் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

சிரமங்களை நீக்குவதற்கான அதிகாரம்

**30. (1)** இந்தச் சட்டத்தின் விதிகளை செயல்படுத்தவதில் ஏதேனும் சிரமம் ஏற்படுமானால், மத்திய அரசானது, அரசிதழில் ஆணை வெளியிடுவதன் மூலம், இந்தச் சட்டத்தின் விதிகளுக்கு முரண்படாத வகையில், அத்தகைய சிரமத்தை நீக்குவதற்குத் தேவைப்படுவதாகத் தெரியக்கூடிய விதிகளை பிறப்பிக்கலாம்.

அத்தகையதான நிலையில், இந்தப் பிரிவின் கீழ் அத்தகைய எந்த ஒரு ஆணையும் இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்து இரண்டு ஆண்டுகாலம் முடிவடைந்த பிறகு கொண்டுவரப்படக்கூடாது.

**(2)** இந்தப் பிரிவின் கீழ் பிறப்பிக்கப்படும் ஒவ்வொரு ஆணையும், அது பிறப்பிக்கப்பட்டபின் கூடிய விரைவில் உடனடியாக நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

P.K. மல்ஹோத்ரா,
செயலர்,
இந்திய அரசு

———————————

# பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம் 2013

## 1. பொதுவான உரிமைகள்

(i) எந்த பணித்தலத்திலும் எந்தப் பெண்ணும் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்படக் கூடாது. [S3(1)]

(ii) பாதிக்கப்படுகிற எந்த ஒரு பெண்ணும் பணித்தலத்தில் பாலியல் துன்புறுத்தல் தொடர்பான ஒரு புகாரை, உள்ளக புகார்கள் குழு (ICC), உள்ளூர் புகார்கள் குழுவிடம் (LCC) சம்பவம் நடந்த தேதியிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் எழுத்துப்பூர்வமாக ஒரு புகாரை அளிக்கலாம். [S9(1)]

(iii) பாதிக்கப்பட்ட பெண் எழுத்துப்பூர்வமாக புகார் தர இயலாத நிலையில், ICC அல்லது உள்ளூர்க் குழுவின் உறுப்பினர் அந்தப் பெண்ணிற்கு தேவையான நியாயமான அனைத்து உதவிகளையும் வழங்க வேண்டும்.[S9(1)]

(iv) பாதிக்கப்பட்ட பெண், எதிர்மனுதாரர் மற்றும் சாட்சியின் அடையாளம் மற்றும் முகவரிகள், சமரசம் மற்றும் விசாரணை நடைமுறைகள் தொடர்பான எந்த ஒரு தகவலும் பொது மக்களுக்கு, பத்திரிகைகளுக்கு மற்றும் ஊடகங்களுக்கு எவ்விதத்திலும் வெளியிடப்படவோ, தெரிவிக்கப்படவோ அல்லது தெரியச் செய்யப்படவோ கூடாது.

(v) இந்திய தண்டனைச் சட்டம் அல்லது அந்தக் காலகட்டத்தில் நடைமுறையில் உள்ள எந்த ஒரு சட்டத்தின் கீழும் குற்றச் செயல் தொடர்பாக புகார் பதிவு செய்ய முன்வரக்கூடிய பெண்ணுக்கு உதவி வழங்குதல்; [S19(g)]

## 2. பாலியல் துன்புறுத்தல் செயல் என்று கருதப்படுவது எது ?

1. உடல் ரீதியான தொடர்பு மற்றும் முயற்சிகள் [S2(n)i]
2. பாலியல் சலுகைக்கான ஒரு கோரிக்கை அல்லது வேண்டுகோள் [S2(n)ii]
3. பாலியல் அர்த்தமுள்ள கருத்துகளைக் கூறுதல் [S2(n)iii]
4. ஆபாசப் படம் காட்டுதல் [S2(n)iv]
5. பாலியல் தன்மை உள்ள விரும்பத்தகாத வேறு எந்த உடல் ரீதியான, வாய்மொழியான அல்லது வாய்மொழி அல்லாத செயல்கள் [S2(n)v]
6. இதர சூழல்களோடு, பாலியல் துன்புறுத்தல் தொடர்பான ஒரு செயல் அல்லது நடத்தை நிகழ்ந்திருப்பதாக தோன்றுமானால் அல்லது இருக்குமானால் பின்வரும் சூழல்கள் பாலியல் துன்புறுத்தலாக இருக்கக்கூடும்:
   (i) அந்தப் பெண்ணின் வேலையில் சலுகையோடு நடத்தப்படுவார் என்று உட்பொருளாக அல்லது வெளிப்படையாக வாக்குறுதியளித்தல் [S3(2)i]
   (ii) அந்தப் பெண்ணின் வேலையில் பாதகமாக நடத்தப்படுவார் என்று உட்பொருளாக அல்லது வெளிப்படையாக அச்சுறுத்துதல் [S3(2)ii]
   (iii) அந்தப் பெண்ணின் தற்போதைய அல்லது எதிர்கால வேலை நிலை பற்றி உட்பொருளாக அல்லது வெளிப்படையாக அச்சுறுத்துதல் [S3(2)iii]
   (iv) அந்தப் பெண்ணின் வேலையில் குறுக்கிடுதல் அல்லது அவருக்கு ஒரு அச்சுறுத்தலான அல்லது சங்கடமான அல்லது பாதகமான வேலைச் சூழலை ஏற்படுத்துதல் [S3(2)iv]
   (v) அந்தப் பெண்ணின் உடல் நலம் அல்லது பாதுகாப்பை பாதிக்கக்கூடியதாக அவமதிக்கும் வகையில் நடத்துதல் [S3(2)v]

## 3. பாலியல் துன்புறுத்தல் குறித்து ஒரு பெண் எங்கு புகார் அளிக்கலாம் ?

### 3.1 உள்ளக புகார்கள் குழு (ICC)

1. ICC- யானது வேலை அளிப்பவரால் நியமிக்கப்படும் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்:
   i. மூத்த நிலையில் உள்ள பெண் (சாத்தியப்படுமானால்) ஊழியர் தலைமை அலுவலராக இருக்க வேண்டும் [S4(2)a]
   ii. ஊழியர்களில் இரண்டு பேருக்குக் குறையாத உறுப்பினர்கள், கூடிய வரையில் பெண்களின் நலனுக்காக உறுதிப்பாடு கொண்டவர்கள் அல்லது சமூகப் பணியில் அனுபவம் உள்ளவர்கள் அல்லது சட்டப்பூர்வ அறிவு உள்ளவர்கள், நியமிக்கப்பட வேண்டும் [S4(2)b]
   iii. அரசுசாரா அமைப்புகளிலிருந்து அல்லது சங்கங்களிலிருந்து நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவருக்கு ICCயின் நடைமுறைகளை மேற்கொள்வதற்காக வேலையளிப்பவரால், வகுத்துரைக்கப்படும் ஒரு தொகை கட்டணம் அல்லது படித் தொகையாக வழங்கப்பட வேண்டும் [S4(2)c] [S4(4)]
   iv. பரிந்துரைக்கப்பட்ட உறுப்பினர்களில் குறைந்தபட்சம் பாதிக்கும் மேற்பட்டவர்கள் பெண்களாகவே இருக்க வேண்டும் [S4(2)c]

### 3.2 உள்ளூர் புகார்கள் குழு

1. ஒவ்வொரு மாவட்ட அதிகாரியும் சம்பந்தப்பட்ட மாவட்டத்தில், 10 தொழிலாளர்களுக்குக் குறையாது இருப்பதால் ICC அமைக்கப்படாத அல்லது வேலையளிப்பவர் மீதே புகார் செய்யப்பட்டிருக்கும் நிலையில், நிறுவனங்களிடமிருந்து பாலியல் துன்புறுத்தல் புகார்களைப் பெறுவதற்காக ‘‘உள்ளூர் புகார்கள் குழு’’ எனப்படும் ஒரு குழுவை அமைக்க வேண்டும் [S6(1)]
2. ஒவ்வொரு வட்டம், கோட்டம் மற்றும் ஊரகப் பகுதி அல்லது பழங்குடியினர் பகுதியின் மண்டலம் மற்றும் நகரப் பகுதியில் வார்டு அல்லது நகராட்சியில் புகார்களைப் பெறுவதற்காகவும் அதனை சம்பந்தப்பட்ட ICCக்கு 7 நாட்களுக்குள் அனுப்புவதற்காகவும் ஒரு உயர்நிலை அலுவலருக்கு மாவட்ட அதிகாரி பொறுப்பளிக்க வேண்டும் [S6(2)]
3. LCCயில் மாவட்ட அதிகாரியால் நியமிக்கப்படும் பின்வரும் உறுப்பினர்கள் இருப்பார்கள்:
   i. சமூகப் பணியில் ஈடுபட்டுள்ள, பெண்களின் நலனில் உறுதிப்பாடு கொண்டுள்ள முன்னணிப் பெண்களிடையே இருந்து ஒரு தலைவர்; அவருக்கு வகுத்துரைக்கப்படும் ஒரு தொகை (ரூ. 250 வரை) கட்டணம் அல்லது படித் தொகையாக வழங்கப்பட வேண்டும் [S7(1)a]
   ii. மாவட்டத்தில் வட்டம், கோட்டம் அல்லது மண்டலம் அல்லது வார்டு அல்லது நகராட்சியில் பணிபுரியும் பெண்களிடையே இருந்து ஒரு உறுப்பினர் [S7(1)b]
   iii. இரண்டு உறுப்பினர்கள்; அவர்களில் குறைந்தது ஒருவர் பெண்களின் நலனில் உறுதிப்பாடுகொண்டுள்ள அரசுசாரா அமைப்புகள் அல்லது சங்கங்களிலிருந்து நியமிக்கப்படுபவராக, அல்லது பாலியல் துன்புறுத்தல் பிரச்சனைகளை நன்கு தெரிந்து வைத்திருக்கிற ஒருவராக இருக்க வேண்டும்; அது வகுத்துரைக்கப்படலாம் [S7(1)c] [R3(1)]
   iv. நியமிக்கப்படுபவரில் குறைந்தது ஒருவர், சட்டப் பின்னணி உள்ளவராக அல்லது சட்ட அறிவு உள்ளவராக இருப்பது விரும்பத்தக்கது [S7(1)c]
   v. நியமிக்கப்படுவோரில் குறைந்தது ஒருவர் மத்திய அரசால் அவ்வப்போது அறிவிக்கப்படும் பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடிகள் அல்லது இதர

பிற்பட்ட வகுப்புகள் அல்லது சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணாக இருக்க வேண்டும் [S7(1)c]

vi. மாவட்டத்தில் சமூக நலன் அல்லது பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு ஆகியவற்றை கையாளும் சம்பந்தப்பட்ட அலுவலர் குழுவின் பதவி சார் உறுப்பினராக இருப்பார் [S7(1)d]

**4.** மாவட்ட அதிகாரி, வட்டாரக் குழு காலமுறைப்படி அறிக்கைகள் தாக்கல் செய்வதை கண்காணித்து, பாலியல் துன்புறுத்தல் குறித்தும் பெண்களின் உரிமைகள் குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அரசுசாரா அமைப்புகளை ஈடுபடுத்துவதற்குத் தேவைப்படக் கூடிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் [S20].

**5.** எந்த ஒரு ICC அல்லது LCC உறுப்பினரும் பாதிக்கப்பட்ட பெண் குறித்த எந்த ஒரு தகவலையும் பொது மக்களுக்கோ, ஊடகங்களுக்கோ தெரிவித்தாலோ, எந்த ஒரு குற்றச் செயலுக்காகவாவது குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டிருந்தாலோ, குற்றச் செயல் தொடர்பாக விசாரணை நிலுவையில் இருந்தாலோ, ஒழுங்கு நடவடிக்கையில் குற்றம் செய்திருப்பதாக கண்டறியப்பட்டிருந்தாலோ அல்லது அவருக்கு எதிராக ஒரு ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருந்தாலோ அவர் குழுவிலிருந்து நீக்கப்படுவார் [S4(5), S7(3)]

## 4. புகார் செய்வதற்கான நடைமுறைகள்

1. புகார்தாரர் புகாரின் 6 நகல்களை ICC அல்லது LCCயிடம் பெயர், சாட்சியின் முகவரி உள்ளிட் துணை ஆவணங்களோடு சமர்ப்பிக்க வேண்டும். [R7(1)]
2. ICC அல்லது LCC புகாரின் நகலை 7 நாட்களுக்குள் எதிர்மனுதாரருக்கு அனுப்ப வேண்டும். எதிர்மனுதாரர் புகாருக்கான பதிலை 10 நாட்களுக்குள் ICC அல்லது LCCயிடம் சமர்ப்பிக்க வேண்டும். [R7(2),(3)]
3. ICC அல்லது LCC மேற்கொள்ளும் விசாரணை நடவடிக்கைகளில் இரண்டு தரப்பினரின் சட்ட பிரதிநிதிகளுக்கும் அனுமதி கிடையாது[R7(6)]
4. பாதிக்கப்படுகிற எந்த ஒரு பெண்ணும் பணித்தலத்தில் பாலியல் துன்புறுத்தல் தொடர்பான ஒரு புகாரை, ICC அல்லது வட்டாரக் குழுவிடம், சம்பவம் நடந்த தேதியிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் புகார் அளிக்கலாம் [S9(1)]
5. பாதிக்கப்பட்ட பெண் தனது உடல்நிலை அல்லது மனநிலை அல்லது மரணம் அல்லது வேறு காரணங்களால் புகார் செய்ய இயலவில்லை என்றால், அவரது சட்டப்பூர்வ வாரிசு அல்லது வகுத்துரைக்கப்படும் வேறு நபர் இந்தப் பிரிவின்கீழ் புகார் செய்யலாம் [S9(2)]

**6.** பாதிக்கப்பட்ட பெண் உடல்ரீதியாக இயலாதவராக இருக்கும்பட்சத்தில் பின்வருமாறு சேர்க்கப்படலாம்:

- **a.** உறவினர் அல்லது நண்பர் [R6(i)a]
- **b.** உடன் பணியாற்றுபவர் அல்லது சம்பவம் குறித்து அறிந்த வேறு ஒருவர்; இது அந்தப் பெண்ணின் எழுத்துப்பூர்வ ஒப்புதலுடன் [R6(i)b,d]
- **c.** தேசிய பெண்கள் ஆணையம் அல்லது மாநில பெண்கள் ஆணையத்தின் ஒரு அதிகாரி [R6(i)d]

**7.** பாதிக்கப்பட்ட பெண் மனரீதியாக இயலாதவராக இருக்கும்பட்சத்தில் பின்வருமாறு சேர்க்கப்படலாம்:

- **a.** உறவினர் அல்லது நண்பர் [R6(ii)a]
- **b.** ஒரு சிறப்பு ஆசிரியர் அல்லது தகுதியுள்ள உளவியலாளர் அல்லது மனநல மருத்துவர் [R6(ii)b,c]
- **c.** பாதுகாப்பாளர் அல்லது பராமரிப்பு அல்லது சிகிச்சை வழங்கும் பொறுப்பாளர் [R6(ii)d]

**d.** மேற்கூறியவருடன் இணைந்து, சம்பவம் குறித்து அறிந்த எந்தவொரு நபரும் [R6(ii)e]

8. ICC அல்லது நிலைமையைப் பொறுத்து வட்டாரக் குழு, பிரிவு 11ன் கீழ் ஒரு விசாரணையைத் தொடங்குவதற்கு முன்பாக, மற்றும் பாதிக்கப்பட்ட பெண்ணின் வேண்டுகோளுக்கு இணங்க, அவருக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையே சமரச ஏற்பாட்டின் மூலம் பிரச்சனையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கலாம். அதற்கான ஒப்பந்தத் தீர்வுகளின் நகல்கள் பரிந்துரை நடவடிக்கைகளுக்காக அலுவலர் அல்லது மாவட்ட அதிகாரிக்கு அளிக்கப்பட வேண்டும்.
9. பாதிக்கப்பட்ட பெண்ணுக்கும் எதிர்மனுதாரருக்கும் உடன்பாட்டின் நகல்கள் வழங்கப்பட வேண்டும் [S10]

### 4.1 புகார் மீதான விசாரணை

1. பாதிக்கப்பட்ட பெண் வீட்டுப் பணியாளர் என்றால், LCC–யானது புகாரை காவல்துறைக்கு 7 நாட்களுகருள் இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்ய அனுப்ப வேண்டும். [S11(1)]
2. எதிர்மனுதாரர் ஒரு ஊழியரானால் அல்லது ஒப்புக்கொள்ளப்பட்ட உடன்பாட்டின் நிபந்தனைகள் செயல்படுத்தப்படாத நிலையில், புகார் மீது ICC அல்லது LCC விசாரணை நடத்த வேண்டும். விசாரணை 90 நாட்களுக்குள் முடிக்கப்பட வேண்டும் [S11(1),(4)].
3. சம்பந்தப்பட்ட இரு தரப்பினருமே ஊழியர்களானால் அவர்களது வாதம் கேட்கப்படுவதற்கான வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். தங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு வழி செய்யும் வகையில் கண்டறிந்தவைகளின் ஒரு நகல் வழங்கப்பட வேண்டும் [S11(1)]
4. விசாரணை நடைமுறையின்போது ஒரு உரிமையியல் நீதிமன்றத்திற்கு உள்ள அதே அதிகாரங்கள் ICC மற்றும் LCCக்கு உண்டு; அதாவது எந்த ஒரு நபரும் நேரில் வர ஆணையிடுவது, உறுதிமொழி ஏற்பின் அடிப்படையில் அவரை விசாரிப்பது மற்றும் ஆவணங்களைக் கோருவது போன்ற அதிகாரங்கள் உண்டு [S11(3)]

### 4.2 விசாரணையின்போது தற்காலிக நடவடிக்கை

ஒரு விசாரணையின்போது, பாதிக்கப்பட்ட பெண் எழுத்துப்பூர்வமாக கோரிக்கை விடுவதன் அடிப்படையில், ICC அல்லது LCC, அந்தப் பெண் அல்லது எதிர்மனுதாரரை வேறு பணித்தலத்திற்கு இடமாறுதல் செய்தல் அல்லது பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு மூன்று மாதகாலம் வரை விடுப்பு அளிக்க பரிந்துரை செய்யலாம்.

### 4.3 விசாரணை அறிக்கை

**1.** இந்தச் சட்டத்தின் கீழ் ஒரு விசாரணை முடிவடையும்போது ICC அல்லது LCC, தனது விசாரணை அறிக்கையை, வேலையளிப்பர் அல்லது மாவட்ட அதிகாரி மற்றும் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு விசாரணை முடிந்த தேதியிலிருந்து 10 நாட்களுக்குள் வழங்க வேண்டும் [S13(1)]

**2.** எதிர்மனுதாரர் மீதான புகார் நிரூபிக்கப்பட்டிருக்கிறது என்ற முடிவுக்கு ICC அல்லது LCC வருமானால், வேலையளிப்பவர் அல்லது மாவட்ட அதிகாரிக்கு பின்வருமாறு அது பரிந்துரை செய்யலாம்:

*(i)* பாலியல் துன்புறுத்தல் ஒரு தவறான நடத்தை என்ற முறையில் எதிர்மனுதாரருக்குப் பொருந்துகிற பணி விதிகளின் கீழ் நடவடிக்கை எடுத்தல் [S13(3)i]

*(ii)* எதிர்மனுதாரரின் சம்பளம் அல்லது ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்து பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு வழங்கப்பட வேண்டும் [S13(3)ii]

*(iii)* எழுத்துப்பூர்வ மன்னிப்பு, எச்சரிக்கை, கண்டனம், பதவி உயர்வு மற்றும் ஊதிய உயர்வு நிறுத்தம், எதிர் மனுதாரர் வேலை நீக்கம், ஆலோசனை அமர்வு அல்லது சமூக சேவை போன்ற தேவைப்படும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் [R9]
*(iv)* பரிந்துரைகள் கிடைக்கப்பெற்ற **60** நாட்களுக்குள் செயல்பட வேண்டும் [S13(4)]

3. பாதிக்கப்பட்ட பெண்ணின் கோரிக்கையின் அடிப்படையில், ICC அல்லது LCC, பெண்ணின் செயல்பாடு குறித்து அறிக்கையளிப்பதற்கு எதிர்மனுதாரரை அனுமதிக்கக்கூடாது அல்லது அந்தப் பெண் பற்றிய ரகசிய அறிக்கை எழுத அனுமதிக்கக் கூடாது என வேலையளிப்பவருக்குப் பரிந்துரைக்கலாம். வழக்கு ஒரு கல்வி நிறுவனம் சம்பந்தப்பட்டதாக இருக்குமாயின், பாதிக்கப்பட்டவரின் எந்தவொரு கல்வி சார்ந்த செயல்பாட்டையும் கண்காணிப்பதற்கு எதிர்மனுதாரரை அனுமதிக்கக்கூடாது என்று பரிந்துரைக்கலாம் [R8].

**4.** ICC அல்லது LCC, குற்றச்சாட்டு தீய நோக்கமுள்ளது, தவறானது அல்லது போலியான ஆதாரங்கள் என்ற தீர்மானத்திற்கு வந்தால் தவறான புகாரளித்த பெண்ணின் மீது அல்லது புகாரளித்த வேறு நபர் மீது நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்கலாம் [S14(1), R9].

**5.** சாட்சியளித்தவர் தவறான அல்லது போலியான ஆதாரங்கள் அளித்தாக ICC அல்லது LCC முடிவுக்கு வருமானால், வகுத்துரைக்கப்பட்ட விதிகளின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு வேலையளிப்பவர் அல்லது மாவட்ட அதிகாரிக்கு பரிந்துரைக்கலாம் [S13(2)].

**6.** பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளான பெண்ணின் அடையாளம் மற்றும் முகவரிகள், சமரசம் மற்றும் விசாரணை நடைமுறைகள், இந்தச் சட்ட விதிகளின் கீழ் எடுக்கப்படும் நடவடிக்கை குறித்து பொது மக்களுக்கு, பத்திரிகைகளுக்கு மற்றும் ஊடகங்களுக்கு எவ்விதத்திலும் வெளியிடப்படவோ, தெரிவிக்கப்படவோ அல்லது தெரியச் செய்யப்படவோ கூடாது [S16].

### 4.4 இழப்பீடு

1. ICC அல்லது LCC வழங்கப்பட வேண்டிய தொகையைத் தீர்மானிப்பதற்காக பின்வரும் அம்சங்களை கருத்தில் கொள்ளும்:
   (a) பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ஏற்பட்ட மன உளைச்சல், வலி, துயரம் மற்றும் உணர்வு சார்ந்த துன்பம் [S15(a)]
   (b) பாலியல் துன்புறுத்தல், சம்பவத்தின் காரணமாக ஏற்பட்ட வேலை இழப்பு [S15(b)]
   (c) உடல் சார்ந்த அல்லது உளவியல் சிகிச்சைக்காக பாதிக்கப்பட்டவருக்கு ஏற்பட்ட மருத்துவச் செலவு [S15(c)]
   (d) வருமானம் மற்றும் நிதி நிலை [S15(d)]
   (e) செலுத்தும் தொகையை மொத்தமாக செலுத்த முடியுமா அல்லது தவணையில் வழங்க முடியுமா என்பது [S15(e)]

### 4.5 பரிந்துரைகளுக்கு எதிரான மேல்முறையீடு

**1.** பரிந்துரைகளால் பாதிக்கப்படுகிற எந்த ஒரு நபரும் அல்லது பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்தாலும் வகுத்துரைக்கப்பட்ட விதிகளின் கீழ் நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயத்தில் பரிந்துரை செய்யப்பட்ட **90** நாட்களுக்குள் மேல் முறையீடு செய்யலாம் [S18(1)(2)]

**5. வேலையளிப்பவர் செய்ய வேண்டியவை என்ன ?**

**1. வேலை அளிப்பவர் ஒவ்வொருவரும் பின்வரும் கடமைகளை நிறைவேற்ற வேண்டும்:**

a. பணித்தலத்தில் ஒரு பாதுகாப்பான பணிச் சூழலை ஏற்படுத்துதல், முறைப்படுத்தப்பட்ட ICC பாலியல் துன்புறுத்தல் தடுப்பு கொள்கை உருவாக்குதல், பெண்களுக்கு எதிரான சூழல் அடித்தளத்தை விலக்குதல் [S19(a)] [R13(a)]

b. பணித்தலத்தில் ஒரு பொதுவான வெளிப்படையான இடத்தில், பாலியல் துன்புறுத்தலின் தண்டனை விளைவுகள், பிரிவு 4 துணைப்பிரிவு (1)ன் கீழ் ICC அமைக்கப்பட்டிருப்பது பற்றிய ஆணை ஆகியவற்றை காட்சிக்கு வைத்தல் [S19(b)]

c. ஊழியர்களுக்கு சட்ட விதிகள் குறித்து புரிதல் ஏற்படுத்துவதற்காக தொடர்ச்சியான இடைவெளிகளில் பயிலரங்குகளையும் விழிப்புணர்வுத் திட்டங்களையும் ஏற்பாடு செய்தல்; ICC உறுப்பினர்களுக்கு வகுத்துரைக்கப்படும் வகையில் புரிதல் திட்டங்களை ஏற்பாடு செய்தல் [S19(c)]

d. புகார்களைக் கையாள்வதற்கும் விசாரணை நடத்துவதற்கும் ICC அல்லது நிலைமையைப் பொறுத்து வட்டாரக் குழுவிற்கு தேவையான வசதிகளை வழங்குதல் [S19(d)(f)]

e. பஞ்சாயத்து ராஜ் அமைப்புகள், கிராம சபை, பெண்கள் குழுக்கள், அன்னையர் குழு அல்லது வேறு ஏதேனும் அமைப்புகள் சம்பந்தப்படக்கூடிய ஒரு ஊழியர் அமைப்பை ஏற்படுத்துதல் [R13(c)]

f. ICC அல்லது நிலைமையைப் பொறுத்து வட்டாரக் குழுவின் முன் எதிர்மனுதாரர் மற்றும் சாட்சிகள் ஆஜராவதை உறுதிப்படுத்த உதவுதல் [S19(e)]

g. குற்றம்புரிந்தவருக்கு எதிரான நடவடிக்கை எடுக்க துவங்குதல் [S19(h)]

h. பாலியல் துன்புறுத்தலை பணி விதிகளின் கீழ் ஒரு தவறான செயலாக நடத்துதல் மற்றும் அத்தகைய தவறான செயலுக்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் [S19(i)]

i. ICC காலமுறைப்படி அறிக்கைகள் தாக்கல் செய்வதை கண்காணித்தல் [S19(j)]

j. இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அனைத்து வழக்குகளும், அதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் உள்ளடக்கியதாக ஆண்டு அறிக்கை இருத்தல் [S22]

k. வேலையளிப்பவர் ஒவ்வொருவரும் மாவட்ட அதிகாரியும், கோரப்படும் நிலையில், ஆய்வு செய்யும் அதிகாரியின் முன்னிலையில், அத்தகைய ஆய்வுப் பொருளுடன் சம்பந்தமுள்ளதாக, தனது பொறுப்பில் இருக்கக் கூடிய அனைத்து தகவல்கள், பதிவேடுகள் மற்றும் இதர ஆவணங்களை தாக்கல் செய்ய வேண்டும் [S25(2)]

2. வேலையளிப்பவர் ஒரு ICC-யை அமைக்கத் தவறுவாரானால் அல்லது உரிய நடவடிக்கை எடுக்கத் தவறுவாரானால் அவருக்கு **50,000** ரூபாய் வரை நீட்டிக்கத்தக்க அபராதம் விதிக்கப்படும் அல்லது ஏற்கனவே தண்டனை அளிக்கப்பட்டு மீண்டும் அதே குற்றத்தைச் செய்ததாக தீர்ப்பளிக்கப்படுவாரானால் இரட்டிப்புத் தண்டனைக்கு உரியவராவார் அவரது உரிமம் ரத்து, பதிவு விலக்கல் அல்லது பதிவு ரத்துச் செய்யப்படும் [S26].

## 6. உரிய அரசாங்கம் செய்ய வேண்டியது என்ன ?

1. உரிய அரசு இந்தச் சட்டம் அமலாக்கப்படுவதை கண்காணிக்க வேண்டும்; பணித்தலத்தில் பாலியல் துன்புறுத்தல் பற்றிய அனைத்து வழக்குகள் தொடர்பாக, தாக்கல் செய்யப்பட்ட மற்றும் முடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை விவரங்களை பராமரிக்க வேண்டும் [S23].

2. பணித்தலத்தில் பாலியல் துன்புறுத்தலில் இருந்து பெண்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கான இந்தச் சட்டத்தின் விதிகள் குறித்து பொது மக்களின் புரிதலை மேம்படுத்துவதற்காக, பொருத்தமான தகவல், கல்வி, தகவல் தொடர்பு மற்றும் பயிற்சிப் பொருள்களை உருவாக்க வேண்டும்; விழிப்புணர்வுத் திட்டங்களுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் [S24(a)].

3. வட்டாரப் புகார்கள் குழு உறுப்பினர்களுக்கு புரிதல் மற்றும் பயிற்சித் திட்டங்களை ஏற்பாடு செய்ய வேண்டும் [S24(b)].

4. பொது நலனுக்கு ஏற்றது அல்லது ஒரு பணித்தலத்தில் உள்ள பெண் ஊழியர்களின் நலனுக்கு ஏற்றது என்று உரிய அரசு கருதுமானால், எழுத்துப்பூர்வ ஆணையின் மூலமாக பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.
   i. தனக்குத் தேவைப்படுகிற பாலியல் துன்புறுத்தல் தொடர்பான தகவல்களை தாக்கல் செய்யுமாறு எந்த ஒரு வேலையளிப்பவர் அல்லது மாவட்ட அதிகாரியையும் பணித்தல் [S25(a)]
   ii. பாலியல் துன்புறுத்தல் தொடர்பான பதிவேடுகள் மற்றும் பணித்தலத்தை ஆய்வு செய்ய எந்த ஒரு அதிகாரிக்கும் அதிகாரம் அளித்தல் [S25(b)]

# பணித்தலம் பெண்ணுக்குப் பாதுகாப்பானதுதானா ?

*பணித்தலத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்கள் தடுப்புச் சட்டம் குறித்த ஆய்வும், ஆலோசனைகளும்*

**– செல்வி பழனி**

***வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்றம்***

பெண்களுக்கு எதிரான வன்முறை என்பது பல நூற்றாண்டுகளாகத் தொடர்கிறது. மனித உரிமை செயல்பாட்டாளர்கள் எந்தெந்த வடிவத்திலெல்லாம் இந்த வன்முறை நீடிக்கிறதோ அதற்கெதிராக உரத்த குரல் எழுப்பி வந்திருக்கிறார்கள். வீட்டில், சமூகத்தில், பணித்தலத்தில், நிறுவனங்களில், பொது இடங்களில் என அனைத்து இடங்களிலும் பெண்கள் வன்முறையை எதிர்கொள்கிறார்கள். அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் தேவை என்ற கோரிக்கை வலுவாக ஒலிக்கிறபோதெல்லாம் நாடாளுமன்றமும் மாநில சட்டமன்றங்களும் சட்டங்களைக் கொண்டு வந்துள்ளன. அவ்வாறு கொண்டு வரப்பட்ட சட்டங்கள் அனைத்தும் தங்களது அன்றாட வாழ்வில் இத்தகைய வன்முறைகளைச் சந்திக்கிற எண்ணற்ற பெண்களுக்கு ஆறுதலைக் கொண்டுவந்துவிட்டனவா என்பது தனியாக விவாதிக்கப்பட வேண்டிய விஷயம். உலகமயமாக்கலும் வறுமையும் வேலை பார்க்கும் பெண்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்துள்ளது. முன்பைவிட அதிகமான பெண்கள் கிராமம், நகரம் ஆகிய இரண்டு பகுதிகளிலுமே முறைசார் தொழில்களிலும் முறைசாரா தொழில்களிலும் ஈடுபட்டுள்ளனர். பணித்தலங்களில் பெண்களின் பங்கேற்பு அதிகரித்திருப்பது என்பது வேலை தருகிற, உடன் வேலை பார்க்கிற, உயர்நிலையில் இருக்கிற ஆண்களிடமிருந்து பாலியல் துன்புறுத்தல்களை பெண்கள் எதிர்கொள்ளும் நிலைமைக்கும் இட்டுச் சென்றுள்ளது. பிரதானமாக இரண்டு வகை துன்புறுத்தல்களை பெண்கள் எதிர்கொள்கிறார்கள் என்று பாலியல் துன்புறுத்தல் தொடர்பான ஆய்வுகள் காட்டுகின்றன: ஒன்று, வேலை சார்ந்த பலன்களுக்காக பாலியல் சலுகைகளைக் கோருதல் (அதாவது ஒன்றுக்கு பதிலாக இன்னொன்று என வற்புறுத்தப்படும் சலுகை); இன்னொன்று ஒரு பெண்ணை இழிவுபடுத்துவதற்காக அல்லது அவருக்கு பாதகமான, ஆத்திரமூட்டக்கூடிய வேலை நிலைமைகளை ஏற்படுத்துவதற்காக அதிகாரத்தைத் தொடர்ந்து தவறாகப் பயன்படுத்துதல்.

## பாலியல் துன்புறுத்தல் அரசமைப்பு சாசனத்திற்கு எதிரானது

பணித்தலத்தில் பாலியல் துன்புறுத்தல் என்பது பெண்களுக்கு எதிரான ஒரு வகை பாலினம் சார்ந்த வன்முறையாகும். இதர வடிவிலான வன்முறைகளைப் போலவே இதுவும், பெண்களின் உள்ளார்ந்த கவுரவத்தை சீர்குலைக்கிறது. பாலின அடிப்படையில் பாகுபடுத்துகிற இந்தச் செயல் வேலை செய்யும் இடத்தில் சம வாய்ப்பு, கவுரவம், பாதுகாப்பு, உத்தரவாதம் ஆகியவற்றைப் பெறுவதில் பெண்களுக்கு உள்ள உரிமையைத் தட்டிப்பறிப்பதாகும். இந்திய அரசமைப்பு சாசனத்தின் சட்ட உரைகள் 14, 15, 16, 19, 21 ஆகியவற்றை பாலியல் துன்புறுத்தல் செயல்கள் மீறுகின்றன. பெண்களுக்கு எதிரான அனைத்து வகை பாகுபாடுகள், ஒழிப்பு, சிறப்பு உடன்படிக்கை (CEDAW) நிறைவேற்றிய 11வது தீர்மானத்தையும் இது மீறுகிறது. வேலை வாய்ப்புக் களங்களில் பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை ஒழித்துக்கட்ட அனைத்து நாடுகளின் அரசுகளும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளும் என்று அந்தத் தீர்மானம் கூறுகிறது. வேலை நிலைமைகளில் தங்களது நலத்திற்கும் பாதுகாப்பிற்கும் பெண்கள் உரிமை பெற்றிருப்பதை அரசுகள் உறுதிப்படுத்தும் அந்தத் தீர்மானம் கூறுகிறது. அந்தத் தீர்மானத்தை இந்தியா அங்கீகரித்துள்ளது. ஆகவே, பணித்தலங்களில் பெண்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் கடமை இந்திய அரசுக்கு இருக்கிறது, மேலும், அந்த உடன்படிக்கைக்கான ஐ.நா. குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பொதுப் பரிந்துரை எண்.19, பாலியல் துன்புறுத்தல் என்பது பெண்களுக்கு எதிரான ஒரு

வன்முறையே என தெளிவாக அறிவித்துள்ளது. அத்துடன் தனிப்பட்ட நபர்களால் நிகழ்த்தப்படும் இத்தகைய பாலினம் சார்ந்த வன்முறைகளுக்கு அரசாங்கங்கள் பொறுப்பேற்க வேண்டும் என்றும் அந்தப் பரிந்துரை கூறுகிறது. சர்வதேச பொருளாதார, சமூக, பண்பாட்டு உரிமைகள் மாநாடு, சர்வதேச குடிமை மற்றும் அரசியல் உரிமைகள் மாநாடு ஆகிய உள்ளிட்ட இதர பன்னாட்டு மாநாடுகளும் பெண்களின் சமத்துவத்தை வலியுறுத்தியுள்ளன. பாலின அடிப்படையில் பாகுபாடு எதுவும் இருக்காது என்பதை உறுதிப்படுத்துப்படுத்துவது அரசாங்கங்களின் கடமை என்றும் அந்த மாநாடுகள் வலியுறுத்தியுள்ளன. வேலை சார்ந்த அனைத்து பாகுபாடுகளையும் ஒழித்துக்கட்டுவதற்கான தேசிய கொள்கை ஒன்றை செயல்படுத்த வேண்டும் என்ற பொறுப்பையும் நாடுகளின் அரசுகளுக்கு சர்வதேச தொழிலாளர் அமைப்பு பாகுபாட்டு (வேலை மற்றும் தொழில்) மாநாடு வழங்கியுள்ளது.

விஷாகா மற்றும் இதரர் *எதிர்* ராஜஸ்தான் மாநில அரசு வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்துள்ள சிறப்பான தீர்ப்பில், பணித்தலங்களில் பெண்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள் என்ற பிரச்சனை ஏற்கப்பட்டுள்ளது. அத்தகைய நடைமுறைகளைக் கட்டுப்படுத்துவதற்கான வழிகாட்டல்களையும் உச்சநீதிமன்றம் வகுத்துள்ளது. பணித்தலங்களில் பெண்கள் எதிர்கொள்ளும் பாலியல் துன்புறுத்தல்களிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்கு தற்போதைய குடிமைச் சட்டங்களும் குற்றவியல் சட்டங்களும் போதுமானதாக இல்லை, இதற்காக உரிய சட்டங்கள் இயற்றப்படுவது அவசியம் என்றும் உச்சநீதிமன்றம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

**சட்டத்தின் கூறுகள்:**

உச்சநீதிமன்றம் வகுத்தளித்துள்ள வழிகாட்டல்களின் அடிப்படையில் நாடாளுமன்றம் 'பணித்தலத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம் – **2013**' என்ற சட்டத்தை நிறைவேற்றியுள்ளது (இனி இது சட்டம் என்று குறிப்பிடப்படும்).

- ***வரையறைகள்:*** சட்டத்தில் உள்ள சில சித்தரிப்புகளை சரியாக புரிந்துகொள்வதற்கான வரையறுப்புகளுக்கு வழி செய்யப்பட்டுள்ளது. 'பாலியல் துன்புறுத்தல்', 'பாதிக்கப்பட்டப் பெண்', 'வீட்டுப்பணியாளர்', 'வேலை அளிப்பவர்', 'ஊழியர்', 'பணித்தலம்', 'முறைசாரா தொழில்துறை', ஆகியவை உள்ளிட்ட சித்தரிப்புகள் சட்டத்தில் உள்ளன. 'பாலியல் துன்புறுத்தல்' என்றால் உடல் ரீதியானத் தொடர்பு மற்றும் முனைப்புகள்; அல்லது பாலியல் சலுகைகளை வற்புறுத்துதல் அல்லது கோருதல்; அல்லது பாலியல் அர்த்தம் கொண்ட பேச்சுகள்; அல்லது ஆபாசப் படங்களைக் காட்டுதல்; அல்லது உடல் ரீதியாக, வாய்மொழியாகவோ அல்லது வாய்மொழியற்ற பாலியல் தன்மையுள்ள எந்த ஒரு விரும்பத்தகாத செயலும்; அல்லது நேரடியான அல்லது மறைமுகமான நடத்தைகள் என்று பொருள் தரப்பட்டுள்ளது. 'பாதிக்கப்பட்ட பெண்' என்றால் இந்தச் சட்டத்தின் கீழ் ஒரு பணித்தலம் சார்ந்த, எந்த வயதிலும் உள்ள, அங்கு பணியில் நியமிக்கப்பட்டுள்ள அல்லது நியமிக்கப்படாத எந்த ஒரு பெண்ணும் என்று விளக்கம் தரப்பட்டுள்ளது. அதேபோல் ஒரு குடியிருப்பிடம் அல்லது ஒரு வீட்டில் வீட்டு வேலைகளுக்காக அமர்த்தப்பட்டுள்ள, எந்த வயதிலும் உள்ள வீட்டுப் பணியாளரையும் இந்தச் சட்டம் பாதிக்கப்பட்ட பெண் என அங்கீகரிக்கிறது. 'வீட்டுப் பணியாளர்' என்றால் எந்த ஒரு வீட்டிலும் பணம் அல்லது வேறு வகையிலான ஊதியத்தின் அடிப்படையில், நேரடியாக அல்லது ஏதேனும் முகமையின் மூலமாக நியமிக்கப்பட்டுள்ள, நிரந்தரமான, அல்லது தற்காலிகமான, பகுதி நேர அடிப்படையில் அல்லது முழு நேர அடிப்படையில் அமர்த்தப்பட்டுள்ள ஒரு பெண் என்று சட்டம் வரையறுத்துள்ளது. ஆனால், வேலை அளிப்பவரின் குடும்பத்தைச் சேர்ந்த எந்த உறுப்பினரையும் சட்டம் இதில் உள்ளடக்கவில்லை. இந்தச் சட்டத்தின் கீழ் 'ஊழியர்' என்பதற்கு பணித்தலத்தில்

தொடர்ச்சியான, தற்காலிகமான, இடைக்கால, தினசரிக் கூலி அடிப்படைகளில் நேரடியாக அல்லது ஒரு ஒப்பந்ததாரர் உள்ளிட்ட ஒரு முகவர் மூலமாக (முதன்மையாக வேலையளிப்பவருக்கு தெரிந்தோ தெரியாமலோ) நியமிக்கப்படும் ஒரு நபர் மற்றும் சன்மானத்திற்காக வேலை செய்கிற அல்லது சன்மானமின்றி வேலை செய்கிற அல்லது தானாக தன்னார்வ அடிப்படையில் ஒப்பந்தத் தொழிலாளர், பயிற்சிக்கால பணியாளர், பயிற்சி ஊழியர், பயிற்சி உதவியாளர் அல்லது வேறு எந்தப் பேரிலும் இருப்பவர் உள்ளிட்ட பணியாளர் என்று பொருள் தரப்பட்டுள்ளது. 'பணித்தலம்' என்பதை இந்தச் சட்டம் அரசாங்கம், உள்ளாட்சி அமைப்பு, அரசு குழுமம், அரசுக் கழகம், கூட்டுறவு சங்கத்திற்கு நேரடியாக அல்லது மறைமுகமாக சொந்தமாக உள்ள, நிதி வழங்கப்படுகிற, எந்த ஒரு துறை, அமைப்பு, அரசு ஏற்று நடத்தும் நிறுவனம், நிறுவனம், வர்த்தக நிறுவனம், அலுவலகம், கல்வி நிறுவனம், கிளை/அலகு என்று வரையறுத்துள்ளது. இது உற்பத்தி, வழங்கல், விநியோகம், விற்பனை அல்லது சேவை உள்ளிட்ட வர்த்தகம் சார்ந்த, தொழில் சார்ந்த, பணி சார்ந்த, கல்வி சார்ந்த, பொழுது போக்கு சார்ந்த, தொழிற்சாலை சார்ந்த, மருத்துவ சேவைகள் சார்ந்த, பணிகளை மேற்கொள்ளும் எந்த ஒரு தனியார் துறை அமைப்பு, தனியார் நிறுவனம், தனியார் பொறுப்பேற்பு நிறுவனம், சங்க அமைப்பு, அரக்கட்டளை, என்.ஜி.ஓ., சேவை வழங்குனர் ஆகியவற்றையும் உள்ளடக்குவதாகும். மருத்துவமனை, மருத்துவ பராமரிப்பு இல்லம், விளையாட்டு நிறுவனம், விளையாட்டு அரங்கம், விளையாட்டு போட்டிகள் வளாகம் உள்ளிட்ட, குடியிருப்பு சார்ந்த அல்லது சாராத, பயிற்சிக்காக பயன்படுத்தப்படுகிற அல்லது வேலையளிப்பவரால் வழங்கப்படும் போக்குவரத்து உள்ளிட்ட, வேலையின்போது ஊழியர் சென்று வர நேரிடுகிற இடம் என்பதும் பணித்தலம் என்பதில் உள்ளடங்குவதாகும். மேலும், ஒரு குடியிருப்பிடம் அல்லது ஒரு வீடு என்றும் இது பொருள்படும்.

- **பாலியல் துன்புறுத்தல் தடுப்பு:** எந்த ஒரு பணித்தலத்திலும் மறைமுகமாக அல்லது வெளிப்படையாக பாரபட்சமான முறையில் நடத்தப்படுவது குறித்து உறுதியளித்தல் அல்லது அந்தப் பெண்ணின் வேலை வாய்ப்பில் பாதகமாக நடத்தப்படுவது குறித்த அச்சுறுத்தலுக்கு எந்த ஒரு பெண்ணும் உட்படுத்தப்படக் கூடாது என்று சட்டம் தெளிவுபடுத்துகிறது. அந்தப் பெண்ணின் தற்கால அல்லது எதிர்கால வேலை வாய்ப்பு நிலை குறித்தும் அவர் அச்சுறுத்தப்படக்கூடாது என்று சட்டம் கூறுகிறது. கட்டாயப்படுத்தப்பட்ட அல்லது பாதகமான அல்லது விருப்பமற்ற சூழலில் வேலை செய்ய வைக்கப்படக் கூடாது என்றும் அவரது உடல் நலனை அல்லது பாதுகாப்பை பாதிக்கக்கூடிய வகையில் சிறுமைப்படுத்தும் முறையில் அவர் நடத்தப்படக்கூடாது என்றும் சட்டம் கூறுகிறது.

- **உள் புகார்கள் குழு மற்றும் வட்டார புகார்கள் குழு:** பணித்தலத்தில் பாலியல் துன்புறுத்தல் தொடர்பாக பாதிக்கப்பட்ட ஒரு பெண் அளிக்கும் புகார் மீது விசாரணை நடத்துவதற்காக இரண்டு வகையான குழுக்களை அமைக்க சட்டம் வழி செய்கிறது. அனைத்து நிர்வாக அலுவலகங்கள் அல்லது அலகுகளில், வேலை அளிப்பவரால் உள் புகார்கள் குழு அமைக்கப்பட வேண்டும். அதில் கூடிய வரையில் உயர்நிலை அளவில் வேலையில் நியமிக்கப்பட்டிருக்கக்கூடிய ஒரு பெண் தலைமை அலுவலர் (அத்தகைய ஒரு பெண் இருப்பாரானால்), பெண்களின் நலனுக்கு உறுதியேற்றுக்கொண்டவர்களாக அல்லது சமூகப் பணியில் அனுபவமுள்ள அல்லது சட்ட அறிவு உள்ளவர்களாக, ஊழியர்களிடையே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு பெண் உறுப்பினர்கள், பெண்களின் நலனில் அக்கறையுள்ள அல்லது பாலியல் துன்புறுத்தல் விஷயங்களை அறிந்துள்ள ஒரு என்.ஜி.ஓ. அமைப்பைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் கொண்டதாக அந்தக்

குழு அமைக்கப்பட வேண்டும். ஒரு நிறுவனத்தில் 10 தொழிலாளர்களுக்கும் குறைவாக இருப்பதால் உள்புகார்கள் குழு அமைக்கப்படாத நிலையில் அல்லது வேலை அளிப்பவர் மீதுதான் புகார் செய்யப்படுகிறது என்ற நிலையில், பாதிக்கப்பட்டப் பெண் வட்டார புகார்கள் குழுவிடம் தனது புகாரை அளிக்கலாம். வட்டார புகார்கள் குழு மாவட்ட ஆட்சியரால் அமைக்கப்படும். ஒவ்வொரு வட்டாரம்/கோட்டம்/வட்டத்திலும் பாலியல் துன்புறுத்தல் பற்றிய புகார்களை பெறுவதற்காக ஒரு உயர்நிலை அலுவலரை மாவட்ட அலுவலர் நியமிப்பார் (மாவட்ட அலுவலர் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டவராக இருப்பார்; அவர் மாவட்ட மாஜிஸ்ரேட்/ கூடுதல் மாவட்ட மாஜிஸ்ரேட், அல்லது மாவட்ட ஆட்சியர்/துணை ஆட்சியர் நிலையில் இருக்கலாம்). மாவட்ட அலுவலரால் உயர்நிலை அலுவலரால் பெறப்படும் புகார், அது பெறப்பட்ட 7 நாட்களுக்குள் வட்டார புகார்கள் குழுவிற்கு அனுப்பப்படும். வட்டாரப் புகார்கள் குழுவின் உறுப்பினர் மாவட்ட ஆட்சியரால் நியமிக்கப்படுவார். அதில், சமூகப் பணிகள் முன்னணியில் உள்ள பெண்களின் நலனில் அக்கறையுள்ள ஒரு முன்னணி பெண் தலைவராக இருப்பார். மாவட்டத்தின் வட்டாரம், கோட்டம், வட்டம் அல்லது நகராட்சியில் பணிபுரியும் பெண்களிடையே இருந்து ஒரு உறுப்பினரைக்கொண்டிருக்கும். பெண்களின் நலனில் அக்கறையுள்ள அல்லது பாலியல் துன்புறுத்தல் விஷயங்களை அறிந்த, சட்டப் பின்னணி உள்ள அல்லது சட்ட அறிவு உள்ள, எஸ்.சி./எஸ்.டி. அல்லது ஓ.பீ.சி. சமூகங்களை அல்லது சிறுபான்மையினர் சமூகங்களைச் சேர்ந்த இரண்டு உறுப்பினர்கள் இருப்பார்கள்; அவர்களில் ஒருவராவது பெண்ணாக இருக்க வேண்டும். புகார்கள் குழுவின் உறுப்பினர் சேர்மானத்தில் குறைந்தது பாதிப் பேராவது பெண்களாக இருப்பது அவசியம்.

- **பாலியல் துன்புறுத்தல் புகார்:** பாலியல் துன்புறுத்தல் புகார் பணித்தலத்தில் பாலியல் துன்புறுத்தல் குறித்து பாதிக்கப்பட்ட ஒரு பெண் அல்லது அவரது சட்டப்பூர்வ வாரிசுகள் அல்லது அவரது உடல் ரீதியான இயலாமை அல்லது மன ரீதியான இயலாமை காரணமாக அல்லது மரணம் காரணமாக பரிந்துரைக்கப்படக்கூடிய இத்தகைய வேறு நபரால் ஒரு புகார் செய்யப்படுவதற்கு சட்டம் வழி வகுக்கிறது.

- சம்பவம் நடந்த மூன்று மாத காலத்திற்குள் ஏதேனும் ஒரு குழுவிடம் புகார் செய்யப்பட வேண்டும், தாமதத்திற்கு நியாயமான காரணம் இருப்பதாக குழுக்கள் கருதும் நிலையில், இந்த காலகட்டம் மூன்று மாதங்களுக்கு மிகாத அளவிற்கு மேற்கொண்டு நீட்டிக்கப்படலாம். புகார் எழுத்துப்பூர்வமாக இருக்க வேண்டும். பாதிக்கப்பட்ட பெண் எழுத்துப்பூர்வமாக புகார் அளிப்பதற்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்வது குழு உறுப்பினர்களின் கடமையாகும். அத்தகைய புகாரின் மீதான விசாரணை நிலுவையில் இருக்கும்போது, பாதிக்கப்பட்ட பெண் தன்னையோ அல்லது எதிர் மனுதாரரையோ வேறு பணித்தலத்திற்கு இடமாற்றம் செய்யுமாறு அல்லது மூன்று மாதங்களுக்கு விடுப்பு அளிக்குமாறு அல்லது சட்டவிதிகளில் வகுத்துரைக்கப்பட்டுள்ள அத்தகைய இதர நிவாரணங்களை அளிக்குமாறு பரிந்துரை செய்ய குழுக்களை பாதிக்கப்பட்ட பெண் கேட்டுக்கொள்ளலாம். குழுக்களின் பரிந்துரைகளை செயல்படுத்துவதும் அவ்வாறு செயல்படுத்தியதற்கான அறிக்கையை குழுக்களுக்கு அளிப்பதும் வேலை அளிப்பவரின் கடமை.

- **விசாரணை:** எந்த ஒரு குழுவும் தனது விசாரணையை முடித்துக்கொண்ட பிறகு, தான் கண்டறிந்தவை பற்றிய அறிக்கையை வேலை அளிப்பவருக்கு மாவட்ட அலுவலருக்கு, நிலைமையைப் பொறுத்து, வழங்க வேண்டும். அத்தகைய அறிக்கையானது அது நிறைவு செய்யப்பட்ட 10 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு கிடைக்கச்

செய்யப்பட வேண்டும். விசாரணைக்குப் பிறகு, பாலியல் துன்புறுத்தல் குறித்த புகார் நிரூபிக்கப்படவில்லை என்று ஏதேனும் ஒரு குழு முடிவுக்கு வருமானால் குறிப்பிட்டப் பிரச்சனையில் நடவடிக்கை எதுவும் தேவையில்லை என்று வேலை அளிப்பவருக்கு குழு பரிந்துரை செய்யும். குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் நிலையில், பாலியல் துன்புறுத்தலுக்காக, பணி விதிகளுக்கு உட்பட்டு தவறான நடத்தைக்கான நடவடிக்கை எடுக்குமாறு வேலை அளிப்பவர் / மாவட்ட அலுவலருக்கு குழு பரிந்துரை செய்யும். பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகையை, எதிர்மனுதாரரின் ஊதியம் அல்லது கூலியிலிருந்து கழித்துக்கொள்ளவும், பணிக்காலம் முடிந்துவிட்டதால் அல்லது எதிர்மனுதாரர் வேலைக்கு வராததால் அந்தத் தொகையை கழிக்க முடியாத நிலையில், அந்தத் தொகையை பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு வழங்குமாறு எதிர்மனுதாரருக்கு ஆணையிடப்பட வேண்டும். எதிர்மனுதாரர் அந்தத் தொகையை வழங்கத் தவறும் நிலையில் அது நில வருவாய் நிலுவைத் தொகையாக அவரிடமிருந்து மீட்கப்பட வேண்டும். குழுக்களின் பரிந்துரைகள் கிடைக்கப்பெற்ற **60** நாட்களுக்குள் வேலையளிப்பவர் அல்லது மாவட்ட அலுவலர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- **இழப்பீடு:** பாதிக்கப்பட்ட பெண்ணுக்கான இழப்பீடு தொகையை தீர்மானிக்கிறபோது, வேலை வாய்ப்பில் ஏற்பட்ட இழப்பிற்கு அப்பால், பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய மன வேதனை, வலி, துயரம் மற்றும் உணர்ச்சிப்பூர்வமான உளைச்சல் ஆகியவற்றை குழுக்கள் கவனத்தில் கொள்ளும். உடல் ரீதியான சிகிச்சை அல்லது மனநல சிகிச்சைக்காக அவருக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய மருத்துவ செலவுகளையும் குழுக்கள் கவனத்தில் கொள்ளும். எதிர்மனுதாரரின் வருமானம் மற்றும் நிதிநிலையையும் தொகையை முழுமையாக அல்லது தவனைகளில் செலுத்தக்கூடிய வாய்ப்புகளையும் குழுக்கள் பரிசீலிக்கும்.

- **பொய்யான புகாருக்கும் வெளியிடலுக்குமான தண்டனை:** பொய்யான அல்லது தீய நோக்கத்துடனான புகார் மற்றும் பொய்யான சாட்சியத்திற்குத் தண்டனையளிக்க சட்டத்தில் வழி செய்யப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட பெண்ணின் புகார் பொய்யானது அல்லது தீய நோக்கம் உள்ளது அல்லது போலியான ஆவணங்கள் அல்லது தவறாக வழிகாட்டும் ஆவணங்கள் தரப்பட்டுள்ளது என்ற முடிவுக்குக் குழுக்கள் வருமானால், வேலையளிப்பவர் அல்லது மாவட்ட அலுவலர் பணி விதிகளின் கீழ் அல்லது அத்தகைய விதிகள் இல்லாத நிலையில் சட்டவிதிகளின் கீழ் வகுத்துரைக்கப்பட்ட முறையில் நடவடிக்கை எடுக்க முடியும். பாதிக்கப்பட்ட பெண், எதிர்மனுதாரர் மற்றும் சாட்சிகளின் அடையாளம், முகவரி மற்றும் குழுக்களின் சமாதானம், விசாரணை, பரிந்துரைகள் தொடர்பான ரகசியத்தன்மைக்கு சட்டத்தில் வழி செய்யப்பட்டுள்ளது. வேலையளிப்பவர் எடுக்கும் நடவடிக்கை எந்த விதத்திலும் பொதுமக்களுக்கும், பத்திரிகைகளுக்கும் ஊடகங்களுக்கும் தெரியப்படுத்தப்படக்கூடாது; எந்த வகையிலாவது இது மீறப்படுவது தண்டனை நடவடிக்கைக்கு உரியதாகும்.

  - **சமாதானம்:** விசாரணை தொடங்கப்படுவதற்கு முன்பாக, பாதிக்கப்பட்ட பெண்ணின் வேண்டுகோள் அடிப்படையில் சமாதானத்திற்கு சட்டத்தில் வழி செய்யப்பட்டுள்ளது. பிரச்சனையில் ஒரு உடன்பாடு ஏற்படுத்துவதற்குக் குழுக்கள் முயற்சி செய்யும். அவ்வாறு உடன்பாடு ஏற்பட்டவுடன் அதன் சரத்துகள் வேலையளிப்பவர் அல்லது மாவட்ட அலுவலருக்கு, அந்தப் பரிந்துரைகளைச் செயல்படுத்துவதற்காக அனுப்பிவைக்கப்படும். உடன்பாடு ஏற்பட்ட பிறகு அந்த வழக்கில் மேற்கொண்டு

விசாரணை நடத்தப்பட மாட்டாது. ஆயினும், சமாதான முயற்சி மூலமாக வழக்கில் உடன்பாடு எட்டப்படுகிறபோது பணம் சார்ந்த உடன்பாடு இருக்கக்கூடாது.

- **மேல்முறையீடு:** குழுக்களின் பரிந்துரைகளால் அல்லது அத்தகைய பரிந்துரைகள் செயல்படுத்தப்படாமையால் பாதிக்கப்படும் எந்த நபரும் பணி விதிகளின் கீழ் அல்லது அத்தகைய விதிகள் இல்லாத நிலையில் வகுத்துரைக்கப்பட்டுள்ள முறையிலான விதிகளின் கீழ் அதிகார அமைப்பிடம் மேல்முறையீடு செய்யலாம்.

- **வேலையளிப்பவர்/மாவட்ட அலுவலரின் கடமைகள்:** பணியாளர் பாதுகாப்பு உள்ளிட்ட பாதுகாப்பான பணிச் சூழல் இருப்பதை வேலையளிப்பவர் உறுதிப்படுத்த வேண்டும்; பாலியல் துன்புறுத்தலுக்கான சட்டப்பூர்வு தண்டனை நடவடிக்கைகள் குறித்தும் உள் விசாரணைக்குழு அமைக்கப்படுவது குறித்தும் காட்சிப்பூர்வ அறிவிப்பைச் செய்ய வேண்டும்; சட்ட விதிகள் குறித்து ஊழியர்களுக்கும் உள் விசாரணைக்குழு உறுப்பினர்களுக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்; உள் விசாரணைக்குழு தனது பணிகளை மேற்கொள்வதற்குரிய வசதிகளைச் செய்து தர வேண்டும்; குழுக்களின் முன் எதிர்மனுதாரர் மற்றும் சாட்சிகளின் வருகையை உறுதிப்படுத்த வேண்டும்; இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் புகார் செய்திட பெண்ணுக்கு உதவி செய்ய வேண்டும்; பணி விதிகளின் கீழ் பாலியல் துன்புறுத்தலை ஒரு தவறான நடத்தையாக அறிவிக்க வேண்டும்; உள் விசாரணைக்குழுக்கள் உரிய காலத்தில் அறிக்கை அளிப்பதைக் கண்காணிக்க வேண்டும். மாவட்ட அலுவலரும் வட்டாரக் குழு உரிய காலத்தில் அறிக்கை அளிப்பதை உறுதிப்படுத்த வேண்டும்; பாலியல் துன்புறுத்தல் குறித்தும் பெண்களின் உரிமைகள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான நடடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

- **குற்றத்தை நீதிமன்றங்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுதல்:** பெருநகர நீதிபதி (மெட்ரோபாலிட்டன் மேஜிஸ்டிரேட்) அல்லது நீதித்துறை நடுவர் (ஜூடிசியல் மேஜிஸ்டிரேட்) நிலைக்குக் குறையாத நீதிமன்றங்கள், பாதிக்கப்பட்ட பெண்ணால் அல்லது குழுக்களின் அங்கீகாரம் பெற்ற எந்த நபராலும் செய்யப்படும் புகார் அடிப்படையில், குற்றச்செயல் குறித்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும். இந்தச் சட்டத்தின் கீழ் வரும் எந்தவொரு குற்றமும் கைது நடவடிக்கைக்கு உரியதல்ல.

**சட்டத்தின் குறைபாடுகள்:** சட்டத்தின் நோக்கம் பாராட்டிற்குரியது. வீட்டுப் பணியாளர்கள் பயனுள்ள சட்ட வரையறைகளுக்குள் கொண்டுவரப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. ஆயினும் இதில் சில முக்கியக் குறைபாடுகள் உள்ளன. அவற்றை சரிசெய்யாவிட்டால் பாதிக்கப்படும் பெண்களுக்கு இது பயனற்றதாகிவிடும். அத்தகைய சில குறைபாடுகள் வருமாறு:

(1) மாவட்ட அலுவலராக நியமிக்கப்படுகிறவர் மாவட்ட மாஜிஸ்டிரேட் அல்லது மாவட்ட ஆட்சியர்தான். அவர்கள் ஏற்கெனவே பல பணிச்சுமைகளோடு இருப்பவர்கள். பெண்கள் ஒரு பாதுகாப்பான, உறுதியான சூழலில் இருக்க வேண்டும் என்பதற்காகவே மாவட்ட அலுவலருக்கு சட்டம் முக்கியமான பொறுப்புகளை அளிக்கிறது. ஆனால் இந்த இரு அதிகாரிகளில் ஒருவர்தான் மாவட்ட அலுவலராக இருப்பார் என்ற அறிவிப்பு அந்தப் பொறுப்புகளை முறையாகவும் பயனுள்ள முறையிலும் நிறைவேற்ற உதவாமல் போகக்கூடும்.

(2) பாதிக்கப்படும் பெண்களிடமிருந்து புகார்களைப் பெற்று வட்டாரக் குழுவுக்கு அனுப்புவதற்கு ஒவ்வொரு வட்டம், வட்டாரம், வார்டு அல்லது நகராட்சி மட்டத்தில் ஒரு

உயர்நிலை அலுவலர் மாவட்ட அலுவலரால் நியமிக்கப்படுவார் என்பது அதிகார வர்க்க நடைமுறையாக இருக்கிறது. இது அந்த உயர்நிலை அலுவலர் மட்டத்தில் புகார்கள் தேங்கிப்போவதற்கும் ஊழலுக்கும் வழி வகுக்கும். புகாரை உரிய இடத்திற்கு அனுப்பிவைக்க ஒரு ''கட்டணம்'' தேவை என்று உயர்நிலை அலுவலர் வற்புறுத்தக்கூடும். இது காவல் நிலையம் போன்றதொரு நிலைமையை ஏற்படுத்தக்கூடும். பாதிக்கப்படும் பெண் அளிக்கும் புகாரின் முக்கியத்துவத்தை சம்பந்தப்பட்ட அலுவலர் அறியாத, தனது புகாரை உரிய அலுவலர் ஏற்கச் செய்ய அந்தப் பெண் மூலைக்கு மூலை ஓட வேண்டிய நிலைமை ஏற்படக்கூடும். சம்பந்தப்பட்ட உயர்நிலை அலுவலர் மூலமாக வட்டாரக் குழுவை அணுகக்கூடியவர்கள் முறைசாரா தொழில்களைச் சார்ந்த பெண்களாகவும் வீட்டுப் பணியாளராக உள்ள பெண்களாகவும் இருப்பார்கள் என்கிறபோது அவர்களது நிலைமை எப்படியிருக்கும் என்பதை எளிதில் ஊகிக்கலாம்.

(3) வட்டாரக் குழு உறுப்பினர்கள் சேர்மான விதிகள், ஆட்சியதிகாரத்தில் உள்ள அரசியல் கட்சி சார்ந்த ஒருவரைத்தான் மாவட்ட அலுவலர் வட்டாரக் குழுவின் தலைவராக நியமிக்க வேண்டியிருக்கும் என்ற நிலைமைக்கு இட்டுச் செல்வதாகவே உள்ளன. கடந்த காலத்திலும் இப்போதும் தமிழ்நாடு மகளிர் ஆணையத்திற்குத் தலைவராக யார் நியமிக்கப்பட்டார்கள் என்பது, வட்டாரக்குழுக்களின் தலைவர்களாக யார் நியமிக்கப்படலாம் என்பதற்கான அறிகுறியாக இருக்கிறது. அதே போல் வட்டம், வட்டாரம், வார்டு அல்லது நகராட்சி அளவில் ஒரு பெண் உறுப்பினர் நியமிக்கப்படுவார் என்பதும், தலைவர் நியமனத்திலிருந்து மாறுபட்டதாக இல்லை.

(4) உள் குழு அல்லது வட்டாரக் குழு விசாரணை நடத்தவும், தனது அறிக்கையை வேலையளிப்பவர் அல்லது மாவட்ட அலுவலருக்கு அளிக்கவும், எதிர்மனுதாரர் மீது பணிவிதிகளின் கீழ் பாலியல் துன்புறுத்தலுக்கான நடவடிக்கை எடுக்கப் பரிந்துரை செய்யவும் சட்டத்தில் வழி செய்யப்பட்டுள்ளது. தவறான நடத்தை குறித்த குழுக்களின் அறிக்கை இறுதியானதா அல்லது துறைவாரி விசாரணைக்கான இன்னொரு வாய்ப்பு எதிர்மனுதாரருக்கு அளிக்கப்படுமா என்பது தெளிவுபடுத்தப்படவில்லை.

(5) பொய்புகார் அல்லது தீய உள்நோக்கம் கொண்ட புகாருக்காக, பாதிக்கப்படும் பெண்ணுக்குத் தண்டனை அளிப்பதற்கான விதி, குறிப்பாக வட்டாரக் குழுக்களில் பிரதானமாக அரசு அலுவலர்கள்தான் இருப்பார்கள் என்ற நிலையில், ஊக்கமளிப்பதாக இல்லை. பாதிக்கப்படும் பெண் வீட்டுப் பணியாளராக அல்லது ஊழியராக இருக்கும் நிலையில், சம வாய்ப்பு கிடைக்காது என்ற சூழலில், எதிர்மனுதாரர் மீது நடவடிக்கை எடுக்கக் கோர முடியாதவராக அந்தப் பெண் தடுக்கப்படக்கூடும்.

**சட்டம் பயனுள்ள வகையில் செயல்பட சில பரிந்துரைகள்:**

கவுரவத்துடன் வேலை செய்வதற்கான உரிமையைப் பெண்களுக்கு வழங்குவது என்ற சட்டத்தின் நோக்கம் நிறைவேற வேண்டுமானால், தீர்வுக்கான ஏற்பாடுகள் சரியான தொலைநோக்குடன் அமைய வேண்டும். எதிர்மனுதாரரின் ''விரும்பத்தகாத'' செயல்கள் அல்லது நடத்தைகள் மீது நடவடிக்கை எடுப்பது குறித்துதான் சட்டம் பேசுகிறதேயன்றி, பணித்தலத்திற்குள் ஒப்புதலுடனான பாலியல் நோக்கமுள்ள செயல்கள் மீதான நடவடிக்கை குறித்து எதுவும் சொல்லவில்லை. எதிர்மனுதாரரின் நடத்தை அல்லது செயல் ''விரும்பத்தகாத'' என்ற வரையறைக்குள் வருமா என்பது, புகாரை விசாரிக்கும் குழுவின் கண்ணோட்டத்தைப் பொறுத்ததாகவே இருக்கும். விரும்பத்தகாத பாலியல் செயல் என்ற புகாரை மறுப்பதற்குப்

பொதுவாகக் கிளப்பப்படும் விசயங்கள், புகார் அளிக்கும் பெண்ணின் பாலியல் நடத்தை, அவரது ஆடை, அணுகுமுறை பற்றியதாகவே இருக்கும்; பாதிக்கப்படும் பெண் என்பதற்கான ஒரே மாதிரியான சித்தரிப்புகள் அந்தப் பெண்ணுக்குப் பொருந்தாது என்று காட்டுவதாகவே இருக்கும். **வைல்மேன் எதிர் மினிலேக் இன்ஜினீரிங் லிட்.** வழக்கில் (பிரிட்டன், தொழில் உறவுகள் சட்டம் பற்றிய அறிக்கை, 1988), புகார் அளித்த பெண் பணித் தலத்தில் உணர்வுகளைத் தூண்டக்கூடிய வகையில் ஆணையணிந்திருந்தார் என்று காட்டுகிற ஆதாரம் தாக்கல் செய்யப்பட்டது; அதனால் புகாரில் குறிப்பிடப்பட்டிருந்த பாலியல் வக்கிரப் பேச்சு அந்தப் பெண்ணால் விரும்பப்பட்டது, வரவேற்கப்பட்டது என்றே எடுத்துக்கொள்ள வேண்டும் என குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் வாதிடப்பட்டது. எனினும் நீதிமன்றம் அந்த வாதத்தைத் தள்ளுபடி செய்தது. குற்றம் நடந்திருக்கிறதா இல்லையா என்று தீர்மானிப்பதற்குப் பெண்ணின் நடத்தை ஒரு அடிப்படையாகாது, ஒரு நபர் தன்னைப் பற்றிய பாலியல் தன்மையுள்ள பேச்சு தான் விரும்புகிற இவர் அல்லது அவரிடமிருந்து வருமானால் ஏற்றுக்கொள்ளலாமே தவிர, மூன்றாவது நபரிடமிருந்து வருவதை ஏற்க வேண்டும் என்பதில்லை என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

மேலும், புகார் அளிக்கும் பெண், எதிர்மனுதாரர் மீது புகார் செய்வதற்கு முன்பாகக் குறிப்பிட்ட காலத்திற்குப் பாலியல் செயல்களில் ஈடுபட்டிருந்திருக்கலாம் என்ற நிலைமைகளும் உண்டு. மேலோட்டமாகப் பார்த்தால் அத்தகைய உறவு ஒப்புதலுடன் நடந்தது போலத்தான் தோன்றும். ஆனால், அதிகார வேறுபாடுகளின் தன்மை என்ன என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். வாழ்வாதாரம், பதவி உயர்வு, ஆதாயங்கள் போன்ற காரணங்களுக்காக அத்தகைய பாலியல் முயற்சிகளுக்குப் பெண் இரையாகக்கூடும். அப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தனவா என்பதை ஆராய வேண்டியது விசாரணைக் குழுக்களின் கடமையாகும். **மெரிட்டர் சேவிங்ஸ் பேங்க் எதிர் மைக்கேல் வின்சன்** (அமெரிக்கா, 477 யுஎஸ் 57–1986) வழக்கில், நீதிமன்றம் புகார்தாரர் தன் விருப்பத்தோடு பாலியல் செயலில் பங்கேற்றார் என்ற வாதத்தைத் தள்ளுபடி செய்தது. ''புகார்தாரர் தனது விருப்பத்திற்கு எதிராகக் கட்டாயப்படுத்தப்படவில்லை என்பதால் அவர் தன்விருப்பத்தோடு பாலியல் செயலில் ஈடுபட்டார் என்பது பாலியல் துன்புறுத்தல் தொடர்பான வழக்கில் ஏற்கத்தக்க வாதம் அல்ல. குறிப்பிட்ட பாலியல் சார்ந்த செயல்கள் தனது விருப்பத்திற்கு மாறாக நடந்தன என்பதை அந்தப் பெண் எடுத்துக்காட்டுகிறாரா என்பதை ஆராய்வதுதான் சரியான விசாரணையாக இருக்குமேயன்றி, பாலியல் உடலுறவில் அவர் தன்விருப்பத்தோடு பங்கேற்றாரா என்பதையல்ல,'' என்று அமெரிக்க நீதிமன்றம் தனது தீர்ப்பில் கூறியுள்ளது.

ஒரு பெண்ணுக்கு அவரது வேலைச் சூழல் இணக்கமற்றதாக, அவரைத் துன்புறுத்துவதாக அல்லது அச்சுறுத்துவதாக இருக்குமானால், அது நியாயமற்ற முறையில் அவரது வேலைச் செயல்பாட்டில் குறுக்கிடுவதாக இருக்கும்; உடல் சார்ந்த, மனம் சார்ந்த கடுமையான பிரச்சனைகளுக்கும் இட்டுச்செல்வபதாக இருக்கும். பணித்தலத்தில் தனது பணியாளருக்கு ஒரு பாதுகாப்பான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பது வேலையளிப்பவரின் கடமையாகும். ''நியாயமற்ற தலையீடு'' என்று கூறுகிறபோது, அது பாலியல் துன்புறுத்தல் பற்றிய புகார்கள் குறித்து விசாரிக்கும் குழுக்களின் கண்ணோட்டம் சம்பந்தப்பட்ட சிக்கலான விசயமாகிவிடுகிறது. இந்திய நீதிமன்றங்கள் ''நியாயமான மனிதர்'' என்ற ஒரு அளவுகோலைப் பயன்படுத்துவதற்குப் பெயர் பெற்றவை. ஒரு ''நியாயமான ஆண்'' செய்யக்கூடிய நியாயமற்ற செயல்கள் என்பதைப் பொறுத்தே அவற்றின் நியாயமற்ற தன்மையை இந்திய நீதிமன்றங்கள் தீர்மானிக்கின்றன. ஆனால், பாலியல் துன்புறுத்தல் வழக்குகளில் ஒரு மதிப்பீட்டிற்கு வர இந்த நியாயமான ஆண் என்ற அளவுகோலைக் குழுக்கள் பயன்படுத்துமானால், அது புகார் செய்கிறவருக்கு அநீதி இழைக்கப்படுவதற்கே இட்டுச் செல்லும். மேலும், பெண்களின் விசயத்தில் சமத்துவம் என்பதை ஒரு பாதுகாப்பான வழியாக இந்திய நீதிமன்றங்கள் பயன்படுத்தி வந்துள்ளனவேயன்றி, ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையேயான

வேறுபாட்டைப் புரிந்துகொண்டதில்லை. எடுத்துக்காட்டாக, **ஆடைகள் ஏற்றுமதி ஊக்குவிப்பு கவுன்சில் *எதிர்* ஏ.கே. சோப்ரா** வழக்கில் **(1999–1** எஸ்சிசி **759)** தீர்ப்பளித்த உச்சநீதிமன்றம், ‘‘ஒட்டுமொத்த விவரங்களும் எதிர்மனுதாரர் குறிப்பிட்ட பெண்ணைத் துன்புறுத்தியிருக்கிறார், சீண்டியிருக்கிறார், சோதனைக்கு உள்ளாக்கியிருக்கிறார், அற நெறிகளுக்கு மாறான செயலுக்கு உட்படுத்தியிருக்கிறார் என்பதைக் காட்டுகிறது; அது பண்பிற்கும் கவுரவத்திற்கும் உகந்ததாக இல்லை; விரும்பத்தகாத பாலியல் முனைப்புகளை முன்வைப்பதாக இருந்திருக்கிறது,’’ என்று கூறியுள்ளது. நீதிமன்றம் இங்கே அற நெறிகளுக்கும் பண்பிற்கும்தான் முக்கியத்துவம் அளித்திருக்கிறதேயல்லாமல், பெண்ணின் தனிப்பட்ட கவுரவத்திற்கும் பாதுகாப்பிற்குமான உரிமைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை என்பதைக் காண முடிகிறது.

பெண்ணின் கற்பு, அற நெறி ஆகியவை இன்றும் மையமான பிரச்சனைகளாகப் பார்க்கப்படுகிற நாட்டி, பாலியல் புகார்களை விசாரிக்கிற குழுக்கள் எப்படிப்பட்ட மதிப்பீடுகளைப் பயன்படுத்தும் என்பதை ஒருவர் புரிந்துகொள்ள முடியும். நீதிமன்றங்கள் இனியேனும் சமத்துவம் குறித்த சரியான அணுகுமுறைகளை மேற்கொள்ள வேண்டும். பெண்களுக்கு எதிரான பாகுபாடுகள் ஒழிப்பு மாநாட்டில் (CEDAW) இதைப்பற்றி வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையேயான வேறுபாடுகள் புரிந்துகொள்ளப்பட வேண்டும், பெண்கள் சமமான முறையில் நடத்தப்படுவதை உறுதிப்படுத்த, சரியான சட்ட விதிகள் மூலமாக அல்லது உறுதியான செயல்கள் மூலமாக மாறுபட்ட முறையில் கையாளப்பட வேண்டும் என்று அந்த சர்வதேச மாநாட்டு உடன்பாடு கூறுகிறது. எப்படி நியாயமன்ற செயல்கள் என்பதைத் தீர்மானிப்பதற்கு ‘‘நியாயமான ஆண்’’ என்ற அளவுகோல் பொருந்தாதோ அதே போல் நியாயமான பெண் என்ற அளவுகோலையும் ஏற்பதற்கில்லை. ஒரேமாதிரியான அணுகுமுறைகளைத்தான் அது வலிந்து திணிக்கும். வயது, வர்க்கம், இனம், பண்பாடு, கல்வி அல்லது பாலியல் பின்னணி ஆகிய வேறுபாடுகளைக் கருத்தில்கொள்ளாமல் எல்லாப் பெண்களையும் ஒரே மாதிரியாக வகைப்படுத்துவதற்குத்தான் அது இட்டுச் செல்லும். ஒருவேளை, எல்லாப் பெண்களுக்குமான ஒரே மாதிரியான அளவுகோல்களுக்கு மாறாக, ஒவ்வொரு வழக்கையும் புகார் செய்கிற பெண்ணின் கண்ணோட்டத்தில், அவரது பின்னணியைக் கருத்தில் கொண்டு ஆராய்வதற்கு உதவக்கூடிய ‘‘நியாயமான நபர்’’ என்ற அளவுகோலை உருவாக்குவது சரியான அணுகுமுறையாக இருக்கக்கூடும்.

ஒரு சலுகைக்கான பிரதிபலனாகவோ அல்லது இணக்கமற்ற பணிச்சூழல் காரணமாகவோ பாதிக்கப்படும் பெண்ணின் உடல் சார்ந்த அல்லது மனம் சார்ந்த துன்பத்திற்கான இழப்பீட்டுத் தொகையை முடிவு செய்கிறபோது, சம்பந்தப்பட்ட பெண்ணின் நடத்தை, ஆடை, அணுகுமுறை ஆகிய அம்சங்கள் பற்றிய தாக்கங்களுக்குக் குழுக்கள் உட்படக்கூடாது. விரும்பத்தாகத செயல்கள் நடந்திருக்கிறதா என்பதிலும், பணித்தலத்தின் இணக்கமற்ற, துன்புறுத்துகிற, அச்சுறுத்துகிற சூழல் நிலவியதா என்பதிலும்தான் குழுக்கள் கவனம் செலுத்த வேண்டுமேயன்றி பெண்ணின் தனிப்பட்ட வாழ்க்கை பற்றிய விசாரணைகளுக்குள் இறங்கக்கூடாது. **பர்ன்ஸ் *எதிர்* மெக் கிரேகர் எலெக்ட்ரானி இண்டஸ்ட்ரீஸ்** வழக்கில் **(** அமெரிக்கா **982** எஃப்.**2 – 959, 1992)** அமெரிக்க உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பில், பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளான பெண்ணால் அவருக்கு வேலையளிப்பவரின் பாலியல் அர்த்தமுள்ள பேச்சு விரும்பி வரவேற்கப்பட்டது என்று முடிவு செய்வதற்கு, அந்தப் பெண் தனது வேலை நேரத்திற்குப் பிறகு ஒரு நிர்வாணப் பத்திரிகை படம் எடுத்துக்கொள்வதற்குத் தன்னைக் காட்சிப்படுத்துகிறார் என்பது ஏற்புடையதல்ல என்று கூறியிருக்கிறது.

**நிறைவாக:**

பணித்தலத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பான, உச்சநீதிமன்றத்தின் ஒரு முன்னாள் நீதிபதி, ஒரு பத்திரிகையின் தலைமை ஆசிரியர் போன்ற பிரமுகர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளுக்கு அண்மைக் காலத்தில் ஊடகங்கள் முக்கியத்துவம் அளித்துள்ளன. ஆனால், ஏராளமான பெண்கள் தங்களுக்கு வேலை தருகிற, கண்காணிப்பாளர்களாக உள்ள, சக ஊழியர்களாக உள்ள ஆண்களால் பாலியல் துன்புறுத்தல்களைச் சந்தித்துக்கொண்டேதான் இருக்கிறார்கள். அதைப் பற்றி வெளியே சொல்ல முடியாதவர்களாக, அழுதுபுலம்பவும் இயலாதவர்களாக, எங்கிருந்தும் எப்படிப்பட்ட ஆதரவும் கிடைக்காதவர்ளாகத் துன்புறுத்தல்களுக்கு ஆளாகிறார்கள். அத்தகைய எண்ணற்ற பெண்களுக்குக் கிடைக்கக்கூடிய ஒரே ஆறுதல், குற்றவாளிகளுக்கு எதிராகச் சட்டத்தைப் பயன்படுத்துவதும் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதும், பெண்கள் இணக்கமின்மையிலிருந்தும் துன்புறுத்தலிருந்தும் விடுபட்ட சூழலில் வேலை செய்ய முடியும் என்ற நிலைமையை உருவாக்குவதும்தான். வேலை செய்யும் பெண்களுக்கு இந்தச் சட்டம் ஒரு ஆற்றலுள்ள கருவியாகப் பயன்பட முடியும், பெண்கள் இதைப் பயன்படுத்தி மாற்றங்களை ஏற்படுத்த முடியும். ஆயினும், பாலியல் துன்புறுத்தல் புகார்களை விசாரிக்கும் குழுக்கள் போன்ற செயல்படுத்தும் அமைப்புகளின் உறுப்பினர்கள் பெண்களின் சமத்துவ உரிமைகள் குறித்த தெளிவான தொலைநோக்குப் பார்வையைக் கொண்டிருத்தல் அவசியம். அப்போதுதான் அந்த மாற்றங்கள் பயனுள்ளதாக இருக்கும். முன்னேற்றத்திற்கும் வெற்றிக்குமான குறியீடு ஒரு அரசு அல்லது ஒரு சட்டம் என்ன செய்கிறது என்பதல்ல; மாறாக பெண்களுக்கான உண்மையான மாற்றங்களைக் கொண்டுவருவதில் எந்த அளவுக்கு அரசு சாதிக்கிறது என்பதே உண்மையான குறியீடாக இருக்க முடியும். நாட்டின் அரசமைப்பு சாசனத்திற்கும், சர்வதேச மாநாடுகளில் நிறைவேற்றப்பட்டு தானும் அங்கீகரித்த உடன்பாடுகளுக்கும் விசுவாசமாகச் செயல்பட அரசு கடமைப்பட்டிருக்கிறது. ஒரு சட்டத்தைக் கொண்டுவருவதோடு மட்டும் அரசின் கடமை நின்றுவிடுவதில்லை.

# தமிழ்நாடு பெண்களை தொல்லை செய்தல் தடுப்புச் சட்டம், 1998

**(தமிழ்நாடு சட்டம் 44/1998)**

*தமிழ்நாடு மாநிலத்தில் எந்த இடத்திலும் பெண்களை தொல்லை செய்தலை தடுப்பதற்கான[1] ஒரு சட்டம்*

இந்திய குடியரசின் 49வது ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றத்தில் பின்வருமாறு நிறைவேற்றப்படுகிறது:–

**பிரிவு 1. சுருக்கமான தலைப்பு மற்றும் தொடக்கம் – (1)** இந்தச் சட்டம் தமிழ்நாடு பெண்களை தொல்லை செய்தல் தடுப்புச் சட்டம், 1998 என்று அழைக்கப்படும்

(2) 1998 ஜுலை 30 முதல் இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்ததாகக் கருதப்படுதல் வேண்டும்

**பிரிவு 2.** பொருள் வரையறைகள் இந்தச் சட்டத்தில், உள்ளடக்கத்தில் வேறு பொருள் குறித்தாலன்றி,

(a) ''பெண்களை தொல்லை செய்தல்'' என்பது அவமதிப்பது அல்லது காயப்படுத்துவது அல்லது தொந்தரவு செய்வது அல்லது வன்முறையைப் பயன்படுத்துவது உள்பட மிரட்சியை, அச்சத்தை, வெட்கத்தை அல்லது சங்கடத்தை ஏற்படுத்துகிற அல்லது ஏற்படுத்தக்கூடிய எந்த ஒரு அநாகரிகமான நடத்தை அல்லது செயலை ஒரு ஆண் செய்வது என்று அர்த்தமாகும்;

(b) ''பொதுப்பணி வாகனம்'' என்பது மோட்டார் வாகனச் சட்டம் – 1988 (மத்திய சட்டம் 59/1988) பிரிவு 2 உட்பிரிவு 35ல் வரையறுக்கப்பட்டுள்ள அதே அர்த்தம் இருக்கும்;

(c) இந்தச் சட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள ஆனால் வரையறுக்கப்படாத வார்த்தைகளுக்கும் சித்தரிப்புகளுக்கும் இந்திய தண்டனைச் சட்டம், 1860 (மத்திய சட்டம் XLV 1860)ல் உள்ள அதே அர்த்தம் இருக்கும்.

**பிரிவு 3. பெண்களைத் தொல்லை செய்வதைத் தடை செய்தல்:** எந்த இடத்திலும் (பெண்களைத் தொல்லை செய்தல்) தடுக்கப்படுகிறது.

**பிரிவு 4. தண்டனை (பெண்களைத் தொல்லை செய்பவருக்கு):–** எந்த ஒரு கல்வி நிறுவனம், கோயில் அல்லது வேறு வழிபாட்டுத் தலம், பேருந்து நிறுத்தம், சாலை, ரயில் நிலையம், திரையரங்கம், பூங்கா, கடற்கரை, விழா கொண்டாட்ட இடம், பொது சேவை வாகனம் அல்லது நீர்வழி வாகனம் அல்லது வேறு எந்த ஒரு இடத்திலும் (பெண்களை / பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல்) செயலை செய்யக் கூடிய, அல்லது அதில் பங்கெடுக்கக் கூடிய அல்லது அதைத் தூண்டக்கூடிய எவரொருவருக்கும் மூன்றாண்டுகள் வரை நீட்டிக்கத்தக்க சிறைத் தண்டனையும், 10,000 ரூபாய்க்குக் குறையாத அபராதமும் விதிக்கப்படும்.

**பிரிவு 4.A. துன்புறுத்தலால் மரணம்:– (1)** உடல்ரீதியான காயம் அல்லது சாதாரணமான சூழல்கள் அல்லாத வேறு வகையில் ஒரு பெண்ணுக்கு மரணம் ஏற்படுமானால், மரணத்திற்கு சற்று முன்பாக அந்தப் பெண் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டார் என்று தெரிய வருமானால் அல்லது இந்திய தண்டனைச் சட்டம் 294, 354 அல்லது 509 (மத்திய சட்டம் XLV –

1860) ஆகிய பிரிவுகளின் கீழ் வரக்கூடிய ஒரு குற்றச் செயல் காரணமாக மரணம் ஏற்பட்டிருக்குமானால், அத்தகைய மரணம் துன்புறுத்தலால் மரணம் என்று கருதப்படும்.

(2) பிரிவு 4ல் என்ன கூறப்பட்டிருந்தாலும், மரணத்தை ஏற்படுத்தக்கூடிய எவரொருவரும், மரணத்தை ஏற்படுத்திய அந்தச் செயலானது,

(i) மரணத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் செய்யப்பட்டிருக்குமானால் அல்லது உடல் ரீதியாக ஏற்படுத்தப்படும் காயம் மரணத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருக்குமானால், அவருக்கு ஆயுள்கால சிறைத் தண்டனை வரையில் நீட்டிக்கத்தக்க காலத்திற்கான சிறைத் தண்டனையும் 15,000 ரூபாய்க்குக் குறையாத அபராதமும் விதிக்கப்படும்;

(ii) மரணத்தை ஏற்படுத்தும் என்று தெரிந்து, ஆனால் மரணத்தை ஏற்படுத்தும் நோக்கம் எதுவும் இல்லாமல் செய்யப்படுகிற அல்லது அத்தகைய உடல் ரீதியான காயம் மரணத்தை ஏற்படுத்தக்கூடுமானால், அவருக்கு பத்தாண்டுகள் வரை நீட்டிக்கத்தக்க காலத்திற்கு சிறைத் தண்டனையும் 15,000 ரூபாய்க்குக் குறையாத அபராதமும் விதிக்கப்படும்;

(iii) முரட்டுத் தனமானதாக அல்லது அலட்சியப்படுத்தப்பட்டதாக இருக்குமானால் அவருக்கு பத்தாண்டுகள் வரை நீட்டிக்கத் தக்க காலத்திற்கு சிறைத் தண்டனையும் 25,000 ரூபாய்க்குக் குறையாத அபராதமும் விதிக்கப்படும்;

**பிரிவு 4.B. துன்புறுத்தலால் தற்கொலை:– (1)** எந்த ஒரு பெண்ணும் தற்கொலை செய்து கொள்வாரானால், மரணத்திற்கு சற்றுமுன் அவர் எவரொருவராலும் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டதாக காட்டப்படுமானால், அல்லது அந்தப் பெண்ணைப் பொறுத்தவரை இந்திய தண்டனைச் சட்டம் (மத்திய சட்டம் XLV–1860) 294, 354, 509 ஆகிய பிரிவுகளின்கீழ் ஒரு குற்றச் செயல் நடந்திருக்குமானால் அத்தகைய தற்கொலையானது துன்புறுத்தலால் தற்கொலை என்று கருதப்படும்; அந்த நபர் தற்கொலையைத் தூண்டியதாக எடுத்துக்கொள்ளப்படும்.

(2) பிரிவு 4ல் என்ன கூறப்பட்டிருந்தாலும், துன்புறுத்தலால் தற்கொலையை தூண்டக்கூடிய எவரொருவருக்கும் பத்தாண்டுகள் வரை நீட்டிக்கத்தக்க சிறைத் தண்டனையும் 50,000 ரூபாய்க்குக் குறையாத அபராதமும் விதிக்கப்படும்.

**பிரிவு 4C. துன்புறுத்தலால் மரணம் மற்றும் துன்புறுத்தலால் தற்கொலையைத் தூண்டுதல் என்ற அனுமானம்:–** ஒரு பெண்ணுக்கு ஒரு நபர் துன்புறுத்தலால் மரணத்தை ஏற்படுத்தினாரா அல்லது துன்புறத்தலால் தற்கொலைக்குத் தூண்டினாரா என்ற கேள்வி வரும்போது, இதற்கு மாறாக நிரூபிக்கப்படாத நிலையில், நீதிமன்றமானது, அந்தப் பெண்ணின் மரணத்திற்கு சற்று முன்பாக, அவர் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டார் அல்லது அவரைப் பொறுத்தவரையில் இந்திய தண்டனைச் சட்டம் (மத்திய சட்டம் XLV - 1860) 294, 354 அல்லது 509 ஆகிய பிரிவுகளின் கீழ் ஒரு குற்றச் செயல் செய்யப்பட்டிருக்கிறது என்றால், நிலைமையைப் பொறுத்து, மற்றும் அத்தகைய துன்புறுத்தலை செய்ததன் காரணமாக உடல் ரீதியான காயம் ஏற்பட்டதால் அல்லது அந்த நபரால் அல்லது அந்த நபரின் வற்புறுத்தலால் மேற்படி குற்றம் செய்யப்பட்டதன் காரணமாக அந்தப் பெண்ணின் மரணம் அல்லது தற்கொலை நிகழ்ந்திருக்குமானால் அந்த நபர் துன்புறுத்தலால் மரணத்தை ஏற்படுத்தியுள்ளார்

அல்லது துன்புறுத்தலால் தற்கொலையைத் தூண்டிவிட்டுள்ளார் என்ற அனுமானத்திற்கு வரும்.

**பிரிவு 5. எந்த ஒரு இடத்திற்குமான நிர்வாகப் பொறுப்பு:– (1)** கல்வி நிறுவனம், கோயில் அல்லது வேறு வழிபாட்டுத் தலங்கள், திரையரங்கம் அல்லது வேறு எந்த ஒரு இடத்திற்குமான பொறுப்பில் உள்ள எந்த ஒரு நபரும் –

(a) அந்த இடத்திற்குள் (பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல்) செயலை தடுப்பதற்கு பொறுத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்;

(b) பாதிக்கப்பட்ட ஒருவரால் புகார் செய்யப்படும் நிலையில், (பெண்ணுக்கு எதிரான துன்புறுத்தல்) பற்றி காவல்துறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.

**(2)** துணைப் பிரிவு **(1)**ன் கீழ் நடவடிக்கை எடுக்கத் தவறும் எந்த ஒரு நபரும் **2000** ரூபாய் வரை நீட்டிக்கத்தக்க அபராதம் விதிக்கப்படுவதற்கு உரியவராவார்.

**பிரிவு 6. பொது சேவை வாகனத்தின் ஊழியர்களது கடமை:– (1)** ஒரு பொது சேவை வாகனம் அல்லது நீர்வழி வாகனத்தின் ஊழியர்கள் அந்த வாகனம் அல்லது நீர்வழி வாகனத்தில் பெண்ணுக்கு துன்புறுத்தலை தடுப்பதற்கு பொறுத்தமானது என அவர்கள் கருதும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பொது சேவை வாகனத்தில் அத்தகைய துன்புறுத்தல் நடந்திருக்குமானால், அந்த வாகனத்தின் ஊழியர்கள், பாதிக்கப்பட்டவரால் செய்யப்படும் புகாரின் அடிப்படையில், அந்த வாகனத்தை அருகில் உள்ள காவல் நிலையத்திற்கு கொண்டு சென்று காவல்துறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.

**(2)** துணைப் பிரிவு **(1)**ன் கீழ் உள்ள நடவடிக்கைகளை எடுக்கத் தவறும் எந்த ஊழியரும் **1,000** ரூபாய் வரை நீட்டிக்கத்தக்க அபராதத்திற்கு உரியவராவார்.

**பிரிவு 7. குற்றத்தைத் தூண்டியதாகக் கருதப்படுதல்:– (1)** பிரிவு 4, 4A அல்லது 4Bயின் கீழ் தண்டனைக்குரிய எந்த ஒரு குற்றத்தையும் செய்வதற்கு எந்த ஒரு வாகனம் அல்லது நீர்வழி வாகனம் பயன்படுத்தப்படுமானால், அந்த வாகனம் அல்லது நீர்வழி வாகனத்தின் ஓட்டுநர், இதற்கு மாறாக நிரூபிக்கப்படாத நிலையில், பிரிவு 4, 4A அல்லது 4Bயின் கீழ் வரும் குற்றத்தை தூண்டியதாக கருதப்படுவார்; அவருக்கு மூன்றாண்டுகள் வரை நீட்டிக்கத்தக்க காலத்திற்கான சிறைத் தண்டனையும் **5,000** ரூபாய்க்குக் குறையாத அபராதமும் விதிக்கப்படும்.

**(2)** அந்த வாகனம் அல்லது நீர்வழி வாகனத்தின் உரிமையாளர் தனக்குத் தெரியாமலேயே பெண்ணுக்கு எதிரான குற்றச் செயல் நடந்திருக்கிறது என்று நிரூபித்தாலன்றி, துணைப் பிரிவு **(1)**ல் குறிப்பிடப்பட்டுள்ள வாகனம் அல்லது நீர்வழி வாகனம் கைப்பற்றப்படும்.

**பிரிவு 7A. இழப்பீடு வழங்குவதற்கான ஆணை:–** குற்றம்சாட்டப்பட்ட நபருக்கு இவ்வாறு தண்டனை அளிக்கப்படும் நிலையில், சட்டத்தில் உள்ள காரணங்களால் ஏதேனும் இழப்பு அல்லது காயம் அல்லது ஊனம் அல்லது மனவேதனைக்கு உள்ளான ஒரு பெண்ணுக்கு அல்லது அவரது சட்டப்பூர்வ வாரிசுக்கு குற்றம்சாட்டப்பட்ட நபர் இழப்பீடாக, ஆணையில் குறிப்பிடப்படும் தொகையை வழங்க வேண்டும் என்று 4,4A அல்லது 4B பிரிவின் கீழ் தண்டனை அளிக்கும்போது ஆணையிடலாம்.

**பிரிவு 8. இதர சட்டங்களின் செயல்பாடு பாதிக்கப்படமாட்டாது:–** குறிப்பிட்டக் காலகட்டத்தில் நடைமுறையில் உள்ள வேறு எந்த சட்டத்துடனும் கூடுதலானதாகவே இந்தச் சட்டத்தின் விதிகள் இருக்குமே அல்லாமல் அதனைத் தாழ்த்துவதாக இருக்காது.

**பிரிவு 9. விதிகளை உருவாக்குவதற்கான அதிகாரம்:– (1)** மாநில அரசு இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளை உருவாக்கலாம்.

**(2)** இந்தச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் அனைத்து விதிகளும் தமிழ்நாடு அரசாங்க அரசிதழில் வெளியிடப்படும். குறிப்பிட்ட தேதியிலிருந்து அவை நடைமுறைக்கு வருவதாக குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி, அவ்வாறு வெளியிடப்படும் நாளிலிருந்து அவை நடைமுறைக்கு வரும்.

**(3)** இந்தச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் ஒவ்வொரு விதியும், அது உருவாக்கப்பட்ட பிறகு கூடிய விரைவில், சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும். அது தாக்கல் செய்யப்பட்ட கூட்டத் தொடர் அல்லது அதற்கு அடுத்த கூட்டத் தொடர் முடிவடைவதற்கு முன்பாக, அத்தகைய எந்த ஒரு விதியிலும் சட்டமன்றம் ஏதேனும் திருத்தம் செய்யுமானால் அல்லது அந்த விதி உருவாக்கப்படக் கூடாது என்று சட்டமன்றம் முடிவு செய்யுமானால், அந்த விதியானது அவ்வாறு திருத்தப்பட்ட வடிவத்தில் மட்டுமே செயல்பாட்டுக்கு வரும் அல்லது நிலைமையைப் பொறுத்து செயல்பாட்டுக்கு வராமல் போகும். ஆயினும், அவ்வாறு திருத்தம் செய்யப்படுவது அல்லது நீக்கப்படுவது இந்தச் சட்டத்தின் கீழ் முன்னதாக மேற்கொள்ளப்பட்ட எந்த நடவடிக்கைக்கு முரணானதாக இருக்காது.

**பிரிவு 10. சட்ட விலக்கலும் பாதுகாத்தலும்:– (1)** தமிழ்நாடு பெண் சீண்டல்

அவசரச் சட்டம் – 1998 (தமிழ்நாடு அவசரச் சட்டம் 4/1998) இதன்மூலம் விலக்கிக்கொள்ளப்படுகிறது.

**(2)** இந்த சட்ட விலக்கலில் என்ன கூறப்பட்டிருந்தாலும், இந்த அவசரச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட எந்த ஒரு செயல் அல்லது எந்த ஒரு நடவடிக்கையும் இந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்டதாக அல்லது மேற்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும்.

## குழந்தை உரிமைகளுக்கான அரசுக் கட்டமைப்புகள் / அமைப்புகள்

| உரிமை மீறல் | கிராம அளவிலான அதிகார அமைப்பு | மாவட்ட அளவிலான அதிகார அமைப்பு | மாநில அளவிலான அதிகார அமைப்பு | தேசிய அளவிலான அதிகார அமைப்பு |
|---|---|---|---|---|
| **குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை** (POCSO Act) | • சிறப்பு சிறார் காவல் நிலையம் / உள்ளூர் காவல் நிலையம் [S19(1)]<br>• பெண் காவலர் [S 24(1)]<br>• உதவும் நபர் [S 49] | • குழந்தை நலக் குழுமம் (CWC) [S19] [R4(1)]<br>• மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு பிரிவு (DCPU) [R3]<br>• சிறப்பு நீதிமன்றம் / நீதிபதி [S(28,33)]<br>• சிறப்பு அரசு வழக்கறிஞர் [S32]<br>• மாவட்ட ஆட்சியர் | • மாநிலக் குழந்தை உரிமைப் பாதுகாப்பு ஆணையம் [S 43] | • தேசிய குழந்தை உரிமைப் பாதுகாப்பு ஆணையம் [S44] |
| **பள்ளியில் உரிமை மீறல்** (RTE Act 2009) | • பள்ளி மேலாண்மைக் குழு ) [S 21] [R(3)]<br>• பள்ளியில் உடல் ரீதியான தண்டனைகளைக் கண்காணிக்கும் குழு (NCPCR guideline)<br>• கிராமக் கல்விக் குழு [TN Panchayat Act 1994]<br>• தற்காலிகக் குழு மற்றும் துணைக்குழுக்கள்[TN Panchayat Act 1994] | • மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் (CEO) [S 6] [R(6)]<br>• மாவட்டக் கல்வி அலுவலர் (DEO) [S 6] [R(6)]<br>• மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு பிரிவு (DCPU) [S 6] [R(6)]<br>• குழந்தை நலக் குழுமம் (CWC) [S19] [R4(1)]/ POCSO Act<br>• மாவட்ட ஆட்சியர் | • மாநிலக் குழந்தை உரிமைப் பாதுகாப்பு ஆணையம் [S 32]<br>• மாநில ஆலோசனைக் குழு [R(31)]<br>• கல்வித்துறை | • தேசிய குழந்தை உரிமைப் பாதுகாப்பு ஆணையம் [S 31]<br>• தேசிய ஆலோசனைக் குழு [R(30)] |
| **குழந்தைத் திருமணம்** | • ஊராட்சி மையக்குழு [R(5)] | • கிராம ஊராட்சி/நகராட்சி/அரசு அதிகாரி<br>• தன்னார்வத் தொண்டு நிறுவனம்<br>• மாவட்ட சமூக நலத்துறை அலுவலர் (மாவட்டக் குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரி) [G.O.No.169/30.12.2009]<br>• மாவட்ட நீதிமன்றம்<br>• மாவட்ட ஆட்சியர் | • மாநிலக் குழந்தை உரிமைப் பாதுகாப்பு ஆணையம் [S 17] (Commissions for Protection of Child Rights Act 2005)<br>• குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரி (CMPOs) [S 16] [R(3)]<br>• மாநில சமூக நலத்துறை அலுவலர் | • தேசிய குழந்தை உரிமைப் பாதுகாப்பு ஆணையம் [S 3] *(Commissions for Protection of Child Rights Act 2005)* |
| **குழந்தைத் தொழிலாளர்** (Child Labour Act, 1986 & Rules 1994, Amendment Act, 2016 | • ஊராட்சித் தலைவர் [TN Panchayat Act 1994] | • மாவட்ட நீதிபதி [S 17 (A)]<br>• ஆய்வாளர்கள் [S 17 B] [G.O.No.142]<br>• மாவட்ட ஆட்சியர் | • குழந்தைத் தொழிலாளர் தொழில்நுட்ப ஆலோசனைக் குழு<br>• மாநில அளவிலான கண்காணிப்புக் குழு | • குழந்தைத் தொழிலாளர் பற்றிய மத்திய ஆலோசனைக் குழு<br>• மத்திய அளவிலான கண்காணிப்புக் குழு |

| | | | | |
|---|---|---|---|---|
| **இளஞ்சிறார் சட்டத்தின் (2015) கீழ் குற்றம் சாட்டப்பட்ட குழந்தைகள்** | • காவலர் / சிறப்பு சிறார் காவலர் பிரிவு / நியமிக்கப்பட்ட குழந்தை நலக் காவலர் / ஆய்வாளர் [S 31(1)i]<br>• உடல் ரீதியான தண்டனைகளைக் கண்காணிக்கும் குழு [S 82(1,2,3] | • குழந்தை நலக் குழுமம் (CWC)<br>• [S 27]<br>• மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு பிரிவு (DCPU) [S 31(1)i]<br>• இளஞ்சிறார் நீதிமன்றம் (JJ) [S 4]<br>• கூர்நோக்கு இல்லம் [S 47]<br>• சிறப்பு இல்லங்கள் [S 48]<br>• குழந்தை காப்பகம்[S 50] | • மாநில ஆய்வுக் குழு [S 54]<br>• புனர்வாழ்வு மையம் [S 53]<br>• சிறப்பு தத்தெடுப்பு முகமை [S 65]<br>• மாநில தத்தெடுப்பு வள முகமை [S 67]<br>• மாநில வழிகாட்டுக் குழு [S 69] | • பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகம்<br>• மத்திய தத்தெடுப்பு வள முகமை [S 68] |
| **குழந்தைக் கடத்தல் IPC, Immoral Traffic Amendment Act 2006** | • காவலர் [IPC 45 of 1860]<br>• கிராம அளவிலான கண்காணிப்பு குழு [G.O.No.10/dept.of social defence] | • மாவட்ட ஆட்சியர் | • மாநில மனித உரிமை ஆணையம் | • ரயில்வே காவல் துறை<br>• விமான நிலைய காவல் பிரிவு |

# குழந்தை உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டங்கள்

## குழந்தை திருமணத் தடைச் சட்டம்–2006

### சட்டத்தின் முக்கிய அம்சங்கள்

- இந்த சட்டம் 11.01.2007 அன்று நடைமுறைக்கு வந்தது.
- சட்டபூர்வமாக 21 வயது நிரம்பாத ஆணும், 18 வயது நிரம்பாத பெண்ணும் குழந்தைகளாகக் கருதப்படுவர்கள்.
- திருமணம் செய்பவர்களில் யாரேனும் ஒருவர் குழந்தையாக இருக்கும் பட்சத்தில் அது குழந்தைத் திருமணமாக கருதப்படும்.
- குழந்தைத் திருமணம் செய்து வைக்கப்படும் பெண் குழந்தைக்கு இடைக்காலத் தடை, குடியிருப்பு உரிமை, ஜீவனாம்சத்திற்கான உரிமை, பாதுகாவலுக்கான உரிமை, திருமணத்தை ரத்து செய்யும் உரிமை மற்றும் தடை செய்யும் உரிமை போன்ற உரிமைகள் இச்சட்டத்தில் வழங்கப்பட்டுள்ளன.
- குழந்தைத் திருமண தடுப்பு அலுவலர் மாவட்ட நீதிமன்றத்தாலோ அல்லது குடும்ப நீதிமன்றத்தாலோ நியமிக்கப்படும் அரசு அலுவலர் ஆவர் (பிரிவு 9).
- மாவட்ட நீதிமன்றம் குழந்தைத் திருமணத்தை தடுத்து நிறுத்த ஆணை வழங்கும். (பிரிவு 13)
- குழந்தை திருமணம் பிணை ஆணை (Arrest warrant) வழங்கா குற்றம் ஆகும் (பிரிவு 15)

### தண்டனைகள்

- குழந்தைத் திருமணத்தை நடத்துபவரோ, ஏற்பாடு செய்பவரோ, ஆணையிடுபவரோ, தூண்டுதலாக இருப்பவரோ, யாரக இருந்தாலும் அவருக்கு இரண்டு வருட சிறைத்தண்டனையும், ஒரு லட்சம் ரூபாய் அபராதமும் விதிக்கப்படும்.
- இந்த திருமணத்தைத் தடை செய்ய யாரும் இடைக்காலத்தடை உத்தரவு வாங்கலாம். தடை உத்தரவை மீறி நடைபெற்ற திருமணம் சட்ட ரீதியாக செல்லத்தக்கத் திருமணம் அல்ல

### யாரிடம் புகார் அளிக்க வேண்டும்?

- குழந்தைத் திருமணத் தடுப்பு அலுவலர் மாவட்ட நீதிபதி காவல்துறை குடும்ப நல நீதி மன்றம்
- பெற்றோர், ஆசிரியர்கள் சைல்டு லைன்–1098

### யார் மீது புகார் தொடுக்கலாம்?

குழந்தை திருமணத்திற்கு துணைபோகும் மற்றும் ஏற்பாடு செய்யும்

- பெற்றோர்
- மதபோதகர்
- உறவினர்/ நன்பர்கள்
- அருகாமையில் வசிப்பவர்கள்
- சமுதாய தலைவர்கள்
- கல்யாண தரகர்கள்
- 18 வயது நிரம்பிய மணமகன்
- குழந்தையை கடத்துபவர்கள் அனைவரும் குற்றவாளிகள் (பிரிவு 10, 11)

### கடமையுடையவர்கள்

- குழந்தை திருமண தடுப்பு அதிகாரி
- காவலர்
- சிறப்பு சிறார் பாதுகாப்பு காவல்துறை பிரிவு
- மாவட்ட நடுவர்
- பஞ்சாயத்து உறுப்பினர்கள்

- ஆசிரியர்கள்
- மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர்கள் (**DCPO**)
- மாவட்ட நல அலுவலர்கள் (**DWO**)
- குழந்தைகள் நல குழுக்களிள் உறுப்பினர்கள்
  துணைத்தாதியர் (**ANM)**
- அங்கன்வாடி பணியாளர்கள்
- சுகாதார பணியாளர்கள்

குழந்தை திருமணம் செய்து கொள்ள சம்மந்தப்பட்ட பெண்ணுக்கு விருப்பம் இல்லையென்றால் அவற்றை மூன்று வகைகளில் தடுத்து நிறுத்தலாம்.

**திருமண ரத்து உத்தரவு (Annulment order)**

குழந்தை திருமணம் நடந்த ஒரு பெண்ணுக்கு, அந்த திருமணத்தில் விருப்பம் இல்லை என்றால் அந்த திருமணம் செல்லாது என்று நீதிமன்றத்தை அணுகலாம். ஒரு பெண் குழந்தை 18 வயது பூர்த்தியடைந்த 2 வருடங்களுக்குள் நீதிமன்றத்தை அணுகவேண்டும்.

**தடை உத்தரவு (Injunction order)**

குழந்தை திருமணம் நடக்க ஏற்பாடு செய்த பிறகு அந்த திருமணத்தை தடுத்து நிறுத்துவதற்காக கொடுக்கப்படும்.

**ஜீவனாம்ச உத்தரவு (**Maintanence Order)

குழந்தை திருமணம் நடந்த ஒரு பெண்ணுக்கு, அந்த திருமணத்தில் விருப்பம் இல்லை என்றால் அந்த பெண்ணுக்கு 18 வயது ஆகும் வரை அல்லது அந்த பெண்ணுக்கு வேறொரு திருமணம் நடக்கும் வரை ஒவ்வொரு மாதமாகவோ அல்லது மொத்தமாகவோ திருமணத்திற்கு செய்த செலவுகள் மணமகன் வீட்டார் கொடுக்க வேண்டும்.

**குழந்தைத் திருமணம் நடந்த பிறகு திருமணத்தை முறிக்க முடியுமா ?**

- திருமணம் நடைபெற்ற நாளிலிருந்து 2 வருடத்திற்கு உள்ளாக திருமணம் செய்த குழந்தை வயது வந்தோரின் நிலை அடையும் வரை இத்திருமணத்தை முறிக்க முடியும்.
- திருமணம் செய்து வைக்கப்பட்ட குழந்தை அல்லது 18 வயதிற்கு மேற்பட்ட அதன் உற்ற தோழி அல்லது தோழர் ஆகியோர்கள் திருமணம் முறிவுக்கான மனுவை அளிக்க முடியும்.

**பிரிவு 3. குழந்தைகத் திருமணம் ஒன்றில் ஒருவர் குழந்தையாக இருக்கும்போது, அவரது விருப்பத்தின் பேரில் குழந்தைத் திருமணத்தைத் தவிர்க்கலாம்:– (1)** இந்தச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்ககு முன்னரோ அல்லது நடைமுறைக்கு வந்ததற்கு பின்னரோ நடைபெற்ற ஒவ்வொரு குழந்தைத் திருமணத்தையும் குழந்தைத் திருமணத்தின்போது, குழந்தையாக இருந்தவர், அவரது விருப்பத்தின் பேரில் அந்தத் திருமணத்தை இல்லா நிலையதாக்கிக் கொள்ளலாம்.

வரம்புரையாக:– அந்தக் குழுந்தைத் திருமணம் செல்லாது என்பதனைத் தீர்ப்பாணை ஒன்றின் மூலம் அறிவிக்க கோரிடுவதற்கான மனுவை, குழந்தைத் திருமணம் செய்து கொண்டவர்களில் ஒருவர் மாவட்ட நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தல் வேண்டும்.

**(2)** அவ்வாறு மனு தாக்கல் செய்யப்படும் காலத்தில், மனு தாக்கல் செய்பவர் இளவராக (Minor) இருந்தால், அவர் குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரியுடன், தனது காப்பாளர் மூலமாகவோ அல்லது வழக்குத் துணைவர் மூலமாகவோ அந்த மனுவைத் தாக்கல் செய்ய வேண்டும்.

**(4)** இந்த பிரிவின் கீழ் திருமணம் செல்லா நிலையது என்று தீர்ப்பு வழங்கும் மாவட்ட நீதிமன்றம், குழுந்தைத் திருமணம் செய்து கொண்டவர்கள், அவர்களது பெற்றோர் அல்லது காப்பாளர் ஆகியோரை, திருமணத்தின்போது, மறுதரப்பினரிடம் பெற்றுக் கொண்ட பணம், மதிப்புடைய பொருள்கள், நகைகள் மற்றும் இதர அன்பளிப்புகள் அல்லது மதிப்பு மிக்கப் பொருள்கள், நகைகள், அன்பளிப்புகளுக்கு இணையான தொகை இவற்றைத் திரும்ப அளிக்கும்படி உத்தரவிட வேண்டும்.

**பிரிவு 4. குழந்தைத் திருமணத்தில் பெண் தரப்பினராக உள்ளவருக்கான வாழ்க்கைப் பொருளுதவி (சீவனாம்சம்) மற்றும் உறைபிடம் சம்பந்தமான வகையம்:– (1)** பிரிவு3–இன் கீழ் உத்தரவு வழங்கும்போது, மாவட்ட நீதிமன்றம், குழந்தைத் திருமணம் செய்து கொண்டவர்களில், ஆண் நபரை, பெண்ணுக்கு இடைக்கால சீவனாம்சமோ அல்லது முழுச் சீவனாம்சமோ அளிக்க உத்தரவிடலாம். அவ்வாறு சீவனாம்சம் அளிக்க வேண்டிய நபர் இளவராக (Minor) இருந்தால், அவரது பெற்றோர் அல்லது காப்பாளர் சீவனாம்சம் அளித்திடுவதற்கு உத்தரவிடலாம்.

**(2)** அளிக்கப்பட வேண்டிய சீவனாம்சத்தின் அளவினை மாவட்ட நீதிமன்றம் முடிவு செய்யும்போது, குழந்தைத் திருமணம் செய்துகொண்ட குழந்தையின் தேவை, அந்தக் குழந்தை திருமணத்தின்போது அனுபவித்த வாழ்க்கைமுறை, சீவனாம்சம் அளிக்க வேண்டியவரின் வருமானம் ஆகியவற்றைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

**(3)** சீவனாம்சத்தை மாதா மாதம் கொடுப்பதற்கோ அல்லது முழுந்தொகையையும் கொடுப்பதற்கோ உத்தரவிடலாம்.

**(4)** பிரிவு **3**–இன்கீழ் மனு தாக்கல் செய்பவர் பெண்ணாக இருந்தால், அவர் மறுமணம் செய்து கொள்கின்ற வரையில் அவருக்கு உறைவிடம் வழங்குவதற்கான உத்தரவு ஒன்றையும் மாவட்ட நீதிமன்றம் வழங்கும்.

**பிரிவு 5. குழந்தைத் திருமணங்களில் உருவான குழுந்தைகளின் பாதுகாப்பும் சீவனாம்சமும:– (1)** குழந்தைத் திருமணத்தின் மூலம் குழந்தைகள் பிறந்திருக்கும் போது, அத்தகைய குழந்தைகளின் பாதுகாப்புக்கு, மாவட்ட நீதிமன்றம் உரிய உத்தரவு ஒன்றைப் பிறப்பித்தல் வேண்டும்.

**(2)** இந்தப் பிரிவின் கீழ் குழந்தைகளின் பாதுகாப்புக்கான உத்தரவைப் பிறப்பிக்கும் மாவட்ட நீதிமன்றம் அந்தக் குழந்தைகளின் நலனைப் பெரிதும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

**(3)** அவ்வாறு குழந்தைகளின் பாதுகாப்புக்கு உத்தரவிடும் நீதிமன்றம், அந்தக் குழந்தை மறுதரப்பினரும் பார்வையிடும் வகையில், அந்தக் குழந்தைக்கு உகந்ததும் சரியானதுமான வகையில் உத்தரவு பிறப்பிக்கலாம்.

**(4)** குழந்தைத் திருமணத்தின் மூலம் பிறந்த குழந்தைக்கு, உரிய தரப்பினரையோ அல்லது அவரது பெற்றோரையோ அல்லது காப்பாளரையோ சீவனாம்சம் அளிக்கும்படி நீதிமன்றம் உத்தரவிடலாம்.

**பிரிவு 6. குழந்தைத் திருமணங்களில் பிறந்த குழந்தைகளின் சட்டத் தகைமை:–** குழந்தைத் திருமணம் என்பது, பிரிவு **3**–இன் கீ செல்லுபடியாகக் கூடியதல்ல என்று தீர்ப்பாணை வழங்கப்படுவதற்குரிய தெனினும், அத்தகைய தீர்ப்பாணை வழங்கப்படுவதற்கு முன்னர், குழந்தைத் திருமணத்தின் மூலம் குழந்தை பிறந்திருக்கும் போது, அந்தக் குழந்தை அனைத்து வித நோக்கங்களுக்கும் சட்டப்பூர்வமாகப் பிறந்த குழந்தையாகவே கருதப்படும்.

**பிரிவு 7. பிரிவு 4 அல்லது பிரிவு 5–இன்கீழ் பிறப்பித்த உத்தரவுகளை மாற்றம் செய்வதற்கு மாவட்ட நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம்:–** மனு நிலுவையில் இருக்கும்போதும் மனுவில் இறுதியாக மாறுதல் ஏற்பாடும்போதும் பிரிவு 4 அல்லது பிரிவு 5 – இன்கீழ் பிறப்பித்த உத்தரவில் மாவட்ட நீதிமன்றம் கூடுதலான உத்தரவைப் பிறப்பிக்கவோ அல்லது உத்தரவை மாற்றியமைக்கவோ அல்லது நீக்கவோ செய்யலாம்.

**பிரிவு 8. எந்த நீதிமன்றத்தில் மனுவைத் தாக்கல் செய்ய வேண்டும்:–** பிரிவுகள் 3,4 மற்றும் 5–இன் கீழான பரிகாரங்களை வழங்குவதற்கான ஆள்வரையை மாவட்ட நீதிமன்றம் கொண்டுள்ளது. மாவட்ட நீதிமன்றம் என்பதில், எதிர்மனுதாரர் வசிக்கும் பகுதிக்குரிய மாவட்ட நீதிமன்றம் அல்லது குழந்தைத் திருமணம் எங்கே நடந்ததோ அந்தப் பகுதிக்குரிய மாவட்ட நீதிமன்றம் அல்லது குழந்தைத் திருமணம் செய்து கொண்ட இருவரும் கடைசியாக எங்கே வசித்தார்களோ அந்தப் பகுதிக்குரிய மாவட்டநீதிமன்றமும் மாவட்ட நீதிமன்றம் என்பதில் அடங்கும்.

**பிரிவு 9. வயது வந்த ஆண், குழந்தை ஒன்றை திருமணம் செய்து கொள்வதற்குத் தண்டனை:–** பதினெட்டு வதிற்கு மேற்பட்ட ஆண் ஒருவர், குழந்தை ஒன்றைத் திருமணம் செய்து கொள்வதற்கு, ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கும் போது, அவர் இரண்டாண்டுகள் வரையில் கடுஞ்சிறைத் தண்டனை அல்லது ஒரு இலட்சம் ரூபாய் வரையில் அபராதம் அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படுவார்.

**பிரிவு 10. குழந்தைத் திருமணம் ஒன்றை நடத்தி வைத்தலுக்குத் தண்டனை:–** தான் நடத்தி வைத்த திருமணம், குழந்தைத் திருமணம் என்று தனக்குத் தெரியாது என்று ஒருவர் நிரூபித்தாலன்றி, மற்றபடி அவர் குழந்தைத் திருமணம் ஒன்றை நடத்தி வைத்தற்காக, அவர் இரண்டாண்டுகள் வரையில் கடுஞ்சிறைத் தண்டனையும் ஒரு இலட்சம் வரையில் அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படுவார்.

**பிரிவு 16. குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரிகள்:– (1)** மாநில அரசாங்கம் அரசுப் பதிவிதழில் அறிவிக்கை செய்து மாநிலம் முழுமைக்குமோ அல்லது மாநிலத்தின் ஒரு பகுதிக்குக் குழந்தைத் திருமண தடுப்பு அதிகாரி அல்லது அதிகாரிகள் என்றும் பெயரில் நியமிக்கும். அத்தகைய அதிகாரி அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதி அல்லது பகுதிகளில் அதிகார வரம்பு உடையவராக இருப்பார்.

**(2)** சமூக சேவையில் ஈடுபட்டுள்ள சம்பந்தப்பட்ட வட்டாரத்தைச் சேர்ந்த உறுப்பினர் அல்லது கிராம ஊராட்சி அலுவலர், அல்லது நகராட்சி அலுவலர் அல்லது அரசு அதிகாரி அல்லது அரசு நிறுவன அதிகாரி அல்லது அரசுசாரா அமைப்பு நிர்வாகிகளை, குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரிக்கு உதவி செய்யுமாறு மாநில அரசாங்கம் கேட்டுக் கொள்ளும்; நிலவரத்திற்கேற்ப அத்தகைய உறுப்பினர், அதிகாரி அல்லது நிர்வாகி, அதற்கேற்ப செயற்படவேண்டும்.

**(3) குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரிகளின் கடமைகளாவன;**

- தக்கதெனக் கருதும் அத்தகைய நடவடிக்கையை எடுத்து, குழந்தைத் திருமணங்கள் நடைபெறுவதைத் தடுக்க வேண்டும்
- தனிப்பட்ட வழக்குகளில் அல்லது வழக்கறிஞர் தோன்றும் வழக்குகளில் அந்த வட்டாரப் பகுதியில் வசிப்பவர்கள் பொதுவாகக் குழந்தைத் திருமணங்களை ஊக்குவிக்கவோ, அல்லது உதவி செய்யவோ அல்லது நடத்தவோ கூடாது.
- குழந்தைத் திருமணங்கள் செய்து கொள்வதன் விளைவாக ஏற்படும் தீமைகளைப் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.
- குழந்தைத் திருமணங்கள் சம்பந்தமான பிரச்சினையை, சமூகத்திற்கு மிகவும் நுட்பமாகத் தெரிவித்தல் வேண்டும்.

- மாநில அரசாங்கம் கட்டளையிட்டுள்ளபடி, காலமுறை இதழ்களையும் புள்ளிவிவரங்களையும் அளிக்க வேண்டும்
- மாநில அரசாங்கத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட அத்தகைய மற்றைய பணிகளையும் மற்றும் கடமைகளையும் செய்ய வேண்டும்.

**பிரிவு 3. குழந்தை திருமணத் தடுப்பு அதிகாரியின் பணிகள் மற்றும் கடமைகள்:–**

சட்டப்பிரிவு **16** உட்பிரிவு **(3)–** இன்கீழ் குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரிக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் செய்கடமைகளுடன் கூடுதலாக.

(அ) குழந்தை திருமணம் பற்றிய தகவல் ஏதேனும் ஒரு வழியாக எழுத்து மூலமாக அல்லது வாய்மொழிக்கு வாயிலாக கடிதம், அல்லது தொலைபேசி, தந்தி மின்னஞ்சல் முதலியன அல்லது வேறு தகவல் கிடைக்கப்பெற்றவுடன் உடனடியாக தேவையான அனைத்து நடவடிக்கைகள் மேற்கொள்வது

(ஆ) படிவம் – I– இல் சமூக நல ஆணையருக்கு காலாண்டு விவர அறிக்கை மற்றும் புள்ளி விபரங்கள் அளிப்பது;

(இ) மனுதாரர் இளவராக இருக்கும் நிலையில் மாவட்ட நீதிமன்றத்தில் குழந்தைத் திருமணத்தை இரத்துச் செய்வதற்கு மனுதாக்கல் செய்வது

(ஈ) திருமணத்தின் பெண் தரப்பினருக்கு மறு திருமணம் நடக்கும் வரை சீவனாம்சம் கொடுக்க வேண்டி மாவட்ட நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்வது.

(உ) குழந்தைத் திருமணத்தினரின் குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் சீவனாம்சத்திற்காக, மாவட்ட நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்வது ஆகியன ஒவ்வொரு குழந்தைத் திருமண தடுப்பு அலுவலரின் கடமையாகும்.

**விதி 5. ஊராட்சி அளவிலான மையக்குழு:–** கீழ்க்கண்ட நபர்களைக் கொண்ட குழு குழந்தைத் திருமணத் தடுப்பு அலுவலருக்கு உதவி செய்திடும்:

| | |
|---|---|
| ஊராட்சி தலைவர் | – தலைவர் |
| விரிவாக்க அலுவலர் (சமூக நலம்) | – கூட்டுநர் |
| கிராம நிர்வாக அலுவலர் | – உறுப்பினர் |
| செயலர், ஊராட்சி அளவிலான சுய உதவிக் குழுக்கள் | – உறுப்பினர் |
| செயலர், ஊராட்சி அளவிலான சுய உதவிக் குழுக்கள் | – உறுப்பினர் |
| தலைமையாசிரியர் /மூத்த ஆசிரியர் | – உறுப்பினர் |
| சிற்றொகுதியின் மூத்த பெண் உறுப்பினர் | – உறுப்பினர். |

## குழந்தைகளை பாலியல் குற்றங்களிலிருந்து பாதுகாக்கும் சட்டத்தின் (POCSO) கீழ் ஒரு குழந்தைக்கு உள்ள உரிமைகள்

**பொதுவான உரிமைகள்**

1. **தன்னுடைய அடையாளத்தை வெளிப்படுத்தாமல் இருப்பதற்கான உரிமை:** ஒரு குழந்தையின் அடையாளம் (பெயர், குடும்பம், பள்ளி, அருகாமையில் இருப்பவர்களின் விவரம் உள்ளிட்ட குழந்தையின் அடையாளத்தை தெரிந்துகொள்ளக்கூடிய எந்த ஒரு விவரமும்) குழந்தை நல குழு (CWC) அல்லது இளம் சிறார் சட்டத்தின் கீழான சிறப்பு காவல் பிரிவைத் (SPJU) தவிர யாரிடமும் தெரிவிக்கப்படக்கூடாது. அவ்வாறு செய்வது தண்டிக்கத்தக்க குற்றமாகும் [சட்டப்பிரிவு 23 (1), 23(2), 23(3), 23(4)]. புலன் விசாரணையின்போதும் வழக்கு விசாரணையின்போதும் வழக்கில் சம்மந்தப்பட்ட குழந்தையின் அந்தரங்கத்தை பாதுகாப்பது காவல்துறை [சட்டப்பிரிவு 24 (5)] மற்றும் சிறப்பு நீதிமன்றத்தின் சட்டப்பிரிவு 33 (7)] கடமையாகும்.
2. **துணையாக / ஆதரவாக யாரையாவது வைத்துக்கொள்ளும் உரிமை:** புலன் விசாரணை மற்றும் மருத்துவ பரிசோதனை, வாக்குமூலங்களை பதிவு செய்தல் அல்லது நீதிமன்றத்தில் வாக்குமூலம் வழங்குதல் உள்ளிட்ட வழக்கு விசாரணை நடைபெறும் காலம் முழுவதும் வழக்கில் தொடர்புடைய குழந்தையின் பெற்றோர் / பாதுகாவலர் / நம்பிக்கைக்குரிய யாராவது ஒரு நபர் குழந்தைக்கு துணையாக இருக்க வேண்டும். [r4(8)]
3. **சைகை மொழி விளக்கமளிப்பவர் / மொழிபெயர்ப்பாளர் / கற்றல் குறைபாடு அல்லது மனநலம் குன்றிய குழந்தைகளுக்கான சிறப்பு ஆசிரியரை வைத்துக்கொள்வதற்கான உரிமை:**

   ஒரு குழந்தைக்கு அது புரிந்துகொள்ளும் மொழியில் (சைகை மொழி உட்பட) புகார்கள் மற்றும் பிற ஆவணங்களின் [r4 (12)] உள்ளடக்கத்தையும் வழக்கு நடைமுறையையும் பற்றி தெரியப்படுத்த வேண்டும்.

   - சைகை மொழி விளக்கமளிப்பவருக்கு அரசு ஊதியம் வழங்கும், [r3(6)].
   - ஒரு குழந்தை தனக்கு கைகை மொழி விளக்கமளிப்பவர் ஆணாக இருக்க வேண்டுமா அல்லது பெண்ணாக இருக்க வேண்டுமா என்பதை எந்த நேரத்திலும் தேர்வு செய்யலாம் [r 3(7)]. சைகை மொழி விளக்கமளிப்பவர் அல்லது ஆதரவாளராக தேர்ந்தெடுத்தவரை மாற்ற விரும்பினால் அதற்கான காரணத்தை தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை [r 4(10)].
   - சைகை மொழி விளக்கமளிப்பவர் அல்லது மொழிபெயர்ப்பாளர்களின் எண்ணிக்கை ஒன்றுக்கும் மேற்பட்டு இருக்கலாம்.
   - சைகை மொழி பேசுபவர்கள் அனைவரும் சொந்த ஆதாயத்துக்காக எவ்வித செயலையும் செய்யாமல் [r 3(9)]. வழக்கு பற்றிய இரகசியத்த்ன்மையை பாதுகாக்க வேண்டும் [r 3(10)].
4. வழக்கு விசாரணையின் போது குற்றம் சாட்டப்பட்டவரை நேரிடையாக சந்திக்காமல் இருப்பதற்கான உரிமை: ஒரு ஆண் அல்லது பெண் குழந்தை தனது வாக்குமூலத்தை காவலர்களிடமோ அல்லது நடுவர் நீதிபதியிடமோ சட்டப் பிரிவு 24(3)] அளிக்கும்போதோ அல்லது நீதிமன்றத்தில் சாட்சி சொல்லும்போதோ சட்டப் பிரிவு 36(1)] குற்றம் சாட்டப்பட்டவரை நேருக்கு நேராக பார்க்கும்படி அவருக்கு எதிராக அந்தக் குழந்தையை அழைத்து வரக்கூடாது.
5. அபராதம் விதிக்கப்படாமல் இருப்பதற்கான உரிமை: குற்றம் சாட்டப்பட்டவர் குற்றம் செய்யவில்லை என்று தெரியவந்தால் அதற்காக குற்றம் சாட்டிய குழந்தைக்கு அபராதம் விதிக்கக்கூடாது சட்டப் பிரிவு 22(2)].

6. தகவல் பெறுவது மற்றும் ஒப்புதல் அளிப்பதற்கான உரிமை: பாதிக்கப்பட்ட ஒரு குழந்தை பாதுகாப்பு இல்லங்களுக்கு செல்ல விரும்பினால் [r 4(5), r 4(6)], துணையாக இருக்கும் நபரின் தேர்வு [r 4(7)], முதல் தகவல் அறிக்கை இலவசமாக வழங்குவது[r 4(2)a], வழக்கின் நிலை குறித்த விபரங்கள் [r 4(12)]. போன்றவை அந்தக் குழந்தையின் வயது, வயதுக்கு ஏற்ற முதிர்ச்சி, பாலினம், சமூக மற்றும் பொருளாதார பின்னணி ஆகியவற்றுக்கேற்ப பரிசீலிக்கப்படும்.
7. சட்ட ஆலொசனை பெறுவது மற்றும் வழக்கறிஞர் வைத்துக்கொள்வதற்கான உரிமை [சட்டப் பிரிவு 40, r 4(2)f].
8. இழப்பீடு பெறுவதற்கான உரிமை: மறுவாழ்வு, உடல் ரீதியான மற்றும் மனரீதியான நிலை ஆகியவற்றுக்கு இழப்பீடு [சட்டப் பிரிவு 33(7)] பெறுவதற்கான உரிமை பாதிக்கப்பட்ட குழந்தைக்கு உண்டு.
9. **குற்றம் சாட்டப்பட்டவராக கருதப்பட்டால் அப்போது உள்ள உரிமைகள்:** குழந்தை குற்றவாளி என்று குற்றம் சாற்றப்பட்டால், அதன் பிறகு அந்தக் குழந்தை இளம் சிறார் நீதி (நலன் மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2000த்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்படவேண்டும். போஸ்கோ சட்டத்தின்படி எந்த ஒரு குழந்தையும் குற்றம் சாட்டப்படக்கூடாது சட்டப் பிரிவு 21(3), சட்டப் பிரிவு 22(2), r34(1)]..

**பெண் குழந்தைக்கென்று இருக்கும் சிறப்பு சட்டப் பிரிவுகள்**

1. மருத்துவப் பரிசோதனை ஒரு பெண் மருத்துவரால் செய்யப்படவேண்டும். [சட்டப் பிரிவு 27(2)]
2. மருத்துவப் பரிசோதனை குழந்தையின் பெற்றோர் அல்லது குழந்தையின் நம்பிக்கைக்குரிய நபரின் முன்னிலையில் நடைபெறவேண்டும் [சட்டப் பிரிவு 27(3)], அல்லது அவர்களால் மருத்துவ பரிசோதனை நடக்கும்போது அங்கு இருக்க முடியவில்லை என்றால், மருத்துவப் பரிசோதனை செய்யப்படும் மருத்துவமனையால் நியமிக்கப்பட்ட ஒரு பெண்ணின் முன்னிலையில் நடத்தப்படவேண்டும் [சட்டப் பிரிவு 27(3)].

**மாற்றுத் திறனாளி குழந்தைளுக்கான சிறப்புப் பிரிவுகள்**

1. ஒரு குழந்தை தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ உடல் அல்லது மனரீதியான மாற்றுத்திறனாளியாக இருந்தால், ஒரு சைகை மொழிபெயர்பாளர் அல்லது சிறப்பு ஆசிரியரின் முன்னிலையில் குழந்தையின் வீட்டிலோ அல்லது குழந்தை விரும்பும் இடத்தில் அந்தக் குழந்தையின் வாக்குமூலம் காவலரால் பதிவு செய்யப்படவேண்டும் [சட்டப் பிரிவு 26(3)]. மேலும் வீடியோ பதிவு செய்யப்படவேண்டும். [சட்டப் பிரிவு 26(4)].
2. ஒரு குழந்தை கைது செய்யப்பட்டுள்ள ஒரு நபரை அடையாளம் காண்பிப்பதற்காக பயன்படுத்தப்படும் வழிமுறைகள் அந்தக் குழந்தைக்கு இணக்கமாக இருக்கின்றன என்பதை ஒரு நடுவர் நீதிபதி உறுதிப்படுத்த வேண்டும். அந்த வழிமுறைகளும் வீடியோ பதிவு செய்யப்படவேண்டும்.
3. குழந்தை சாட்சி கூறுவதை அவ்வாறு வீடியோ பதிவு செய்யும்போது, காவலர் அல்லது நடுவர் நீதிபதி சிறப்பு ஆசிரியர், தகுதிவாய்ந்த வல்லுநர் அல்லது குழந்தையோடு தகவல் பரிமாற்றம் செய்யும் முறையில் பரிச்சயமான யாராவது ஒரு நபரின் உதவியை நாடலாம். [சட்டப் பிரிவு26(3)] . அத்தகைய நடைமுறையும் வீடியோ பதிவு செய்யப்படவேண்டும் [சட்டப் பிரிவு26(4)]..
4. குழந்தைக்கு இழப்பீடு வழங்குவது குறித்த ஆணை பிறப்பிக்கும்போது, சிறப்பு நீதிமன்றம், அந்தக் குழந்தை அவன்/அவளுக்கு எதிராக நடந்த குற்றத்தின் விளைவாக மாற்றுத் திறனாளியாக்கபட்டதா என்பதை கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும்.

**குழந்தை பாலியல் ரீதியாக தொந்தரவு செய்யப்பட்டுள்து என்று நீங்கள் சந்தேகப்பட்டால்:**

நமது சிறப்பான முயற்சிகளுக்குப் பின்னரும் குழந்தைக்கு பாலியல் ரீதியான தொந்தரவுகள் நடைபெறலாம். அத்தகைய சூழலில் அந்தக் குழந்தை மேலும் துன்புறுத்தப்படாமல்

இருப்பதிலிருந்து பாதுகாக்க நாம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் குற்றம் செய்தவர் தண்டிக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

**பின்வருவனவற்றை செய்யுங்கள்:**

1. குழந்தைக்கு பாலியல் ரீதியான துன்புறுத்தல் நடைபெறலாம் என்று நீங்கள் சந்தேகம் மட்டும் படுகிறீர்கள் அத்தகைய சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் கூட சிறப்பு இளம் சிறார் காவலர் பிரிவுக்கு [சட்டப் பிரிவு 19(1)a] அல்லது அருகில் இருக்கும் காவல் நிலையத்தில் [சட்டப் பிரிவு19(1)b] புகார் கொடுங்கள். அத்தகைய சம்பவம் நடைபெறுவதற்காக நீங்கள் காத்திருக்க வேண்டியதில்லை / காத்திருக்கவும் கூடாது.
   i. புகார் அளித்த பிறகு நீங்கள் பாதுகாக்கப்படுகிறீர்கள் (அத்தகைய எச்சரிக்கை தவறானதாக இருந்து நீங்கள் குற்றம் சாட்டியவர் குற்றம் செய்யவில்லை என்று தெரிந்தாலும்) நல்ல எண்ணத்தின் அடிப்படையில் நீங்கள் அளித்த புகாருக்காக உங்கள் மீது எந்த ஒரு குற்ற அல்லது சிவில் வழக்கோ பதிவு செய்யப்படக்கூடாது [சட்டப் பிரிவு19(7)].
   ii. நீங்கள் புகார் அளிக்கவில்லை என்றால் உங்களுக்கு தண்டனை வழங்கப்படலாம் (சிறைத்தண்டனை மற்றும் அபராதம் உள்ளிட்ட) [சட்டப் பிரிவு21(1) and 21(2)].
   iii. பாதிக்கப்பட்டவர் என்று தவறான ஒரு குழந்தை பற்றி புகார் அளித்தால் நீங்கள் தண்டிக்கப்படலாம் [சட்டப் பிரிவு 22(3)].
2. சம்பவம் நடைபெற்ற 24 மணிநேரத்துக்குள் பாதிக்கப்பட்ட குழந்தை, குழந்தை நலக் குழு முன்பாக ஆஜர் படுத்தப்படுவதை உறுதிப்படுத்தவேண்டும். (காவல் துறை இந்த நடவடிக்கையை செய்யாமல் விடுபட முடியாது) [r4(3)].

**செய்யக் கூடாதவை**

1. குழந்தை நலக் குழு அல்லது சிறப்பு இளம் சிறார் காவல் பிரிவு தவிர யாரிடமும் பாதிக்கப்பட்ட குழந்தை யார் என்ற அடையாளத்தை தெரிவிக்கக் கூடாது. அவ்வாறு செய்வது தண்டிக்கத்தக்க குற்றமாகும் [சட்டப் பிரிவு 23(4)].
2. ஊடகம் கூட குழந்தையின் மாண்பைக் குறைக்கும் வகையிலான எந்த ஒன்றையும் அல்லது குழந்தை யார் என்று அறிந்துகொள்ளும் வகையிலான எந்த ஒரு தகவலையும் வெளியிடக்கூடாது [சட்டப் பிரிவு 23(1), சட்டப் பிரிவு 23(2)].
3. பதற்றமடையாதீர்கள், அமைதியாக இருங்கள், குழந்தைக்கு ஆதரவாக இருங்கள். .

## 1. காவலர் / சிறப்பு இளம் சிறார் காவலர் பிரிவு (SPJU)

### 1.1 காவல் துறை என்ன செய்ய வேண்டும்

#### 1.1.1 உடனடியாக

a) பின் வரும் விவரங்களை பாதிக்கப்பட்ட குழந்தையிடம் அல்லது புகார் அளிக்க வரும் நபரிடம் தெரிவிக்க வேண்டும் : (i) அவரது பெயர் மற்றும் பதவி ; (ii) முகவரியும் தொலைபேசி எண்ணும் ; (iii) தகவல் பெறும் அந்த அதிகாரியை மேற்பார்வையிடக் கூடிய உயர் அதிகாரியின் பெயர், பதவி மற்றும் தொடர்பு கொள்வதற்கான விவரங்கள் [r 4(1)]

b) முதல் தகவல் அறிக்கையை கேட்டு பதிவு செய்யவேண்டும் [சட்டப் பிரிவு19(2), r 4(2)a].

c) மருத்துவமனை அல்லது பாதுகாப்பு இல்லத்தில் அனுமதிப்பது உள்ளிட்ட உடனடியான அக்கறையும் பாதுகாப்பும் தேவைப்பட்டால் அவற்றை வழங்க வேண்டும் [சட்டப் பிரிவு19(5)].

d) அவசர மருத்துவ உதவி பெறுவதற்கான ஏற்பாட்டை தேவைப்பட்டால் செய்யவேண்டும் [சட்டப் பிரிவு19(5), r4(2)b] மற்றும் மருத்துவ பரிசோதனைக்காக குழந்தையை அருகில் உள்ள ஒரு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும் [r 4(2)c].

e) தடயவியல் பரிசோதனைக்காக கைப்பற்றப்பட்ட பொருட்கள் உடனடியாக தடயவியல் பரிசோதனைக் கூடத்துக்கு செல்வதை உறுதிப்படுத்தவேண்டும் [r 4(2)d].

f) பாதிக்கப்பட்ட குழந்தை / பெற்றோர் / குழந்தையின் நம்பிக்கைக்குறிய நபர் ஆகியோரிடம் அவர்களுக்கு ஆதரவாக உள்ள நடைமுறைகள் பற்றி தெரிவிக்க வேண்டும் மேலும் அத்தகைய சேவைகளையும் நிவாரணங்களையும் அளிக்கும் அமைப்புகளை அவர்கள் தொடர்பு கொள்வதற்கு உதவி செய்யவேண்டும் [r 4(2)e].

g) பாதிக்கப்பட்ட குழந்தை / பெற்றோர் / குழந்தையின் நம்பிக்கைக்குரிய நபர் ஆகியோரிடம் அவர்களுக்கு சட்ட ஆலொசனை மற்றும் வழக்கறிஞர் மூலமாக தங்களது வழக்கை வாதாட உரிமை உண்டு என்பதை தெரிவிக்க வேண்டும் [சட்டப் பிரிவு 40, r 4(2)f].

### 1.1.2 புகார் பெற்று 24 மணி நேரத்துக்குள்

h) குழந்தை நலக் குழு மற்றும் சிறப்பு நீதிமன்றத்துக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் [சட்டப் பிரிவு19(6)].

i) குழந்தை வசிக்கும் இடம் (வீடு, குழந்தை நல அமைப்பு அல்லது பெற்றோர் ஆதரவு இல்லாமல் இருந்தால்) அந்தக் குழந்தைக்கு பாதுகாப்பானதாக இல்லை என்று கருதினால் குழந்தையை குழந்தை நல குழு முன்னர் ஆஜர் படுத்த வேண்டும் [r 4(3)].

j) நடுவர் நீதிபதி வாக்குமூலம் பதிவு செய்வதற்கு தேவையானவற்றை செய்ய வேண்டும்.

k) தேவைப்பட்டால் 24 மணி நேரத்துக்குள் ஒரு மருத்துவமனையிலோ அல்லது பாதுகாப்பு இல்லத்திலோ சேர்க்க வேண்டும் [சட்டப் பிரிவு 19(5), r 4(2)b].

l) குழந்தை பெற்றோர் ஆதரவு இல்லாமல் இருக்கிறதா அல்லது பாலியல் ரீதியாக துன்புறுத்திய நபரோடு வசிக்கிறதா அல்லது குழந்தைக்கு அக்கறையும் பாதுகாப்பும் தேவைப்படுகிறதா [சட்டப் பிரிவு19(5)] என்பது பற்றிய விரிவான மதிப்பீட்டை செய்யுமாறு குழந்தை நலக் குழுவிடம் கேட்டுக்கொள்ளவேண்டும் [r 4(3)].

### 1.1.3. வழக்குகளை பதிவு செய்ய வேண்டும்

1. காவலர் சீருடையில் இல்லாமல் சதாரண உடை அணிந்திருக்க வேண்டும் [சட்டப் பிரிவு24(2)].
2. குழந்தையால் தெரிவிக்கப்படும் வழக்குகளை பதிவு செய்ய வேண்டும் [சட்டப் பிரிவு 19(2)] அத்தகைய பதிவை குழந்தையின் வீட்டிலோ அல்லது எந்த இடத்தில் குழந்தை வசதியாக எண்ணுகிறதோ அந்த இடத்தில் செய்ய வேண்டும் [சட்டப் பிரிவு24(1)].
3. முதல் தகவல் அறிக்கையை கேட்டு பதிவு செய்ய வேண்டும் [r 4(2)a]
4. துணை ஆய்வாளர் பதவிக்கு குறையாத ஒரு பெண் காவலரால் [சட்டப் பிரிவு24(1)] வழக்கு சீருடையில் இல்லாமல் சாதாரண உடையில் பதிவு செய்யப்படவேண்டும் [சட்டப் பிரிவு24(2)].
5. குழந்தை அளித்த புகாரை அக்குழந்தை புரிந்து கொள்ளும் மொழியில், குழந்தை உள்வாங்கிக்கொள்ளக்கூடிய வார்த்தைகளைப் பயன்படுத்தி படித்துக் காண்பிக்க வேண்டும் [சட்டப் பிரிவு19(2)b, சட்டப் பிரிவு 19(3), சட்டப் பிரிவு 19(4)].
6. அத்தகைய புகாரை அளிக்கும் நபருக்கு இலவசமாக முதல் தகவல் அறிக்கையின் ஒரு நகலைக் கொடுக்க வேண்டும் [r 4(2)a].

### 1. 1.4. மதிப்பீடு

7. குழந்தை பெற்றோர் ஆதரவு இல்லாமல் உள்ளதா அல்லது துன்புறுத்தியவரோடு வாழ்கிறதா அல்லது அக்கறையும் பாதுகாப்பும் தேவைப்படுகிறதா என்பதை பற்றிய முதல் கட்ட மதிப்பீடு செய்ய வேண்டும் [சட்டப் பிரிவு19(5)].
8. பாதிக்கப்பட்ட குழந்தை ஏன் அதன் தற்போதைய வசிக்கும் இடத்திலிருந்து மாற்றப்படவேண்டும் என்பதைற்கான காரணங்களை எழுத்துபூர்வமாக பதிவுசெய்யவேண்டும், மேலும் குழந்தையின் நலன் மற்றும் பாதுகாப்புக்காக தேவையான ஏற்பாடுகளை உடனடியாக செய்யவேண்டும்.[சட்டப் பிரிவு19(5)].

9. தேவைப்பாட்டால் புகார் கிடைத்த 24 மணி நேரத்துக்குள் குழந்தையை மருத்துவமனையிலோ அல்லது பாதுகாப்பு இல்லத்திலோ சேர்க்க வேண்டும் [சட்டப் பிரிவு19(5)].
10. குழந்தை நலக் குழு மற்றும் சிறப்பு நீதிமன்றம் / நடுவர் நீதிமன்றத்துக்கு எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவாக நடந்த சம்பவம், குழந்தைக்கு தேவைப்படும் நலன் மற்றும் பாதுகாப்பு, அதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஆகியவை பற்றி தெரிவிக்க வேண்டும் ( சம்பவம் நடைபெற்ற 24 மணி நேரத்துக்குள்ளாகவாவது) [சட்டப் பிரிவு19(6)].
11. பாதிக்கப்பட்ட குழந்தை பெற்றோர் ஆதரவு இல்லாமல் இருந்தாலோ அல்லது தன்னை துன்புறுத்தியவர்களோடு வசித்தாலோ அல்லது நலனும் பாதுகாப்பும் அந்தக் குழந்தைக்கு தேவைப்பட்டாலோ, [சட்டப் பிரிவு19(5)] குழந்தை நலக் குழுவிடம் அது பற்றிய விரிவான மதிப்பீட்டை செய்யச் சொல்ல வேண்டும் [r 4(3)].
12. முதல் தகவல் அறிக்கையின் ஒரு நகலை குழந்தை மற்றும் குழந்தையின் பாதுகாவலர் / புகார் அளிக்க குழந்தையோடு வந்துள்ளவரிடம் இலவசமாக அளிக்க வேண்டும் [r 4(2)a].
13. குழந்தையின் அடையாளத்தை குறிப்பாக வெகுஜன ஊடகத்திடம் இருந்து பாதுகாக்க வேண்டும் [சட்டப் பிரிவு 24(5)].
14. எந்த காரணத்துக்காகவும் எந்த சூழலிலும் பாதிக்கப்பட்ட குழந்தை குற்றம் சாட்டப்பட்டவரின் முன்னிலையில் வராமல் இருப்பதை புலானாய்வு செய்யும் அதிகாரி உறுதி செய்ய வேண்டும்.[சட்டப் பிரிவு24(3)]

## III. அவசர மருத்துவ சிகிச்சை

15. சட்டப்பிரிவுகள் 3 குற்றங்களான உள்நுழைவு பாலியல் தாக்குதல் 5 கொடூரமான உள்நுழைவு பாலியல் தாக்குதல், 7 பாலியல் தாக்குதல் மற்றும் 9 கொடூரமான பாலியல் தாக்குதல் ஆகியவற்றின் கீழ் உள்ள குற்றச் சம்பவங்களில் அவசர மருத்துவ சிகிச்சை உடனடியாக அளிக்கப்படவேண்டும்.
16. சட்ட விதி 5ல் குறிப்பிட்டுள்ளபடி தேவைப்பட்டால் அவசர சிகிச்சைக்கு காவல்துறை ஏற்பாடு செய்ய வேண்டும் [சட்டப் பிரிவு 19(5), r 4(2)b] .
17. அவசர மருத்துவ சிகிச்சைக்காக காவல் துறை குழந்தையை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும் [r 4(2)c].
18. குழந்தை பற்றிய விவரங்கள் ரகசியமாக இருக்கும் வகையில் அவசர மருத்துவ சிகிச்சை வழங்கப்படவேண்டும் [r 5(2)].
19. அவசர மருத்துவ சிகிச்சை பாதிக்கப்பட்ட குழந்தையின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் அல்லது குழந்தையின் நம்பிக்கைக்குரிய ஒரு நபரின் முன்னிலையில் நடைபெறவேண்டும் [r 5(2)].

## IV. மருத்துவ சிகிச்சை

20. முதல் தகவல் அறிக்கை / புகார் பதிவுசெய்யப்பட்டாலும் பதிவுசெய்யப்படவில்லையென்றாலும் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்படவேண்டும் [சட்டப் பிரிவு 27(1)].
21. சம்பவம் நடைபெற்ற சூழல் தொடர்பான சாட்சிகள் இல்லையென்றால்கூட பாதிக்கப்பட்ட குழந்தையின் மருத்துவ பரிசோதனை தொடர்பான சாட்சி அந்த வழக்கை நிரூபிக்கப் போதுமானது [சட்டப் பிரிவு27(1)]. மேலும் அது குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 164a யின் படி மேற்கொள்ளப்படவேண்டும்.
22. பாதிக்கப்பட்ட குழந்தை ஒரு சிறுமியாக இருந்தால், மருத்துவ பரிசோதனை ஒரு பெண் மருத்துவரால் நடத்தப்படவேண்டும் [சட்டப் பிரிவு 27(2)].
23. மருத்துவப் பரிசோதனைக்கு காவல் துறை ஏற்பாடு செய்யவேண்டும், குழந்தையை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும் [r 4(2)c].

24. தடயவியல் பரிசோதனைக்காக சேகரிக்கப்பட்ட மாதிரிகள் தடயவில் பரிசோதனைக் கூடத்துக்கு விரைவில் செல்வதை காவல் துறை உறுதிப்படுத்த வேண்டும் [r 4(2)d].

## V. நீதிமன்ற நடுவர் வாக்குமூலம் பதிவு செய்தல்

25. சிறப்பு இளம் சிறார் காவலர் பிரிவு அல்லது உள்ளூர் காவலர்கள் சம்பவம் நடைபெற்ற 24 மணி நேரத்துக்குள் பாதிக்கப்பட்ட குழந்தையை குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 164ன் கீழ் அவன் / அவளின் வாக்குமூலத்தை பதிவு செய்யும் நோக்கத்துக்காக நீதிமன்ற நடுவரிடம் அழைத்துச் செல்ல வேண்டும்.
26. இந்த நோக்கத்துக்காக முடிந்தவரையில் பாதிக்கப்பட்ட குழந்தையை அருகில் உள்ள ஒரு பெண் பெருநகர நடுவர் நீதிபதி / பெண் நடுவர் நீதிபதியிடம் (விரும்பத்தக்கது) அழைத்துச் செல்லப்படவேண்டும்.
27. புலனாய்வு செய்யும் அதிகாரி ஒரு குழந்தைக்கு எதிராக நடைபெற்ற பாலியல் வன்முறை சம்பவம் குறித்து அவருக்கு எந்த நாளில் எந்த நேரத்தில் தெரியவந்தது என்பதையும் பாதிக்கப்பட்ட குழந்தைளை அவர் எந்த நாளில் எந்த நேரத்தில் பெரு நகரப் பெண் நடுவரிடம் அழைத்துச் சென்றார் என்பதையும் மிகத் துல்லியமாக பதிவு செய்யவேண்டும்.
28. புலனாய்வு குறித்து பதிவு செய்வதில் ஏதாவது தாமதம் ஏற்பட்டால் அதற்கான காரணங்களை புலனாய்வு அதிகாரி வழக்கு குறித்த குறிப்பேட்டில் பதிவு செய்யவேண்டும். அதன் ஒரு நகலை நடுவர் நீதிபதியிடம் அளிக்க வேண்டும். மருத்துவ பரிசோதனை அறிக்கையின் நகலும் குற்றவியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 164ன் கீழ் பாதிக்கப்பட்ட குழந்தையின் வாக்கு மூலத்தைப் பதிவு செய்யும் நடுவர் நீதிபதியிடம் உடனடியாக அளிக்க வேண்டும்.

## VI.சிறப்பு நீதிமன்றம் மறுற்ம குழந்தை நலக் குழுவிடம் புகார் தெரிவிப்பது

இளம் சிறார் சிறப்பு காவல்பிரிவு / காவல்துறை வழக்கு பற்றியும் சம்பவம் பற்றிய தகவல் கிடைத்த 24 மணி நேரத்திற்குள் பாதிக்கப்பட்ட குழந்தையின் நலன் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த தகவலை குழந்தை நலக்குழுவிடமும் சிறப்பு நீதிமன்றத்திலும் தெரிவிக்க வேண்டும். இந்த வழக்கிற்கென்று சிறப்பு நீதிமன்றம் நியமிக்கப்பட வில்லையென்றால் நடுவர் நீதிமன்றத்தில் அந்த அறிக்கையை அளிக்க வேண்டும்.

## VII. சம்பவம் குறித்து தகவல் அளித்தவரிடமும் பாதிக்கப்பட்ட குழந்தையிடமும் உரிய தகவலை அளிப்பது

31. சம்பவம் குறித்த புகாரைப் பெற்றவுடன் கீழ்கண்ட விவரங்களை புகார் அளித்தவர்களுக்கு இளம் சிறார் சிறப்பு காவல் பிரிவு /உள்ளூர் காவல்துறை அளிக்க வேண்டும் [r4(1)a]

a. ஆண் / பெண் அதிகாரியின் பெயர் மற்றும் பதவி, தொடர்பு எண்
b. ஆண் / பெண் அதிகாரிக்கு உடனடி மேல் அதிகாரியின் பெயர் மற்றும் பதவி, தொடர்பு எண்

32. புகார் அளித்தவர்களுக்கு இளம் சிறார் சிறப்பு காவல் பிரிவு /உள்ளூர் காவல்துறை கீழ்கண்ட சேவைகளுக்குப் பொறுப்பானவர்கள் பற்றிய விவரங்களை அளிக்க வேண்டும், அவர்களை தொடர்புகொள்வதில் பாதிக்கப்பட்ட குழந்தைக்கு உதவ வேண்டும் [r4(2)e]

c. அவசர சேவைகள்
d. ஆதரவு சேவைகள்

e. நடைமுறைகள்

f. இலவச சட்ட உதவி

g. பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீடு

h. குற்றம் சாட்டப்பட்டவர் கைது மற்றும் புலனாய்வு குறித்த நிலை

i. குற்றப் பத்திரிக்கை பதிவு மற்றும் நீதிமன்ற செயல்பாடுகள் குறித்த நிலை

**33.** கீழ்கண்டவை பற்றிய தகவலை பாதிக்கப்பட்ட குழந்தை மற்றும் அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் அல்லது குழந்தையின் நம்பிக்கைக்குரிய நபர் ஆகியோருக்கு தெரிவிப்பது இளம் சிறார் சிறப்பு காவல் பிரிவு / காவல் துறை / ஆதரவாளரின் பொறுப்பாகும் [r4(12)]

i. அரசாங்க மற்றும் தனியார் துறையின் அவசரகால மற்றும் நெருக்கடி கால சேவைகள்;

ii. குற்றவியல் விசாரணையில் உள்ள நடைமுறைகள்;

iii. பாதிக்கப்பட்டவர்களுக்கு உள்ள இழப்பீடு நன்மைகள்;

iv. குற்றப் புலனாய்வு குறித்த நிலவரம், பாதிக்கப்பட்டவரிடம் இது குறித்த தகவலை தெரிவிப்பது ஓரளவுக்கு சரி ஆனால் அவ்வாறு செய்வது புலன் விசாரணையில் குறிக்கிடக்கூடாது;

v. குற்றம் செய்தவர் என்று சந்தேகிக்கப்படுபவரின் கைது;

vi. குற்றம் செய்தவர் என்று சந்தேகிக்கபபடுபவருக்கு எதிராக குற்றங்களை பதிவு செய்வது;

vii. குழந்தை பங்குபெறவேண்டிய அல்லது கண்டிப்பாக பங்குபெறவேண்டும் என்கிற நீதிமன்ற நடைமுறைகளின் அட்டவணை;

viii. குற்றம் சாட்டப்பட்டவர் அல்லது குற்றம் செய்தவராக சந்தேககிக்கப்படுபவரின் பிணை, விடுதலை அல்லது கைது நிலவரம்;

ix. வழக்கு விசாரணைக்கு பின்னரான தீர்ப்பு வழங்குதல்; மற்றும்

x. குற்றம் சாட்டப்பட்டவருக்கு வழங்கப்பட்ட தண்டனை.

**காவல் துறை செய்யக்கூடாதவை**

1. வாக்குமூலம் பதிவு செய்யும்போது அவர் சீருடையில் இருக்கக்கூடாது சட்டப் பிரிவு24(2)].
2. எந்த சூழலிலும் ஒரு குழந்தை காவல் நிலையத்தில் இரவு நேரத்தில் தங்க வைக்கப்படக்கூடாது [24(4)].
3. ஏந்தக் காரணத்துக்காகவும் எந்த சூழலிலும் பாதிக்கப்பட்ட குழந்தை குற்றம் சாட்டப்பட்டவரோடு நேரடித் தொடர்பில் வரக்கூடாது [24(3)].

**மருத்துவ பரிசோதனை**

1. எந்த ஒரு மருத்துவப் பரிசோதனை செய்யப்படும் முன்னர் சம்பந்தப்பட்ட குழந்தையிடம் அல்லது குழந்தையின் சார்பாக ஒப்புதல் வாங்கவேண்டும்.
2. காவல் துறை / இளம் சிறார் சிறப்பு காவல் பிரிவு இதை செய்வதற்கு சட்டப்படி பொறுப்பு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்துவ அமைப்பான குழந்தை நலக் குழுவை இது குறித்து உடனடியாக எச்சரிக்கை செய்யவேண்டும்.
3. முதல் தகவல் அறிக்கை / புகார் பதிவு செய்யப்பட்டாலும் இல்லாவிட்டாலும் மருத்துவ பரிசோதனை செய்யப்படலாம்.
4. சம்பவம் நடைபெற்ற சூழல் தொடர்பான சாட்சிகள் இல்லையென்றால்கூட பாதிக்கப்பட்ட குழந்தையின் மருத்துவ பரிசோதனை தொடர்பான சாட்சி அந்த வழக்கை நிரூபிக்கப் போதுமானது [சட்டப் பிரிவு**27(1)**]. மேலும் அது குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு **164**யயின் படி மேற்கொள்ளப்படவேண்டும்.

5. பாதிக்கப்பட்ட குழந்தை ஒரு சிறுமியாக இருந்தால், மருத்துவ பரிசோதனை ஒரு பெண் மருத்துவரால் நடத்தப்படவேண்டும் [சட்டப் பிரிவு 27(2)].
6. மருத்துவப் பரிசோதனைக்கு காவல் துறை ஏற்பாடு செய்யவேண்டும், குழந்தையை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும் [r 4(2)c].
7. தடயவியல் பரிசோதனைக்காக சேகரிக்கப்பட்ட மாதிரிகள் தடயவில் பரிசோதனைக் கூடத்துக்கு விரைவில் செல்வதை காவல் துறை உறுதிப்படுத்த வேண்டும் [r 4(2)d].

**குழந்தை நலக் குழு (CWC)**

**குழந்தை நலக் குழு செய்ய வேண்டியவை**

1. பாதிக்கப்பட்ட ஒரு குழந்தை அவன் / அவளுடைய குடும்பத்தில் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுவதற்கான வாய்ப்பு உள்ளதென்றால் அவன் / அவளின் குடும்பத்தை விட்டு வெளியேறி வேறு இடத்துக்கு மாற்றுவது உள்ளிட்ட நலனும் பாதுகாப்பும் குழந்தைக்கு அளிக்கப்படுகிறது என்பதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை குழந்தை நலக் குழு எடுக்கலாம்.
2. **பாதிக்கப்பட்ட குழந்தை எந்த இடத்தில் இருக்கலாம் என்பதை முடிவு செய்தல்:** பாதிக்கப்பட்ட குழந்தை அதன் குடும்பத்தை விட்டு வெளியேற்றப்படவேண்டுமா என்பதையும் நிறுவனம் சார்ந்த நலன் தேவையா என்பதையும் மூன்று நாட்களுக்குள் முடிவு செய்ய வேண்டும் [r4(4)]. நீதிமன்றத்தில் எல்லாக் காலங்களிலும் குழந்தையின் கண்ணியத்தை பாதுகாக்கும் [சட்டப் பிரிவு 33(6) ]வகையிலான குழந்தை நேயச் சூழல் பின்பற்றப்பட வேண்டும் [சட்டப் பிரிவு 33(4)].
3. குழந்தையின் பெற்றோர் / குழந்தையின் நம்பிக்கைக்குரிய யாராவது ஒருவர் எப்போதும் குழந்தையோடு இருப்பதை உறுதி செய்ய வேண்டும் [சட்டப் பிரிவு 37].
4. இந்தச் சட்டத்தின் கீழ் குழந்தையின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் குற்றம் சாட்டப்பட்டவராக இருந்தால், அவர்கள் தமது சொந்த செலவில் வழக்கறிஞர் வைத்துக்கொள்ள இயலாதவர்கள் என்றால் அவர்களுக்கு இலவச சட்ட உதவி வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் [சட்டப் பிரிவு 40]
5. சம்பந்தப்பட்ட குற்றத்துக்கு போக்ஸோ அல்லது வேறு எந்தச் சட்டத்திலோ குறிப்பிடப்பட்டிருக்கிற தண்டனைகளில் எது அதிகமானதோ அதன் அடிப்படையில் தண்டிக்கப்படுவார் [சட்டப் பிரிவு42].
6. வழக்கு விசாரணையின்போது சாட்சியம் அளிப்பதில் குழந்தை அவ்வப்போது இடைவெளி எடுத்துக்கொள்ளலாம் ஸசட்டப் பிரிவு 33(3) ].

**விசாரணை**

7. வழக்கு விசாரணை பொது மக்கள் பார்வையில் படாமல் உள்ளரங்கமாக ('in camera') நடத்தப்படவேண்டும் ஸசட்டப் பிரிவு 37].
8. பெற்றோர் அல்லது குழந்தைக்கு துணையாக வந்திருக்கும் ஆதரவாளரின் முன்னில் நடத்தப்படவேண்டும் ஸசட்டப் பிரிவு 37].
9. குற்றம் சாட்டப்பட்டவர் விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை என்றாலும் கூட வழக்கு பற்றிய விவரங்கள் தெரிந்தவுடன் நீதிமன்றம் நேரிடையாகவே புலன்கொள் அதிகாரம் (cognizance) பெற்று குற்றம் தொடர்பாக விசாரணை செய்ய வேண்டும் ஸசட்டப் பிரிவு 33(1) ].
10. குழந்தையின் சாட்சியம் 30 நாட்களுக்குள் பதிவு செய்யப்படவேண்டும் ஸசட்டப் பிரிவு 35(1) ]. வழக்கு விசாரணை ஓராண்டுக்குள் முடிக்கப்படவேண்டும் ஸசட்டப் பிரிவு 35(2) ].

**சோதனை**

11. குழந்தையை சோதனை செய்வது நீதிமன்றத்தில் இருக்க வேண்டிய அவசியமில்லை [சட்டப் பிரிவு 37].
12. எந்த ஒரு காரணத்துக்காகவும் எந்த வகையிலும் பாதிக்கப்பட்ட குழந்தை குற்றம் சாட்டப்பட்டவரின் கண்பார்வையில் படாமல் இருப்பது உறுதி செய்யப்படவேண்டும் [சட்டப் பிரிவு 36(1) ].
13. குழந்தையின் வாக்குமூலத்தை வீடியோ பதிவு / ஒரு வழி கண்ணாடி மூலம் / திரைச்சீலை மறைப்பு அல்லது ஏனைய வழிமுறைகளை பயன்படுத்தியோ பதிவுசெய்யலாம் [சட்டப் பிரிவு36(2) ].
14. பாதிக்கப்பட்ட குழந்தையிடம் நேரிடையாகக் கேள்வி கேட்கப்படவில்லை என்பது உறுதி செய்யப்படவேண்டும். குற்றம் சாட்டப்பட்டவருக்காக வாதிடுபவர் தான் குழந்தையிடம் கேட்க விரும்பும் கேள்விகளை நீதிமன்றத்தில் சொல்ல வேண்டும், நீதிமன்றம் அக்கேள்விகளை குழந்தையிடம் கேட்கும் [சட்டப் பிரிவு 33(2) ].
15. குழந்தையிடம் கேள்வி கேட்கும் முறை கடுமையாக இருக்கக்கூடாது [சட்டப் பிரிவு 33(6) ].

**நீதிமன்றங்கள் / நீதிபதி செய்யக்கூடாதவை**

16. வாக்குமூலம் அளிப்பதற்காக ஒரு குழந்தையை மீண்டும் மீண்டும் அழைக்கக்கூடாது [சட்டப் பிரிவு 33(5) ].
17. குழந்தையின் சிறந்த நலனுக்காக எழுத்து பூர்வமாக அளிக்கப்பட்ட காரணங்களுக்காக அல்லாமல் வேறு எதற்காகவும் ஒரு குழந்தை பற்றியும் (குடும்பம், பள்ளி, அருகாமையில் வசிப்போர்) ஆகியவர்கள் பற்றி அவர்கள் இன்னார் என்று தெரிந்துகொள்ளக்கூடிய எந்த ஒரு தகவலையும் வெளியிடக்கூடாது [சட்டப் பிரிவு33(7) ].

**வெகுஜன ஊடகம் செய்யவேண்டியவை**

18. ஒரு குழந்தைக்கு எதிரான பாலியல் குற்றத்தைப்பற்றிய செய்தியை வெளியிடும்போது, குழந்தையின் அடையாளம் (பெயர், முகவரி, குடும்ப விவரங்கள், பள்ளி விவரங்கள், குழந்தை வசிக்கும் இடம் பற்றிய தகவல்) வெளியிடப்படவில்லை என்பதை ஊடகம் உறுதிசெய்ய வேண்டும். அந்தக் குழந்தையின் நலனுக்காக அத்தகைய விவரங்களை வெளியிடலாம் என்று சிறப்பு நீதிமன்றம் அனுமதித்தால் மட்டும் அவ்வாறு செய்யலாம்.

**வெகுஜன ஊடகங்கள் செய்யக் கூடாதவை**

19. கிடைக்கப்பெற்ற தகவலின் நம்பகத்தன்மையை உறுதிசெய்யாமல் பாதிக்கப்பட்ட ஒரு குழந்தை பற்றிய செய்தி அறிக்கையையோ அல்லது தங்களின் கருத்தையோ ஊடகத்தின் எந்த ஒரு வடிவத்திலும் வெளியிடக்கூடாது.
20. குழந்தையின் கண்ணியத்தைக் குறைக்கும் வகையிலான எந்த ஒரு செய்தியையும் வெளியிடக்கூடாது.

**21.** குழந்தை, குடும்பம் அல்லது அருகாமையில் வசிப்போர் ஆகியவர்கள் பற்றி அவர்கள் இன்னார் என்று தெரிந்துகொள்ளக்கூடிய எந்த ஒரு தகவலையும் (புகைப்படம் உள்ளிட்ட) வெளியிடக்கூடாது.

**குழந்தைகள் துன்புறுத்தப்படுவதை தடுக்க நீங்கள் என்ன செய்ய முடியும்**

22. குழந்தைகள் துன்புறுத்தப்படுவதைப் பற்றி சமூகத்தில் நிலவும் அமைதியை உடையுங்கள். குழந்தைகளோடு, குடும்பத்தினரோடு, நண்பர்களோடு மற்றும் சக பணியாளர்களோடு இந்தப் பிரச்சனையின் தீவிரத்தன்மை பற்றி பேசுங்கள். குழந்தைகள் துன்புறுத்தப்படுவது குறித்த விழிப்புணர்வு அதனளவில் இத்தகைய சம்பவங்களை குறைக்கும். பல சமயம் இத்தகைய சம்பவங்கள் நடைபெறவில்லை என்று மறுக்கப்படுகின்றன (இந்தியாவில் அவ்வாறு இல்லை).

23. குடும்பங்கள், குழந்தைகள் மற்றும் காவலர், ஆசிரியர்கள், சுகாதார பணியாளர்கள் போன்ற அரசு ஊழியர்கள் உள்ளிட்டவர்களிடம் குழந்தைகளிடம் கடைபிடிக்கப்பட வேண்டிய அனுமதிக்கப்பட்ட மற்றும் அனுமதி இல்லாத நடவடிக்கைகள் / பழக்கங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள்.

24. குழந்தைகளுக்கு துன்புறுத்தல் குறிப்பாக பாலியல் ரீதியாக துன்புறுத்தல் ஏற்படக்கூடிய சூழலை குறைக்க வேண்டும்.

25. நீங்கள் வசிக்கும் பகுதியில் குழந்தைகளுக்கு துன்புறுத்தல் நடைபெறும் வாய்ப்புள்ள இடங்களான பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், தனியான / பாதி கட்டப்பட்ட நிலையில் உள்ள கட்டிடங்கள் ஆகியவற்றை தெரிவுசெய்து குடிமக்கள் கண்காணிப்பு குழுக்களை அமைத்து அத்தகைய இடங்களை கண்காணியுங்கள்.

26. பள்ளிக்கூடங்கள், அநாதை விடுதிகள், விடுதிகள் போன்ற பொதுவாக குழந்தைகள் இருக்கும் இடங்களை பட்டியலிடுங்கள், அத்தகைய இடங்களில் (அ) குழந்தைகள் துன்புறுத்தல் பற்றிய விழிப்புணர்வு உள்ளதா (ஆ) குழந்தைப் பாதுகாப்பு கொள்கைள் உள்ளதா (இ) உள்மட்ட அளவிலான கண்காணிப்புக் குழுக்கள் உள்ளனவா என்பதை உறுதிப்படுத்துங்கள்.

27. ஒரு குழந்தையின் புகாரை எப்போதும் முக்கியத்துவம் தந்து கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். எப்போதும் அவர்கள் கூறுவதை புறம் தள்ளாதீர்கள். அனைத்து நடவடிக்கைகளின் போதும் குழந்தைக்கு உங்களின் மென்மையான ஆனால் உறுதியான ஆதரவை வழங்குங்கள் (பதற்றமடையத் தேவையில்லை)

# தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்துவதில் முன்னேறிய வழிமுறைகள்

## தகவல் உரிமைச் சட்டம்–2005

- இச்சட்டம் 12 அக்டோபர் 2005 அன்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.
- தகவல் உரிமை என்பது அடிப்படையான மனித உரிமை என்று இந்திய அரசியல் சாசன சட்டத்தின் பிரிவு 19ல் கூறப்பட்டுள்ளது.

**தகவல் என்பது என்ன ?**

- பதிவேடுகள், ஆவணங்கள், அலுவலகக் குறிப்புகள், கருத்துகள், செய்தி குறிப்புகள், சுற்றறிக்கைகள், ஆணைகள், ஒப்பந்தங்கள், கடிதங்கள், முன்வடிவங்கள், மாதிரிகள், கணினி சார்ந்த பதிவுகள், மின்னஞ்சல்கள் போன்றவையெல்லாம் தகவல்களாகப் பெறமுடியும்.
- சம்மந்தப்பட்ட ஆவணங்கள் மற்றும் பதிவேடுகளைப் பரிசீலனை செய்யும் உரிமை, நகல் எடுக்கும் உரிமை உண்டு.
- பொதுநலன் சார்ந்த அனைத்துத் தகவல்களையும் பெற முடியும்

**தகவல் தர பொறுப்புள்ள பொது அதிகார அமைப்பு**

- அரசின் கீழ் இயங்க கூடிய ஆணையங்கள்
- நிறுவப்பட்ட அல்லது அமைக்கப்பட்ட அதிகார அமைப்பு
- பொது அமைப்பு அல்லது தன்னாட்சி நிறுவனங்கள்
- அரசுக்கு சொந்தமான, அதன் கட்டுப்பாட்டில் உள்ள அமைப்புகள்
- அரசு சாரா அமைப்புகள்
- மத்திய, மாநில அரசின் துறைகள், அலுவலகங்கள்
- நகர சபை, பஞ்சாயத்து, ஒன்றிய அலுவலகங்கள்
- அரசிடமிருந்து உதவி பெறும் தனியார் அமைப்புகள்

**யார் யாரெல்லாம் தகவல் பெற முடியும் ?**

அனைத்து இந்திய குடிமக்களும் தனிநபராகவோ, ஒரு அமைப்பின் மூலமாகவோ தகவல் உரிமை சட்டம் 2005 பிரிவு –6ன் கீழ் தகவல் பெறலாம்.

**தகவல் பெற விண்ணப்பிப்பது:**

- தகவல் கோருவதற்கான தனி விண்ணப்பம் எதுவும் கிடையாது.
- எழுத்துப் பூர்வமாகவோ அல்லது மின்னனு வடிவத்திலோ உரிய அலுவலகத்தில் பொதுத் தகவல் அதிகாரியிடம் விண்ணப்பிக்க வேண்டும்.
- ஒரே விண்ணப்பத்தில் எத்தனை கேள்விகள் வேண்டுமானாலும் கேட்கலாம்.
- தகவல் கேட்பதற்கானக் காரணத்தை கூறத் தேவையில்லை.
- என்ன தகவல் கேட்கிறோம் என்ற விபரமும், தகவல் கேட்பவரின் முகவரியும் இருந்தால் போதுமானது.

**பொது அதிகார அமைப்புகளின் கடமை பொறுப்புகள்**

- இந்தச் சட்டத்தின்படி தகவல் பெறுவதற்கான உரிமையை எளிதாக்கும் முறையிலும் படிவத்திலும் உரியவாறு பட்டியல் தயாரிக்க வேண்டும்.
- அகர வரிசைத் தொகுப்பில் அட்டவணைப்படுத்த வேண்டும்.
- தமது அலுவலகம் பற்றிய தகவல்கள், நடவடிக்கைகள், கடமைகள் பற்றிய குறிப்புகளை தெரிவிக்க வேண்டும்.
- தமது அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் கடமை மற்றும் அதிகாரங்களைத் தெரிவிக்க வேண்டும்.
- தாம் வைத்துள்ள அல்லது தமது கட்டுப்பாட்டில் உள்ள ஆவணங்களை வகைப்படுத்த அதன் பட்டியலைத் தயாரிக்க வேண்டும்.
- தமது அலுவலக அதிகாரிகள், ஊழியர்கள் அடங்கிய பெயர்களின் பட்டியல், மாதாந்திர ஊதியம், ஈட்டுத் தொகை உட்படத் தெரிவிக்க வேண்டும்.
- நிதி ஒதுக்கீடுகள், அனுமதிக்கப்பட்டுள்ள அனைத்துத் திட்டங்கள், செலவு மதிப்பீடுகள், செலவிடப்பட்ட இனங்கள் மற்றும் முழுமையான தகவலைத் தயாரிக்க வேண்டும்.
- தேவைப்படும் இதர தகவல்களையும் வழங்க வேண்டும்.
- இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட **120** நாட்களுக்குள் மேற்கூரிய தகவல்கள் அனைத்தையும் தயாரிக்க வேண்டும். அதன்பிறகு ஆண்டுதோறும் இத்தகவல்கள் புதுப்பிக்கப்பட வேண்டும்.

**தகவல் பெறுவதற்கான கட்டணம்**

- மத்திய அரசு மற்றும் மாநில அரசு சார்ந்த அதிகார அமைப்பிடமிருந்து தகவல் பெறுவதற்காக ரூ.**10** விண்ணப்ப கட்டணம் செலுத்த வேண்டும்.
- கூடுதலான பக்கங்கள் இருப்பின் தாளுக்கும் ரூ.**2** வீதம் வசூலிக்கப்பட்டு அதற்கான முறையான ரசீது வழங்கப்பட வேண்டும்.
- கூடுதல் கட்டணம் வசூலிக்க வேண்டியிருந்தால் எழுத்துப் பூர்வமாக அதிகாரி மனு செய்பவருக்கு தெரிவிக்க வேண்டும்.
- கணினி சார்ந்த பதிவுகளுக்கு CD/Floppy கூடுதலாக ரூ.**50** செலுத்த வேண்டும். அச்சடிக்கப்பட்ட நிலையில் உள்ள தகவல்களை நகல் எடுக்க ஒவ்வொரு பக்கத்திற்கும் ரூ.**2** செலுத்த வேண்டும்.
- நேரில் சென்று ஆவணங்களை பார்வையிட முதல் ஒரு மணி நேரத்திற்கு கட்டணம் இல்லை. அதற்கு மேலாகும் ஒவ்வொரு மணி நேரத்திற்கும் ரூ.**5** கட்டணம் செலுத்த வேண்டும்.

**கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு**

- வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்பவராக இருந்தால் தகவல் பெறுவதற்கு எந்த கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை.
- வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்பவர்கள் என்பதை நிரூபிக்கும் அத்தாட்சியாக தங்கள் பகுதியின் ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி அலுவலகத்திலிருந்து சான்று பெற்று அதன் நகலை அனுப்பினால் போதும்.

**விண்ணப்பக் கட்டணம் செலுத்தும் முறை**

- விண்ணப்பத்துடன் கட்டணத்தொகை ரூ.**10**–ஐ நேரில் பொது தகவல் அதிகாரியிடம் செலுத்தலாம்.

- ரூ.10–க்கான நீதிமன்ற கட்டண வில்லையை (Court Fee Stamp) மனுவில் ஒட்டலாம்.
- சம்மந்தப்பட்ட அதிகாரத்துவ அமைப்பின் பொதுத் தகவல் அதிகாரிக்கு வங்கியில் வரைவோலையாகவும் எடுக்கலாம்.

**தகவல் உரிமை சட்டத்தின் கீழ் விலக்கு அளிக்கப்பட்டுள்ள தகவல்கள் / துறைகள்**

- நாட்டின் இறையாண்மை, ஒருமைப்பாடு, பாதுகாப்பு, நாட்டின் பொருளாதாரம் மற்றும் அறிவியல் நலன்கள், வெளியுறவு தொடர்பான தகவல்கள்.
- உளவுத்துறை மற்றும் பாதுகாப்பு துறை தொடர்பான தகவல்கள்
- நாடாளுமன்ற / சட்டமன்றங்களின் உரிமை மீறல்களுக்கு காரணமாகும் தகவல்கள்.
- நீதிமன்றங்களால் தடை செய்யப்பட்ட தகவல்கள்.
- அந்நிய அரசிடம் இருந்து பெறப்பட்ட ரகசியங்கள்.

**யாரிடம் தகவல் கோரலாம்:**

- பொது தகவல் அதிகாரி (Public Information Officer PIO)
- உதவி பொது தகவல் அதிகாரி (APIO) ஆகியோர் தகவல் தர பொறுப்புள்ளவர்கள்.
- எந்த அதிகார அமைப்பிடம் தகவல் கோருகிறோமோ அவற்றை குறிப்பிட வேண்டும்.
- உதவி பொது தகவல் அலுவலரிடம் கோரும் தகவலுக்கு 5 நாள்கள் கூடுதலாக அதாவது 35 நாட்களுக்குள் பதிலளித்தாக வேண்டும்.
- எந்த துறைக்கு விண்ணப்பிக்கப்பட வேண்டும் என்று தெரியாத பட்சத்தில் பொது தகவல் அதிகாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் என்று மாவட்ட ஆட்சியருக்கு தகவல் கோரி விண்ணப்பிக்கலாம்.

**பொதுத் தகவல் அதிகாரி, உதவி பொதுத் தகவல் அதிகாரியின் பொறுப்புகள்**

- தகவல் கோரும் விண்ணப்பங்களைக் கையாளுதல்.
- விண்ணப்பம் எழுத இயலாதவருக்கு விண்ணப்பம் எழுத உதவுதல்.
- வேறு அதிகார அமைப்பு சார்ந்த விண்ணப்பங்கள் பெறப்படுமானால் அதனை 5 நாட்களுக்குள் சம்மந்தப்பட்ட அலுவலகத்திற்கு அனுப்புதல்.

**தகவல் அளிப்பதற்கான கால அளவு**

- விண்ணப்பித்த 30 நாட்களுக்குள் பதிலளித்தாக வேண்டும்.
- ஒருவரது உயிர் மற்றும் சுதந்திரம் காக்கும் தகவல்களானால் 48 மணி நேரத்திற்குள் அளித்திட வேண்டும்.
- மூன்றாம் நபரிடம் இருந்து உதாரணமாக ஒரு தனியார் தொழிற்சாலையிடமிருந்து தகவல் கோரப்பட்டால் அப்பதிலை பெற்றுத் தருவதற்கு தொழிற்துறை 40 நாட்கள் எடுத்துக் கொள்ளலாம்.
- காலம் கடந்து அளிக்கப்படும் தகவலுக்கு கட்டணம் செலுத்த வேண்டாம்.

**மேல்முறையீடு**

- கோரப்பட்ட தகவல்கள் மறுக்கப்பட்டால்
- கால தாமதமாக கிடைக்கப் பெற்றால்
- தவறான தகவலாக இருந்தால்
- பெறப்பட்ட தகவல் குறித்து அதிருப்தியிருந்தால்
- பதில் பெறாத பட்சத்தில் 30 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட துறையில் குறிப்பிட்ட தகவல் அதிகாரிக்கு மேல் மட்டத்தில் உள்ள மேல்முறையீட்டு அதிகாரிக்கு முறையீடு செய்யலாம்.
- அவரிடமிருந்து சரியான பதில் கிடைக்கப்பெறாத நிலையில் 95 நாட்களுக்குள் சம்மந்தப்பட்ட மத்திய, மாநில அரசுகளின் தகவல் ஆணையத்திடம் புகார் செய்யலாம்.
- கோரப்படும் தகவல்கள் நிராகரிக்கப் படுவதற்கான நியாயங்களை நிரூபிக்க வேண்டியது சம்பந்தப்பட்ட தகவல் அதிகாரியுடையது ஆகும்.
- தகவல் ஆணையத்தின் முடிவு அனைவரையும் கட்டுப்படுத்தும். ஆனால் அதன் மீது உயர்நீதிமன்றத்திலோ, உச்சநீதிமன்றத்திலோ முறையீடு செய்யலாம்.

**மாநில தகவல் ஆணையத்தின் முகவரி:**
*தமிழ்நாடு தகவல் ஆணையம், எண்.2, தியாகராயர் சாலை*
*(ஆலையம்மன் கோவில் அருகில்), தேனாம்பேட்டை, சென்னை 600 018.*
*தொலைபேசி எண். 044–24312841 –48*

**ஆணையத்திடம் புகார்**

- விண்ணப்பத்தை பெற மறுத்ததினால் விண்ணப்பத்தை கொடுக்க இயலாத நிலையில்
- தகவல் அளிக்க மறுத்ததால்
  உரிய காலத்திற்குள் தகவல் அளிக்கத்தவறினால்
- தவறான தகவலை அளித்தால்
- செலுத்த வேண்டிய கட்டணத்திற்கு மேல் அதிகமான கட்டணத்தை கோரும்பட்சத்தில்

- முழுமையற்ற தகவலாக இருந்தால்
- வேண்டுமென்றே தவறான தகவலை தெரிவித்தால்

**ஆணையத்தின் விசாரணை**

- புகாரின் மீதான ஆணையத்தின் முடிவு சட்டப்படி கட்டாயம் பின்பற்றப்பட வேண்டியதாகும்.
- மாநில தகவல் ஆணையம், உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரத்தை பெற்றுள்ளது.
- ஆணையம் தவறிழைத்த அதிகாரியிடம் விண்ணப்பதாரர் கோரும் விவரங்களை அளிக்காததற்கான காரணத்தை கேட்டு, தகவலை அளிக்க பணிக்கலாம்.
- புகார் அளித்தவருக்கு ஏற்பட்ட நஷ்டம், பிரச்சனைகளை ஈடுசெய்ய பணிக்கலாம்.
- சம்பந்தப்பட்ட அதிகார அமைப்பிற்கு கீழ் அதிகாரி நியமிக்கப்படவில்லை என்றால் உடனடியாக நியமிக்கும்.
- சட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள எவ்வொரு அபராதத்தையும் விதிக்கலாம்.

**அபராதம் ( Penalty)**

- **மா**நில தலைமை தகவல் ஆணையர் (அ) தகவல் ஆணையர்கள் (அ) மாநில தகவல் ஆணையர் பொது தகவல் அலுவலர் மீது அபராதம் விதிக்கலாம்.
- காரணமின்றி காலதாமதத்திற்கு ரூ.250–யிலிருந்து ரூ.25,000 வரை அபராதம்.
- சட்ட விரோதமாக விண்ணப்பம் பெற மறுத்ததிற்கு, தெரிந்தே தவறான தகவல் அளித்ததற்கு தகவல்களைஅழித்ததற்கு, தகவல் தர மறுத்தல் போன்றவற்றிற்கு ரூ.25,000 வரை.
- பொது தகவல் அலுவலரின் தொடர்ந்த மற்றும் தீவிர கடமை மீறலுக்கு அத்துறை நடவடிக்கை எடுப்பதற்கு ஆணையம் பரிந்துரைக்கும்.

## விளக்கப்படம் 1: விண்ணப்ப நடைமுறைகள்

**நடவடிக்கை 1**
உங்கள் பிரச்சனை குறித்துப் பரிசீலியுங்கள் – ஒரு கேள்வியை உருவாக்குங்கள் – உங்களுக்குத் தேவையான தகவலை வைத்திருக்கிறார் என்று நீங்கள் கருதக்கூடிய அரசு அதிகாரி மற்றும் பொதுத் தகவல் அதிகாரியை (PIO) அடையாளம் காணுங்கள்.

↓

**நடவடிக்கை 2**
உங்களுடைய விண்ணப்பத்தைத் தயாரித்து, விண்ணப்பக் கட்டணத்துடன் PIO–யிடம் தாக்கல் செய்யுங்கள் →

குறிப்பிட்ட அதிகாரியிடம் வேண்டிய தகவல் இல்லையென்றால், PIO உங்கள் விண்ணப்பத்தை 5 நாட்களுக்குள் உரிய அரசு அதிகாரிக்கு அனுப்ப வேண்டும் – அவ்வாறு மாற்றப்படுவது குறித்து உங்களுக்கு எழுத்துப்பூர்வமாகத் தெரிவிக்க வேண்டும்.

↓

**நடவடிக்கை 3**
உங்கள் விண்ணப்பத்தை ஏற்கவோ நிராகரிக்கவோ அதிகாரிக்கு 30 நாட்கள் கால அவகாசம் உள்ளது

**வழி 1**
விண்ணப்பம் ஏற்கப்படுதல்

↓

**PIO பின்வருவன குறித்து உங்களுக்கு எழுத்துப்பூர்வமாக தெரிவிக்க வேண்டும் :**

- செலுத்த வேண்டிய கூடுதல் கட்டணம்;
- கூடுதல் கட்டணம் குறித்த முடிவை மறுபரிசீலனை செய்யக்கோருவதற்கான உங்கள் உரிமை , தகவல் பெறுவதற்கான படிவம், மேல்முறையீட்டு அதிகாரி குறித்த விவரங்கள், முறையீடு செய்வதற்கு உரிய படிவங்கள்.

↓

வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களின் விண்ணப்பங்களுக்குக் கட்டணம் கிடையாது

உரிய கால அளவிற்குள் அரசு அதிகாரி செயல்படத் தவறுவாரேயானால் தகவல் இலவசமாக வழங்கப்படும்

**வழி 2**
விண்ணப்பம் நிராகரிக்கப்படுதல் (நிர்ணயிக்கப்பட்ட காலக் கெடுவுக்குள் ஒரு முடிவு அறிவிக்கப்படவில்லை என்றால், விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதாகக் கருதப்படும்; அதுகுறித்து நீங்கள் மேல்முறையீடு செய்யலாம்)

↓


**PIO பின்வருவன குறித்து உங்களுக்கு எழுத்துப்பூர்வமாகத் தெரிவிக்க வேண்டும்:**

- நிராகரிக்கப்பட்டதற்கான காரணம்
- எந்தவொரு மேல்முறையீடு செய்வதற்குமான கால அவகாசம்
- மேல்முறையீட்டு அதிகாரி குறித்த

↓

மேலும் தகவல்களுக்கு, மேல்முறையீடு தொடர்பான இரண்டாவது அட்டவணையைப் பார்க்க

## விளக்கப்படம் 2: மேல்முறையீட்டு



# மாதிரி விண்ணப்பப் படிவம்

ரூ.10/-க்கான நீதிமன்ற வில்லை




அனுப்புநர்

.........................................................................

.........................................................................

(தெளிவான முழு முகவரியைக் குறிப்பிடவும்).

நாள் :.................................

பெறுநர்

**பொதுத்தகவல் அலுவலர் அவர்கள்**

.........................................................................

.........................................................................

(உரிய அலுவலகத்தின் முழு முகவரி எழுதவும் (அ) மாவட்ட ஆட்சியின் அலுவலக முகவரி எழுதவும்).

ஐயா / அம்மையீர்,

**பொருள்: தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் தகவல்கள் பெறுதல் தொடர்பாக.**

வணக்கம்.

I தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் எனக்கு கீழ்க்கண்ட தகவல்கள் வழங்கவும்.

1. .........................................................................
2. .........................................................................

II. நான் கீழ்க்கண்ட ஆவணங்களை பார்வையிட அனுமதிக்க வேண்டுகிறேன். (பார்வையிட விரும்பும் ஆவணங்கள்).

1. .........................................................................
2. .........................................................................

III. எனக்கு கீழ்க்கண்ட ஆவணங்களின் படிகளை கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். (ஆவணங்களின் விவரம்).

1. .........................................................................
2. .........................................................................

IV. நான் தகவல் அறிய, உரிய கட்டணம் செலுத்தியுள்ளேன். அதன் விவரம்

அ) நீதிமன்ற வில்லை (Court Fee Stamp)
ஆ) அஞ்சலக ஆணை (Postal Order)
இ) வங்கி வரைவோலை (D.D )
(மேற்கண்டவைகளில் ஏதேனும் ஒன்று).

இடம் :
நாள் :

x..........................................
விண்ணப்பதாரர் கையொப்பம்